

# பாரதப் பெருமகன்

# டாக்டர் ப. சுப்பராயன்

செ. இராசு

# பாரதப் பெருமகன்
# டாக்டர் ப. சுப்பராயன்

ஆசிரியர்

புலவர் **செ. இராசு** எம்.ஏ., பிஎச்.டி.,

முன்னாள் தலைவர்

கல்வெட்டு - தொல்லியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வெளியீடு

**கொங்கு ஆய்வு மையம்**

ஈரோடு - 638 011.

# நூற்குறிப்பு

நூல் பெயர் : **பாரதப் பெருமகன் டாக்டர் ப. சுப்பராயன்**

நூல் பொருள் : வாழ்க்கை வரலாறு

ஆசிரியர் : புலவர் **செ.இராசு**, ஈரோடு

மொழி : தமிழ்

பதிப்பு ஆண்டு : 2014

நூல் உரிமை : ஆசிரியர்க்கு

அளவு : 11 செ.மீ. X 18 செ.மீ.


பக்கங்கள் : 212

அச்சு எழுத்து : 11 புள்ளி

விலை : ரூ.120/-


நூல் கிடைக்குமிடம் : கொங்கு ஆய்வு மையம்
'புலவர் பூங்குடில்'
58/2, பாலக்காட்டுத் தோட்டம்,
புதிய ஆசிரியர் குடியிருப்பு வழி,
ஈரோடு - 638 011. போன் : 0424-2262664
9500938384, 9790038380,

நூல் & அட்டை
வடிவமைப்பு : வாழ்க வளமுடன் ஆப்செட் பிரிண்டர்ஸ்
பிரைவேட் லிமிடெட்
29 நாச்சியப்பா வீதி II
ஈரோடு - 638 001.
போன் : 0424-2258511, 2258522



முதலாவது அமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன்

P. Subbarayan



நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்

# நூலாசிரியர் முன்னுரை

தமிழகத் தலைவர்களிலேயே மிக அதிகமான பொறுப்புக்களை ஏற்று, ஏற்ற பதவிகளிலெல்லாம் பெருமை சேர்க்கின்ற வகையில் மாற்றாரும் போற்றும் வண்ணம் மிகச் சிறப்பாகப் பணியாற்றிய ஒரே தலைவர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள். இவர் வகித்த பதவிகள்,

சட்டப் பேரவை உறுப்பினர்; சட்ட மேலவை உறுப்பினர்; மாநில அமைச்சர்; மாநில முதலமைச்சர்; நாடாளுமன்ற உறுப்பினர்; மாநிலங்களவை உறுப்பினர்; எதிர்க்கட்சித் தலைவர்; தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்; வெளிநாட்டுத் தூதர்; மாநில ஆளுநர் போன்றவைகளாகும்.

இவை மட்டுமின்றி அரசியல் நிர்ணய சபை, ஆட்சிமொழி ஆணைக்குழு, மாநிலங்களவைத் துணைத் தலைவர், பொதுக் கணக்குக் குழு போன்ற பல பொறுப்புக்களையும் வகித்தவர். இந்திய அரசு சார்பில் பல வெளிநாட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்.

இயல்பாகவே விளையாட்டுக்களில் மிக ஆர்வமுடைய அவர் அத்துறையில் வகித்த பல உயர் பதவிகள் போல எந்த அரசியல் தலைவரும் வகித்ததில்லை. இந்திய கிரிக்கெட் வாரியம், தேசிய விளையாட்டுக் கவுன்சில் ஆகியவற்றின் தலைவராகவும் இருந்துள்ளார்.

அகன்ற சென்னை மாநிலத்தின் முதல்வராக ஆட்சி புரிந்த முதல் தமிழர் (04.12.1926 முதல் 27.10.1930 முடிய). கட்சி சாராமல் சுயேச்சையாகவே பதவிக் காலத்தை நிறைவு செய்தவர். பார்-அட்-லா படித்தவர் பலருண்டு. ஆனால் டாக்டர் ப. சுப்பராயன் பார்-அட்-லா பட்டத்துடன் சட்டத்தில் டாக்டர் பட்டமும் பெற்றவர்.

தான் கலப்பு மணம் செய்ததுடன் தன் மக்களும், பேரன் பேத்திகளும் அவர்கள் வாழ்க்கையைத் தாங்களே அமைத்துக் கொள்ள மகிழ்வுடன் அனுமதித்தவர்.

1926இல் முதல்வராகவும், 1937இல் ராஜாஜி அமைச்சரவையிலும், 1947ல் ஓமந்தூர் பி. இராமசாமி ரெட்டியார் அமைச்சரவையிலும், 1959இல் பண்டித நேரு அமைச்சரவையிலும் பொறுப்பு வகித்த காலங்களில் அவர் செய்த பல்வேறு சட்டங்களையும், திட்டங்களையும் இன்று நற்பயன்களாகச் சமுதாயம் அடைந்து வருகிறது.

இட ஒதுக்கீடு - வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தைச் சட்டம் ஆக்கியது; இந்து சமய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தது; இந்தியாவிலேயே முதல் முறையாகச் சமூக நீதியுடன் கூடிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைத்தது; இவரே ஜமீன்தாராக இருந்தும் ஜமீன் ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்தது; தீண்டாமையை எதிர்த்துக் கடுமையான சட்டம் கொண்டு வந்தது; அரிசன ஆலயப் பிரவேச சட்டம் கொண்டு வந்து தாமே முன்னின்று ஆலயம் பிரவேசம் செய்வித்தது; 17 கோடி இழப்பு ஏற்பட்டாலும் பூரண மதுவிலக்குக் கொண்டு வந்தது போன்று பலப்பல.

1959இல் பண்டித நேரு அமைச்சரவையில் தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து அமைச்சராக இருந்த போது திருவள்ளுவர், பாரதியார், ஏர் உழவன் அஞ்சல்தலை வெளியிட்டார். மணியார்டர் படிவம் தமிழிலும் வெளி வரச் செய்தார்.

இழுபறியாக இருந்த மேட்டூர் அணைத் திட்டத்தை 125 லட்சம் உபரி நிதி அளித்துத் தொடங்கச் செய்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவர் துணையால் ஏற்பட்டது.

பண்டித நேரு குடும்பம் போல மூன்று தலைமுறை பதவிகள் வகித்துப் பெருமை பெற்ற டாக்டர் சுப்பராயன், மோகன் குமாரமங்கலம், ரங்கராஜன் குமாரமங்கலம் ஆகியோர் படத் திறப்பு விழாவை

அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் முயற்சியால் 16.10.2004 அன்று கொங்குநாடு அறக்கட்டளையும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கமும் சிறப்பாக நடத்தியது.

அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் பூங்குரு நல் அசோகன் அவர்களைக் கொண்டு சுப்பராயன் குடும்ப வரலாற்றைத் தொகுக்கச் செய்தார்கள். இப்பணியை ஏற்று அசோகன் அவர்கள் ஆற்றிய பணி மிகமிகப் போற்றத்தக்கது. தகவல் களஞ்சியமாக அவர் தொகுத்தவற்றை கே. ஜீவபாரதி அவர்களைக் கொண்டு 'குமார மங்கலம் தியாக தீபங்கள்' என்ற பெயரில் 552 பக்கங்கள் கொண்ட பெரு நூலாக அது தொகுக்கப்பட்டது. அந்நூலைப் பதிப்பித்த கொங்குநாடு அறக்கட்டளை நூல் வெளியீட்டு விழாவை 13.02.2009 அன்று சென்னையில் நடத்தியது.

அந்நூலில் உள்ள பிழையான பல பதிவுகளைச் சுட்டிக் காட்டி பார்வதி கிருஷ்ணன் அவர்கள் அருட்செல்வர் ஐயா அவர்கட்கு 29.07.2009 அன்று ஒரு கடிதம் எழுதினார்கள்.

அருட்செல்வர் ஐயா அவர்கள் என்னை அழைத்து சுப்பராயன் வரலாறு மட்டும் தனியாக எழுத வேண்டும் என்றும், பிற்சேர்க்கையாக குடும்பத்தினர் வரலாறும் சுருக்கமாகத் தனித்தனியாக எழுதிச் சேர்க்க வேண்டும் என்றும் பணித்தார்கள். அவர்கள் இட்ட கட்டளைப்படியே இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் பூங்குரு நல் அசோகன் அவர்கள் அரிதின் முயன்று தொகுத்து கொங்கு நாடு அறக்கட்டளை வெளியிட்ட ''குமாரமங்கலம் தியாக தீபங்கள்'' என்ற நூல் ஆதாரங்களை வேண்டிய அளவு பயன் படுத்தி எழுதப்பட்டுள்ளது. இயைபு நோக்கிப் பூந்துறைநாடு, திருச்செங்கோடு, குமரமங்கலம் செய்திகளும், ப. சுப்பராயன் அவர்களின் தூரன்குலம், அவர்கள் முன்னோர் செய்த ஆலய, இலக்கியப் பணிகள் சேர்க்கப்பட்டுள்ளன. கள ஆய்வில் கிடைத்த சில புதிய செய்திகள், படங்கள், ஆவணங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

திருச்செங்கோடு வட்டாரக் கள ஆய்வில் மிகவும் உறுதுணை யாக இருந்ததுடன் சில செய்திகள், படங்கள், ஆவணங்கள் உதவியவர் திருச்செங்கோடு தி.அ. சேது.மாதவ கிருஷ்ணன் அவர்கள். அவர்க்கு என் நன்றி உரியதாகுக.

கள ஆய்வுக்கு உதவிய சக்தி சுகர்ஸ் நிறுவனத்தார்க்கும் என் நன்றி உரியதாகுக.

தம் தந்தை ஜெயவந்த் கோபால் குமாரமங்கலம் படம் உதவிய துடன் சில அரிய செய்திகளும் உதவிய அவர் மகன் கிருஷ்ணன் குமார மங்கலம் அவர்கட்கு நன்றி.

டாக்டர் ப. சுப்பராயன், அவர் குடும்பம், கொங்குச் சமுதாய வரலாற்றில் ஆர்வமுடைய அமைப்புக்கள், அன்பர்கள் துணையுடன் இந்நூல் வெளியிடப்படுகிறது. அவர்கள் அனைவர்க்கும் என் நன்றி உரியதாகுக. ஏறத்தாழ 40 ஆண்டு காலத் தமிழக வரலாற்றின் ஒரு பகுதியாக விளங்கும் இந்நூலைத் தமிழக மக்களும், குறிப்பாகக் கொங்கு மக்களும் ஆதரிப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

20.11.2014 — வரலாற்றுப் பணியில்,

ஈரோடு. — அன்பன்

**செ. இராசு**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | |
| 1. | குமரமங்கலம் | 1 |
| 2. | திருச்செங்கோடு | 7 |
| 3. | தூரன்குலம் | 16 |
| 4. | திருச்செங்கோட்டுத் திருப்பணிகள் | 19 |
| 5. | குமரமங்கலம் முதன்மை | 24 |
| 6. | குமரமங்கலம் ஜமீன் | 27 |
| 7. | சுப்பராயன் பிறந்தார் | 33 |
| 8. | சுப்பராயனின் கல்விக் களங்கள் | 37 |
| 9. | அரசியல் அடித்தள நிகழ்வுகள் | 41 |
| 10. | முதலிரு சட்டசபையில் | 45 |
| 11. | முதலாவது அமைச்சர் | 51 |
| 12. | எதிர்க்கட்சித் தலைவர் | 74 |
| 13. | புதுப்பாளையம் காந்தி ஆசிரமம் | 78 |
| 14. | இராஜாஜி அமைச்சரவையில் | 83 |
| 15. | போராட்டமும் சிறைவாசமும் | 90 |
| 16. | பிரகாசம், ஓமந்தூரார் அமைச்சரவைகள் | 92 |
| 17. | தேசியத் தலைவர்கள் தொடர்பு | 107 |

18. இந்தோனேஷியத் தூதர் 111

19. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் 114

20. மாநிலங்கள் அவை உறுப்பினர் 118

21. நேரு அமைச்சரவையில் 123

22. ஆளுநர் பதவியும், அமர வாழ்வும் 126

23. வழி காட்டிய வாழ்க்கை 129

24. சென்னையில் வாழ்ந்த இல்லங்கள் 131

25. விளையாட்டு வித்தகர் 133

26. தமிழ்ப் பணிகள் 138

27. நீங்கா நினைவுகள் 144

28. இராதாபாய் சுப்பராயன் 146

29. பரமசிவம் பிரபாகர் குமாரமங்கலம் 152

30. ஜெயவந்த் கோபால் குமாரமங்கலம் 158

31. சுரேந்திர மோகன் குமாரமங்கலம் 162

32. பார்வதி கிருஷ்ணன் 170

33. பணீந்திரநாத் ரங்கராஜன் குமாரமங்கலம் 179

34. பிற்சேர்க்கை 185

❊❊❊

## நூல் பதிப்புக்கு உதவிய நன்றிக்குரிய அமைப்புக்களும், அன்பர்களும்

கொங்குநாடு அறக்கட்டளை, சென்னை.

கொங்கு வேளாளர் சங்கங்கள் கூட்டமைப்பு, சென்னை.

ஸ்ரீரெங்கசாமி கல்வி அறக்கட்டளை, குமாரபாளையம்.

**திருவாளர்கள்:**

எஸ்.டி. சந்திரசேகரன், செயலாளர், வேளாளர் கல்வி நிறுவனங்கள், திண்டல்.

கே. ஏ. கணபதி, தலைவர், கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை.

டாக்டர் கே. ஆர். பாலசுப்பிரமணியம், ஈரோடு.

ஆர். சிவக்குமார், இ.ஆ.ப., (ஓய்வு), சென்னை.

எஸ்.கே. கருப்பண்ணன், IRS (ஓய்வு), நாமக்கல்.

டாக்டர் ப. அத்தி அண்ணா, சேலம்.

எஸ்.பி. இராமசாமி, சேலம்.

எம். பரமசிவம், சேலம்.

# 1. குமரமங்கலம்

மூன்பு தமிழ்நாடு ஐந்து பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, தொண்டை நாடு, கொங்கு நாடு என்பன.

கொங்கு நாடு நிர்வாக வசதிக்காக 24 உள் நாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது.

கொங்கு 24 நாடுகளில் பூந்துறை நாடும் ஒன்று. கொங்கு நாட்டில் பூந்துறை நாட்டைத்தான் தொன்மையான நாடு என்று கூறுவர். மக்கள் முதலில் ''புகுந்து உறைந்த நாடு'' ஆகையால் பூந்துறை என்று பெயர் பெற்றதென்றும், சங்க காலப் புன்றுறை வாழ்ந்த பகுதி பூந்துறை ஆயிற்று என்றும், பூக்கள் மலிந்த துறைகள் உடைய நாடு பூந்துறை நாடு ஆயிற்று என்றும் கூறுவர். ''பழம் பூந்துறை'' என்று பிடாரியூர்க் கல்வெட்டுக் கூறுகிறது. ''பூந்துறை நாடு அதிகம் எனப் புகன்றிட்டாரே'' என்பது ஒரு இலக்கியத் தொடர்.

பூந்துறைப் புராணம் இந்நாட்டின் பெருமையைப் பல பாடல் களால் புகழ்கிறது.

''காடெல் லாம்சிறு செந்நெல் விளையும்
கதிரவன் வந்து கமலங்கள் சேரும்
நாடெல் லாம்வெண் தரளம் கொழிக்கும்
நல்ல அல்லியில் வெண்மதி சேரும்
வீடெல் லாம்திரு மின்விளை யாடும்
வேத காவிய புராணங்கள் ஓதும்
பாடெல் லாம்பைந் தமிழதை ஆக்கும்
பன்னு பூந்துறை நாடெங்கள் நாடே''

என்பது அவற்றில் ஒரு பாடலாகும்.

மேழிவிளக்கம் என்னும் நூல்,

''திந்திருணி மாஅரசு தேங்கமுகு வாழைபலா
வந்து குலைசாய்ந்து மடல்விரிந்து சிந்தினதால்
வாய்ந்தரச மொடுபெருகி வயலதனில் செந்நெல்விளை
பூந்துறைசை நாடு''

என்று புகழ்கிறது.

பூந்துறை நாடு விவசாய நிலம் மிகுதியாலும் மக்கள் பெருக்கத்தாலும் விரிந்து பரந்தது. காவிரியாற்றை மையமாக வைத்துக் கீழ்க்கரைப் பூந்துறைநாடு, மேல்கரைப்பூந்துறை நாடு என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. கீழ்க்கரைப் பூந்துறை நாட்டின் பழம்பதிகள் 32. அவை,

மோரூர், முளசி, ஏமப்பள்ளி, தகடப்பாடி மோடமங்கலம், மேழிப்பள்ளி, இருப்புலி, பிரிதி, சிறுமுளசி, அணிமூர், குமரமங்கலம், அகரம், சேதாபுரம், கருமாபுரம், வட்டூர், மணலி, கோக்களை, உஞ்சனி, கூத்தம்பூண்டி, ஆனங்கூர், கொக்கராயன்பேட்டை, தேவணாங்குறிச்சி, காடச்சிநல்லூர், மாவிரட்டி, லத்திவாடி, படைவீடு, பட்டிலூர், கழனூர், மண்டபத்தூர், தோக்கவாடி, சித்தளந்தூர், கத்தேரி என்பனவாம்.

இவ்வூர்களைத் தொகுத்து ஒரு பாடலாகவும் பாடியுள்ளனர்.

''மோரூரு டன்முளசை குலவும்ஏ மப்பள்ளி
முற்றுதக டப்பாடியும்
மோடமங் கலம்மேழிப் பள்ளிஇருப் புலிபிரிதி
முட்டில்சிறு முளசைஅணிமூர்

நீரூர்கு மரமங்கை அகரம்சே தாபுரம்
நிழலுற்ற கருமாபுரம்
நீதிவட் டூர்மணலி கோக்களையும் உஞ்சனியும்
நிலைகொள்கூத் தன்பூண்டியும்

சீரூரும் ஆனங்கூர் கொக்கரா யன்பேட்டை
தேவைகா டச்சிநல்லூர்
செயமா விரட்டியுட னேலத்தி வாடியும்
செய்யபடை வீடுபட்டிலூர்

ஏரூர் வயற்கழனூர் மண்டபத் தூர்தோக்கை
இன்பமிகு சித்தளந்தூர்
இணையில்கத் தேரியுடன் முப்பத்தி ரண்டூர்கள்
இனியபூந் துறைசைநாடே''

என்பது அப்பாடலாகும். இதனை ஊர்த்தொகைப் பாடல் என்பர்.

திருச்செங்கோட்டை மையமாகக் கொண்டு ''திருச்செங்கோடு நாடு'' என்ற பகுதி பூந்துறை நாட்டின் உள்நாடாக சில காலம் விளங்கி யுள்ளது. கீழ்க்கரைப் பூந்துறை நாடு உள்ளிட்ட சில நாட்டுப் பகுதி களை ''எழுகரைநாடு'' என்றும், ''குன்றத்தூர்க் கூற்றம்'' எனவும் முன்பு வழங்கியுள்ளனர்.

கீழ்க்கரைப் பூந்துறை நாட்டின் தலைமைத் தலம் திருச்செங்கோடு ஆகும். இந்நாடு தொன்மைச் சிறப்பும், வரலாற்றுப் பெருமையும், இலக்கியப் புகழும் உடையது. கீழ்க்கரைப் பூந்துறை நாட்டு ஊர்களில் குமரமங்கலமும் ஒன்றாகும், ''நீரூர் குமரமங்கை'' என்று ஊர்த் தொகைப் பாடலில் குமரமங்கலம் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கரைப் பூந்துறை நாட்டின் 32 பழம்பெரும் பதிகளில் 11 ஆவது ஊராகக் குறிக்கப்பட்டுள்ள ஊர் குமரமங்கலம். திருச்செங்கோட்டு மலைக்குக் கிழக்கே இராசிபுரம், நாமக்கல் செல்லும் சாலையில் 5 ஆம் கிலோமீட்டரில் குமரமங்கலம் உள்ளது. சாலையின் இருபுறமும் அமைந்துள்ள ஊர். உழவுத் தொழிலும், நெசவுத் தொழிலும் சிறந்துள்ள வளமான ஊர்.

இவ்வூர் குமரமங்கலம், குமரபுரி, குமரமங்கை, மாமங்கை என பலவாறு அழைக்கப்படும் சிறப்புடையது. மிகவும் சிறப்பு வாய்ந்த

ஊர்களே ''மங்கலம்'' என்று அழைக்கப்பெறும். நிகண்டுகளிலும் அகராதிகளிலும் ''மங்கலம்'' என்ற சொல்லுக்கு சுகம், ஆக்கம், நலம், பொலிவு, நற்காலம், நன்மை, வாழ்த்து, தூய்மை எனப் பல மங்கலப் பொருள்கள் கூறப்பட்டுள்ளன.

விசயமங்கலம், சத்தியமங்கலம், கேசரிமங்கலம், சேந்தமங்கலம், பாண்டமங்கலம், கொத்தமங்கலம், மறமங்கலம், வைரமங்கலம், மோடமங்கலம் எனப் பற்பல மங்கலங்கள் கொங்கு நாட்டில் உள்ளன. குமரமங்கலம், குமரன் (முருகன்) எழுந்தருளி அருள்புரியும் திருச்செங் கோட்டின் அருகே இருப்பதால் குமரமங்கலம் என்று பெயர் பெற்றிருக் கலாம். அல்லது குமரமங்கலத்தின் முதன்மைக் காணியாளர்களான தூரகுலப் பெருமக்கள் குமரகவுண்டர், குமரவேல் கவுண்டர், குமரபூபதி எனப் பெயர் பெற்றிருப்பதால் அவர்கள் பெயராலும் குமரமங்கலம் என்று பெயர் பெற்றிருக்கலாம். அவர்கள் பெயர் குமரக் கடவுளோடு தொடர்புடையதே! எப்படியும் குமரக் கடவுளாகிய முருகன் பெயரால் இவ்வூர் பெயர் பெற்றது என்பது தெளிவு, ''குமாரமங்கலம்'' என்பது பிற்கால வழக்காகும்.

''ஏழூர் கட்டி மகிபன் பள்ளு'' என்னும் இலக்கியத்தில் குமரமங் கலம் செல்வச் செழிப்பு மிக உயர்த்திக் கூறப்பட்டுள்ளது.

''பொன்னி னால்உழவு கொழுக்கொள்வார்
    போத மாணிக்கத் தீபங்கள் வைப்பார்
கன்ன லால்பண்ணை வேலி பிடிப்பார்
    கனக நாழிகொண்டே முத்தளப்பார்
பொன்னு லாவுநல் இல்லம் சமைப்பார்
    பூசும் சந்தனச் சேற்றில் வழிப்பார்
உன்னு நஞ்சைய ராச வசீகரன்
    உசித மாமங்கை ஊர்எங்கள் ஊரே''

என்பது அப்பாடலாகும். இப்பாடலில் தூரன்குல நஞ்சையகவுண்டர் சிறப்பிக்கப்படுகிறார்.

இலக்கியங்களிலும் தனிப் பாடல்களிலும் குமரமங்கலம் பல படப் புகழ்ந்து கூறப்பட்டுள்ளது.

''சிந்தைமகிழ் குமரமங்கலம்'' ''சீராரும் குமரமங்கலம்''

''திக்கில் உயர் குமரமங்கலம்'' ''தென்னர் பணி குமரமங்கலம்''

''செந்தமிழ்சேர் குமரமங்கலம்'' ''திரு உலவும் குமரமங்கலம்''

''தேசுபுகழ் குமரமங்கலம்'' ''நீதிக் குமரமங்கலம்''

''வந்தனை செய்தோரை வாழவைக்கும் குமரமங்கலம்''

''சித்தர்கள் எந்நாளும் சேர்ந்தே உலவும்
சீர்பெற்ற குமரமங்கலம்''

''மல்லிகை முல்லை மருக்கொழுந்து மற்றும்
மலியும் குமரமங்கலம்''

''பெரியோர்கள் எந்நாளும் பெட்புடன் வந்துசேர்
பீடுயர் குமரமங்கலம்''

என்பன சில இலக்கியத் தொடர்கள்.

குமரமங்கலத்தில், பங்கஜவல்லி சமேத சுந்தர பாண்டீசுவரர் கோயில், இலட்சுமித் தாயார் உடனமர் கரியபெருமாள் கோயில், பொன்காளி யம்மன் கோயில், அங்காளம்மன் கோயில், பச்சியம்மன் கோயில், சின்ன மாரியம்மன் கோயில், பெரிய மாரியம்மன் கோயில், முனியப்பன் கோயில், முத்துக்குமாரசுவாமி கோயில், மாசாணியம்மன் கோயில் ஆகிய பல கோயில்கள் உள்ளன.



சுந்தர பாண்டீசுவரர் கோயில், குமரமங்கலம்



குலதெய்வம் பொன்காளியம்மன் கோயில், குமரமங்கலம்

குமரமங்கலம் தூரன்குலப் பெருமக்கள் சிற்றம்பலக் குருக்கள் என்பவரைக் குருக்களாக ஏற்றுச் சமயம் பேணியும், பாகம்பிரியான் கவிராயர், காளியண்ணப் புலவர், பழனிவேல் வாத்தியார், விசாகப் பெருமாள், முத்துசாமிக் கோனார் முதலிய பல தமிழ்ப் புலவர்களை ஆதரித்துத் தமிழ் வளர்த்தும் சிறப்புற்றுள்ளனர்.

குமரமங்கலம் சமூக ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. கொங்கு வேளாளர்கள் வேட்டுவ சமுதாயத்திற்கு ''முப்பாடு'' என்னும் முதல் உரிமையைக் கொடுத்துள்ளனர். கொங்கு வேளாளர்களில் தூரன் குலத்தாரோடு ஈஞ்ச குலம், விலைய குலம், வில்லி குலப் பெருமக்களும் குமரமங்கலம் காணியாளர்களாக உள்ளனர்.

குமரமங்கலம் செப்பேடு, ஊஞ்சல் பாடல் ஆகியவை கொங்கு வேளாளர், வேட்டுவர், நாடார், ஆசாரிமார், ஆண்டிகள், குயவர், நாவிதர், தோட்டிகள், அம்பலகாரர் முதலிய பல்வேறு சமூக மக்கள் இணைந்து வாழ்வதைக் கூறுகிறது.

கல்வி நிலையங்கள் பல சூழ இன்று எல்லா நகர வசதிகளும் பெற்ற குமரமங்கலத்தின் சமய, இலக்கிய, பொருளாதார நல்வாழ்வுக்குக் குமரமங்கலம் தூரன் குல ஜமீன்தார்கள் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளனர். தங்கள் பெயர்களுக்குப் பின்னர் குமாரமங்கலம் என்னும் ஊர்ப் பெயரைச் சேர்த்துக் கொண்டு குமரமங்கலத்திற்கு உலகப் புகழ் தேடித் தந்துள்ளனர். இவ்வூரில் விற்கவும், வாங்கவும் பேருதவி புரியும் பெரிய சந்தையை ஏற்படுத்தியவர்கள் குமரமங்கலம் ஜமீன்தார்களேயாவர்.

காலம் தோறும் கோயில் திருப்பணி செய்து நாட் பூசை, விழாக்களைச் சிறப்பாக நடத்துகின்றனர்.

❈ ❈ ❈

# 2. திருச்செங்கோடு



திருச்செங்கோடு கோயில் வரவேற்பில் சுப்பராயன்

கொங்கு நாட்டில் மலைகள் மிகுதி. அவற்றுள் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டின் தலைமைத் தலமாக விளங்கும் ''திருச்செங்கோடும்'' ஒன்று. கொங்கு நாட்டின் தேவாரப்பாடல் பெற்ற ஏழு தலங்களில் திருச்செங்கோடு ஒன்று. ஏனைய தலங்கள் வெஞ்சமாங்கூடல், கருவூர், கொடுமுடி, பவானி, திருமுருகன்பூண்டி, அவினாசி என்பனவாம். திருச்செங்கோடு குமரமங்கலத்தோடு நெருங்கிய தொடர்புடையது.

சோழ நாடு, பாண்டிய நாட்டை விட தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்கள் ''கொங்கேழு தலங்கள்'' எனக் குறைவாக இருப்பினும் கொங்கு நாட்டவர் இத்தலங்கள் மீது மிகுந்த பக்தியும், பற்றும் கொண்டு விளங்கினர். நாள்தோறும் தங்கள் நாட்டுத் தேவாரப் பதிகங்கள் பெற்ற திருத்தலங்களை நெஞ்சில் நிறுத்திப் போற்றியுள்ளனர்.

''ஆதி கருவூர் அணிவெஞ்சை மாக்கறைசை
நீதி அவிநாசி நீள்நணா - மேதினியின்
தஞ்சமாம் செங்குன்றூர் தண்முருகன் பூண்டிதமை
நெஞ்சமே நித்தம் நினை''

என்பது ஒரு பழம் பாடலாகும்.

வாய்ப்பும் வசதியும் உடைய பெருமக்கள் சிலர் குதிரை மீதேறி ஒரே நாளில் திருச்செங்கோடு உட்படக் கொங்கேழு தலங்களையும் வணங்கியுள்ளனர். இதனை,

''பெரிய சர்க்கரை உத்தமக் காமிண்டர்
பேரன் கொற்றவேல் சர்க்கரை யாரிவர்
கரிய குண்டுக் குதிரைமேல் ஏறியே
காணும் ஓர்பொழுது அத்த மனத்துளே
அரிய கொங்குச் சிவாலயம் ஏழையும்
அணுகிச் சேவித்து அரண்மனை சேர்ந்தஅப்
பரியைக் காணுதற்குப் பாத காணிக்கை
பத்து நூறுடன் ஆயிரம் ஆகுமே''

என்ற பாடல் விளக்குகிறது. கொங்குத் தலங்களுக்குச் செல்ல இக்குதிரை என்ன புண்ணியம் செய்ததோ என்று எண்ணி அதற்குக் காணிக்கை வைத்துப் பணிந்து வணங்கியுள்ளனர். இன்னும் பலர் இத்தல யாத்திரையைச் செய்திருக்கக் கூடும்.

கி.பி. 7ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தேவாரம் பாடிய மூவரில் முதல்வராகிய திருஞான சம்பந்தர் அடியார் குழுவோடு வந்து திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரரைத் தொழுது பதிகம் பாடியுள்ளார்.

''பந்தணவும் விரலாள் ஒரு பாகம்''
''மலைமகள் கூறுடையான்''

என்று மாதொரு பாகனைப் பற்றிக் கூறிய திருஞான சம்பந்தர்,

''கொத்தலர் தண்பொழில்சூழ்
கொடிமாடச் செங்குன்றூர்''
''கொங்கணவும் பொழில்சூழ்
கொடிமாடச் செங்குன்றூர்''

எனத் திருச்செங்கோட்டின் வளத்தையும் கூறுகிறார்.

''குன்றன்ன மாளிகைசூழ்
கொடிமாடச் செங்குன்றூர்''

எனக் கூறுவதால் அன்றைய திருச்செங்கோட்டின் பெருமையை அறிகின்றோம்.

திருஞான சம்பந்தர் திருச்செங்கோட்டில் தங்கிக் காவிரிக்கு மேற்கே சென்று சில தலங்களைப் பாடிப் பரவியதாகப் பெரியபுராணத்தில் குறிப்பு வருகிறது. இப்போது காவிரி மேல்கரையில் பவானி தவிர வேறு தலங்கள் இல்லை. திருஞான சம்பந்தர் திருச்செங்கோட்டில் தங்கியிருந்த காலம் குளிர் காலம் ஆதலின் ஊரவர்க்கும் அடியார் சிலர்க்கும் ''சுரநோய்'' வந்து துன்புறுத்தியது. திருஞான சம்பந்தர்,

''நாம் அடியேம்
வெவ்வினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்''

என முடியும் ''திருநீலகண்டப்பதிகம்'' பாடவே அனைவர் சுரநோயும் அகன்றது என்பர்.

திருச்செங்கோட்டு மலை கிழக்கே தலையும் மேற்கே வால் பகுதியுமாக நாகம் படுத்திருப்பதுபோல் காணப்படுவதால் ''நாக மலை'' என்றும் கூறுவர். நாககிரி, பணிமலை, சேடகிரி, அரவகிரி, சர்ப்ப சயிலம் எனவும் குறிப்பர்.

குறுந்தொகையில் (282) நாகம் என்று வரும் சொல் இம்மலை யைக் குறிக்கும் என்பர். மலை ''செங்கோடு'' எனப் பெயர் பெற்ற காரணம் செம்மை நிறமாகவும், கீழ்ப்பகுதி மிக உயரமாகவும், செங்குத்தாகவும் இருப்பதே காரணம்.

ஊர் செங்குன்றூர் எனப்பட்டது. சங்ககாலப் புலவரும், திருக்குறளைப் புகழ்ந்து சங்கப் புலவர்கள் பாடியதாகக் கருதப்படும் திருவள்ளுவ மாலை என்னும் நூலில் இடம் பெற்றுள்ள

''புலவர் திருவள் ளுவர்அன்றிப் பூமேல்
சிலவர் புலவர்எனச் செப்பல் - நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயராகும் மற்றும்
கறங்கிருள்மா லைக்கும் பெயர்''

என்ற வெண்பாவைப் பாடிய செங்குன்றூர்க் கிழார் இவ்வூரினர் ஆகலாம்.

''அங்கோட்டு அகல்அல்கும் ஆயிழையாள் நம்மோடு
செங்கோடு பாய்துமே என்றாள்மற்று - அங்கோட்டின்
மேற்காணம் இன்மையால் மேவாது ஒழிந்தாளே
காற்கால்நோய் காட்டிக் கலுழ்ந்து''

என்ற நாலடியார் பாடலில் குறிக்கப் பெறும் ''செங்கோடு'' இம்மலையே என்பர்.

சிலப்பதிகாரத்தில்,

''குன்றக் குறவர்''

''வென்வேலான் குன்று''

''நெடுவேள் குன்றம்''

''சீர்கெழு செந்திலும் செங்கோடும்''

என வரும் இடங்களில் எல்லாம் ''கொங்கு நாட்டுத் திருச்செங்கோடு'' என்றே அடியார்க்கு நல்லாருக்கு முன்பு அருஞ்சொற்களுக்குப் பொருள் எழுதியமையால் ''அரும்பத உரையாசிரியர்'' என்று பெயர் பெற்றவர் கூறுகிறார்.

திருச்செங்கோட்டில் பாவடி மைதானத்தில் உள்ள கல்வெட்டு ''முருகப் பெருமான் திருப்படை வீடாகிய திருச்செங்கோடு'' என்று கூறுகிறது. பல இலக்கியங்கள் திருச்செங்கோட்டை ''ஏரகம்'' என்றே குறிக்கின்றன.

''ஏரக நாயக ஆடுக செங்கீரை''

என்பது செங்கோட்டு வேலவர் பிள்ளைத் தமிழ்த் தொடர்.

''ஏரகத்தார் படித்தரத்துக்கு ஈந்த தாமே''

என்பது ஒரு தனிப்பாடல் தொடராகும். கொங்கு நாட்டுப் பெரும் புலவர் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் முருகப் பெருமானின் படை வீடாக நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் கூறும் ''ஏரகம்'' சோழநாட்டுச்

''சுவாமிமலை'' அல்ல. கொங்கு நாட்டுத் திருச்செங்கோடே என்று ஆய்ந்து எழுதியுள்ளார்.

கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் தமிழகம் எங்கும் யாத்திரை மேற் கொண்டு தன் சந்தக் கவியால் முருகப் பெருமானைப் பாடிப் பரவிய அருணகிரிநாதர் இத்தல முருகப் பெருமான் மீது 21 திருப்புகழ்ப் பாடல்கள் பாடியிருப்பது மிகவும் சிறப்புக்குரியது.

''செஞ்சாலிமிஞ்சி மஞ்சாடு கின்ற
செங்கோ டமர்ந்த பெருமாளே''
''திதிக்கும் பார்வதியின் மதிப்புண் டாக்கிய
திருச்செங் கோடுறை பெருமாளே''
''கொண்டல் ஆர்த்துச் சிறக்கும் காட்சிக்
கொங்கு நாட்டுத் திருச்செங்கோட்டுப் பெருமாளே''

என்றெல்லாம் பாடிப் பரவியுள்ளார்.

திருவண்ணாமலையில் கோபுர வாயில் வடவருகே முருகப் பெருமான் காட்சி தந்த போது பாடியதாகக் கருதப் பெறும் கந்தரலங் காரத்தில் பல இடங்களில் திருச்செங்கோட்டு வேலவரைப் பாடி மகிழ்ந்துள்ளார். அவை மிகச் சிறந்த பாடல்களாகும்.

''தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழும் செழுஞ்சுடரே''

''வழிக்குத் துணைவடி வேலும் செங்கோடன் மயூரமுமே''

''சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனை''

''சேலார் வயற்பொழில் செங்கோ டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேஅந்த நான்முகனே''

என்பன அருணகிரிநாதர் பாடிய கந்தரலங்காரத் தொடர்கள்.

கந்தர் அனுபூதியிலும் அருணகிரி நாதர்

''நாகாசல வேலவ நாலுகவித்
தியாகா சுரலோக சிகாமணியே''

என்று திருச்செங்கோட்டு முருகனைப் பாடியுள்ளார். கொங்கு நாட்டுத் தலங்களில் பழனிக்கு அடுத்து அதிக இலக்கியங்கள் பெற்ற தலம் திருச்செங்கோடேயாகும். புராணம், பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, நொண்டி, மாலை, பதிகம், அந்தாதி, சதகம், பள்ளு என ஐம்பத்திற்கு மேற்பட்ட சிற்றிலக்கியங்கள் உள்ளன.

1923 அடி உயரம் உள்ள மலையேறப் படிகள் உள்ளன. படியில் செல்வோர் வசதிக்காக இடையில் 10 மண்டபங்கள் உள்ளன. வாகனங்கள் செல்ல மலைப்பாதையும் அமைக்கப்பட்டுள்ளது. இடையில் உள்ள அறுபதாம் படியைச் ''சத்தியப்படி'' என்பர். தீராத வழக்குகள் எல்லாம் அங்கு வந்து வழிபட்டால் தீரும் என்பது மக்கள் நம்பிக்கை. அங்குள்ள முருகப் பெருமானையும் அருணகிரிநாதர் ''தர்க்க சாத்ரத் தக்க மார்க்கச் சத்ய வாக்யப் பெருமாளே'' என்று பாடியுள்ளார்.

மலைமேல் அர்த்தநாரீசுவரர், முருகன் (செங்கோட்டுவேலவர்), பெருமாள் (ஆதிகேசவர்), நாகீசுவரர் சன்னதிகள் உள்ளன. சிவாலயக் கருவறையில் லிங்கத்திற்குப் பதிலாக மாதொரு பாகனாக அர்த்தநாரீசு வரர் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். திருஞானசம்பந்தப் பெருமான் தன் தேவாரப் பதிகத்தில் முதல் ஐந்து பாடல்களில் இத்திருக்கோலத்தையே குறிப்பிடுகிறார்.

அர்த்தநாரீசுவர வடிவத்திற்கும் இரண்டு காரணங்கள் கூறப்படு கின்றன. படைப்புக் கடவுளான பிரம்மன், பிரசாபதிகள் என்னும் ஆண் இன உபபிரமாக்களைத் தோற்றுவித்து மானிட இனங்களை உலகில் ஏற்படுத்துமாறு கட்டளையிட்டார். அவர்களால் அக்கட்டளையை நிறைவேற்ற முடியவில்லை. பிரமன் சிவபெருமானை வேண்ட சிவன் அர்த்தநாரீசுவர வடிவம் காட்ட பிரமன் மானிடப் பெருக்கத்திற்கு பெண்களின் அவசியத்தை உணர்ந்தார் என்பர்.

மற்றொரு காரணமும் கூறப்படுகிறது. பிருங்கி முனிவர், சிவனும் பார்வதியும் உடனிருக்க, சிவனை மட்டும் வணங்கினார். இதனால் பார்வதி சிவனிடம் அர்த்த பாகம் வேண்டி கேதாரம், காசி, காஞ்சி,

திருவண்ணாமலையில் தவம் செய்து இறுதியில் திருச்செங்கோட்டில் அர்த்தபாகம் பெற்றார் என்பது சிலர் கருத்தாகும். இங்கு அர்த்தநாரீசுவர வடிவம் சித்தர்களின் நவபாஷாண உருவம் ஆகையால் அபிஷேகம் இல்லை. உற்சவருக்கே அபிஷேகம் நடைபெறும். மேற்கு முகமான சன்னதி.

முருகன் செங்கோட்டு வேலவர் என்று அழைக்கப்படுகிறார். செங்கோடன் - பாவாத்தாள் என்ற வழக்கும் உண்டு. ஆதிகேசவப் பெருமாள் கோயிலும் நாகீசுவரர் சன்னதியும் மலையில் உள்ளன. மலை உச்சியில் உச்சிப் பிள்ளையார் கோயிலும், பாண்டீசர் கோயிலும் உள்ளன. உச்சிப் பகுதியை ''மலடிகல்'' அல்லது ''வரடிகல்'' என்றும் அழைப்பர். மிகக் குறுகிய இடமாக உள்ள பாண்டீசர் கோயிலைச் சுற்றிய பெண்களுக்கு மகப்பேறு வாய்க்கும் என்பது மக்கள் நம்பிக்கை. ஆபத்து மிகுதியான இடம் ஆகையால் இப்போது வரடிகல்லைச் சுற்றுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இங்கு வாழ்ந்த அழகுநாச்சி என்னும் பெண்பாற்புலவர் பவானி பாலபாரதி சுப்பய்யர் வேண்டிக் கொள்ள தாசிக்கும் வரடி கல்லுக்கும் சிலேடை யாக ஒரு வெண்பாப் பாடியுள்ளார்.

''மேகம் உறையுதலால் வேண்டினபேர் சுற்றுவதால்
நாகமலை மீதில்உற நண்ணுதலால் - யோகர்புகழ்
ஆசுமது ரம்பாடும் அய்யாசுப் பையாகேள்
தாசியெனும் வரடிகல்லுத் தான்''

என்பது அப்பாடலாகும்.

மலையில் பல இடங்களில் கல்வெட்டுகள் உள்ளன. தமிழக அரசர்களும், அலுவலர்களும், பொதுமக்களும் வழிபாடு, திருவிழா இவைகளுக்காகப் பல கொடைகளை அளித்துள்ளனர். இத்தலத்தில் விழாக்களைச் சிறப்புடன் நடத்த ''திருவாதிரைக் கணப்பெருமக்கள்'' ஏகாதசிக் கணப் பெருமக்கள்'' ''துவாதசிக் கணப்பெருமக்கள்'' முதலிய குழுவினர் இருந்து விழாக்களைச் சிறப்புடன் நடத்தியது குறிப்பிடத்தக்கதாகும். அடியார்களைச் சிறப்பித்து அவர்கள்

பெருமையை உணர்த்திச் சுந்தரர் ''திருத்தொண்டத் தொகை'' பாடக் காரணமாக இருந்த விறல்மிண்ட நாயனார் இத்தலத்தினர் என்பர்.

மோரூர்க் கண்ணகுலக் காங்கேயர், இருப்புலி செல்லகுல இளையான் மரபினர், தாரமங்கலம் கட்டி முதலிகள் முதலிய பலருடைய திருப்பணிகளால் சிற்பக் களஞ்சியமாகத் திகழும் பல பகுதிகள் மலையில் உள்ளன. 1823 ஆம் ஆண்டு சேலத்தில் மாவட்ட ஆட்சியராக இருந்த டபிள்யூ.டி. டேவிஸ் முன் மண்டபத்தைப் பழுது பார்த்துள்ளார். மலைமேல் மண்டபத் தூண் ஒன்றில் அவர் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. சதாசிவ பண்டிதர் இயற்றிய 'திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை' மிகச் சிறந்த வரலாற்று நூல். உரை, காலக்குறிப்புடன் 2012இல் தி.அ.சேது. மாதவகிருஷ்ணன் வெளியிட்டுள்ளார். பதிப்பாசிரியர் புலவர் செ. இராசு. ஜே.டி. மானுவேல் என்ற ஆங்கிலேய தாசில்தார் தேரோட்டம் சிறப்பாக நடத்தத் துணைபுரிந்தார். அவர்மீது சேலம் சுந்தரமுதலியார் ''மானுவேல் குறவஞ்சி'' என்னும் நூலைப் பாடியுள்ளார். பள்ளத்தாசன், குப்பண்ணப் பரதேசி போன்ற அருளாளர்கள் இங்கு வாழ்ந்து பல அற்புதங்கள் நிகழ்த்தியுள்ளனர். 40 தீர்த்தங்கள் உள்ள இத்தலத்தின் தேர்த்திருவிழா வைகாசி விசாகத்தில் நடைபெறுகிறது.

அடிவாரத்தில் ஆபத்துக் காத்த வினாயகர் கோவில், கைலாசநாதர் கோயில், அழகு நாச்சியம்மன் கோயில், பத்ரகாளி கோயில், சின்ன மாரியம்மன் கோயில், பெரிய மாரியம்மன் கோயில், மலைகாவலர் கோயில், பச்சையம்மன் கோயில், அய்யனார் கோயில், பெரிய ஓங்காளியம்மன் கோயில், சின்ன ஓங்காளியம்மன் கோயில், நல்ல தங்கம்மன் கோவில், வீரபத்திரசுவாமிகோயில் ஆகிய கோயில்கள் உள்ளன. கைலாசநாதர் கோயிலை நிலத்தம்பிரான் கோயில் என்பர். கைலாசநாதர் கோயில் திருவிழா தை மாதமும், அழகு நாச்சியம்மன் கோயில் விழா சித்திரையிலும் நடைபெறுகின்றன.

மலையடிவாரத்தில் பல கொங்குச் சமுதாயத்தினருக்குரிய 25க்கும் மேற்பட்ட மடங்களும், சத்திரங்களும் உள்ளன. அவற்றின்

சார்பில் பல கொடைகள் அளிக்கப்பட்டதுடன் விழாக் காலங்களிலும் பிற காலங்களிலும் உப்பு ஊறுகாய் நீராகாரம் வேண்டுவோர் சகலர்க்கும் அளிக்கப்பட்டன. 1803 ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியாரி டமிருந்து ஆத்மாராம் என்பவர் திருச்செங்கோட்டை 2887 ஸ்டார் பகோடாவிற்கு (10104 ரூபாய்) குத்தகைக்கு எடுத்தார். 1792ல் தாலூக்கா அமைக்கப்பட்டது. 1886ல் பஞ்சாயத்து ஏற்படுத்தப் பட்டது. இப்போது நகராட்சியாக உள்ளது.

திருச்செங்கோட்டில் சோழ நாட்டிலிருந்து அழைத்து வந்து குடியமர்த்தப்பட்ட குலோத்துங்கபட்டர், குலசேகரபட்டர் வழி வந்த ஆறு குருக்கள் அர்ச்சகர்கள் குடும்பங்கள் உள்ளன. அவர்களில் சிலர் மடம் அமைத்துக் குலகுருக்களாகவும் விளங்குகின்றனர்.

இங்கு குணசீலர், கவிராஜபண்டிதர், திருச்சிற்றம்பலக் கவிராயர், அழகு நாச்சி, சதாசிவபண்டிதர், வீரபத்திரக் கவிராயர் முதலிய பல புலவர்கள் வாழ்ந்துள்ளனர். தி.அ. முத்துசாமிக்கோனார் என்னும் பெரும்புலவர் (1858-1944) அச்சகம் நிறுவி கொங்குவேள், விவேகதிவாகரன் முதலிய இதழ்கள் நடத்தினார். பல இலக்கியங் களைச் சுவடியிலிருந்து பெயர்த்து எழுதி அச்சிட்டதுடன் பல இலக்கியங்களும் பாடினார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.எம். காளியண்ண கவுண்டர் அவர்கள் முயற்சியால் திருச்செங்கோட்டில் பல ஆண்டு களாகக் கண்ணகி விழா வைகாசி விசாகத் திருவிழாவையொட்டி நடைபெற்று வருகிறது. சிலர் அர்த்தநாரீசுவரரைக் கண்ணகியின் வடிவம் என்பர்.

ஜவுளி உற்பத்தி, வாகனப் போக்குவரத்து, ஆழ்குழாய்க் கிணறு தோண்டும் தொழில் (ரிக்), முட்டை உற்பத்தி, கோழி வளர்ப்புப் போன்றவைகளில் திருச்செங்கோடு முன்னணியில் உள்ளது.

❊ ❊ ❊

# 3. தூரன் குலம்

நூற்றுக்கு மேற்பட்ட கொங்கு வேளாளர் குலங்களில் இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு முதலிய அனைத்திலும் சிறப்புடன் குறிக்கப் பெறும் சில குலங்களில் தூரன் குலமும் ஒன்று. தூரன் குலம் பேச்சு வழக்கில் தூரகுலம் என்றும் அழைக்கப்பெறும். குலம் - கூட்டம், கோத்திரம் எனவும் கூறப்படுவதுண்டு. தூரை குலம் என்றும் சில இடங்களில் குறிக்கப் பெறுகிறது. ப. சுப்பராயன் குடும்பம் தூரன் குலம் சார்ந்தது.

வடக்கே வேளாளர் வாழ்ந்ததாகக் கருதப்படும் 'துவரன்பதி' என்ற ஊர் ஒன்று இருந்ததாகக் கூறப்படுகிறது. இலக்கிய வழக்கில் ''துவரன்'' என்பது ''துவரை'' என்றும் கூறப்படும். புறநானூற்றுப் பாடல் ஒன்றில் (200) புலவர் கபிலர் இருங்கோவேள் என்னும் குறுநில மன்னரை,

''உவரா ஈகைத் துவரை ஆண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே''

என்று அழைத்துள்ளார். கருநாடக மாநிலத்துக் கோலார்ப் பகுதியில் ''துவரை நாடு'' என்ற பகுதியும், ''துவாரசமுத்திரம்'' என்ற ஊரும் உண்டு. இப்பெயர்களால் தூரன் குலம் பெயர் பெற்றிருக்கலாம் என்ற கருத்து தூரன் குலத் தமிழ் அறிஞர் ம.ப. பெரியசாமித் தூரன் அவர்கட்கு உண்டு.

கண்ணன் வாழ்ந்த ''துவாரகாபுரி''யில் கூட வேளிர் (வேளாளர்) வாழ்ந்துள்ளனர். தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியர் ''அகத்தியர் தென்திசைக்கண் போதுகின்றவர் துவாராபதி போந்து

நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசு பதினெண்மரை யும் பதினெண்குடி வேளிர் உள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து காடு கெடுத்து நாடாக்கினார்'' என்று கூறுகிறார். அவர்கள் கொங்கு வேளாளர் தூரன் குலத்தாரின் முன்னோரா என்பது ஆய்வுக்குரியது. தென்னிலைச் செப்பேடுகள் இரண்டில் ஒன்றில் மட்டும் தூரன்குலம் - துவரை குலம் என்று அழைக்கப்படு கிறது.

சிலர் தூரன் குலத்தைத் துவரைச் செடியோடு (கொடி) தொடர்பு படுத்தி துவரைச் செடி தூரன் குலத்தாரின் அடையாளச் சின்னம் என்று கூறுகின்றனர். ஒரு கொங்கு ஆய்வாளர் ''தூர தேசத்திலிருந்து அவர்கள் வந்த காரணத்தால் தூரன் குலம் என்று பெயர் பெற்றார்கள்'' என்று கூறுகிறார். தூரன் குலம் மிகத் தொன்மையான ஆவணச் சான் றையும் பெற்றுள்ளது. மாந்தரஞ்சேரல் என்ற சேர மன்னன் பாண்டிய னோடு போர் தொடுக்க ஆயத்தமாகும்போது தன் கீழ் உள்ள ஆறு சிற்றரசர்கட்குச் சிறப்புச் செய்யுமாறு தன் அமைச்சர் ''தூரர்'' என்பவரைக் கேட்டுக் கொண்டதாக மாந்தரஞ்சேரல் மெய்க்கீர்த்தி கூறுகிறது.

> ''தூதுவரைப் போக்கிவரும் தூரர்என்னும் மந்திரரை
> ஏதுவுடன் மிகப்பார்த்து எழுந்தவரோடு அமர்புரிய
> தனக்குபகா ரம்புரிய தலையளிசெய் அறுவரையும்
> மனக்கினிய முறைமையதில் மகிழ்விக்கு மாறியம்பி''

என்பது அம்மெய்க்கீர்த்திப் பகுதியாகும்.

தூரன் குலத்தார் பல இடங்களில் ஊர், நாடுகளின் நிர்வாகியாக இருந்துள்ளனர். ''குவலயத் தினில்அரசு புரிகின்ற தூரகுலர்'' என்பது ஒரு பாடல் வரியாகும். தனிப்பாடல், இலக்கியங்களில் ''சாந்தம் மிளிரும் தூரர்'' ''சீர்கொண்ட தூரர்'' ''உத்தம குணாநிபுண தூரர்'' என்று தூரன் குலத்தார் புகழப்பட்டுள்ளனர்.

கம்பர் பாடிய முதலாவது கொங்கு குலப் பாடல் என்று ஒரு பாட லைக் கொங்குக் காணியான பட்டயம் கூறுகிறது. அப்பாடல் பகுதி,

''சேரன் பாண்டி யன்பனையன்
செங்கோல் பெரியன் செம்பவளன்
தூரன் ஆந்தை காடைகுலர்
துலங்கு முடியன் ஓதாளன்
பாரம் சுமந்த பண்ணை குலம்
படியளந் துண்ணும் பயிரகுலம்''

என்பதாகும்.

தூரன் குலத்தார் பற்றிய கல்வெட்டுகள் குறுப்புநாட்டு ஆதியூர், கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுத் திருச்செங்கோடு, குமரமங்கலம், பருத்திப்பள்ளி நாட்டுப் பருத்திப்பள்ளி, பாலமேடு, மேல்கரைப் பூந்துறை நாட்டு வெள்ளோடு, ஈரோடு ஆகிய ஊர்களில் உள்ளன.

கொங்கு நாட்டில் சமுதாய ஆவணங்கள் எழுதப்படும் போது சில ஆவணங்களில் தூரன் குலத்தார் பார்வையாளராக இருந்தும், முன்னிலை வகித்தும், சாட்சிக் கையொப்பமிட்டும் உள்ளனர்.

சர்க்கார் பெரியபாளையம் மரம் பிடுங்கிப் பட்டக்காரர் செப்பேட்டில்

''தூரன் குல முத்துக் கவுண்டர்''

எழுகரைச் செல்லகுலத்தார் செப்பேட்டில்

''தூரன் குலச் செல்லப்ப கவுண்டர்''

பாசூர் குருக்கள் செப்பேட்டில்

''மொடக்குறிச்சி தூரன்குலக் கருமாண்டக் கவுண்டர் சின்னமுத்துக் கவுண்டர்''

பருத்திப்பள்ளிச் செப்பேட்டில்

''தூரன் குலச் செல்லப்பகவுண்டர்''

தென்னிலைப் பட்டக்காரர் செப்பேட்டில்

''துவரை குலச் சாமிநாதக் கவுண்டர்''

முதலிய பலர் ஆவணங்களில் குறிக்கப் பெற்றுள்ளனர்.

# 4. திருச்செங்கோட்டுத் திருப்பணிகள்

குமரமங்கலம் தூரன் குலத்தாரும், குறிப்பாக டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் முன்னோரும் திருச்செங்கோடு குலசேகரபட்டர் வழியினரைக் குலகுருக்களாகக் கொண்டு சமய நம்பிக்கையோடு வாழ்ந்தனர். குலசேகரப்பட்டர் வழியினர் சோழ மண்டல சீர்காழித் தலத்திலிருந்து திருச்செங்கோட்டுக்குச் சோழ மன்னனால் அழைத்து வரப்பட்டவர்கள் ஆவர்.

திருச்செங்கோட்டில் தூர குலத்தார்க்குத் தனி மடம் ஒன்று இருந்துள்ளது. இச்செய்தி எழுகரைச் செல்லகுலச் செப்பேடு மூலம் தெரிகிறது.

குமரமங்கலம் தூரகுலத்தார் பலர் திருச்செங்கோடு அர்த்தநாரீசு வரர் சன்னதியில் வாதுளாகம விதிப்படி பஞ்சாட்சர உபதேசம் பெற்றுக் கொண்டு சுவாமியார் குலசேகர பட்டருக்கு மடாலயம் கட்டிக் கொடுத்து குரு பிரதிஷ்டை செய்து பிராமண சம்வர்த்தனை அளித் துள்ளனர். திருமணத்தின் போது குருவுக்குப் பாத காணிக்கை செலுத்துவார்கள். குருவிடம் தீர்த்தம், பிரசாதம் பெற்றுச் சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள்.

திருச்செங்கோட்டுக் காணியாளர்களில் தூரன் குலத்தார் ஒருவர் ஆகையாலும், தங்கள் குரு திருச்செங்கோடு ஆறு குருக்களில் ஒருவ ராக இருப்பதாலும், திருச்செங்கோடு கொங்கு நாட்டுத் தலைமைத் தலங்களில் ஒன்றாக இருப்பதாலும் குமரமங்கலம் தூர குலத்தாரும், டாக்டர் ப. சுப்பராயன் அவர்களின் முன்னோர்களும் திருச்செங் கோட்டுக்குப் பல திருப்பணிகளைக் காலந்தோறும் செய்துள்ளனர்.

திருச்செங்கோடு மலைப்படியின் இடையில் 10 மண்டபங்கள் உள்ளன. ஏழாவது மண்டபத்தை குமரமங்கலம் தூர குலத்தைச்

சேர்ந்த மசவேலகவுண்டர் மனைவி வள்ளியம்மாள் என்பவர் கட்டத் தொடங்கினார். அவர் கட்டி முடிக்க முடியாத காரணத்தால் குமரமங்கலம் தூர குலத்தைச் சேர்ந்த செட்டியாக் கவுண்டர் கட்டி முடித்தார். அதனால் இம்மண்டபம் செட்டியாக் கவுண்டர் மண்டபம் என்று அழைக்கப்படுகிறது.

செட்டியாக் கவுண்டரின் தந்தை குமாரகவுண்டர் என்று பொன்காளியம்மன் கோயில் கல்வெட்டு மூலம் தெரிகிறது.

மலைமேல் கோபுர நுழைவாயிலின் இடப்புறம் சுப்பிரமணியரும், வலப்புறம் விநாயகரும் மண்டபத்துள் எழுந்தருள்விக்கப்பட்டுள்ளனர். அங்கு ''கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் கொமரமங்கலம் தூர குல சடையப்பன் உபயம்'' என்ற கல்வெட்டு இரு பக்கமும் உள்ளது. இவர் டாக்டர். சுப்பராயன் அவர்களின் முன்னோர் ஆவார்.

''கொங்கு எழுகரை நாடதிபன் பூந்துறைநாடன்
கூறும் குமரமங்கைத் தூரர் தன்குலன்
செங்கோட் டாரைத் தினமும் சிந்தைசெயும்
சடையன்''

என்று 'கட்டி மகிபன் பள்ளு' கூறுகிறது.

வள்ளியம்மாள் கட்டிய மண்டபப் பணியை முடித்த குமரமங்கலம் தூரகுல செட்டியாக் கவுண்டர் கீழே கைலாசநாதர் கோயிலில் தாண்டவேசுரர் குறடு, மலை விநாயகர் குறடு, மலைமேல் நடராசர் குறடு முதலிய திருப்பணிகளைச் செய்துள்ளார்.

திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் கோயிலுக்கு விமானம் (சிகரம்) அமைத்தவர் தாரமங்கலம் சீயாலகட்டி முதலி ஆவார். ஆதித்த சோழன் கொங்கு நாட்டுப் பொன்னைக் கொண்டு சிதம்பரம் சிற்றம்பலம் பொன் வேய்ந்தது போல் குமரமங்கலம் கைலாசக் கவுண்டர் சீயாலகட்டி அமைத்த சிகரத்தில் பொன் தகடு போர்த்திய கலசம் அமைத்தார். இதனைத் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை,

''வேயாரும் தோளி உமைபாகர் மேவி விளங்குமங்கைச்
சீயால கட்டி முதலிமுன் செய்த சிகரமதில்

காயாட கத்தகடு ஏற்றியே நல்ல கலசம் வைத்தான்
சேயார் குமர புரிவாழ் கைலாச சிகாமணியே''

என்று புகழுகிறது. டாக்டர் சுப்பராயனின் முன்னோர் கைலாசக் கவுண்டர் குமரமங்கலம் ஜமீன் பெற்றமைக்காக இத்திருப்பணியைச் செய்திருக்கலாம்.

குமரமங்கலம் சுப்பராய கவுண்டர் (டாக்டர் சுப்பராயனின் தாத்தா) திருச்செங்கோட்டிற்கு நந்தா தீபம் வைத்தார். தளிகை - நைவேத்தியத்திற்குச் சிறப்பாக ஏற்பாடு செய்தார். இவர் மகன் பெரிய பரமசிவக் கவுண்டர் (டாக்டர் சுப்பராயன் அவர்களின் தந்தையார்) அர்த்தநாரீசுவரர் பிரம்மோற்சவத்தில் மண்டபக் கட்டளையும், விடாயாற்று உற்சவத்தையும் சிறப்பாக நடத்தினார்.

டாக்டர் சுப்பராயனின் முன்னோர் பாகம் பிரிக்கும் போது முத்தாஞ்செட்டி என்னும் மிட்டாவைக் குமரமங்கலம் சுந்தர பாண்டீ சுவரர் பூசை முதலிய தர்மத்திற்கு எழுதி வைத்தனர்.

மேற்கண்டவாறு திருச்செங்கோடு ஆலயத் திருப்பணிகட்கும், நாள் பூசைக்கும், திருவிழாக்களுக்கும் பேருதவி புரிந்த டாக்டர் சுப்ப ராயன் அவர்களின் குடும்பம் திருச்செங்கோட்டு இலக்கியங்கள் வெளி வருவதற்கும் மிகச் சிறந்த முறையில் உதவியுள்ளனர்.

திருச்செங்கோடு அருகில் சித்தளத்தூர் என்னும் ஊர் உள்ளது. கம்பர் பிறந்த சோழநாட்டுத் தேரழுந்தூர் நினைவாக அமைந்துள்ள ஊர். அவ்வூர் மிட்டா ஜமீன்தார் தூரன் குலத்தினரே ஆவர். மிட்டாதார் முத்துசாமிக் கவுண்டர் மகன் சுப்பராய கவுண்டர் நிலத்தம்பிரான் என வழங்கும் கைலாச நாதர் கோயில் கருவூலத்திற்குப் பூட்டு வழங்கிக் கருவூலப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்தார். இதனைத் திருச்செங் கோட்டுத் திருப்பணி மாலை,

''மருவூரும் கோதை கயிலாய நாதர் மகாலயத்தின்
கருவூலத் துக்குயர் பூட்டி சைத்துநல் காப்பமைத்தான்

தருவூருஞ் சித்தளந் தூர்ச்சமீன் முத்துச் சாமிமகன்
திருவூரும் தூரன் புகழ்சுப்ப ராய சுபாகரனே''

என்று புகழுகிறது.

இக்குமரமங்கலம் தூர குலச் செட்டியாக் கவுண்டர் திருச்செங் கோட்டு மலையில் சிவதீர்த்தத்தின் கிழக்கே மாசி மகத் திருவிழாவின் போது செங்கோட்டு வேலவர் வந்து தங்கும் ''சித்ரகூடம்'' என்னும் மண்டபத்தில் பாதிக் குறடு, சுவர்ப்படை, குறட்டின் மேல்வேலை ஆகிய திருப்பணிகளைச் செய்தார். இதனைத் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை,

''கோதைக் கிரியில் சிவதீர்த்தக் குணபால் சித்ர கூடம்என
மாதவர் தமக்கு மாசிமக வேலன் தொடுத்த மண்டபத்தில்
பாதிக் குறடு சுவர்ப்படைசெம் பாதிக் குறடு மேல்வேலை
நீதிக் குமர புரித்தூரன் நேயன் செட்டி புண்ணியமே''

என்று கூறுகிறது.

குமரமங்கலம் தூரகுலச் செட்டியாக் கவுண்டர் மீண்டும் சில திருப்பணிகளைத் திருச்செங்கோட்டில் மேற்கொண்டார். 1. நிலத்தம்பிரான் கோயில் எனப்பெறும் கைலாசநாதர் கோயிலில் மகா மண்டபத் தாண்டவக் குறடு, 2. மலை மீது விநாயகர் கோயில் குறடு, 3. மலையில் நடராசர் குறடு, 4. மலைப்படிகள், 5. சிவதீர்த்தத்தின் தெற்கே நூறு படிகள், 6. நூறாம் படி பெரிதாக விரிவாக்கம், 7. வயிரவ தீர்த்தத்தின் தென் மேற்கே இளைப்பாற்றி மண்டபம் ஆகிய திருப்பணிகளைச் செய்ததாகத் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை கூறுகிறது.

''ஆடரவ கிரியின்அடி வாரம்உறை கயிலாயர்
ஆலய மகாமண்டபத்து
அழகுதாண் டவக்குறடு மலைவிநா யகர்குறடும்
அசலநட ராசர்குறடும்

சேடகிரி ஏறுபடி சிவதீர்த்தத் தெட்சிணத்
திசைநூறு பெரியபடியும்
செஞ்சொல்நூ றாம்படி தனைப்பெரிய தாகவே
செய்வித்த ஏழுதர்மம்

நீடுவயி ரவதீர்த்த நிருதிதிசை யாகவும்
நிலமைதரு நலநாயகன்
நிறைமண்ட பத்திடை யும்இளைப் பாற்றியும்
நித்யம்மன தானநிபுணன்

நாடுபுகழ் குமரமங் கலம்மேவு தூரன்உயர்
நதிவம்ச குலசேகரன்
நன்மைதரு குமரபூ பதிசெட்டி அன்புடன்
நடத்தின திருப்பணிகளே''

என்பது திருப்பணிமாலைப் பாடலாகும்.

குமரமங்கலம் பொன்காளியம்மன் ஊஞ்சல்பாட்டு ''தழைத் தோங்கும் செட்டியாக் கவுண்டர் வாழி'' என்று வாழ்த்துகிறது.

❊ ❊ ❊

# 5. குமரமங்கலம் முதன்மை

தூரன் குலத்தாருக்கு 20க்கும் மேற்பட்ட பழமையான ஊர்கள் காணியுரிமையுடைய ஊராக இருப்பினும் அவற்றில் குமரமங்கலம் தான் முதன்மை ஊராக இருந்துள்ளது. கொங்கு நாட்டுத் தூரன் குலத்தார் ஒன்றாகக் கூடும் இடம் குமரமங்கலம் என்பது ஒரு செப்பேட்டால் உறுதிப்படுகிறது.

குமரமங்கலம் தூர குலத்தார்,

''நாடு புகழ் குமரமங்கை மேவும் தூரர்''

''நீதிக் குமரபுரித் தூரர்''

என்று இலக்கியத்தில் புகழப்பட்டுள்ளனர்.

கி.பி. 1622 ஆம் ஆண்டு தமிழ் துந்துபி வருடம் வைகாசி மாதம் 6 ஆம் நாள் கொங்குநாட்டுத் தூர குலத்தார் பலர் குமரமங்கலம் குலதெய்வக் கோயிலான பொன்காளியம்மன் கோயிலில் கூடினர். அவர்கள்,

| | | |
|---|---|---|
| பட்டிலூர் | - | நல்லியகவுண்டர் |
| சீராப்பள்ளி | - | காளிகவுண்டர் |
| பாலமேடு | - | பிடாரகவுண்டர் |
| முடுதுறை | - | செங்கோட கவுண்டர் |
| கல்யாணி | - | வேல கவுண்டர் |
| தும்பங்குறிச்சி | - | நல்லிக்கவுண்டர் |
| கீரம்பூர் | - | எட்டுக்கைக் கவுண்டர் |
| கோதையூர் | - | காளி கவுண்டர் |
| இடையாறை | - | ராசாக் கவுண்டர் |

| | | |
|---|---|---|
| வேளுக்குறிச்சி | - | காளி கவுண்டர் |
| காங்கயம் | - | சிவமலைக் கவுண்டர் |
| தூரம்பாடி | - | பழனிக் கவுண்டர் |
| மானூர் | - | வேல கவுண்டர் |
| வெங்கம்பூர் | - | ராக்கியாக் கவுண்டர் |
| முடக்குறிச்சி | - | குட்டைய கவுண்டர் |
| பாசியூர் | - | ராக்கியாக் கவுண்டர் |

என்பவர்கள் ஆவார். ஊருக்கு ஒருவர் மட்டுமே அக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். குமரமங்கலத்தைச் சேர்ந்த தூரகுலப் பெருமக்கள் 8 பேர் அக்கூட்டத்தில் கலந்து கொண்டதைச் செப்பேடு கூறுகிறது. அவர்கள் பாண்டிக் கவுண்டர், ராக்கியாக்கவுண்டர், குமரகவுண்டர், நல்லயகவுண்டர், விருப்பணகவுண்டர், செட்டிக்கவுண்டர், குமர வேல்கவுண்டர், கந்தப்ப கவுண்டர் ஆகியோர் ஆவர். இதனால் குமரமங்கலத்தின் முதன்மையும், தலைமையும் தெரிகிறது.

இவர்கள் அனைவரும் சேர்ந்து மோரூர் விருது மகுடாசல மாணிக்கி மகள் நல்ல பெண் என்னும் ஆடல் மகளைத் தூரகுல மாணிக்கியாக நியமித்தனர்.

தூரகுல மாணிக்கி நல்ல பெண்ணுக்கு ஆடையும், ஆபரணங் களும் அளித்து சந்தனம் தெளித்து ஊரில் மெரமனை (நகர்வலம்) வரச் செய்தனர். பின் அனைவரும் அவளுடைய சதிர்க் கச்சேரியை (நாட்டியத்தை) கண்டு களித்தனர். அவளுக்குத் தூர குலத்தார் அனைவரும் பண்ணையத்துக்கு ஒரு மிடாக் கம்பும், (16 வள்ளம் = 64 படி), ஒரு கட்டுக் கதிருக்காக 1 வள்ளம் (4 படி) அரிசியும் கொடுக்க ஒப்புக் கொண்டனர். தூரன் குலத்தார் வீட்டில் திருமணம் நடைபெற்றால் 1 வள்ளம் அரிசியும் 1 பணமும் கொடுக்க ஏற்பாடு செய்தனர்.

இவை தவிர அவளுக்குக் குமரமங்கலத்தில் நன்செய் நிலம் 50 குழியும், புன்செய் நிலம் 1 மிடாக்காடும் (64 ஏக்கர்) அளித்தனர்.

இதற்காக தூர குல மாணிக்கி நல்ல பெண்ணுக்கு ஒரு செப்பேடு எழுதித் தந்தனர். அச்செப்பேடு இன்றும் அருணகிரி அய்யம்பாளையம் இம்முடிச் சிற்றம்பல பண்டிதர் திருமடத்தில் உள்ளது. குமரமங்கலத்தில் நிலம் அளிக்கப்பட்டதால் தூரகுல மாணிக்கி குமரமங்கலத்தில் தங்கி யிருந்தாள் என்பது தெரிகிறது. இதற்கான கூட்டம் குமரமங்கலத்தில் நடந்ததும், கொங்கு நாட்டுத் தூர குலத்தார் அனைவரும் குமரமங் கலத்தில் கூடியதும் குமரமங்கலம் தூர குலத்தார்க்குத் தலைமைத் தலம்போல விளங்கியிருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

மாணிக்கி நல்ல பெண்ணை தங்கள் ''மூத்த பிள்ளை'' என்று அழைத்தனர். யாரேனும் தூரன் குலப் பெரியவர்கள் இறந்தால் முன் கை சிரைத்துத் துக்கம் அனுஷ்டிப்பது மாணிக்கியின் வழக்கம். பொன்காளியம்மன் கோயில் திருவிழாக்களின் போது சில சமயச் சடங்குகளை மாணிக்கி நிகழ்த்துவாள். இதன் மூலம் தூரன் குலத்தா ரின் கலை ஆர்வம் நன்கு தெரிகிறது.

கீழ்க்கரைப் பூந்துறை நாட்டின் 11 ஆம் ஊராகக் குமரமங்கலம் குறிக்கப்பட்டாலும் குமரமங்கலமே இலக்கியங்களில் முதலிடம் பெற்றுள்ளது. திருச்செங்கோட்டுக்குக் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டின் 14 ஊர்களைக் கொடையாக வழங்கப்பட்ட செய்தியைக் கூறும் பாடலில் குமரமங்கலமே முதலிடம் பெறுகிறது. அப்பாடல்,

''செந்தமிழ்சேர் குமரமங்கை ஆனங் கூரும்
சித்தளந்தூர் தோகைநத்தம் தோக்கை வாடி
நந்துலவும் மோடமங்கை அணிமூர் தேவ
ணாங்குறிச்சி கோழிக்கால் நத்தம் தானும்
முந்துதிரு மங்கையுடன் சேக்கு நத்தம்
முளசைமகா சாத்தபுரம் சூரப் பள்ளி
இந்தநகர் பதினாலும் சைவம் சூழ
ஏரகத்தார் படித்தரத்துக்கு ஈந்த தாமே!

என்பதாகும்.

❊❊❊

# 6. குமரமங்கலம் ஜமீன்

குமரமங்கலம் ஜமீன் வரலாற்றில் முதல்வராக அறியப்படுபவர் சடைய கவுண்டர் என்பவர். இவர் வெங்கம்பூரிலிருந்து குமரமங்கலம் வந்தவர் என்றும் ''ஒற்றைக்கால்'' சடையகவுண்டர் என்று அழைக்கப் பட்டார் என்றும் கூறுவர். இது தவறு. குமரமங்கலம் தூரன் குலத்தாரே வெங்கம்பூர்ப் பகுதியில் குடியேறினர் என்பது வரலாறு.

இவரைப் பற்றி இலக்கியச் செய்திகளும், கல்வெட்டுகளும் கிடைக் கின்றன. கட்டி மகிபன் பள்ளு என்னும் இலக்கியம்

''கொங்கு எழுகரை நாடதிபன் பூந்துறைநாடன்
கூறும் குமரமங்கைத் தூரர் தன்குலன்
செங்கோட் டாரைத் தினம்சிந்தை செயும் சடையன்''

என்று கூறுகிறது. எனவே இவர் குமரமங்கலத்திற்கே உரியவர் என்று தெரிகிறது. வெங்கம்பூர் தூர குலத்தாரின் ஒரு காணியூர். அங்குள்ள பெருமக்கள் ''நாங்கள் குமரமங்கலத்திலிருந்து வெங்கம்பூரில் குடியேறினோம். அங்கு சகோதரர்களுக்கிடையே எழுந்த பூசலால் வெங்கம்பூர் வந்தோம்'' என்று கூறுகின்றனர். ''குமரமங்கலத்திலிருந்து பிடிமண் கொண்டு வந்து இங்கு பொன்காளியம்மன் கோயில் கட்டி னோம்'' என்றும் கூறுகின்றனர்.

வெங்கம்பூர் கருப்பண்ண சுவாமிக்கு ''அக்கரைப்பட்டி முத்து சாமி'' என்று பெயர் வைத்துள்ளனர். அவர்கள் தங்கள் முன்னோர் காவிரியின் கிழக்கேயிருந்து வந்தவர்கள் என்றும் கூறுகின்றனர். ஒரு பாடலையும் கூறுகின்றனர்.

''ஆதி குமரமங்கலம்
அடுத்தது மேழிப்பள்ளி
நீதி வெங்கம்பூர்
நிலைத்திருக்கும் தூரகுலம்''

என்பது வெங்கம்பூர் தூரகுல மக்களிடம் வழங்கும் பாடல் தொடர் களாகும்.

சடையகவுண்டர் நிற்கும் போது ஒரு காலைத் தளர்த்திக் கொண்டு மற்றொரு காலின் வலிமையைக் கொண்டு நின்றதால் ''ஒற்றைக்கால் சடைய கவுண்டர்'' என்று பெயர் பெற்றதாகக் கூறுவர்.

சடையகவுண்டர் போக்கம்பாளையத்தில் விவசாயப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

இவருக்கு சின்னண்ணன், இராக்கியப்பன், சடையப்பன், நல்லதம்பி என்று ஆண்மக்கள் நால்வர். இவரது மகன் சின்னண்ணன் இப்பகுதி அரசு அதிகாரிகளிடம் தன் திறமையால் போக்கம்பாளையம் மணியம் பதவி பெற்றார். இவர் பெற்ற பணியைச் சிறப்புடன் ஆற்றி வந்தார். சின்னண்ணனுக்கு வாரிசு இல்லாத காரணத்தால் வாரிசு முறைப்படி வரும் மணியம் பதவியைத் தன் தம்பி இராக்கியப்பன் மகன் நஞ்சை யனுக்கு அளித்தார்.

அப்போது மைசூர் மன்னர் சிக்கதேவராயர் (1673-1704) ஆட்சிக் காலம். அறிவுக் கூர்மை படைத்த நஞ்சையன் தன் பகுதியில் பாசன வசதி ஏற்படக் காவிரியில் அணை கட்ட வேண்டும் என்று அரச ரிடம் கூறினார். பூலாம்பட்டியில் காவிரியில் அணை கட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பெருவெள்ளம் காரணமாக அணை கட்டும் பணி தடைப்பட்டது. இருப்பினும் அணை கட்டுமானப் பணியின் காரணமாக ஆழமான அப்பகுதியில் காவிரித் தண்ணீர் தேங்கி நிற்ப தால் அப்பகுதியின் நீர் ஆதாரம் பெருகியுள்ளது. இன்றும் அப்பகுதிக் கிணறுகள் அதனால் ஏற்படும் நீர் ஊற்றினால் பயன்படுகின்றன.

நஞ்சையன் போக்கம்பாளையம் மணியம், குமரமங்கலம் கணக்கர் வேலை ஆகியவைகளைப் பொறுப்புடன் செய்தார். மக்களிடம் செல்வாக்குப் பெற்ற நஞ்சையன் தமிழ்ப் புலவர்களையும் ஆதரித்துள்ளார். நரசிங்கன் என்பவர் இயற்றிய கட்டிமகிபன் பள்ளு இலக்கியத்தில் சடையகவுண்டர் மகன் சின்னண்ணன், சின்னண்ணன் தம்பி இராக்கியப்பன் மகன் நஞ்சையன் என்று கூறப்பட்டுள்ளது.

''சடையன் செல்வன்
சின்னராயன் துணை ராக்கிசொல்
துங்கன் துரை நஞ்சையன்''

என்று கூறப்பட்டுள்ளது.

தெய்வபக்தி மிகுந்த நஞ்சையன் அரசன் சிக்கதேவராயன் மன மகிழக் காரியங்கள் ஆற்றியமையால் குமரமங்கலத்தைத் தானமாகப் பெற்றார். குமரமங்கலம் ஜாகீர் எனப் பெயர் பெற்றது. அரசன் கொடை யாக அளிக்கும் ஊர்கள் ஜாகீர் எனப்படும். வீட்டிலிருந்து பணி புரிந்து வந்த நஞ்சைய கவுண்டர் நிர்வாகக் கட்டிடம் கட்டிப் பல ஆட்களை நியமித்து ஊர் நிர்வாகத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார். இவர் காலத்தில்தான் குமரமங்கலம் சந்தை வளர்ச்சியடைந்தது.

நஞ்சையகவுண்டருக்குப் பரமசிவம் என்ற ஒரே மகன். பரமசிவக் கவுண்டருக்கு செங்கோட்டுவேல், கைலாசம், நஞ்சையன், சுப்ப ராயன், சின்னண்ணன் என ஐந்து மக்கள். இரண்டாவது கைலாசத்தை குட்டிக் கவுண்டர் என்றும் அழைப்பார்கள்.

பரமசிவக்கவுண்டரின் மூத்த மகன் செங்கோட்டுவேலுவுக்கு கைலாசம், இராமசாமி, லட்சுமணன், முத்துசாமி என நான்கு மக்கள். இரண்டாம் மகன் கைலாசத்திற்கு அர்த்தநாரி என்ற ஒரே மகன்.

மூன்றாம் மகன் நஞ்சையனுக்கு வாரிசு இல்லை. அண்ணன் செங்கோட்டுவேல் மகன் முத்துசாமியைத் தத்தெடுத்துக் கொண்டார்.

நான்காம் மகன் சுப்பராயனுக்கு சின்னண்ணன், பரமசிவம், கைலாசம் என மூன்று மக்கள் பரமசிவத்தை பெரிய பரமசிவம் என்று அழைப்பர். ஐந்தாம் மகன் சின்னண்ணனுக்கு ஒரே பெண்.

இரண்டாவது மகன் குட்டிக் கவுண்டர் என்ற கைலாசத்தின் மகன் அர்த்தநாரி இறந்ததால் தன் தம்பி சுப்பராயனின் முதல் மகன் சின்னண்ணனைத் தத்தெடுத்துக் கொண்டார். எல்லோருடைய குடும்பமும் போக்கம்பாளையத்தில் வாழ்ந்து வந்தது.

கைலாசக் கவுண்டரின் சகோதரர்கள் விவசாயம் மட்டுமே செய்து வந்தனர். கைலாசக் கவுண்டர் விவசாய வருமானத்தைச் சிக்கனமாகச் செலவு செய்து மீதிப் பணத்தைப் பிறருக்குக் கடனாகக் கொடுத்து உதவி வந்தார். பலரும் அவரை நாடி வந்தனர். பிறரிடம் அன்புடன் நடந்து கொண்டார். அவர் புகழ் எங்கும் பரவியது. கைலாசக் கவுண்டர் தன் வளர்ப்பு மகன் சின்னண்ணனுக்கு சங்ககிரி காட்டுப்பாளையம் ராஜாக் கவுண்டரின் இளைய சகோதரி செல்லாயம்மாளைத் திருமணம் செய்து வைத்தார். அவர்கட்குப் பிறந்த குழந்தைக்குப் பரமசிவம் என்று பெயர் வைத்தனர். அவர் சின்ன பரமசிவக் கவுண்டர் என்றழைக்கப்பட்டார். சின்ன பரமசிவத்தின் தாயார் செல்லாயம்மாள் காலமானார். கொங்கணாபுரம் நல்லக்காள் மகள் காவேரியம்மாளை சின்னண்ணன் இரண்டாம் திருமணம் செய்து கொண்டார்.

திப்புவிடமிருந்து 17.03.1792-ல் சேலம் மாவட்டப் பகுதியைக் கம்பெனியார் பெற்றனர். 04.04.1792ல் கர்னல் ரீடு சேலம் மாவட்டக் கலெக்டராக நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவியாளராக தாமஸ் மன்றோ, ஜேம்ஸ் கிரகாம், வில்லியம் மேக்ளியாட் நியமிக்கப்பட்டனர். நான் காண்டுகள் நில அளவை மேற்கொண்டு விவசாயிகள் தாங்களாகவே நிலவரி செலுத்தும் ரயத்துவாரி முறையை 10.12.1796 முதல் அமுல் படுத்தினார். அதனால் வரிவசூல் மிகக் குறையவே ஜமீன்தாரி முறையை 1802ல் கொண்டு வந்தார். முதலாவதாக சேலம் ஜமீன் தாராக கந்தப்ப செட்டியார் என்பவர் 1802ல் நியமிக்கப்பட்டார்.



ஜமீன் பெற்ற
கைலாசக் கவுண்டர்

பெரும்பாலும் நன்செய் நிலங் களைத் தவிர்த்து மீதி நிலங்களை 145 ஜமீன்தாரர்களுக்கு அளித்தனர். மிட்டா தாரர் என்போர் பெரிய நிலச் சொந்தக் காரர்கள். மக்கள் இருசாராரையும் ''ஜமீன்தார்'' என்றே அழைத்தனர்.


சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இ.ஆர். ஹார்கிரேவ் அவர்கள் காலத்தில்

கைலாசக் கவுண்டர் குமரமங்கலம் ஜமீன்தாராக நியமிக்கப்பட்டார். குமரமங்கலம் ஜமீனில் 83 கிராமங்களில் 40,000 ஏக்கர் விவசாய நிலங்கள் இருந்தன. 35,000 ஏக்கர் புன்செய் 3500 ஏக்கர் தோட்டம் 1500 ஏக்கர் நன்செய். வரி முறையே மூன்றுக்கும் 1-10-0, 4.12.0,6-12.0 என விதிக்கப்பட்டது. வருடக் குத்தகை 2621 ஸ்டார் பகோடா என நிர்ணயிக்கப்பட்டது. (ரூ.9173-8-0) ஜமீன்தாரர்கள் விவசாயிகட்கும் அரசுக்கும் இடையில் தொடர்பாள ராகச் செயல்பட்டனர். கைலாசக் கவுண்டர் ஒரு குதிரை வண்டிப் பயணம் மேற்கொண்ட போது அகால மரணமடைந்தார்.

வளர்ப்பு மகன் சின்னண்ணன் ஜமீன்தார் ஆனார். சின்னண்ண னின் இரண்டாவது மனைவி காவேரியம்மாளுக்குக் குழந்தையில்லை. மூத்த மனைவி செல்லாயம்மாள் மகன் சின்ன பரமசிவம் மட்டுமே வாரிசு. ஜமீன்தார் ஆன சின்னண்ணன் வங்கியை முறைப்படுத்தினார். சின்னண்ணன் காலமான பின் சின்ன பரமசிவக் கவுண்டரைக் கண்ணும் கருத்துமாகக் காவேரியம்மாள் வளர்த்து வந்தார்.



திருச்செங்கோடு மாளிகை



குமரமங்கலம் மாளிகை




போக்கம்பாளையம் மாளிகை

சின்ன பரமசிவக் கவுண்டர் நல்லாயம்மாள் அவர்களைத் திருமணம் செய்து கொண்டார். 01.02.1882 அன்று ஒன்றாக இருந்த ஜமீன் வாரிசுகள் பாகப் பிரிவினை செய்து கொண்டனர். எல்லோருக்கும் உரிய பங்குகள் வரையறுக்கப்பட்டன. ஐந்து

நிலப் பகுதிகள் அறக்கட்டளைக்கு ஒதுக்கப்பட்டன. கையிருப்புப் பணம் ரூ.2,94,200-ல் ரூ.58,111 பொதுப்பணமாக ஒதுக்கி மீதிப்பணம் விகிதாச்சாரப்படி பிரித்துக் கொடுக்கப்பட்டது. போக்கம் பாளையம், குமரமங்கலம், கவுண்டம்பாளையம், குமாரபாளையம் என ஜமீன் நான்கு பெயரில் அழைக்கப்பட்டது.

சுப்பராயனின் தந்தை பெரிய பரமசிவக் கவுண்டரின் அண்ணன் சின்னண்ணனை கைலாசக் கவுண்டர் தத்தெடுத்துக் கொண்டார். பெரிய பரமசிவக் கவுண்டரின் தம்பி கைலாசம் இள வயதில் இறந்து விட்டார். சின்ன பரமசிவக் கவுண்டர் வாரிசு இல்லாததால் கைலாசம் என்பவரை தத்தெடுத்துக் கொண்டார். சின்ன பரமசிவக் கவுண்டர் 11.03.1890 அன்று காலமானார். தத்தெடுத்துக் கொண்ட கைலாசத்திற்கு நல்லாயம்மாள் சுவீகாரத் தாயார் ஆனார்.





திருச்செங்கோடு T.M. காளியண்ண கவுண்டர்

10.02.1912 அன்று சின்னபரம சிவக் கவுண்டரின் சுவீகார மகன் கைலாசம் அகால மரணம் அடைந்தார். அவர் உயில் ஒன்றும் எழுதி வைக்காததால் சேலம் மாவட்ட ஆட்சியர் கே.பி. பெட்ஃபோர்டு சொத்துக்களுப் பொறுப்பேற்று அடுத்த வாரிசான நல்லாயம்மாளிடம் 19.06.1914 அன்று சொத்துக்களை ஒப்படைத்தார். சின்ன பரமசிவக் கவுண்டர் மனைவியும், வாரிசுதாரரும் ஆன நல்லாயம்மாளிடமிருந்து, அவருடைய சகோதரரின் பேரனும், அக்கரைப்பட்டி முத்து நல்லிக் கவுண்டர் மகனும் ஆகிய டி.எம். காளியண்ண கவுண்டர் 24.06.1953 அன்று கஸ்தூரிப்பட்டி மிட்டாவைக் கிரையத்துக்குப் பெற்றார். கஸ்தூரிப்பட்டி ஜமீன்தார் ஆனார்.

# 7. சுப்பராயன் பிறந்தார்

சுப்பராயனின் தந்தை பெரிய பரமசிவக் கவுண்டருக்கு மூன்று மனைவியர். மூத்த மனைவி வள்ளியம்மாள் பிரசவத்தின் போது குழந்தை பிறக்காமலேயே இறந்தார். இரண்டாவது மனைவி சுப்பராய னின் தாயார் பாப்பாயம்மாள். பாப்பாயம்மாள் 11.09.1889 அன்று விரோதி வருடம் ஆவணி மாதம் 28ஆம் தேதி புதன்கிழமை பகல் 20 நாழிகைக்கு ரேவதி நட்சத்திரத்தில் சுப்பராயனைப் பெற்று மகிழ்ந்தார்.





மூன்றாவது மனைவி நாச்சம்மாள் பார்வதி என்ற பெண் குழந்தைக்குத் தாயானார். சில நாளில் நாச்சம்மாள் காலமானார். பார்வதி குழந்தைப் பருவத்திலேயே காலமானார். பெரிய பரமசிவக் கவுண்டரும் 1898ல் காலமாகிவிடவே பாப்பாயம்மாள் ஜமீனின் ஒரே வாரிசான சுப்பராய னைக் கண்ணின் மணியாய்ப் பாதுகாத்தார்.

தந்தை இறந்த போது சுப்பராயன் மைனராக இருந்ததால் அக்கால அரசு விதிப்படி ஜமீனை அரசு மேற்கொண்டு சுப்பராயனைச் சென்னைக்கு அழைத்துச் சென்று தங்கள் பொறுப்பில் வைத்துக் கல்வி கற்பிக்கத் தக்க ஏற்பாடுகள் செய்தனர்.

பெரிய பரமசிவக் கவுண்டரின் மரணம் பற்றியும், சுப்பராயனின் வாழ்க்கை குறித்தும் 1934-ஆம் வருடம் திருச்செங்கோடு தி.அ. முத்துசாமிக்கோனார் பின்வருமாறு ''கொங்கு நாடு'' நூலில் எழுதி யுள்ளார். ''சுப்பராயக் கவுண்டன் என்பவர் திருச்செங்கோட்டில் நந்தா தீபமும் தளிகை நைவேதனமாதிகளும் செய்வித்தனன். இவன் மகன் பரமசிவக் கவுண்டன் ஸ்ரீஅர்த்தநாரீசுவரர் பிரம்மோத்சவத்தில் ஒரு மண்டபக் கட்டளையும் விடாயாற்று உற்சவமும் செய்வித்தனன். இவர்கள் பூர்வீகக் குடும்பம் பிரிக்கும்போது முத்தாஞ்செட்டி என்னும் மிட்டாவை பாண்டீசர் பூசை முதலிய தர்மத்துக்கு தர்மசாசனம் செய்யப்பட்டுள்ளது. திடீரென்று இவருக்கு அகால மரணம் நேர்ந்தது. இதுபற்றி யாவரும் வருந்தினர் என்றாலும் இது இவருடைய இளமை யான ஏக புத்திரன் சுப்பராயனின் நல்லதிர்ஸ்டத்தின் முளையாகவு மாயிற்று.

உடனே சர்க்காரில் அவர்களின் பொருள்களைக் காவல் செய்தனர். சர்க்கார் தரப்பில் கோர்ட் ஆப் வார்ட்சில் சென்னையில் வைத்துக் கொண்டார்கள். பிள்ளை மைனர் (சுப்பராயன்) படிப்பு விஷயத்தில் மெத்த அக்கறை செலுத்தினார்கள். வாசித்துத் தேறிய வுடன் விவாகத்திற்குப் பிரயத்தனப்பட்டார்கள். அங்கே தன் மனதிற்கு ஒத்த ஸ்ரீமதி ராதாபாய் என்னும் பிராமண மாதினை பிரம சமாஜக்

கொள்கைப் படிக்கு மணந்தனர். இந்த மணவினையானது இவரது வமிசமே ஏற்றத்துக்கு வழிகோலியதாக நேர்ந்தது. பின்பு பார் அட்லா பரீட்சை தேறி வந்தனர். சென்னை பிரதம மந்திரியும் ஆயினர். அந்த அம்மாள் ராஜாங்கத்தில் சில உயர்ந்த பதவியும் பெற்றுள்ளார். இங்கிலாந்தில் நடைபெற்ற சர்வகட்சி நாட்டுக் கூட்டத்துக்கு அழைத்தார்கள். சென்றிருந்தனர். மூத்த பிள்ளை மில்டேரியில் உயர்ந்த பதவி பெற்றுள்ளார். இப்பதவி இந்தியருக்கு இதுகாரும் கிடைத்ததில்லை''.

மேஜர் ஆனவுடன் 1910 ஆம் வருடம் சுப்பராயன் ஜமீன் பொறுப்பேற்று குமரமங்கலம் ஜமீன்தாரர் ஆனார். சுப்பராயன் சென்னையில் கல்வி கற்கும் போது அறிமுகமான மங்களூர் கே.எஸ். ரங்கராவ் அவர்கள் மகள் இராதாபாய் அவர்களை பிரம்ம சமாஜ முறைப்படி தாயார் அனுமதியுடன் மங்களூரில் 1912 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். உயர்கல்வி கற்க இருவரும் இங்கிலாந்து பயணமாகினர்.

சுப்பராயனின் தாத்தா பெயரும் சுப்பராயக் கவுண்டர்தான். முன்பு தாத்தாவின் பெயரைப் பேரனுக்கு வைப்பது வழக்கமாக இருந்தது. தாத்தாவின் பெயரை உடையவனே பெயரன் - பேரன் எனப்பட்டான். குமரமங்கலம் மரபில் சின்னண்ணன் பேரன் சின்னண்ணன், கைலாசத்தின் பேரன் கைலாசம். நஞ்சையன் பேரன் நஞ்சையன் பரமசிவம் பேரன் பரமசிவம் என்ற பெயர்களைக் காணுகின்றோம்.

சுப்பராயன் என்ற பெயர் சுப்பிரமணியம் என்ற முருகப் பெருமான் பெயரின் மரூஉப் பெயராகும். சென்னிமலையாண்டவர் காதலில்,

''நாட்டில் அருணகிரி நாதன் திருப்புகழ்சொல்
பாட்டில் உவந்து படிக்காசு அளித்தபிரான்
தாலமிகும் சென்னிமலை தன்னில்வளர் கல்யாண
வாலசுப்ப ராயன்என வாணர்புகழ் வாசலினான்''

என்ற தொடர்கள் காணப்படுகின்றன. பாலசுப்பிரமணியன் என்ற பெயரே வாலசுப்பராயன் என்று குறிக்கப்படுகிறது. பலர் சுப்பராயன் என்ற பெயர் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்துள்ளனர்.

வேளுக்குறிச்சி ஜமீன் மரபில் இசை, இலக்கிய மேதையாகவும், புலவர்களை ஆதரித்த புரவலராகவும் அறியப்படுபவர் சுப்பராய கவுண்டர் என்பவர். அவரைச் சந்திக்கச் சென்ற மண்டகப்பாளையம் காளியண்ணக் கவிராயர் சுப்பராயக் கவுண்டர் அறிமுகம் இல்லாததால்,

''இருமடந்தை மார்பன் இராசை வளநாடன்
அருவிழியன் வேள்குறிச்சி யாளன் - பரஞ்சேர்
வழிவேலன் பேரன் வாழ்நஞ்சை யன்சேய்
எழில்சுப்ப ராயன் எவன்''

என்று கேட்டதாகக் கூறுவர்.

சித்தளந்தூர் ஜமீன்தார் மரபில் ஒருவர் பெயர் சுப்பராயக் கவுண்டர். திருச்செங்கோட்டில் வாழ்ந்த குப்பண்ண பரதேசிக்குச் சாவடி கட்டியவர் சுப்பராய அய்யர். கோவை மாவட்டத்தில் ஒரு பிரபலமானவர் பெயர் சூலூர் சுப்பராயர்.

சுப்பிரமணியம் என்ற பொருள் தரும் சுப்பராயன் என்ற சொல் பெரு வழக்காக அறியப்பட்டிருந்தது எனலாம்.

❊ ❊ ❊

# 8. சுப்பராயனின் கல்விக் களங்கள்

ஜமீன்தார், பாளையக்காரர்கள், பட்டக்காரர்கள் மாளிகைகளில் தந்தையை இழந்த இளம் வயதுடைய குழந்தைகளை அரசுப் பொறுப்பில் பாதுகாப்பாக வளர்த்து கல்வி கற்பிக்கும் சட்டத்தை அரசு கொண்டு வந்தது. அக்குழந்தை மேஜர் ஆகும் வரை Court of Wards சட்டப்படி அரசுப் பொறுப்பில் பாதுகாப்பாக வளர்த்து கல்வி கற்பிக்கும் சட்டத்தை அரசு கொண்டு வந்தது. கல்வி கற்பிக்கப்படுபவர் உரிய வயது வந்ததும் அவரது உடமைக்கு அவர் தலைவராக்கப்படுவார்.

சுப்பராயனின் தாயார் பாப்பாயம்மாள் சேலம் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த விண்ணப்பத்தின்படி Court of Wards சட்டப்படி சுப்பராயன் பொறுப்பை அரசு ஏற்றுக் கொண்டது. அப்போது சுப்பராயனுக்கு வயது 9.

சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்ட சுப்பராயன் முதலில் ''நியூ விங்டன் போர்டிங் பள்ளி'' யில் சேர்க்கப்பட்டார். தேனாம்பேட்டை எல்டாம்ஸ் சாலையில் இருந்த அந்தப் பள்ளி ஜமீன்தார், உயர் அதிகாரிகள் வீட்டுப் பிள்ளைகள் படிப்பதற்காக வெள்ளைக்காரர்கள் நடத்திய பள்ளியாகும். அங்கு சுப்பராயன் படிக்கும் போது தலைமையாசிரியர் டெலஹேவ் அவர்களும், விடுதிக் காப்பாளர் கேமெரென் மோரிசனும் சுப்பராயன் மீது மிகுந்த அன்பு செலுத்தினர். கேமெரென் மோரிசன் தான் சுப்பராயனின் பாதுகாவலர் (Guardian) ஆவார். இங்கு படிக்கும் போது சுப்பராயன் உடற்பயிற்சியிலும், விளையாட்டிலும் அதிக அக்கறை செலுத்தினார். விடுதிக் காப்பாளர் அறிவுரைப்படி நூலகம் செல்வதையும், நூல்களைப் படிப்பதிலும் சுப்பராயன் மிகுந்த ஆர்வம் செலுத்தினார்.

நியூ விங்டன் பள்ளியில் தேர்ச்சி பெற்றதும் சுப்பராயனை சென்னையில் புகழ் வாய்ந்த திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியில் சேர்த்தனர். அப்பள்ளி காந்தியடிகளால் ''சில்வர் டங் சீனிவாச சாஸ்திரி'' என்று புகழப்பட்ட சீனிவாச சாஸ்திரியார் பணியாற்றிய பள்ளி யாகும். இப்பள்ளியில் படிக்கும் போது தமிழாசிரியர் வி.எம். கோபாலகிருஷ்ணமாச்சாரியார், ஆங்கில ஆசிரியர் கே. மங்கேஷ்ராவ், விஞ்ஞான ஆசிரியர் வைத்தியநாத அய்யர், கணித ஆசிரியர் சி.கே. கிருஷ்ண அய்யங்கார், வகுப்பாசிரியர் பாஷ்யம் அய்யங்கார் ஆகியோர் போதனை சுப்பராயனுக்குப் பேருதவியாக இருந்தது. இங்கு வகுப்புத் தலைவர் பதவி சுப்பராயனுக்கு .அளிக்கப்பட்டது. இப்பள்ளியில் படிக்கும் போது விளையாட்டுக்களில் குறிப்பாகக் கிரிக்கெட்டில் மிக ஆர்வம் காட்டினார்.

இந்து உயர்நிலைப் பள்ளியில் படிப்பை முடித்த பின்னர் சுப்பராயன் 1908 ஜனவரியில் மாநிலக் கல்லூரியில் சேர்க்கப்பட் டார். அங்கு எஃப்.ஏ., மாணவராகச் சேர்ந்து அப்படிப்பை முடித்த பின் இரண்டாண்டு பி.ஏ., வரலாறு பட்டப் படிப்புக்காகச் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு சேர்ந்து கற்க உதவியவர் சென்னையில் மாணவர் நலனில் அக்கறையுடைய மிகச் சிறந்த கல்வி யாளர் டாக்டர் வில்லியம் மில்லர் என்பவராவார். டாக்டர் வில்லியம் மில்லரின் மாணவர்கள்தான் முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வபள்ளி எஸ். இராதாகிருஷ்ணன், தேசபக்தர் தீரர் எஸ். சத்தியமூர்த்தி முதலியோர் ஆவர். இங்கும் பலவித உடற்பயிற்சியும் விளையாட்டும் தொடர்ந்தது.

கிறிஸ்தவக் கல்லூரியில் சுப்பராயனின் சரித்திரப் பாட ஆசிரியராக இருந்தவர் எஸ். சத்தியமூர்த்தி. அவருடைய ஆங்கிலப் பேச்சு, செய்திகளை விவரிக்கும் முறை, சொல்லும் கருத்துக்களின் ஆழம் ஆகியவை சுப்பராயனையும் பிற மாணவர்களையும் மிகவும் கவர்ந்தன. பயின்ற சக மாணவர்கள் பனகல் அரசர் ராமராயனிங்கர். ஆர்.கே. சண்முகஞ் செட்டியார், ரங்கநாத முதலியார் ஆகியோர் ஆவர்.

1910-ஆம் ஆண்டு கல்லூரிப் படிப்பு முடிந்த போது சுப்பராய னுக்கு வயது 21. அவர் மேஜர் வயதை எட்டிய காரணத்தால் Court of Wards சட்டம் நீங்கி ஜமீன் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப் பட்டது. சுப்பராயன் குமரமங்கலம் ஜமீன்தார் ஆனார்.

மங்களூர் கே.எஸ். ரங்கராவ் அவர்களின் இரண்டாவது மகள் இராதாபாய் 1910 ஆம் ஆண்டு YWCA விடுதியில் தங்கிக் கல்லூரி யில் படித்து வந்தார். படிக்கும்போதே பெண்கள் முன்னேற்றம் பற்றி எழுதியும், பேசியும் வந்தார். இப்பணிகள் சுப்பராயனைக் கவர்ந்தது. அன்பு உள்ளங்கள் இணைந்தன.

பிரம்ம சமாஜ இயக்கப் பணிக்காக சென்னை வந்த கே.எஸ். ரங்கராவை சுப்பராயன் சந்தித்து திருமணம் பற்றிக் கூறினார். உங்கள் தாயார் சம்மதித்தால் திருமணம் செய்யலாம் என்றார்.

இராஜாஜி மூலம் தாயாரைச் சம்மதிக்க வைத்து மே 1912 இல் மங்களூரில் பிரம்ம சமாஜ முறைப்படி சுப்பராயன் இராதாபாய் திருமணம் நடைபெற்றது.

1912-ல் சுப்பராயன் ராதாபாய் திருமணம் முடிந்தபின் கணவனும் மனைவியும் மேல் படிப்புக்காக லண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பம் அனுப்பினர். கிறிஸ்தவக் கல்லூரியில் அறிமுகம் ஆகியிருந்த டாக்டர் வில்லியம் மில்லர் லண்டனில் வாழ்ந்தார். அவர் வழிகாட்டலில் சுப்பராயன் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் வாதாம் கல்லூரியில் சேர்ந்தார். இராதாபாய் அதே பல்கலைக்கழகத்தில் உள்ள சோமன் வில்லே பெண்கள் கல்லூரியில் சேர்ந்தார். கருவுற்றிருந்த இராதாபாய் பிரசவத்திற்காக மங்களூர் வந்தார். 01.07.1913-இல் மூத்தமகன் பரமசிவன் குமாரமங்கலம் பிறந்தார். குழந்தை பாட்டியிடம் வளர இராதாபாய் மீண்டும் லண்டன் சென்றார்.

வாதாம் கல்லூரியில் எம்.ஏ., பட்டம் பெற்ற பின் சுப்பராயன் பி.சி.எல். படிப்பிற்காக இன்னர் டெம்பிள் கல்லூரியில் சேர்ந்தார். இன்னர் டெம்பிள் கல்லூரியில் தான் ஜவஹர்லால் நேருவும் படித்து

வந்தார். கல்லூரி சார்பாகக் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடினார். பல்கலைக்கழகத்தில் 1916 ஆம் ஆண்டு பார்அட்லா பட்டம் பெற்றதும் தாயகம் திரும்ப விரும்பினர். முதல் உலகப் போரின் காரணமாக இங்கிலாந்தை விட்டுப் புறப்பட அனுமதி கிடைக்க வில்லை.

லண்டனில் 11.05.1915 அன்று ஜெயவந்த் கோபாலும் 01.11.1916இல் சுரேந்திர மோகனும் பிறந்தனர்.

சுப்பராயன் அயர்லாந்தில் உள்ள டப்ளின் பல்கலைக்கழகத்தில் எல்.எல்.டி என்ற சட்ட மேல்படிப்புப் படிக்கச் சேர்ந்தார். 1918ல் எல்.எல்.டி. (சட்டத்தில் டாக்டர் பட்டம்) பட்டம் பெற்று இங்கிலாந்து திரும்பினார். அயர்லாந்தில் படிக்கும் போது அந்நாட்டு அரசியல் நிகழ்வுகளை அறிவதில் நாட்டம் கொண்டார்.

முதல் உலக யுத்தம் முடிவுக்கு வந்ததும் 1918ல் சுப்பராய னும், இராதாபாயும் தாயகம் திரும்பினர்.

இராதாபாய்க்கு 15.03.1919 அன்று ஊட்டியில் பார்வதி பிறந்தார். சுப்பராயன் தாயகம் திரும்பிய பின் 1919 ஆம் ஆண்டு தாயார் பாப்பாயம்மாள் காலமானார். லண்டன் சென்று படித்து வந்த தால் சுப்பராயன் அவர்களை மக்கள் ''சீமைத்துரை'' என்று அன்புடன் அழைத்தனர்.

# 9. அரசியல் அடித்தள நிகழ்வுகள்

### கல்லூரி வாழ்க்கையில்

சென்னை கிறித்தவக் கல்லூரியில் படிக்கும் போது வெள்ளையர் அரசு செய்த வங்கப் பிரிவினையால் வங்காளத்தில் மிகப் பெரிய கிளர்ச்சி ஏற்பட்டது. வங்க மக்களுக்கு ஆதரவாக நாடெங்கும் நடை பெற்ற கிளர்ச்சியில் சென்னை மாணவர்களும் பங்கு கொண்டனர். பாரதியார் அழைப்பின் பேரில் விபின் சந்திரபாலர் சென்னை வந்து மெரினா கடற்கரைப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார். சத்திய மூர்த்தியும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார். பெருந்திரளாகக் கூடி உரையைக் கேட்ட மாணவர்களுள் சுப்பராயனும் ஒருவர். இதன் பின் சுப்பராயன் தேசிய இயக்கம், காங்கிரஸ் பற்றிக் கவனம் செலுத்த லானார்.

### இந்திய மஜ்லிஸ் இயக்கம்

இங்கிலாந்தில் படித்த இந்திய மாணவர்கள் தேச விடுதலை உணர்வால் இந்திய மஜ்லிஸ் என்ற அமைப்பை உருவாக்கினர். சுப்ப ராயன் இதில் உறுப்பினர் ஆனார். நேருவும் இந்த அமைப்பில் உறுப்பினர் ஆனதால் நேரு சுப்பராயன் சந்திப்பு அடிக்கடி நிகழ்ந்தது. நேருவைப் பார்க்க வந்த தந்தை மோதிலால் நேருவுடன் சுப்பராயனுக்கு அறிமுகம் ஏற்பட்டது.

### அயர்லாந்துப் புரட்சி இயக்கத்தில் ஆர்வம்

சுப்பராயன் அயர்லாந்தில் டப்ளின் பல்கலைக்கழகத்தில் சட்ட மேல்படிப்புப் படிக்கும் போது அயர்லாந்து விடுதலைக்காக மக்கள் போராட IRA (Irish Republic Army) என்ற அமைப்பை உருவாக்கிப் போராடிக் கொண்டிருந்தனர். அதன் நடவடிக்கைகளை உன்னிப்பாகக்

கவனித்த சுப்பராயன் அதன் முக்கியத் தலைவர்களான சின் பெய்ன், டிவேலரா போன்றவர்களைச் சந்தித்து உரையாடினார்.

## இங்கிலாந்துப் பிரதமரின் உதவிச் செயலாளர்

இங்கிலாந்தில் வேலைக்காகப் பதிவு செய்து கொண்ட சுப்பராயனுக்குப் பிரதமர் அலுவலகத்தில் உதவிச் செயலாளர் வேலை கிடைத்தது. அவர் உயர்ந்த கல்வித் தகுதியே அதற்குக் காரணம். இப்பணிக் காலத்தில் தான் முதல் உலக மகாயுத்தம் நின்ற செய்தியை நள்ளிரவில் இங்கிலாந்துப் பிரதமருக்கு முதலில் அறிவிக்கும் வாய்ப்பு சுப்பராயனுக்குக் கிடைத்தது.

## ஐந்தாம் ஜார்ஜ் முடிசூட்டு விழா

1911 ஆம் ஆண்டு டெல்லியில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் முடிசூட்டு விழா தர்பார் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. ஜமீன்தார் என்ற முறையில் வந்த அழைப்பை ஏற்று சுப்பராயன் டெல்லி சென்றார். பல மன்னர்கள், ஜமீன்தார்கள், பாளையக்காரர்கள், பட்டக்காரர்களுடன் கலந்து கொண்டு சுப்பராயன் புதிய அனுபவம் பல பெற்றார்.

## கோகலே, திலகர் சந்திப்பும் இந்திய ஊழியர் சங்கமும்

வட இந்தியாவில் பல இடங்கட்குப் பயணம் செய்த சுப்பராயன் இந்திய விடுதலைப் போராட்டத்தின் முக்கியமான தலைவர்களில் ஒருவரான கோபால கிருஷ்ண கோகலேவைச் சந்தித்து உரையாடினார். தேச விடுதலை இயக்கம் பற்றிய பற்பல செய்திகளை அறிந்தார். 1903-ல் இந்தியக் காங்கிரஸ் செயலாளர் ஆகவும், 1905ல் காசி காங்கிரஸ் மாநாட்டின் தலைவராகவும் விளங்கிய கோகலே தொடங்கி நடத்தி வந்த ''இந்திய ஊழியர் சங்கத்தில்'' (Servants of India Society) சுப்பராயன் உறுப்பினர் ஆனார். முதலில் சந்தித்த தலைவர் கோபால கிருஷ்ண கோகலே. முதலில் உறுப்பினரான நிறுவனம் இந்திய ஊழியர் சங்கம். திலகர் முதலிய பிற தலைவர்களையும் சுப்பராயன் சந்தித்தார்.

## பிரம்ம சமாஜம்

சென்னை வந்த சுப்பராயனின் சமத்துவ நோக்கத்திற்கு சாதி, மத, இன வேறுபாடு பார்க்காது மனிதத்தைப் போற்றுகின்ற ''பிரம்ம சமாஜம்'' கொள்கை பிடித்ததால் அதில் உறுப்பினர் ஆனார். இராதாபாய் அவர்களின் தந்தை கே.எஸ். ரங்கராவ் பிரம்ம சமாஜத்தின் முக்கியத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. பிரம்ம சமாஜ நிகழ்விற்குச் சென்னை வந்த கே.எஸ். ரங்கராவை சுப்பராயன் சந்தித்தார்.

## சென்னை இந்து மகாசபை

தாயகம் திரும்பியதும் சேலம் நீதி மன்றத்திலும், சென்னை உயர்நீதி மன்றத்திலும் வழக்குரைஞராகப் பதிவு செய்து கொண்ட சுப்பராயன் வழக்கின் பொருட்டுச் சென்னை செல்ல வேண்டியிருந் தது. அப்போது மவுண்ட் ரோட்டில் இருந்த இந்து மகாசபைக்குச் சுப்பராயன் செல்வது வழக்கம். அங்கு நடைபெற்ற தேச விடுதலை பற்றிய விவாதங்களில் சுப்பராயன் பங்கேற்றார்.

குடும்ப நண்பரும், சக வழக்கறிஞருமாகிய இராஜாஜியால் சுப்பராயன் காங்கிரஸ் இயக்கத்தில் 1919-ல் உறுப்பினர் ஆனார்.

## அமிர்தசரஸ் காங்கிரஸ் மாநாடு

1919 டிசம்பரில் அமிர்தசரசில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்குச் சுப்பராயனுக்கு அழைப்பு வந்தது. முதன் முதலில் ஒரு அரசியல் கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பைச் சுப்பராயன் பெற்றார். இம்மாநாட்டில் இராஜாஜியும், சேலம் விஜயராகவாச்சாரி யாரும் பெரும்பங்கு வகித்தனர். சுப்பராயன் சென்னை மாகாணக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகவும், சட்டமன்றத் தேர்தலில் கலந்து கொள்வது பற்றித் தீர்மானிக்கும் குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக் கப்பட்டார். இவைகளே சுப்பராயன் வகிக்க நேர்ந்த முதல் அரசியல் பதவிகளாகும்.

## திருநெல்வேலி காங்கிரஸ் மாநாடு

1920 ஜூன் 21-23 தேதிகளில் திருநெல்வேலியில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. தேர்தலில் கட்சி பங்கெடுக்க வேண்டும் என்று தீர்மானம் செய்த அம்மாநாட்டில் உருவாக்கப்பட்ட தேர்தல் பிரச்சார ஒருங்கிணைப்புக் குழுவில் சுப்பராயன் இடம் பெற்றார்.

## கல்கத்தா காங்கிரஸ் சிறப்பு மாநாடு

1920 செப்டம்பர் 4,5,6 தேதிகளில் கல்கத்தாவில் காங்கிரஸ் சிறப்பு மாநாடு நடைபெற்றது. லாலா லஜபதிராய் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டுக்குச் சென்ற சென்னை மாகாணக் குழுவில் இராஜாஜி, விஜயராகவாச்சாரியாருடன் சுப்பராயனும் இடம் பெற்றார். இம்மாநாட்டில்தான் ஒத்துழையாமை இயக்கத் தீர்மானத்தைக் காந்திஜி கொண்டு வந்து நிறைவேற்றினார்.

## நாக்பூர் காங்கிரஸ் மாநாடு

1920 டிசம்பரில் இந்திய தேசிய காங்கிரசின் 35 ஆம் மாநாடு நாக்பூரில் நடைபெற்றது. சேலம் விஜயராகவாச்சாரியார் மாநாட்டுத் தலைவர். இம்மாநாட்டில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பின ராகச் சுப்பராயன் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் துணைக்குழு ஒன்றிற்கும் சுப்பராயன் தேர்வு செய்யப்பட்டார். இராஜாஜி, எஸ். சத்தியமூர்த்தி, அன்னிபெசன்ட், டி.எஸ்.எஸ். ராஜன் ஆகியோரும் அதில் உறுப்பினராக இருந்தனர். மேனாட்டார் போல் உடையணிந் திருந்த சுப்பராயன் கதர் உடைக்கும், கதர் குல்லாவிற்கும் மாறினார். காந்தியடிகளைச் சந்திக்கும் வாய்ப்பையும் சுப்பராயன் பெற்றார்.

மேற்கண்ட நிகழ்வுகள் அனைத்தும் படிப்படியாக சுப்பராயன் அவர்களை தேசிய இயக்கத்தின் பால் ஈர்த்தன எனலாம்.

# 10. முதலிரு சட்டசபையில்

**மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தம்**

இங்கிலாந்திலிருந்த இந்தியச் செயலாளர் சாமுவேல் எட்வின் மாண்டேகு - இந்திய வைசிராய் செம்ஸ்போர்டு பிரபு ஆகிய இருவரும் ஆய்வு செய்து இந்திய மக்களுக்கும் ஆட்சியில் பங்களிக்க வேண்டும் என்று ஓரளவு இந்தியர் பங்கு கொள்ளும் தேர்தல் திட்டத்தைக் கொண்டு வந்தனர். (Joint Report on Indian Constitutions Reforms 1918) இதனையொட்டி இங்கிலாந்துப் பாராளுமன்றம் 1919ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தை நிறைவேற்றியது (Government of India Act 1919).

மாநிலங்களுக்கு ஓரளவு பொறுப்பாட்சியை அளிக்கும் ''இரட்டை ஆட்சி'' முறை (Dyarchy) கொண்டு வரப்பட்டது. ஒதுக்கப்பட்ட துறைகள் என சட்டம், ஒழுங்கு, நிதி ஆகியவை கவர்னர் பொறுப்பில் இருக்கும்.

மாற்றப்பட்ட துறைகளாக அறிவிக்கப்பட்ட உள்ளாட்சி, பொது சுகாதாரம், கல்வி, பொதுப்பணி ஆகியவை அமைச்சர்கள் பொறுப்பில் இருக்கும். அமைச்சர் நிறைவேற்றிய தீர்மானத்தைத் தள்ளுபடி செய்வதற்கும், அமைச்சர் தள்ளுபடி செய்த தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கும் கவர்னருக்கு அதிகாரம் உண்டு.

இந்தியர்கட்கு வெறுப்பை உண்டாக்கும் இந்த இரட்டை ஆட்சி முறையைக் கண்டித்த காங்கிரஸ் தேர்தலில் பங்கு கொள்வதில்லை என்று கூறியதோடு அமையாது மக்கள் வாக்களிக்கக் கூடாது என்றும் கூறியது.

## வேட்பாளரும் வாக்காளரும்

மூன்றாண்டுகட்கு ஒருமுறை நடைபெறும் தேர்தலில் இன்று போல் வயது வந்த எல்லோருக்கும் அன்று வாக்குரிமை கிடையாது. கிராமப் புறங்களில் நிலவரியாக ஆண்டுக்குப் பத்து ரூபாய் செலுத்தியவர்களும், நகர்ப்புறங்களில் வீட்டு வரியாக ஆண்டுக்கு மூன்று ரூபாய் செலுத்தியவர்களும் வேட்பாளராகலாம். அதேபோல் வரி செலுத்துபவர்கட்கும், பட்டதாரிகட்கும் மட்டுமே வாக்களிக்கும் உரிமையுண்டு. சென்னை சட்டசபைக்கு தேர்தல் மூலம் 98 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். 29 உறுப்பினர்களைக் கவர்னர் நேரடியாக நியமனம் செய்வார்.

## முதல் தேர்தலில் வெற்றி

1920 நவம்பர் 30 அன்று தேர்தல் என அறிவிக்கப்பட்டது. நீதிக் கட்சி, லிபரல் கட்சி, சுயேச்சைகள் போட்டியிட்டனர். வாக்குப் பெட்டிகள் பலவித வண்ணங்களில் இருந்தன. தென் மத்திய ஜமீன்தார் தொகுதியாக அறிவிக்கப்பட்ட திருச்செங்கோடு தொகுதியில் காங்கிரஸ் போட்டியிடாததால் சுப்பராயன் சுயேச்சையாகப் போட்டியிட்டார். தேர்தலில் வெற்றி பெற்ற சுப்பராயன் நீதிக் கட்சியில் இணைந்தார். குப்பம், அங்கிநாடு, பனகல், இராமநாதபுரம், திருச்செங்கோடு ஆகியவை ஜமீன்தார் தொகுதிகளாகும்.

63 இடங்களில் நீதிக்கட்சி வெற்றி பெற்றது. நீதிக் கட்சியைச் சேர்ந்த ஏ. சுப்பராயலு ரெட்டியார், பனகல் அரசர் பனகண்டி ராமராயனிங்கர், கே.வி. ரெட்டி மூவரும் அமைச்சர்கள் ஆயினர். ஏ. சுப்பராயலு ரெட்டியார் தலைவராக முதலாவது அமைச்சர் என அழைக்கப்பட்டார். கே. வெங்கட்ட ரெட்டி என்னும் கே.வி. ரெட்டி வளர்ச்சித் துறை (தொழில், விவசாயம், கூட்டுறவு, மீன் வளம், எடை அளவு) அமைச்சர் ஆனார். கே.வி. ரெட்டிக்குச் சுப்பராயன் அவர்களைப் பாராளுமன்றச் செயலாளராகக் கவர்னர் வெலிங்டன் நியமித்தார்.

சார்லஸ் கோதண்டர் தலைமையில் உருவாக்கப்பட்ட நிதிக்குழு உறுப்பினராகவும் சுப்பராயன் நியமிக்கப்பட்டார்.

17.12.1920 அன்று முதலாவது அமைச்சராகப் பதவியேற்ற ஏ. சுப்பராயலு ரெட்டியார் 11.07.1921 அன்று பதவி விலகினார். அவருக்குப் பதிலாக பனகல் அரசர் பனகண்டி ராமராயனிங்கர் முதலாவது அமைச்சர் ஆனார். புதியதாக ஏ.பி. பாட்ரோ அமைச்சரவை யில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

கல்வியமைச்சர் ஏ.பி. பாட்ரோ தெலுங்கர்களுக்கு தனிப் பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்று கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து 15.11.1922 அன்று சட்டசபையில் சுப்பராயன் ''மாண வர்கள் தங்கிப் பயிலும் பல்கலைக்கழகங்கள் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் போல அமைக்க வேண்டும். சென்னைப் பல்கலைக் கழக கல்லூரிகளில் மாணவர் விடுதிகள் கட்ட வேண்டும். இருபத் தையாயிரம் ரூபாய் வழங்குவோர் நேரடியாக ஆட்சிக் குழுவிற்கு நியமனம் ஆவதையும் சரத்திலிருந்து நீக்க வேண்டும்'' என்று பேசினார்.

இந்தியர்களும் ஆட்சியில் இடம் பெறச் செய்த மாண்டேகு அவர் களைப் பாராட்டி 16.03.1922 அன்று சுப்பராயன் அவையில் பேசினார்.

'மாண்டேகு அவர்களால்தான் இந்தியர்களுக்கு ஓரளவாவது அதிகாரம் கிடைத்தது. இதற்காக அவர் பல எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அவரால்தான் போர்க்கால அமைச்சரவையில் சின்ஹா அவர்களுக்கும் பிகானி மன்னருக்கும் இடம் கிடைத்தது. இதனால் உலக அளவில் இந்தியாவின் கருத்துக்களை எடுத்துரைக்க வாய்ப்புக் கிடைத்தது'' என்று சுப்பராயன் மாண்டேகுவைப் பாராட் டும்போது குறிப்பிட்டார்.

இந்த இரு அமைச்சரவையிலும் தமிழர் எவரும் இடம் பெறவில்லை என்பதைக் கண்டித்து சுப்பராயன் அவர்களும், டி.ஏ. இராமலிங்கம் செட்டியார், சி.ஆர். ரெட்டி போன்ற சிலரும் நீதிக்கட்சியிலிருந்து விலகி அமைச்சரவை எதிர்ப்பு அணியில் சேர்ந்தனர். சுப்பராயன் மீண்டும் நிதிக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந் நியமனம் ஆண்டுக்கு ஒரு முறையாகும்.

## இரண்டாவது தேர்தல்

31.10.1923ல் இரண்டாவது பொதுத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. 1922 அக்டோபரில் நடைபெற்ற கயா காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் தேர்தலில் பங்கேற்கக் கூடாது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியதால், தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று விரும்பிய சித்தரஞ்சன்தாஸ் முதலிய பலர் இணைந்து 01.01.1923 அன்று சுயராஜ்ய கட்சியைத் தொடங்கினர். காங்கிரசின் இதர கொள்கைகளைப் பின்பற்றி சுயராஜ்ய கட்சி தேர்தலில் போட்டியிட காங்கிரஸ் அனுமதித்தது. சுயராஜ்யக் கட்சியின் இந்தியத் தலைவர் சி.ஆர். தாஸ், சென்னை மாகாணத் தலைவர் ஏ. ரங்கசாமி அய்யங்கார். இக்கட்சியில் பிரச்சாரக் குழுத் தலைவர் எஸ். சத்திய மூர்த்தி.

இரண்டாவது பொதுத் தேர்தலில் மொத்தம் உள்ள 98 இடங்களில் நீதிக்கட்சி 44 இடங்களிலும், காங்கிரஸ் கொள்கையுடைய சுயராஜ்ய கட்சி 11 இடங்களையும், லிபரல் கட்சி 6 இடங்களையும், டாக்டர் சுப்பராயன் இணைந்திருந்த நீதிக்கட்சி அமைச்சரவை எதிர்ப்பணி 37 இடங்களையும் கைப்பற்றியது. கவர்னர் 29 உறுப்பினர்களை நியமித்தார். சுப்பராயன் மீண்டும் திருச்செங்கோடு தொகுதியில் பெற்றி பெற்றார்.

11.11.1923 அன்று பனகல் அரசர் பனகண்டி ராமராயனிங்கர் நீதிக்கட்சியின் சார்பில் முதலாவது அமைச்சராகப் பதவி ஏற்றார். இந்த அமைச்சரவையில் டி.என். சிவஞானம்பிள்ளை என்னும் தமிழர் அமைச்சராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். சுப்பராயன் மீண்டும் நிதிக்குழு உறுப்பினர் ஆனார்.

நீதிக்கட்சியின் தலைவரான சர் பிட்டி தியாகராய செட்டியார் ''கொலைகாரர்கட்கும், கொள்ளைக்காரர்கட்கும், திருடர்கட்கும் அளிக்கும் தண்டனையை இந்திய அரசியல் கைதிகட்கு அளிக்க வேண்டும்'' என்று பேசியதைக் கண்டித்துச் சட்டசபையில் கொண்டு வரப்பட்ட கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து 28.11.1923 அன்று சுப்பராயன்

ஆவேசமாகப் பேசினார். ''அநாகரிகமான தாக்குதல்'' என அவர் பேச்சைக் கண்டித்தார்.

''ஒருவர் தனது தாய்நாட்டின் விடுதலைக்காக ஒரு இயக்கத்தில் சேர்ந்து தனது சுகங்களைத் துறந்து கைதாகும்போது அவர்களை இவ்வாறு தாழ்மைப்படுத்தி இழிவாகப் பேசுவது மனித நாகரிகமற்றது. இதனை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

எதிர்காலத்தில் நானும் எனது மனச்சாட்சியின்படி இதுபோன்ற போராட்டங்களில் கலந்து கொள்ளலாம். இதுபோன்ற விமர்சனம் செய்தால் எனது மனம் எவ்வளவு வேதனைப்படும்'' என்று பேசினார்.

1923 ஆம் ஆண்டு நடைபெற்ற 12 செனட் உறுப்பினர்கள் தேர்தலில் சென்னைப் பல்கலைக்கழக செனட் உறுப்பினர்களாக டாக்டர் சுப்பராயனும், இராதாபாயும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் செனட் மூலம் சிண்டிகேட் உறுப்பினராகவும் இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கணவரும், மனைவியும் செனட், சிண்டிகேட்களில் ஒன்றாக இருந்தது சிறப்புக்குரியது.

விசுவாசமான கட்சிப் பற்றாளர்களும், உழைப்பாளர்களும் ஆன கே.வி. ரெட்டி, ஓ. தணிகாசலம் செட்டியார் போன்றவர்களை அமைச்சர் ஆக்காமல் ஓய்வு பெற்ற மாவட்ட உதவி ஆட்சியரை (டி.என். சிவஞானம்) அமைச்சராக்கியது சரியல்ல என்று சுப்பராயன் அவையில் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் சுப்பராயன் நிதிக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கானாடு காத்தானில் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைக்கு நிதி ஒதுக்க சுப்பராயன் 23.4.1924 இல் உதவி செய்தார்.

சட்டசபையில் நீர்ப்பாசன மசோதா, நிலவரித் தீர்மானம் ஆகியவற்றின் மீது நடைபெற்ற விவாதங்களில் எல்லோரும் பாராட்டும் வண்ணம் பல நல்ல கருத்துக்களை எடுத்துரைத்தார்.

07.02.1924 அன்று சட்டம் பற்றிய விவாதத்தில் சுப்பராயன் பேசும்போது,

'மிகச் சாதாரணமான அலுவலர்கள் கையில் அதிகாரம் உட்கார்ந்து கொண்டு நிர்வாகத்தைப் பாழ்படுத்துகிறது. சிலர் நியாய மாக இருந்தாலும் அதிகார வர்க்கத்தின் மிகக் குறுகிய வட்டத்திற் குள்ளேயே அவர்கள் வளர்வதால் அவர்களால் பொதுமக்களின் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ள முடிவதில்லை.

சட்டத்துறையைப் பற்றி எத்தனையோ மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் வழக்கறிஞர்கள் உதவியால் நல்ல தீர்ப்புக்களைக் கொடுத்து வருகின்றன'' என்று குறிப்பிட்டார். அது இன்றும் பொருத்த மாகவே உள்ளது.

நிலவரி பற்றி 28.03.1924 அன்று சுப்பராயன் சபையில் கீழ்வருமாறு பேசினார்.

''நிலவரி விஷயத்தில் தெலுங்குப் பகுதி, தமிழ்ப்பகுதி எனப் பிரித்துப் பார்ப்பதால் விவசாயிகள்தான் பாதிக்கப்படுவார்கள்''. சட்டத் துறை தொடர்புடைய செலக்ட் கமிட்டி சர் சி.பி. இராமசாமி அய்யர் தலைமையில் நியமிக்கப்பட்டது. சுப்பராயன் அதில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

லிபரல் கட்சியைச் சேர்ந்த சி.வி.எஸ். நரசிம்மராஜுலு தலை மையில் தேசியவாதிகளும், முற்போக்கு எண்ணம் கொண்ட தலைவர் களும் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியை உருவாக்கினர். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து சுப்பராயன் நீதிக்கட்சியைத் தோற் கடிக்கத் தேர்தலில் இறங்கினார். ஐக்கிய தேசியக் கட்சி சுயேச்சை யாகவே கருதப்பட்டது.

❋❋❋

# 11. முதலாவது அமைச்சர்

## மூன்றாவது பொதுத் தேர்தல்

1926 நவம்பர் மாதம் மூன்றாவது பொதுத் தேர்தல் நடை பெற்றது. 1920 ஆம் ஆண்டு 63 உறுப்பினர்களையும், 1923 ஆம் ஆண்டு 44 உறுப்பினர்களையும் கொண்டு ஆட்சியை நடத்திய நீதிக் கட்சி இத்தேர்தலில் 21 இடங்களிலேயே வெற்றி பெற்றது. சுயராஜ்யக் கட்சி 41 இடங்களையும், சுப்பராயன் தலைமை தாங்கிய ஐக்கிய தேசியக் கட்சி 36 இடங்களையும் பிடித்தது. ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சுயேச்சை உறுப்பினர்களாகவே கருதப்பட்டனர். இத்தேர்தலில் சுப்பராயன் திருச்செங்கோடு தொகுதியில் போட்டியின்றி வெற்றி பெற்றார்.

## சுயராஜ்யக் கட்சியின் காலதாமதம்


22.11.1926 அன்று அதிக உறுப்பினர்களைக் கொண்ட சுயராஜ்யக் கட்சியை கவர்னர் அமைச்சரவை அமைக்க அழைத்தார். மூன்று அமைச்சர்களின் பெயரையும் பரிந்துரைக்குமாறு கவர்னர் கேட்டுக் கொண்டார். டிசம்பரில் கூடும் காங்கிரஸ் மாநாட்டின் கருத்தறிந்த பின் அமைச்சர்கள் பெயரைப் பரிந்துரைப்பதாகச் சுயராஜ்யக் கட்சியினர் கூறினர். கவர்னர் அதுவரை பொறுத்திருக்க முடியாது என்று கூறவே 21 உறுப்பினர்களைக் கொண்ட நீதிக்கட்சி ஆட்சி அமைக்கும் காரியத்தில் ஈடுபட்டது.

## சுப்பராயனுக்கு அழைப்பு

அதிக எண்ணிக்கை கொண்ட சுயராஜ்யக் கட்சி ஆட்சி அமைக்கக் காலதாமதம் செய்வதையும், குறைந்த உறுப்பினர்களைக் கொண்ட நீதிக்கட்சி குறுக்கு வழியில் ஆட்சி அமைக்க முயல்வதையும் கண்ட

கவர்னர் 36 உறுப்பினர்களைக் கொண்ட சுயேச்சைகளின் சார்பில் மந்திரி சபை அமைக்கச் சுப்பராயனை அழைத்தார். சுயராஜ்யக் கட்சியினரும் நீதிக்கட்சி ஆட்சிக்கு வருவதை விட சுப்பராயன் தலைமையில் ஆட்சி அமைவதை விரும்பினர். ஆனால் சுப்பராயனுக்கு ஆதரவுக் கடிதம் கொடுக்கத் தயங்கினர். அதனால் சுப்பராயன் ஆட்சி அமைக்கத் தயங்கினார்.

## முதல் தமிழர் முதலாவது அமைச்சர் சுப்பராயன்



முதலாவது அமைச்சர்
ப. சுப்பராயன்

29 உறுப்பினர்களை நியமிக்க வேண்டிய கவர்னர் விஷ்கவுண்ட் கோஷன் 34 உறுப்பினர்களை நியமித்து தம் நியமன உறுப்பினர் ஆதரவை சுப்பராயனுக்கு அளிக்கச் செய்தார். 132 உறுப்பினர்கள் கொண்ட சட்டசபையில் 70 உறுப்பினர்கள் (36+34) ஆதரவைப் பெற்று சுப்பராயன் ஆட்சி அமைத்தார். 04.12.1926 அன்று முதல் தமிழர் அமைச்சரவையைச் சுப்பராயன் அமைத்தார். சுப்பராயன் முதலாவது அமைச்சர். பிற இரு அமைச்சர்கள் ஏ. அரங்கநாத முதலியார், ஆர். டபிள்யூ. ஆரோக்கியசாமி ஆகியோர் ஆவர். சுப்பராயன் உள்ளாட்சி, கல்வி, இரயில்வே, நூலகம், மியூசியம், மிருகக் காட்சி, பூங்கா முதலிய துறைகளைத் தன் பொறுப்பில் வைத்துக் கொண்டார். சுப்பராயன் அமைச்சரவை சுயேச்சை அமைச்சரவை என்றே அழைக்கப்பட்டது. சுப்பராயன் முதலாவது அமைச்சர் என்று அழைக்கப்பட்டார்.

## மேட்டூர் அணை கட்டத் தொடங்குதல்

சுமார் 20 ஆண்டுகள் தொடங்குவதில் இழுபறியாக இருந்த மேட்டூர் அணை கட்டும் திட்டம் சுப்பராயன் ஆட்சி அமைந்த பின்னர் தான் கட்டத் தொடங்கப்பட்டது. கட்டுமானம் சுண்ணாம்பிலா,

சிமெண்டிலா என்ற விவாதத்தில் சிமெண்ட் என்று முடிவாகி உபரி நிதி 125 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அணை கட்டத் தொடங்கி 1934இல் திறப்பு விழாச் செய்யப்பட்டது. கவர்னர் ஸ்டேன்லி திறப்பு விழாச் செய்ததால் அவர் பெயரில் அணை வழங்கப்படுகிறது. இடம் தேர்வு செய்தவர் பா.வே. மாணிக்க நாயக்கர். அவர் பெயர் வைப்பதே பொருத்தம் ஆகும்.

## பெண்மையைப் பேணிப் போற்றியவர்

புதுக்கோட்டையில் நாராயணசாமி அய்யர்-சந்திரம்மா தம்பதி யினர்க்கு மகளாக 30.06.1886 அன்று பிறந்தவர் முத்துலட்சுமி. தாயார் இசைக்கலைஞர் குடும்பம் சார்ந்தவர். சென்னை மருத்துவக் கல்லூரியில் பயின்று முதல் டாக்டரான பெண்மணி முத்துலட்சுமி. டாக்டர் சுந்தரரெட்டி என்பவரை மணந்து கொண்டதால் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி என்று அழைக்கப்பட்டார்.

டாக்டர் தொழிலில் நாட்டம் இன்றி சமூக சேவையில் குறிப்பாக பெண்கள் முன்னேற்றத்திற்கு அரும்பாடு பட்டார். 1925 ஆம் ஆண்டு மாகாண அரசு அவரை குழந்தைகள் நல மருத்துவ ஆய்விற்காக இங்கிலாந்துக்கு அனுப்பியது. அங்கு சென்றவர் பாரிசில் நடந்த உலக மாதர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்.

1926ல் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்ற முத்துலட்சுமி ரெட்டியை கவர்னர் விஷ்கவுண்ட் கோஷன் இடம் சுப்பராயன் பரிந்துரை செய்து சட்டசபையில் நியமன உறுப்பினராக நியமிக்கச் செய்தார். சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த சி.வி.எஸ். நரசிம்மராஜு முதலியார் சட்டசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.


டாக்டர்.
முத்துலட்சுமி ரெட்டி

24.01.1927ல் பெண்கள் பணி நியமனம் தொடர்பாக முதலாவது அமைச்சர் டாக்டர் சுப்பராயனிடம் பல வினாக்களைத்

தொடுத்தார் முத்துலட்சுமி ரெட்டி. அந்த நியமனம் பனகல் அரசர் காலத்தில் ஒரு பெண் பணி செய்த குழுவில் அந்த இடத்தில் ஆண் நியமனம் பற்றியது. சுப்பராயனிடம் இவ்வினாவை எழுப்பி ஆட்சேபம் தெரிவித்தவர் முத்துலட்சுமி ரெட்டி. சுப்பராயன் தகுந்த பதில் கூறினார்.

அன்று சட்டசபைத் துணைத் தலைவர் தேர்தல் நடைபெற்றது. முத்துலட்சுமி ரெட்டியின் சமூகப் பணிபற்றி நன்கு தெரிந்திருந்த டாக்டர் சுப்பராயன் நீதிக்கட்சி உறுப்பினர் பி.டி. இராசனிடம் முத்து லட்சுமி ரெட்டியின் பெயரைத் துணைத் தலைவர் பதவிக்கு முன் மொழியுமாறும், செய்யூர் ஜமீன்தாரை வழிமொழியுமாறும் வேண்டிக் கொண்டார்.

இந்தியாவிலேயே முதல் பெண் சட்டசபைத் துணைத் தலைவ ரானவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டிதான். அப்பெருமைக்குக் காரண மானவர் டாக்டர் சுப்பராயன். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டிதான் சென்னை அவ்வை இல்லம் தொடங்கியவர். அடையாறு புற்றுநோய் மருத்துவமனை தோன்றக் காரணமானவர். பெண்மைக்குப் பெருமதிப்பளித்தவர் சுப்பராயன்.

### அரசுப் பணிகளில் வகுப்புரிமை ஆணை

சென்னை மாகாண வருவாய்த் துறையில் பணியிடங்களை இன அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கம்பெனி அரசு 03.03.1851 அன்று ஒரு ஆணை பிறப்பித்தது. இதுவே இனவாரிப் பணி ஒதுக்கீட்டில் முதல் முயற்சியாகும். இது வருவாய்த் துறைக்கு மட்டுமான ஆணை. இந்த ஆணையை எல்லாத் துறைக்கும் விரிவு படுத்த வேண்டும் என கவர்னரின் நிர்வாகக் குழு உறுப்பினர் ஏ.ஆர். கிளாப் ஆலோசனை கூறினார். ஆனால் நிறைவேற்றப்படவில்லை.

கவர்னரின் நிர்வாகக் குழு உறுப்பினர் ஏ.ஆர். கிளாப் அவர்கள் ஆலோசனைப்படி 05.08.1921 அன்று ஓ. தணிகாசலம் செட்டியாரால் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட எல்லாத் துறைக்குமான இட ஒதுக்கீடு மசோதாவை அங்கீகரிக்காமல் கவர்னர் காலம் கடத்தினார்.

அதனால் 16.09.1921 அன்று இடஒதுக்கீடு தொடர்பாக அரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்தது. இந்த ஆணை நிறைவேற்றப்பட வில்லை. 13.09.1922 அன்று பார்ப்பனர் உயர்பதவிகட்குக் கிடைக்கவிலை என்றால் குறைந்தபட்சம் தகுதியுடைய பார்ப்பனர் அல்லாதாரை நியமிக்க வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது.

07.02.1925 அன்று மாகாண சட்டசபையில் பார்ப்பனர் அல்லாத இந்துக்கள் 40% தாழ்த்தப்பட்டோர் 10% பார்ப்பனர்கள் 10% மற்றவர் 15% என ஒதுக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. இந்த இரண்டு தீர்மானங்களையும் கொண்டு வந்தவர் டாக்டர் சி. நடேசனார்.

1921 முதல் 1925 வரை மசோதாக்களும், தீர்மானங்களும், ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டனவேயன்றி இனவாரி இடஒதுக்கீடு எந்த நிலையிலும் முழுமையாக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட வில்லை. இதற்குப் பார்ப்பன உயர் அதிகாரிகளே காரணம் என்றும் கூறப்பட்டது.

டாக்டர் சுப்பராயன் அமைச்சரவையில் சுகாதாரம், கலால், பதிவுத் துறை அமைச்சராக இருந்த எஸ். முத்தையா முதலியார் கொண்டு வந்த இடஒதுக்கீடு அவர் தொடர்புடைய பதிவுத் துறைக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது. டாக்டர் சுப்பராயன் முதல்முறையாக அரசின் எல்லாத் துறைகட்கும் அதை விரிவுபடுத்தினார். இறுதியாக 13.09.1928 அன்று வெளியிடப்பட்ட அரசாணையில் அரசுத்துறை அனைத்திலும் 12 இடங்கள் காலியாக இருந்தால் பார்ப்பனர் அல்லாத இந்து 5, பார்ப்பனர் 2, இஸ்லாமியர் 2, இதரர் (ஆங்கிலோ இந்தியர், கிறிஸ்தவர், தாழ்த்தப்பட்டோர் சுழற்சி முறையில்) 1 என ஆணை பிறப்பிக்கப்பட்டுத் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டது.

1928ல் சேலத்தில் நடைபெற்ற மாவட்டக் காங்கிரஸ் மாநாட்டில் வகுப்பு வாரி இட ஒதுக்கீட்டை ஆதரித்துப் பேசிய வ.உ. சிதம்பரம் ''டாக்டர் சுப்பராயன் அமைச்சரவையில் தான் வகுப்புவாரி இட ஒதுக் கீட்டிற்குச் சட்ட ரீதியான உத்தரவாதம் கிடைத்தது'' என்று பேசினார்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி அவர்கள் தன்னுடைய ''விடுதலைப் போரில் தமிழகம்'' என்ற நூலில், கல்வியாளர் நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் தன்னுடைய ''புரட்சியாளர் பெரியார்'' என்ற நூலில் டாக்டர் சுப்பராயனை அவர்களை மிகவும் பாராட்டியுள்ளனர். பலராலும் ''டாக்டர் சுப்பராயன் அவர்களின் ஆணை சமுதாய வரலாற்றின் திருப்புமுனை'' என்று பாராட்டப்பட்டது. தந்தை பெரியார் அவர்களும் தன் குடியரசு இதழில் சுப்பராயனைப் புகழ்ந்து எழுதினார்.

## பதவி விலகல் கடிதமும் கவர்னர் ஏற்காமையும்

இந்தியச் சட்டங்களை ஆய்வு செய்ய பிரிட்டன் பாராளுமன்றம் சைமன் கமிஷனை அனுப்பியது. சுப்பராயன் அதை ஆதரித்தார். ஆனால் அரசை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சைமன் கமிஷன் எதிர்ப்புத் தீர்மானம் 61 வாக்குகளில் நிறைவேறியது. அரசுக்கு ஆதரவாக 29 வாக்குகளும் நடுநிலையாக 12 வாக்குகளும் பதிவாயின. அரசுக்கு எதிரான தீர்மானம் நிறைவேறியதால் சுப்பராயன் பதவி விலகல் கடிதம் கொடுத்தார். கவர்னர் ஏற்காமல் தொடர்ந்து பதவியில் இருக்க வேண்டிக் கொண்டார்.

## நம்பிக்கையில்லாத் தீர்மானம்

எதிர்க்கட்சித் தலைவர் சாமி. வெங்கடாசலம் செட்டியார் 02.03.1928 அன்று சுப்பராயன் அமைச்சரவை மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார். தீர்மானம் தோற்கடிக்கப் பட்டது. சட்டசபை சுப்பராயன் அமைச்சரவை மீது தன் நம்பிக்கை யைத் தெரிவித்தது.

## அமைச்சர்கள் மாற்றம்

சைமன் கமிஷன் தீர்மானம் தொடர்பாக அரசை ஆதரிக்காமல் நடுநிலை வகித்த ஏ. அரங்கநாத முதலியார், ஆர். டபிள்யூ. ஆரோக்கியசாமி ஆகியோர் கவர்னர் விருப்பப்படி பதவி விலகியதால் எஸ். முத்தையா முதலியார், எம்.ஆர். சேது ரத்தினம் ஐயர் ஆகிய இருவரும் புதிய அமைச்சர்களாக 08.03.1928 அன்று பதவியேற்றனர். இருவரும் சுயராஜ்ய கட்சியைச் சேர்ந்தவர்கள்.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

இந்தியாவின் 14ஆம் பல்கலைக்கழகமாகவும், தென்னிந்தியாவின் ஐந்தாவது பல்கலைக்கழகமாகவும், தமிழ்நாட்டுப் பகுதியில் இரண்டாவது பல்கலைக்கழகமாகவும் 29.01.1929 அன்று தொடங்கப்பட்டது அண்ணாமலைப் பல்கலைக்கழகம். இப்பல்கலைக் கழகத்தைத் தோற்றுவிக்கப் பெரிதும் உறுதுணையாக இருந்தவர் டாக்டர் சுப்பராயன்!

இராமநாதபுரம் மாவட்டம் கானாடுகாத்தான் என்ற ஊரில் முத்தையா செட்டியார் - மீனாட்சியம்மையாருக்கு மகனாகத் தோன்றியவர் அண்ணாமலைச் செட்டியார் (30.09.1881 - 15.06.1948). ஆங்கிலேய அரசின் அழைப்பை ஏற்று ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவிற்கு லண்டன் மாநகர் சென்ற அண்ணாமலைச் செட்டியார் அங்குள்ள தொன்மையான ஆக்ஸ்போர்டு, கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகங்களைப் பார்வையிட்டார். அப்போதே தாமும் இது போன்ற ஒன்றைத் தொடங்க எண்ணங் கொண்டார்.

இவரது மூத்த சகோதரர் திவான் பகதூர் இராமசாமி செட்டியார் சிதம்பரத்தில் தன் பெயரில் ஒரு உயர்நிலைப் பள்ளியை நடத்தி வந்தார். 1917-ல் அவர் மரணமடையவே அப்பள்ளி நிர்வாகம் அண்ணாமலைச் செட்டியாரிடம் வந்தது. அங்கு தன் தாயார் பெயரில் மீனாட்சி கல்லூரியை 1920ல் இன்டர்மீடியட் படிப்போடு தொடங்கினார். 1922ல் பி.ஏ., படிப்பும், 1925ல் பி.ஏ., ஆனர்சு படிப்பும் தொடங்கப்பட்டது. அருகில் உள்ள திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஊர் திருவேட்களத்தில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டன. 1925ல் மீனாட்சி தமிழ்க் கல்லூரியும், மீனாட்சி வடமொழிக் கல்லூரியும் பின்னர் இசைக் கல்லூரியும் தொடங்கப்பட்டது.

இவை அனைத்தையும் இணைத்து ஒரு பல்கலைக்கழகம் தொடங்கும் தன் எண்ணத்தை அப்போதைய முதலாவது அமைச்சரும், கல்வித்துறை அமைச்சருமாகிய டாக்டர் சுப்பராயன் அவர்களிடம் அண்ணாமலைச் செட்டியார் தெரிவித்தார். அரசின் அனுமதி வேண்டினார். டாக்டர் சுப்பராயன் மிகுந்த ஆர்வத்துடன் செட்டியார்

கூறியதை ஏற்றுக் கொண்டு உரிய நடவடிக்கையில் உடனடியாக இறங்கினார்.

டாக்டர் சுப்பராயன், அண்ணாமலைச் செட்டியார், கல்லூரி முதல்வர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் மூவரும் கலந்து பேசி சட்டத் துறையைச் சேர்ந்த சி.வி. கிருஷ்ணசாமி அவர்களைக் கொண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக மசோதா தயாரிக்கப்பட்டது. சட்ட சபை உறுப்பினர்கள் பார்வைக்கு 24.08.1928 அன்று அனுப்பப் பட்டது. மசோதா 08.09.1928 அன்று சட்டசபையில் விவாதிக்கப் பட்டு செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. 14.10.1928 அன்று கூடிய சட்ட சபையில் ஒப்புதல் பெறப்பட்டது.

பின்தங்கிய மாவட்டமான தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கிராமப் புறத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஏற்பட ஆர்வத்துடன் விரைந்து செயல்பட்ட டாக்டர் சுப்பராயன் அவர்களை சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கைதட்டிப் பாராட்டினர்.

அண்ணாமலைச் செட்டியார் 40 லட்ச ரூபாயும், 700 ஏக்கர் நிலமும் அளித்ததால் பல்கலைக்கழகத்திற்கு அவர் பெயர் வைக்கப் பட்டது. சென்னை மாகாண அரசின் சார்பில் 27 லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டது. கட்டிடம் உபகரணங்களுக்காக 7.5 லட்சம் ரூபாயும், ஆண்டுச் செலவிற்காக 1.5 லட்சம் ரூபாயும் அரசு அளிக்க ஒப்புக் கொண்டது.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் முதலாவது அமைச்சராகவும், கல்வியமைச்சராகவும் இருந்த காரணத்தால்தான் விரைந்து தொடங் கப்பட்டு அரசின் உதவியும் கிடைத்தது. ஆனால் அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்றுக் குறிப்பில் பி.டி. ராஜன் பரிந்துரையால் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டதாக எழுதப் பட்டுள்ளது. முதலாவது அமைச்சர் நியமித்த செலக்ட் கமிட்டியில் பி.டி. ராஜன் ஒரு உறுப்பினராக மட்டுமே இருந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார் டாக்டர் சுப்பராயன் அவர்களை உரிய முறையில் நினைவுகூர்தல் வேண்டும்.

## விசாகப் பட்டினத்தில் ஆந்திரப் பல்கலைக்கழகம்

பனகல் அரசர் என்று அழைக்கப்பட்ட பனகண்டி இராமராய ணிங்கர் சென்னை மாகாணத்தில் முதலாவது அமைச்சராக இருந்த போது (19.11.1923 - 03.12.1926) 1925 ஆம் ஆண்டு சென்னையைப் போல் ஆந்திரப் பல்கலைக்கழகம் தொடங்குவதற் கான ஏற்பாடுகளைச் செய்து வந்தார். பல்கலைக்கழக அமைப்புப் பணியில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இடப் பிரச்சனையே காரணம்.

டாக்டர் சுப்பராயன் ஆட்சி அமைந்த பின் சட்டமன்ற ஆந்திர உறுப்பினர்கள் அனைவரையும் தன் அறைக்கு அழைத்துப் பேசி பல கல்லூரிகள் உள்ள துறைமுக நகரமான விசாகப்பட்டினத்தில் பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுக் கல்வியமைச்சரும் முதலாவது அமைச்சருமான டாக்டர் சுப்பராயன் தீர்மானத்தை முன்மொழிய நான்கில் மூன்று பங்கு உறுப்பினர்கள் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆளுநர் அத்தீர்மானத்தை 1929 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் நாள் அங்கீகரித்தார்.

பனகல் அரசர் காலத்தில் 1925ல் இருந்து நான்காண்டு காலம் முடிவாகாமல் இருந்த ஆந்திரப் பல்கலைக்கழக அமைப்பை டாக்டர் சுப்பராயன் 1929ல் சுமூகமாக முடித்து வைத்தார்.

## இந்து சமய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்

சென்னை மாகாணத்தில் உள்ள கோயில்களில் அசையும் - அசையாச் சொத்து முழுவதும் முன்பு கோயில் குருக்கள் வசமே இருந்தன. இறைவன் திருமேனிகட்குப் பூட்டப்படும் நகைகள், விலை உயர்ந்த ஆடைகள், கோயிலுக்குரிய நிலங்களில் விளையும் தானி யங்கள் அனைத்தும் குருக்கள் கட்டுப்பாட்டில் இருந்தது. குறிப்பாகத் தலைமைக் குருக்கள் தான் அனுபவித்தது போக எஞ்சியவைகளை மற்ற குருமாருக்கு அளிப்பர்.

சென்னை மாகாண முதலாவது அமைச்சராக இருந்த பனகல் அரசர் பனகண்டி இராமராயனிங்கர் சட்டசபையில் ''இந்து சமய

அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்'' என்பதை அறிமுகப்படுத்தி ''கோயில்களிலும் அவற்றின் ஆகம விதிகளிலும் தலையிடாமல் சொத்துக்களைப் பாதுகாப்பதே இச்சட்டத்தின் முதன்மையான நோக்கம்'' என்று பேசினார். எஸ். சத்தியமூர்த்தி போன்றவர்கள் எதிர்த் தாலும் இத்தீர்மானம் சட்டசபையில் நிறைவேறியது. சத்தியமூர்த்தி 'நீதிக் கட்சியினர் பார்ப்பனர்களை மட்டும் எதிர்க்கவில்லை. கடவுள் களையெல்லாம் எதிர்க்கின்றனர். இந்து மதத்தை அடியோடு அழிக்க நினைத்து விட்டார்கள். ஆண்டவர்களையெல்லாம் சட்டம் போட்டுக் கட்டுப்படுத்திடும் அடாத செயல்களை செய்யத் துணிந்து விட்டனர்'' என்று சபையில் பேசினார். பாதுகாப்புக் குழுவிற்கு ஓய்வு பெற்ற நீதிபதி சதாசிவ அய்யர் தலைவராகவும், கோபால்சாமி அய்யங்கார் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டனர். இருப்பினும் நடவடிக்கையில் எந்த முன்னேற்றமும் இல்லை. அதற்குக் குழுவில் இருந்த அய்யரும், அய்யங்காருமே காரணம் என்று கூறப்பட்டது.

டாக்டர் சுப்பராயன் முதலாவது அமைச்சராக இருந்தபோது 1929 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்கள் கொண்டு வந்து அனைவரையும் ஏற்குமாறு செய்து அதைச் சட்டசபையில் நீண்ட விவாதத்திற்குப் பின் நிறைவேற்றினார்.

அச்சட்டத்திற்கு 17.05.1929 அன்று கவர்னரும் ஒப்புதல் அளித்தார். சட்டம் அமுலுக்கு வந்து கோயில்களின் அசையும் அசையாச் சொத்துக்கள் அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. கோயில்களின் வருமானம் பெருகியது. நல்ல வருமானம் உடைய பெரிய கோயில்கட்கு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

சென்னை மாகாண தேவஸ்தானக் கமிட்டிக்கு வி.ஐ. முனுசாமி பிள்ளை, சகஜானந்த சுவாமிகள் ஆகிய ஆதிதிராவிடர் தலைவர்களை உறுப்பினராக டாக்டர் சுப்பராயன் நியமித்தார். நீதிக்கட்சி அரசால் செய்ய இயலாத சாதனையை டாக்டர் சுப்பராயன் நிகழ்த்திக் காட்டினார்.

1930 ஆம் ஆண்டு நடைபெற்ற சுயமரியாதை இயக்க மாநாட்டில் பெரியார் அவர்கள் டாக்டர் சுப்பராயனைப் பாராட்டித் தீர்மானம் நிறை வேற்றினார்.

தீர்மான வாசகம் ''ஆதிதிராவிடர் போன்ற தாழ்த்தப்பட்ட மக்கள் தேவஸ்தானம்' என்ற சொல்லை உச்சரிக்கவும், நினைக்கவும் கூடா தென்ற கட்டுப்பாட்டை உடைத்து ஆதிக்க வெறி கொண்டவர்களின் மனப்பான்மைக்குச் சாவுமணி அடித்த டாக்டர் சுப்பராயன் அவர் களைப் பாராட்டுகிறது'' என்பதாகும்.

## சென்னை உள்ளாட்சிக் கழகங்கள் திருத்த மசோதா

1929 அக்டோபர் மாதம் சென்னை மாகாண சட்டசபையில் உள்ளாட்சித் துறைக்கும் பொறுப்பு வகித்த முதலாவது அமைச்சர் சுப்பராயன் உள்ளாட்சிக் கழகங்கள் திருத்த மசோதாவைக் கொண்டு வந்து விவாதம் நடத்திச் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி உரிய திருத்தங் களுடன் சட்ட சபையில் 28.01.1930 அன்று நிறைவேற்றிச் சட்டம் ஆக்கினார். அவை உள்ளாட்சி நிர்வாகத்துக்கு இன்றும் சிறந்த வழிகாட்டியாக உள்ளது.

அவற்றின் முக்கிய அம்சங்கள்,

கிராமப் பஞ்சாயத்துக்கள் தங்களுக்குத் தேவையான வரியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளலாம். கிராம வளர்ச்சிக்கு அவை பயன்படுத்துவதற்கான திட்டமும் செயல்பாடுகளும் வரையறுக்கப்பட வேண்டும்.

கிராம நிர்வாகத்தில் நியமன உறுப்பினர் கிடையாது. (மாவட்டக் கழகங்களில் அன்று ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர் நியமன முறை இருந்தது).

உள்ளாட்சித் தேர்தலைக் கண்காணிக்க அதிகாரிகள் நியமிக்கப் படுவார்கள்.

வருமானத்தின் அடிப்படையில்தான் வரி விதிக்க வேண்டும். முதலீட்டின் அடிப்படையில் வரி இருக்கக் கூடாது.

நிர்வாகச் செலவுகளில் கட்டுப்பாடுகள் அவசியம்.

ஆயிரம் மக்கள் கொண்ட கிராமங்களில் மட்டும் பஞ்சாயத்து அமைக்க வேண்டும்.

கோயில் வீதிகளில் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் நடக்க அனுமதிக்கப்படும் போது ஆதிதிராவிடர்களை மட்டும் அனு மதிக்காதது தவறு. கிராம நிர்வாகங்கள் இதனை அனுமதிக்கக் கூடாது.

29.01.1930 முதல் வாக்காளர் வயது 25. கூட்டுறவு சொசைட்டி, சிகிச்சைக்குப் பணம் பெறும் மருத்துவமனைகள் வீட்டுவரி செலுத்த வேண்டும்.

### சென்னை அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## (Madras Public Service Commission)

1929 ஆம் ஆண்டுக்கு முன்பு ஒரு துறையின் காலியிடங் களுக்கு அந்தத் துறையின் தலைவரே பணியாளர்களை நியமனம் செய்து கொள்வது வழக்கமாக இருந்தது. இம்முறை பல ஊழல்களுக்குக் காரணமாக அமைந்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க சுப்பராயன் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை 1929ல் உருவாக்கினார். இதில் அனைத்துச் சமூகத்தின் பிரதிநிதிகளையும் சுப்பராயன் உறுப் பினராக நியமித்தார்.

சென்னை மாகாணத்தில் எந்தத் துறையில் எந்தப் பணியிடம் காலியானாலும் அந்த இடத்திற்கு இந்தத் தேர்வாணையத்தின் வழி யாகத்தான் அப்பணியிடம் நிரப்பப்பட வேண்டும் என்பதைச் சுப்ப ராயன் கட்டாயமாக்கினார்.

இந்தியாவிலேயே சமூகநீதி அடிப்படையில் பணியாளர் தேர்வா ணையம் முதன் முதலாகச் சென்னை மாகாணத்தில்தான் ஏற்படுத்தப் பட்டது. இந்த செயற்கரிய சாதனையை நிகழ்த்திக் காட்டியவர் சுப்பராயன்தான்.

இதுபற்றி தென்னிந்திய அரசியல் ஆராய்ச்சியாளரும், கலிபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியருமான உஜென எஃப் இன்ஸிக் (Ugene F Inschik) "The communal G.O. was the forebear of the Madras Public Service Commission formed in 1929 which is the first provisional public service commission in India. Its establishment was a direct result of Non Brahmin movement and illustrates the provisional affairs in terms of the Backward class movement in India generally" என்று எழுதியுள்ளார். இன்னும் பல சமூகவியல் அறிஞர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றது.

## இனவாரி ஒதுக்கீடு

18.03.1930 அன்று மாகாண சட்ட சபையில் இனவாரி ஒதுக்கீடு தொடர்பான விவாதம் நடக்கையில் சுப்பராயன் கூறிய கருத்துரை இந்தியச் சமுதாய ஒற்றுமைக்கு இன்றைக்கும் வழிகாட்டியாகத் திகழ்கிறது.

''நாம் ஒன்றுபட்ட தேசமாக நின்று நம்மை நாமே ஆள வேண்டும் என்ற உணர்வில் இப்போது என் கருத்தை இந்தச் சபையில் சமர்ப்பிக்கிறேன்.

உலகின் கண்முன்னால் ஒரு தன்மான நாடாக நம்மை அடையாளம் காட்டிக் கொண்டு தலை நிமிர்ந்து நிற்க விரும்புகிறோம். அதே சமயத்தில் நம் முன்னே பெரும்பான்மையினர், சிறுபான்மையினரை ஒதுக்கி விட அனுமதிக்க மாட்டோம் என்பதையும் உலகிற்கு நிரூபிக்க விரும்புகிறோம். அது நமது கடமையும் கூட. இந்தியக் குடும்பங்களில் பாகுபாடு இருக்கக் கூடாது. அதைக் கடைப்பிடிக்கவும் அனுமதிக்கக் கூடாது. இவை யாவும் வெறும் அலங்காரத்திற்காகக் கூறப்படுபவையல்ல. ஒவ்வொரு இந்தியர் மனதிலும் இருந்து கிளம்பும் கொள்கை முழக்கமாக இருக்க வேண்டும்.

நமது அரசியல் அமைப்பை உருவாக்கும் போது நம்மிடையே சமூக அங்கமாக ஒளிர்விடும் சிறுபான்மையினரை நம்மில் ஒருவராக உணரும் வண்ணம் அவர்களது தேவைகள் அனைத்தும் பாதுகாக்கப்

படும் என்று உறுதி செய்வோம். முஸ்லிம், கிறிஸ்தவர், ஐரோப்பியர், இந்து என்ற பேதங்கள் இந்தியர் என்பதில் மறைந்து போய்விட வேண்டும். அனைத்துச் சமூகத்தினருக்கும் சம வாய்ப்புக்கள், சம உரிமைகள் என்பதன் அடையாளத்தில்தான் நாம் சுயாட்சியை நிறுவிட வேண்டும்.

இந்த ஒன்றுபட்ட சமூகத்தைத்தான் நாம் உலகிற்கு நிரூபிக்க வேண்டும். சமூகத்தைப் பிளவுபடுத்திடும் பேச்சுக்களை, கோரிக்கைகளை, எண்ணங்களை நாம் அனுமதித்து விடக் கூடாது எனக் கேட்டுக் கொள்கிறேன்''. சிறுபான்மை மக்களிடம் பெரும்பான்மை மக்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை 85 ஆண்டுகட்கு முன்னரே கோடிட்டுக் காட்டியவர் டாக்டர் சுப்பராயன்.

**நகராட்சிகள் திருத்த மசோதா**

21.01.1930 அன்று நகராட்சிகள் திருத்த மசோதா அறிமுகப் படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

''ஒரு நகராட்சித் தலைவர் சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இரு பொறுப்புகளையும் திறம்படச் செயல்படுத்த முடியும். ஆகையால் ஒரு பொறுப்பை ராஜினாமா செய்ய வேண்டியதில்லை.

ஒவ்வொரு நகராட்சியும் வாக்காளர் பட்டியலைத் தயாரித்து வெளியிட வேண்டும். ஆண்டுதோறும் அது திருத்தப்பட வேண்டும். வரி செலுத்துவோர் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை தரப்பட வேண்டும். குஷ்டரோகிகளையும் வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர்களை மனநிலை பாதித்தவர்களாகக் கருதக் கூடாது.

கிராமப் பகுதிகளில் தேர்தல் முறையால் ஏற்படும் நன்மைகளை விளக்கிக் கூற வேண்டும். நகராட்சி வருமானத்திலும், செலவுத் தொகையிலும் பெரும் தொகை கையாளப்படுவதால் அதன் நிர்வாகியாகிய கமிஷனர் தேர்வில் மிகுந்த கவனம் தேவை. இதற்கென ஒரு குழு அமைத்துத் தேர்வு செய்ய வேண்டும்.

செயலர், பொறியாளர், சுகாதார அலுவலர், கமிஷனர் போன்றோர் நிரந்தர முழுநேர ஊழியர் என்பதால் பிற தொழிலில் ஈடுபடக் கூடாது. அப்போது தான் கடமையில் முழுக் கவனமும், திறமையும் இருக்கும். தனியார், பொது நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள், வணிகர்கள் ஒரு நகரில் அறுபது நாட்களுக்கு மேல் தங்கியிருந்து வருமானத்தில் ஈடுபட்டால் அவர்களும் தொழில்வரி செலுத்த வேண்டும். பிரிவு 117ன் படி நகராட்சியோ, அல்லது உள்ளாட்சித் துறையோ இதிலிருந்து வரி விலக்கு அளிக்க முடிவெடுக்கலாம்.

ஒரு நிறுவனத்திடமிருந்து தொழில்வரி செலுத்துவதற்கான கடிதப் போக்குவரத்துகள், அந்த நிறுவனம் சமர்ப்பிக்கும் கணக்குகள் உரிய இரகசிய முறையில் பாதுகாக்கப்பட வேண்டும்''.

## பாடத் திட்டத்தில் நூல் நூற்றல்

முதலாவது அமைச்சர் பொறுப்பில் இருந்த சுப்பராயன் கல்வித் துறையையும் கவனித்து வந்தார். பள்ளிகளின் பாடத் திட்டத்தில் வாரத்திற்கு நான்கு மணி நேரம் ''நூல் நூற்பு'' சேர்க்கப்பட்டது சிறப்புக்குரியது.

## பாரதி பாடலுக்குத் தடை

பாரதியார் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து ''தேசபக்திப் பாடல்கள்'' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டிருந்தனர். அவை அரசுக்கு எதிரான பாடல்களைக் கொண்டவை என்று பர்மா அரசு 07.08.1928 அன்று அந்நூலைத் தடை செய்தது. அதைத் தொடர்ந்து சென்னை மாகாண அரசும் 11.09.1928 அன்று பாரதியார் மறைந்த நாளில் அந்நூலைத் தடை செய்தது. நூல்களைப் பறிமுதலும் செய்தது.

இத்தடைபற்றி முன்னரே அறிந்திருந்த எஸ். சத்தியமூர்த்தி 09.10.1928 அன்று சட்ட சபையில் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசும்போது பாரதி பாடல்களைத் தடை செய்ததை வன்மையாகக் கண்டித்துப் பேசினார். காவல் துறைக்கும், உள்துறைக்கும் கவர்னர் பொறுப்பு வகித்தார். கவர்னரின் நிர்வாகக் குழு உறுப்பினர்களும்,

இஸ்லாமியக் கலாச்சார மொழியியல் வல்லுநர் முகம்மது உஸ்மான் சாகிப், மலையாள மொழி வல்லுநர் எம். கிருஷ்ணன்நாயர் ஆகியோரும் இணைந்து பாரதியார் பாடல்களுக்குத் தடை விதித்துப் பறிமுதல் செய்தனர் என்பதை சத்தியமூர்த்தி அறிந்திருந்ததால் அரசைக் கண்டித்தாரே தவிர சுப்பராயனை விமர்சிக்கவில்லை. ''சிறந்த தமிழ் மாணவராகிய முதலாவது அமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் பாரதியார் பாடல்களின் மகத்துவம் அறிந்தவர். இங்கு இருப்பவர்களில் அவர் ஒருவர் மட்டுமே நல்லவர் என்று கருதுகிறேன்'' என்று எஸ். சத்திய மூர்த்தி பேசினார்.

சில மாதங்கட்கு முன்பு ''எனது அரசு பாரதியார் பாடல்களைப் போதிக்கவும், பாடிடவும் எதிர்ப்பு ஏதும் தெரிவிக்காது'' என்று பேசிய முதலாவது அமைச்சர் சுப்பராயனால் பாரதியார் பாடல்களைத் தடை செய்த கவர்னரின் அதிகாரத் துறையில் தலையிட விரும்பவில்லை. எஸ். சத்தியமூர்த்தியும் இதை அறிந்திருந்தார்.

பின்னாளில் மத்திய அமைச்சராக இருந்தபோது மகாகவி பாரதி யாருக்கு 11.09.1960 அன்று அஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப்புச் செய்தவர் சுப்பராயன் என்பதை நாம் அறிவோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு செய்தியை நினைவு கூர்தல் வேண்டும். 1937ல் பதவியேற்ற இராஜாஜி அமைச்சரவையில் சுப்பராயன் கல்வித் துறைக்கு அமைச்சராக இருந்தார். முதலமைச்சர் இராஜாஜியே நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் பாடல்கள் (தெய்வம், பெரியோர், தேசம், கொடி பற்றியவை) சில வற்றைத் தொகுத்தார். கல்வியமைச்சர் சுப்பராயன் அவர்களின் முன்னுரையுடன் திருச்செங்கோடு எஸ்.வி. இரத்தினவேலு முதலியார் & சன் பதிப்பகத்தார் வெளியிட்டனர். நூல் தலைப்பில் ''துரைத்தனத் தாரால் அங்கீகரிக்கப்பட்டது'' என்றும் அச்சிடப்பட்டிருந்தது. ஆனால் அந்த நூலை வெள்ளையர் அரசு பள்ளிகளில் வைக்கத் தகுதியற்றது என்று தடை விதித்தது.

## எதிர்க் கட்சிகள் மதித்த முதலாவது அமைச்சர்

27.11.1928 அன்று நகராட்சிகள் சட்டத் திருத்த மசோதாவை செலக்ட் கமிட்டி பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும் என்று சுப்பராயன் விரும்பினார். தெலுங்குப் பகுதி உறுப்பினர்களும், எஸ். சத்தியமூர்த்தி போன்ற சுயராஜ்யக் கட்சி உறுப்பினர்களும் சுப்பராயன் கருத்தை மிகக் கடுமையாக எதிர்த்தனர். வாக்கெடுப்பு நடைபெற்றது. எதிர்ப்புக் கடுமையாக இருந்தும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.ஏ. மாணிக்க வேல் போன்றவர்களும், நீதிக் கட்சியைச் சேர்ந்த பி.டி. ராஜனும், சுப்பராயன் அணியில் இல்லாத ஜே. குப்புசாமி, கே. கென்னத், சுவாமி சகஜானந்தா ஆகியோரும் சுப்பராயன் அவர்கட்கு ஆதரவாக வாக்களித்தனர். சுப்பராயன் அமைச்சரவையின் நல்ல கருத்துக்களை எதிர்க்கட்சியினரும் ஆதரித்தது குறிப்பிடத்தக்கது.

## ஒரு தவறான தகவல்

04.12.1926 அன்று சுப்பராயன் சென்னை மாகாண முதலா வது அமைச்சரானது பற்றிய தவறான தகவல்களைப் பலர் எழுதி யுள்ளனர். ''நீதிக்கட்சி சார்பில் போட்டியிட்டு வென்ற அவர் ஒரே இரவில் கட்சி மாறி முதலாவது அமைச்சர் பொறுப்பை ஏற்றார்'' என்று எழுதி யுள்ளனர். இது தவறான தகவலாகும்.

1919 ஆம் ஆண்டு இராஜாஜி சேலம் நகராட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகி காங்கிரஸ் பேரியக்கத்தில் தீவிரமாக ஈடுபட்ட போதே சுப்பராயன் அவர்களும் காங்கிரசில் இணைந்தார். 1919ல் நடைபெற்ற அமிர்தசரசில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு சுப்பராயன் அழைக்கப்பட்டார். இராஜாஜி, சேலம் விஜய ராகவாச்சாரியாருடன் கலந்து கொண்டார்.

1920 ஜூன் 21, 23 நாட்களில் நடைபெற்ற திருநெல்வேலி காங்கிரஸ் மாநாட்டில் சுப்பராயன் கலந்து கொண்டார். தேர்தலில் பங்கு பெற வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தீர்மானித்தது. தேர்தல் பிரச்சார ஒருங்கிணைப்புக் குழுவில் சுப்பராயன் இடம் பெற்றார்.

1920 செப்டம்பர் 4-8 நாட்களில் காங்கிரஸ் கட்சியின் சிறப்பு மாநாடு கல்கத்தாவில் நடைபெற்றது. சுப்பராயன் சென்னை மாகாணப் பிரதிநிதிகளில் ஒருவராகக் கலந்து கொண்டார்.

1920 டிசம்பரில் நாக்பூரில் காங்கிரஸ் கட்சியின் 38 ஆம் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் சுப்பராயன் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகவும், நிர்வாகக் கமிட்டியின் துணைக் குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார்.

காங்கிரஸ்காரரான சுப்பராயன் காங்கிரஸ் தேர்தலில் பங்கு கொள்ளக் கூடாது என்று கூறியதால் 1920 டிசம்பர் மாதம் சுயேச்சை யாகப் போட்டியிட்டார். வெற்றி பெற்ற பின் தன் கல்லூரித் தோழர் பனகல் அரசர் பனகண்டி ராமராயனிங்கர் கேட்டுக் கொண்டபடி யாலும், அமைச்சர் கே.வி. ரெட்டிக்கு பாராளுமன்றச் செயலாளராக கவர்னரால் நியமிக்கப்பட்ட காரணத்தாலும் நீதிக்கட்சியில் இணைந்தார்.

1920ல் பதவியேற்ற ஏ. சுப்பராயலு ரெட்டியார், பனகல் அரசர் பனகண்டி ராமராயனிங்கர், கே.வி. ரெட்டி மூவரும் தெலுங்கர்கள். 17.12.1920ல் பதவியேற்ற முதலாவது அமைச்சர் ஏ. சுப்பராயலு ரெட்டியார் உடல்நிலை காரணமாக 11.07.1921ல் ராஜினாமா செய்தார். பனகல் அரசர் முதலாவது அமைச்சராகி தெலுங்கரான ஏ.பி. பாட்ரோ சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

இரண்டு அமைச்சரவையிலும் ஒரு தமிழருக்குக் கூட இடம் அளிக்காத காரணத்தால் சுப்பராயன், கோவை டி.ஏ. இராமலிங்கம் செட்டியார் போன்றோர் நீதிக் கட்சியிலிருந்து விலகி அமைச்சரவை எதிர்ப்பு அணி என்று தங்களை அறிவித்துக் கொண்டனர்.

1923ல் தேர்தல் நடைபெற்றது. மொத்தம் 98 இடங்களில் நீதிக்கட்சி 44 இடங்களையும், சுயராஜ்யக்கட்சி 11 இடங்களிலும், நீதிக் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்ட சுப்பராயன் தலைமையிலான எதிர்ப்பு அணி 37 இடங்களிலும், லிபரல்கட்சி 6 இடங்களிலும் வென்றது.

சுப்பராயனின் அணியை ஐக்கிய தேசியக் கட்சி என்றும், தேசிய வாத சுயேச்சை என்றும் அழைத்தனர். பனகல் அரசரே நீதிக் கட்சியின் சார்பில் முதலாவது அமைச்சர் ஆனார்.

நீதிக் கட்சித் தலைவர் பி. தியாகராச செட்டியார் அரசியல் போராட்டத்தில் கலந்து கொள்ளும் அரசியல் கைதிகட்குக் கொலை காரர்கட்கும், கொள்ளைக்காரர்கட்கும் அளிக்கப்படும் தண்டனை அளிக்க வேண்டும் என்று பேசிய பேச்சுக்கு ''அது அநாகரிகமான தாக்குதல்'' என்று சுப்பராயன் மிகக் கடுமையாக எதிர்த்தார். இரண்டாவது நீதிக்கட்சி அமைச்சரவையில் ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவரை அமைச்சராக நியமித்ததைக் கண்டித்துப் பேசினார். நீதிக்கட்சி அமைச்சரவை மீது சி.ஆர். ரெட்டி என்பவர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த போது சுப்பரான் அதை ஆதரித்து நீதிக் கட்சிக்கு எதிர்ப்பாக வாக்களித்தார்.

1926 தேர்தலில் 98 இடங்களில் நீதிக்கட்சி 21 இடங்களையே பெற்றது. சுயராஜ்யகட்சி 41 இடங்களைப் பிடித்தது. சுயேச்சைகள் 36 இடங்களைக் கைப்பற்றினர். சுப்பராயன் தலைமையில் இயங்கியோர் ஐக்கிய தேசியக் கட்சி எனக் குறிக்கப்பட்டாலும் அவர்கள் சுயேச்சை கள் என்றே அழைக்கப்பட்டனர்.

1926 நவம்பர் 22 ஆம் நாள் கவர்னர் விஷ்கவுண்ட் கோஷன் 41 இடங்கள் பெற்ற காங்கிரஸ் சார்பான சுயராஜ்ய கட்சியை அமைச் சரவை அமைக்க அழைத்தார். அவர்கள் டிசம்பரில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டின் முடிவைத் தெரிந்தபின் அமைச்சரவை அமைக்க முடியும் என்று கூறினர். கவர்னர் உடன்படவில்லை. இரண்டாவது பெரிய அணியான 36 பேர் கொண்ட சுயேச்சைகளின் தலைவரான சுப்பராயனை அமைச்சரவை அமைக்குமாறு கவர்னர் அழைத்தார். சுப்பராயன் 04.12.1926ல் முதலாவது அமைச்சர் ஆனார். 132 பேர் கொண்ட அவையில் கவர்னர் நியமன உறுப்பினர் 34 பேருடன் சுப்பராயன் ஆதரவாளர்கள் 70 பேர்.

இவைதான் நடைபெற்ற நிகழ்ச்சி. முதல் அமைச்சரவையில் 17.12.1920 முதல் 11.07.1921 வரை 6 மாதம் 24 நாட்கள்

மட்டுமே சுப்பராயன் நீதிக் கட்சியில் இருந்தார். நீதிக்கட்சியின் சில கொள்கைகள் சுப்பராயனுக்கு உடன்பாடாக இருந்ததால் அதைச் செயல்படுத்தினார். நீதிக்கட்சி பாராட்டவும் செய்தது. ஆனால் அப்போது சுப்பராயன் நீதிக்கட்சி உறுப்பினராக இல்லை என்பதே உண்மை.

## பெரியாரும், இராஜாஜியும் மதித்த சுப்பராயன்

பெரியாரும், இராஜாஜியும் டாக்டர் சுப்பராயன் வாழ்ந்தவரை அவரிடம் பெரும் மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தனர் என்பது அனைவரும் அறிந்ததே. அம்மதிப்பின் வெளிப்பாடு இரு சம்பவங் களால் நன்கு புலப்படுகிறது.

காங்கிரஸ் பேரியக்கம் தொடங்கிய உப்புச் சத்தியாக் கிரகத்தில் முதல் சத்தியாக்கிரகியாகிய இராஜாஜி அந்த அறப் போராட்டத்தைத் தொடங்கி வைக்க அப்போது காங்கிரஸ்காரர் அல்லாத டாக்டர் சுப்ப ராயனை அழைத்தார். டாக்டர் சுப்பராயன் சுயமரியாதை இயக்கத்தில் சேராதவராக இருந்தும் தாம் நடத்திய முதல் சுயமரியாதை மாநாட்டைத் தொடங்கி வைக்க டாக்டர் சுப்பராயனை பெரியார் அழைத்தார். இந்த இரு நிகழ்ச்சிகளும் அவர்கள் இருவரும் சுப்பராயன்பால் கொண் டிருந்த மதிப்பைப் புலப்படுத்துகிறது.

## சுயமரியாதை மாநாட்டுத் தொடக்க உரை

17.09.1879 அன்று ஈரோட்டில் த. வேங்கட நாயக்கர் - சின்னத்தாயம்மாள் தம்பதியர்க்குப் பிறந்தவர் இராமசாமி. 1907 முதலே காங்கிரஸ் இயக்கத்தில் நாட்டம் கொண்டிருந்து தீண்டாமை ஒழிப்பு, சமூக நீதி இவற்றைக் காங்கிரஸ் மூலம் நிறைவேற்றலாம் என்று எண்ணினார். தமிழ்நாடு காங்கிரசின் செயலாளராகவும், தலை வராகவும் பணியாற்றினார். கள்ளுக்கடை மறியல், கதர் இயக்கம், அன்னியப் பொருள் பகிஷ்காரம் ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபட்டார்.

பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்களும் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு காங்கிரஸ் மாநாடுகளில் வகுப்புவாரிப்

பிரதிநிதித்துவத் தீர்மானம் கொண்டு வந்தார். திருநெல்வேலி (1920), தஞ்சாவூர் (1921), திருப்பூர் (1922), சேலம் (1923) மாநாடுகளில் அத்தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. 1925 ஆம் ஆண்டு நடைபெற்ற காஞ்சிபுரம் மாநாட்டிலும் தீர்மானம் நிராகரிக்கப்படவே காங்கிரசிலிருந்து பெரியார் வெளியேறினார். 1928இல் நீதிக்கட்சி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஏற்றுக் கொண்டாலும் பிராமணர் அல்லாதவர்களை ஒன்றிணைக்க அது போதாது என்று சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

சுயமரியாதை இயக்கத்தின் முதல் சென்னை மாகாண மாநாடு 1929 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 17,18 தேதிகளில் செங்கல் பட்டில் நடைபெற்றது. மாநாட்டைத் தொடங்கி வைக்க அப்போது சென்னை மாகாண முதலாவது அமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன் அவர்களைப் பெரியார் அழைத்திருந்தார். மாநாட்டிற்குப் பட்டிவீரன்பட்டி ஊ.பு.அ. சவுந்தரபாண்டியன் தலைமை தாங்கினார். பி.டி. ராஜன் இயக்கக் கொடியேற்றுவித்தார்.

டாக்டர் சுப்பராயன், சுவாமி ஈசுவரானந்தா, லாலா லஜபதிராய், எஸ்.ஆர். தாஸ், பனகல் அரசர் ஆகியோரின் சமூக நீதிப்பணிகளைப் பாராட்டி ''சமூக ரீதியான சுதந்திரம் தடுக்கப்பட்டால் நாடு விடுதலை அடையாது. விடுதலை பெற்றாலும் பயனில்லாமல் போய்விடும்'' ''அரசியலிலும் சுயமரியாதை வேண்டும்'' என்று பேசினார். இயக்கத் தையும் பெரியாரையும் பாராட்டினார்.

### உப்பு சத்தியாக்கிரகத்தைத் தொடங்கி வைத்தல்

காந்தியடிகள் நடத்திய முக்கியமான அறப் போராட்டங்களில் உப்பு சத்தியாக்கிரகம் ஒன்று.

மக்கள் நாள்தோறும் பயன்படுத்தும் இன்றியமையாப் பொரு ளாகிய உப்புக்கு ஆங்கிலேய அரசு வரி விதித்தது. மக்கள் அதனால் பெருந்துயருற்றனர். 1930 பிப்ரவரி 14-16 தேதிகளில் சபர்மதி

ஆசிரமத்தில் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் உப்புச் சத்தியாக்கிரகம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

அகமதாபாத்திலிருந்து காந்தியடிகள் 78 சத்தியாக்கிரகிகளுடன் 13.03.1930 அன்று தண்டி வரை 385 கிலோ மீட்டர் பயணம் மேற்கொண்டு கடலில் உப்பெடுத்து சட்டத்தை மீறப் புறப்பட்டார். பயணம் செல்லச் செல்ல பல்லாயிரக் கணக்கில் மக்கள் கலந்து கொண்டு 24 நாட்கள் பயணம் மேற்கொண்டு ஏப்ரல் 5 ஆம் நாள் உப்புச் சட்டத்தை மீறிப் பலரும் கைதாகினர்.

தமிழ்நாட்டிலும் உப்புச்சத்தியாக்கிரகம் நடைபெற்றது. இராஜாஜி 13.04.1930 அன்று முதல் சத்தியாக்கிரகியாகப் பலருடன் திருச்சியிலிருந்து 150 மைல் தூரம் உள்ள வேதாரண்யத்திற்கு உப்பு சத்தியாக்கிரகப் பயணம் மேற்கொண்டார். இராஜாஜி உப்பு சத்தியாக்கிரகப் பயணத்தைத் தொடங்கி வைக்க அப்போது சென்னை மாநில முதலாவது அமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன் அவர்களை அழைத்தார். சுப்பராயன் 13.04.1930 அன்று திருச்சியில் பயணத்தைத் தொடங்கி வைத்தார். 28.04.1930 அன்று வேதாரண் யத்தில் அனைவரும் உப்பெடுத்துக் கைதாகினர்.

ஆங்கிலேய அரசின் சட்டத்தை எதிர்த்துப் போராடும் போராட் டத்தை முதலாவது அமைச்சராக உள்ள சுப்பராயன் தொடங்கி வைக் கலாமா? என்று பரவலாகப் பேசப்பட்டது. எதற்கும் அஞ்சாமல் சுப்பராயன் காங்கிரஸ் கட்சி நடத்தும் போராட்டத்தைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் காங்கிரஸ் கட்சியில் இல்லை.

**பெரியார் பாராட்டு**

1926 முதல் 1930 வரை சுப்பராயன் முதலாவது அமைச்சராக இருந்து ஆற்றிய சிறப்பான பணிகளை தந்தை பெரியார் தம் குடியரசு இதழில் 02.11.1930 அன்று பாராட்டி எழுதியுள்ளார்.

''முதன் மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் பெண்களும், தீண்டப்படாதவர்கள் என்பவர்களும், சொற்பத் தொகையுள்ள

மதக்காரர்கள் என்பவர்களும் ஸ்தல ஸ்தாபனங்களில் தேர்தல் மூலம் இடம்பெறும்படி செய்திருப்பதும், நாமினேஷன்களே அடியோடு இல்லாமல் எல்லா ஸ்தானங்களையும் தேர்தல்களுக்கே விட்டு விட்டதும், பெண்கள் கல்வி விஷயத்தில் தாராளமான அளவுக்கு அதாவது 3ஆவது பாரம் வரை இலவசமாகக் கிடைக்கும்படி செய்ததும் ஆகிய மூன்று காரியங்களும் மூன்று இரத்தினங்கள் என்றே சொல்ல வேண்டியதாகும். இந்தக் காரியங்கள் இந்தியா முழுவதற்கும் பார்த்தாலே இவர் மாத்திரமே இப்படிச் செய்தவராயிருப்பார்'' என்பது தந்தை பெரியார் அவர்கள் எழுதிய பகுதியாகும்.

## தனிச் சிறப்பு

எந்த ஒரு இயக்கத்தின் தயவும் இல்லாமல் சுயேச்சைகளின் துணை கொண்டு இடையில் கவிழ்ந்து விடாமல் பதவிக் காலம் முழுமையாக ஒரு மாநிலத்தை ஆள முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர் டாக்டர் சுப்பராயன். இந்திய ஆட்சி வரலாற்றில் ஒரு புதுமை.

## பட்டம் வேண்டாம்

டாக்டர் சுப்பராயனுக்கு 'சர்' பட்டம் வழங்க விஷ்கவுண்ட் கோஷன் (கவர்னர்) வைசிராய்க்கு பரிந்துரை செய்ய முன்வந்த போது மறுத்து விட்டார்.

அதுபோல 'கேசரி இந்து' என்ற உயர் பட்டம் வழங்க முன்வந்த போதும் மறுத்துவிட்டார். இன்னும் பலர் பட்டமளிக்க முயன்ற போதும் மறுத்து விட்டார்.

பட்டங்களால் கிடைக்கும் சிறப்பை விட செய்த பணிகளால் வரும் சிறப்பே மேலானது என்பது சுப்பராயன் கருத்து.

❊ ❊ ❊

# 12. எதிர்க் கட்சித் தலைவர்

1930 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெறும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி போட்டியிடுவதில்லை என அறிவித்து விட்ட தால் சென்னை மாகாண சட்டசபைத் தேர்தலில் நீதிக் கட்சியினரும், சுப்பராயன் தலைமையில் இயங்கிய ஐக்கிய தேசியக் கட்சியான சுயேச்சை தேசியவாதிகளும் போட்டியிட்டனர்.

சுயேச்சை தேசிய வாதிகளை விட நீதிக்கட்சியினர் சில இடங்கள் கூடுதலாகப் பெற்றிருந்ததால் நீதிக்கட்சியின் தலைவர் பி. முனுசாமி நாயுடு ஆட்சி அமைத்தார். சுப்பராயன் எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

## அன்னிய அரசின் அடக்குமுறைக்கு எதிர்ப்பு

இக்கால கட்டத்தில் காந்தியடிகள் ''ஒத்துழையாமை'' போராட்டத் தைத் தொடங்கினார். இப்போராட்டம் நாடெங்கும் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது. இதைச் சகித்துக் கொள்ள முடியாத அன்னிய அரசு போராட்டத்தை அடக்கக் கடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. 19.11.1930 அன்று எதிர்க்கட்சித் தலைவரான சுப்பராயன் அரசின் அடக்கு முறையைக் கடுமையாகக் கண்டித்துச் சட்டசபையில் உரையாற்றினார்.

''ஒத்துழையாமைப் போராட்டங்களை அடக்க அரசு கையாளும் போக்கு மனிதாபிமானத்திற்கும், தார்மீகத்திற்கும் எதிராக உள்ளது. ஒரு நாட்டின் தேசிய உணர்வுகளை மதிக்காமல், அம்மக்களின் தேவை களைப் புரிந்து கொள்ளாமல் அரசாங்கம் சிப்பாய்களைக் கொண்டு அடக்கி விடலாம் என்று கருதி விடக் கூடாது.

இந்த அடக்குமுறை தொடருமானால் மக்களின் வெறுப்பு உணர்வு தீவிரமடைந்து அரசாங்கமே திண்டாடும் வகையில் எதிர்ப்பு இயக்கம் பரவிப் பலம் பெறும். பின்னர் பழைய நிலைக்கு சமூகத்தைக் கொண்டு வருவது என்பது இயலாத காரியம் ஆகி விடும்''.

மீண்டும் இதே பிரச்சனை குறித்து காங்கிரஸ் கட்சி தடை செய்யப்பட்ட பின் 28.01.1931 அன்றும் சட்டசபையில் சாமி வெங்கடாசலம் தீர்மானத்தின் மீது எதிர்க்கட்சித் தலைவர் சுப்பராயன் பேசினார்.

''உங்களது சாம்ராஜ்யத்தில் இந்தியா தொடர்ந்து இருக்க வேண்டும் என்று நீங்கள் கருதினால் தேசிய உணர்வுகள் ஆர்ப்பரித்துக் கொண்டு எழுந்துள்ளதைக் கட்டுப்படுத்தி, அடக்குமுறைகளைக் கைவிட்டு வேறு நல்ல வழிகளைக் கையாள முயல வேண்டும்.

மக்கள் இயக்கத்தைத் தாழ்த்தி மதிப்பிடக் கூடாது. அவ்வாறு செய்ததால்தான் இந்த அரசாங்கம் மக்களின் நன்மதிப்பை இழந்து விட்டது. அநியாயமான அடக்குமுறைகளால் மிகவும் விரைவாகவே இழந்து விட்டது.

அரசியல் ரீதியான போராட்டங்களை அடக்கு முறைகளால் அடக்கி விட முடியும் என்று அரசாங்கம் கருதுமேயானால் அது பணிவான மக்களைத் தீவிரவாதத்திற்கும் தலைமறைவுப் போராட்டத்திற்கும் தள்ளி விடுகிறது என்றே கருத வேண்டும்''. சுப்பராயன் அப்போது காங்கிரஸ் கட்சியில் இல்லாவிடினும் இவ்வாறு பேசியது சிறப்புமிக்கதாகும்.

### மேலவை பற்றிய கருத்து

அக்காலத்தில் மாகாணங்களில் சட்டசபை மட்டுமே இருந்தது. மேலவை இல்லை. ''இந்திய வாக்குரிமைக் கமிட்டி'' ஒவ்வொரு மாகாணத்திற்கும் மேலவை அமைக்க வேண்டும் என்று கூறியது. சட்டசபையில் உறுப்பினர் ஆர்ச்போர்டு கேம்ப்ஸ் என்பவர் அது பற்றி வினா எழுப்பினார். அதற்கு சுப்பராயன் கருத்து,

''சட்டசபையில் இரண்டாவது சபை தேவையற்றது. அவ்வாறு இரண்டாவது சபையை இந்த சட்டசபை ஏற்றுக்கொள்ளுமேயானால் இந்த அரசாங்கம் தனது நியமன உறுப்பினர்களைக் கொண்டே அந்த சபையை நிரப்பிக் கொண்டிருக்கும்.

அந்தச் சபை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையை எதிர்த்துக் கொண்டேயிருக்கும். ஜனநாயக அமைப்பில் மக்களின் வாக்குரிமையைப் பெற்றவர்களே தமக்குரிய சட்டங்களையும் நிர்வாகத்தையும் தீர்மானிக்கத் தகுதியுடையவர்கள்''.

05.03.1931 அன்று காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். வழக்குகள் வாபஸ் ஆனது. அவசரச் சட்டம் ரத்து செய்யப்பட்டது. காந்தியும் போராட்டம், மறியலை விலக்கிக் கொண்டார்.

சுப்பராயன் ''காந்தியடிகளின் ஒத்துழைப்புடன் ஒத்துழையாமைப் போராட்டத்தை முடிவிற்குக் கொண்டு வந்த இர்வின் அவர்களை சபை போற்றுகிறது'' என்று பேசினார்.

## அரசியல் அமைப்பு வெள்ளை அறிக்கை

1931 செப்டம்பரில் கூடிய இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் எந்த முடிவும் எடுக்கப்படாததால், பூனாவில் காந்தியடிகளும், ஜின்னாவும் சந்தித்துப் பேசிய பின் இந்திய அரசு ஒரு வெள்ளையறிக்கையை வெளியிட்டது. ''இந்த வெள்ளையறிக்கையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சபைக்கு முக்கிய அதிகாரம் எவையும் வழங்கப்படவில்லை' என்பதைச் சுப்பராயன் சுட்டிக் காட்டினார்.

''இந்தியாவின் தலைவிதியை நிர்ணயித்துக் கொள்ளவும், அவர்களது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளவும் தேவையான அதிகாரங்களை வழங்கிடும் அரசாங்கத்தை அவர்களே தேர்ந்தெடுத்துக்

கொள்ளவும் சுய உரிமைகளை வழங்கவும் இந்த அறிக்கையில் ஒன்றும் கூறப்படவில்லை.

இந்திய ராணுவம் இன்னும் வைசிராயிடமே விடப்பட்டுள்ளது. இந்திய வைசிராயின் அதிகாரங்கள் மத்திய சட்ட மன்றத்தின் ஆய்விற்கு உட்பட்டதாக வேண்டும். மத்திய - மாநில அரசுகட்குப் பொருளாதார சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவையே நிதிக்காக அரசின் நியமன உறுப்பினர்களிடம் கையேந்தி நிற்கும் நிலை கூடாது.

மத்திய - மாகாண சட்டமன்றங்கள் அனுமதிக்கும் நிதி ஒதுக்கீட்டை அந்தந்த மாநில ஆளுநர்களிடமோ, வைசிராயிடமோ ஒப்புதல் பெற வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே இந்த அறிக்கையை முழுவதுமாக சபை நிராகரிக்க வேண்டும். சுதந்திரப் பசியால் வாடிடும் இந்தியா உங்களிடம் உணவு கேட்டது. ஆனால் நீங்கள் கொடுப்பதோ கல்'' என்றார் சுப்பராயன்.

### அரிஜன ஆலயப் பிரவேச மசோதா

திருவரங்கம் முதலிய பல கோயில்களில் அரிஜனங்கட்கு வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவரான சுப்பராயன் அனைத்துக் கோயில்களிலும் அரிஜனங்கட்கு வழிபாட்டு உரிமை வேண்டுமென ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் இது மத்திய அரசின் வரம்பிற்கு உட்பட்டது என்று வைசிராய் இத்தீர்மானத்தை ஏற்க மறுத்தார்.

❊ ❊ ❊

# 13. புதுப்பாளையம் காந்தி ஆசிரமம்

''கடையனுக்கும் கடைத்தேற்றம்'' என்ற கொள்கையை உள்ளத்தில் கொண்டு தென்னாப்பிரிக்காவிலிருந்து 1915 ஆம் ஆண்டு இந்தியா திரும்பிய காந்திஜி 1915ல் பம்பாயிலும், 1916ல் லக்னோவிலும் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடுகளில் கலந்து கொண்டு நாட்டு நிலையை நன்கு உணர்ந்து தன் அரசியல் பணியைத் தொடங்கினார்.

1917 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சம்பரானில் அவர் அறப் போராட்டம் தொடங்கியது. கோபால கிருஷ்ண கோகலே (1866 - 1915) அவர்களின் மிதவாதக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார். சத்தியாக்கிரகம், கிலாபத் இயக்கம் (1919) ஹோம் ரூல் இயக்கம் (1920) வரிகொடா இயக்கம் (1921) ஒத்துழையாமை இயக்கம் (1922) மூலம் இந்திய விடுதலை இயக்கத் தலைவர் ஆனார். ''கத்தியின்றி இரத்தம் இன்றி'' அறப்போர் தொடங்கிய காந்திஜி ''மகாத்மா'' என்று அழைக்கப்பட்டார். 1921ல் பாரதியார் ''பாரத தேசம் தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா'' என்று பாடினார்.

விடுதலைப் போராட்டத்தோடு கதர் இயக்கம், மது விலக்கு, தீண்டாமை ஒழிப்பு, கிராமப் பொருளாதார முன்னேற்றம் இவைகட்கு நிர்மாணத் திட்டங்களையும் காந்திஜி அறிவித்தார். 1923ல் வார்தாவில் இதற்காக ''காந்தி சேவா சங்கம்'' தொடங்கப்பட்டது.

10.12.1878ல் இன்றைய தர்மபுரி மாவட்ட தொரப்பள்ளி என்ற ஊரில் சக்கரவர்த்தி வேங்கடராமய்யர் - சிங்காரம்மாள் தம்பதியினர்க்கு மூன்றாவது மகனாகப் பிறந்த ''இராசன்'' என்று அழைக்கப்பட்ட இராஜகோபாலாச்சாரியார் வழக்கறிஞர் பட்டம் பெற்று 1900 ஆம் ஆண்டு வழக்கறிஞராகப் பதிவு செய்தார். சேலத்தில்

வழக்கறிஞர் தொழில் செய்யும் போதே லோகமான்ய பாலகங்காதர திலகர் கொள்கையில் ஈர்க்கப்பட்டுப் பொதுப்பணியாற்றினார். 1917 முதல் 1919 வரை சேலம் நகராட்சி மன்றத் தலைவராய் விளங்கிய இராஜகோபாலாச்சாரியார் 1919ல் காங்கிரஸ் பேரியக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். 1923ல் சேலத்தில் காந்தி சேவா சங்கம் தொடங்கினார். காங்கிரஸ் செயலாளர் உள்ளிட்ட முக்கியப் பொறுப் புக்களையேற்றார். ''இராஜாஜி'' என அழைக்கப்பட்டார்.

காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களைச் செயல்படுத்த விரும் பினார். அவர் வாழ்க்கைத் துணைவியார் அலர்மேலுமங்கம்மாள் இறந்து விடவே அம்முயற்சி தனக்கு ஆறுதலாக இருக்கும் என்று எண்ணினார். குமரமங்கலம் ஜமீனின் வழக்கறிஞராகத் திகழ்ந்தவர் இராஜாஜி. இராஜாஜியின் மூத்த சகோதரர் சீனிவாசய்யர் குமரமங்கலம் ஜமீனில் கணக்கராகப் பணியாற்றி வந்தார். சுப்பராயன் - இராதாபாய் திருமணம் தொடர்பாக சுப்பராயனின் தாயார் பாப்பாயம்மாள் அவர்களுக்குத் தெரிவித்ததுடன் திருமண ஏற்பாடு களைச் செய்து மங்களூரில் நடைபெற்ற திருமணத்திலும் பங்கு கொண்டவர் இராஜாஜி.

காந்திஜி பெயரில் ஒரு ஆசிரமம் அமைக்க விரும்பிய இராஜாஜி தன் எண்ணத்தை சுப்பராயனிடம் தெரிவித்தார். சுப்பராயன் தன் மாமாவும், புதுப்பாளையம் மிட்டாதாரும் ஆகிய இரத்தினசபாபதிக் கவுண்டரிடம் கூறி இராஜாஜிக்கு நிலம் அளிக்க ஏற்பாடு செய்தார். நந்தவனம் என்று அழைக்கப்பட்ட தன் சொந்த நிலப் பகுதியில் இரண்டு கிணறுகளோடு கூடிய நான்கு ஏக்கர் நிலத்தை இராஜாஜிக்கு இரத்தின சபாபதிக் கவுண்டர் இலவசமாக அளித்தார்.

06.02.1925ல் காந்தி ஆசிரமம் தொடங்கப்பட்டது. தொடங்கி வைக்க காந்திஜி வர இயலாத காரணத்தால் பெரியார் அவர்கள் தொடங்கி வைத்தார். 17.09.1879ல் ஈரோட்டில் வேங்கட நாயக்கர் - சின்னத்தாயம்மாள் தம்பதியினர்க்கு இரண்டாவது மகனாகப் பிறந்த

இராமசாமி நாயக்கர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர், செயலாளர் பதவி வகித்தவர். நாயக்கர் சாதிப் பெயரை நீக்கிய அவரை இராமசாமி என்று அழைப்பது பொருத்தமில்லை எனக் கருதி ''பெரியார் இராமசாமி'' என அழைத்தனர். ''பெரியார்'' என்ற பெயரே நிலைத்து விட்டது. 1921ல் ஈரோட்டில் பெரியார் வீட்டில் காந்திஜி தங்கிய போதுதான் கள்ளுக்கடை மறியல் திட்டம் உருவானது.

அதற்குக் காரணமாக இருந்தவர்கள் பெரியாரின் மனைவி நாகம்மையாரும், தங்கை கண்ணம்மாளும் ஆவர். பெரியார் தன் தோட்டத்தில் இருந்த 500 தென்னை மரங்களை வெட்டினார். கள்ளுக்கடை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார். கதர் இயக்கத்துக் குத் தலைமை தாங்கி தன் வீட்டிலேயே கதர்க்கடை தொடங்கியதுடன் ஊர் ஊராகச் சென்று கதர் விற்றார். 1925ல் தான் தொடங்கிய ''குடியரசு'' வார இதழில் இராட்டையில் நூல் நூற்கும் காட்சியையும், காந்திஜி நெசவு நெய்யும் காட்சியையும் அச்சிட்டார். காங்கிரஸ் கொள்கைப்படி ஈரோட்டில் தன் சொந்த இடத்தில் இந்தி கற்பிக்கும் பள்ளி நடத்தினார். எனவே அவர் காந்தி ஆசிரமத்தைத் தொடங்கி வைப்பது பொருத்தம் என்று இராஜாஜி எண்ணினார்.

கதர் இயக்கம், மது விலக்கு, தீண்டாமை ஒழிப்பு, சுதேசிப் பொருள் உற்பத்தி மூலம் கிராமப் பொருளாதார முன்னேற்றம், பெண் விடுதலை, கல்விப் பணி, அரிசன முன்னேற்றம் போன்ற பணிகளை காந்தி ஆசிரமம் சிறப்புடன் மேற்கொண்டது.



இராஜாஜி பத்து ஆண்டுகள் ஆசிரமத்தில் தங்கிப் பணியாற்றினார். இரத்தின சபாபதிக் கவுண்டர் எல்லா உதவிகளையும் மனமுவந்து செய்ததுடன் கதர் உடுத்தி அவரும் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டார். காந்திஜி இங்கு இரு முறை வந்து சில நாட்கள் அவருக்கு அமைக்கப் பட்ட குடிலில் தங்கினார். இங்குதான் இராஜாஜியின்


மகள் இலட்சுமி - காந்திஜியின் மகன் தேவதாஸ் திருமணம் உறுதி செய்யப்பட்டது.

இராஜாஜி ஆசிரமத்தின் மூலம் ''விமோசனம்'' என்ற தமிழ் இதழையும், "PROHIBITION" என்ற ஆங்கில இதழையும் நடத்தினார். பல தேசியத் தலைவர்கள் காந்தி ஆசிரமம் வந்து பார்வையிட்டு அதன் பணிகளைப் பாராட்டியுள்ளனர்.

இந்திய நாடெங்கும் புதுப்பாளையம் காந்தி ஆசிரமத்தின் புகழ் பரவியது.


ஜவஹர்லால் நேரு, லால்பகதூர் சாஸ்திரி, பாபு ராஜேந்திர பிரசாத், சர்தார் வல்லபாய் படேல், மகாதேவ தேசாய், ஜி.டி. பிர்லா, ஜமன்லால் பஜாஜ், ஜே.சி. குமரப்பா, ஆச்சார்ய கிருபளானி, தக்கர் பாபா முதலிய பலர் ஆசிரமம் வந்து பணிகளைப் பாராட்டியுள்ளனர்.

முதலாவது அமைச்சராக சுப்பராயன் இருந்த போது புதுப் பாளையம் கிராமத்தில் புதிய பள்ளி திறக்க ஏற்பாடு செய்தார். தாழ்த்தப்பட்டவர் வாழும் பகுதியில் பள்ளி அமைக்கப்பட்டது. கடிதப் போக்குவரத்து சிரமம் இன்றி நடை பெற ஆசிரம வளாகத்தில் ஒரு அஞ்சல் நிலையத்தை சுப்பராயன் ஏற்படுத்திக் கொடுத்தார்.



புதுப்பாளையம் காந்தி
ஆஸ்ரமத்தில் காந்தியடிகள்,
அருகில் ராஜாஜி

சுப்பராயன் எதிர்க்கட்சித் தலைவ ராக இருக்கும் போது அரசினரால் ஆசிர மத்துக்கு ஏற்பட்ட தடைகளையெல் லாம் சுப்பராயன் தலையிட்டு நீக்கினார். ஆசிரமத்தை மூட அரசு எண்ணிய போதும், அரசுடைமை ஆக்க முயன்ற போதும் சுப்பராயன் தலையிட்டு



சுப்பராயன் தந்த இடத்தில் கட்டிய
அரிசன மாணவர் இல்லத்தின்
இன்றைய நிலை

ஆசிரமத்தைப் பாதுகாத்தார்.

1934ஆம் வருடம் ஆகஸ்டு முதல் நாள் சபர்மதி ஆசிரமத்தில் காந்திஜியை அரசு கைது செய்தது. எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டங்கள் நடைபெற்றது.

இராஜாஜி ஆசிரமப் பொறுப்பை சுப்பராயனிடம் ஒப்படைத்து விட்டு திருச்செங்கோட்டில் 16 தொண்டர்களுடன் போராட்டம் நடத்திக் கைதானார். திருச்செங்கோடு பள்ளியில் படிக்கும் அரிசன மாணவர்கட்கு ஆசிரமம் சார்பில் ஒரு விடுதி கட்ட விரும்பினர். யாரும் இடம் கொடுக்க மறுத்த நிலையில் சுப்பராயன் தன் சொந்த நிலத்தில் இடம் அளித்தார்.

அங்கு கட்டப்பட்ட விடுதியை 1935 ஆம் வருடம் பாபு ராஜேந்திர பிரசாத் திறந்து வைத்தார். இப்போது விடுதி இயங்குவது இல்லை. இன்றும் காந்தி ஆசிரமம் தன் பணியைச் சிறப்புடன் தொடர்கிறது.

❊❊❊

# 14. இராஜாஜி அமைச்சரவையில்

## இந்தியச் சட்டம் 1935 மசோதா

1935 ஆம் வருடம் ஆகஸ்ட் 2 ஆம் நாள் அமுலுக்கு வந்த இச்சட்டத்தால் இரட்டை ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு மாகாண சுயாட்சி வழங்கப்பட்டது. ஆனால் கவர்னருக்குரிய சில அதிகாரங்கள் தொடர்ந்தன. 98 உறுப்பினர் கொண்ட சென்னை சட்டசபை உறுப்பினர் தொகை 215 ஆக உயர்த்தப்பட்டது. 45 உறுப்பினர்கள் கொண்ட மேல் சபையும் அமைக்கப்பட்டது. கவர்னரின் ஆளுமை அமைச்சரவை மீது குறைக்கப்பட்டது. 21 வயது முடிந்த ஆண், பெண் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. 01.04.1937 முதல் இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது.

## தேர்தலும், காங்கிரஸ் நிலையும்

1937ல் தேர்தல் அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சி தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று இராஜாஜி, வல்லபாய் படேல், இராஜேந்திர பிரசாத் ஆகியோர் விரும்பினர். ''தேர்தலில் போட்டி யிடுவது காங்கிரசின் கொள்கைகளை அடகு வைப்பது போல'' என்று நேருஜி எதிர்த்தார்.

ஆனால் தமிழக - ஆந்திர காங்கிரஸ் தலைவர்கள் தேர்தல் பணிகளைத் தொடங்கி விட்டனர். பி.எஸ். குமாரசாமி ராஜா, டி.எஸ். அவினாசிலிங்கம் செட்டியார், ஓ.பி. இராமசாமி ரெட்டியார் போன்ற வர்கள் தமிழகப் பகுதியிலும் டி. பிரகாசம், வி.வி. கிரி போன்றவர்கள் ஆந்திரப் பகுதியிலும் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

**காங்கிரசில் மீண்டும் சுப்பராயன்**

நடுநிலையாளர்களான சேலம் பி. வரதராஜுலு நாயுடு, நீதிக் கட்சி சார்ந்த கோவை டி.ஏ. இராமலிங்கம் செட்டியார், பெரியாரின் சீடரான எஸ். இராமநாதன் ஆகியோரும் இராஜாஜியின் அழைப்பை ஏற்றுக் காங்கிரசில் சேர்ந்தனர். இராஜாஜியின் நெடுநாளைய நண்பரும், தேசியவாத சுயேச்சை என்று அழைத்துக் கொண்டவரும், காங்கிரஸ் கொள்கைகட்குத் தார்மீக ஆதரவு கொடுத்து வந்தவரும் ஆகிய சுப்பராயனும் இராஜாஜியின் விருப்பப்படி காங்கிரசில் மீண்டும் சேர்ந்தார்.

**தேர்தலில் வெற்றி**

1937 தேர்தலில் மொத்தம் 215 தொகுதிகளில் காங்கிரஸ் 159 இடங்களிலும், நீதிக்கட்சி 21 இடங்களிலும், சுயேட்சை 15 இடங்களிலும், முஸ்லிம் லீக் 9 இடங்களிலும், ஐரோப்பியர் 7 இடங்களிலும் வெற்றி பெற்றனர். திருச்செங்கோடு தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு சுப்பராயன் வெற்றி பெற்றார்.

**காங்கிரசின் நிலை**

காங்கிரஸ் கட்சியை ஆட்சி அமைக்க கவர்னர் எர்ஸ்கின் அழைத்தார். ''ஆட்சியில் தலையிடுவது இல்லை'' என்று எழுதிக் கொடுக்கும்படி காங்கிரஸ் வலியுறுத்தியது. இதற்குக் கவர்னர் உடன்படவில்லை.

கவர்னரைச் சந்தித்த இராஜாஜி ''அமைச்சரவை அமைப்பது பற்றி காந்திஜியை வைசிராய் சந்தித்துப் பேச வேண்டும். இதை வைசிராயிடம் கவர்னர் வலியுறுத்த வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். ''இது சட்டத்தை மீறிய செயல்'' என்று கவர்னர் இராஜாஜி கோரிக்கையை நிராகரித்தார். காந்திஜி சென்னை வந்து தலைவர்களுடன் விவாதித்தார். 26.03.1937 அன்று கவர்னரை இராஜாஜி சந்தித்து ''அரசின் நிலையை காந்திஜி ஏற்றுக் கொள்ளவில்லை'' என்று கூறினார்.

இராஜாஜி மந்திரிசபை அமைக்க மறுக்கவே கவர்னர் லிபரல் கட்சியைச் சேர்ந்த வி.எஸ். சீனிவாச சாஸ்திரியை ஆட்சி அமைக்க அழைத்தார். அவர் மறுத்து விட்டார்.

## கே.வி. ரெட்டி மந்திரி சபை

நீதிக் கட்சியினரும் 26.03.1937 ல் கூடி ''அமைச்சரவை அமைப்பதில்லை'' என்று கவர்னரிடம் தெரிவித்தனர். ஆனால் நீதிக் கட்சியிலிருந்த தலைவர்கள் சிலர் கே.வி. ரெட்டி தலைமையில் கூடி ''நாங்கள் நீதிக் கட்சியிலிருந்தாலும் எங்களை சுயேச்சைகளாகக் கருதி அமைச்சரவை அமைக்க அழைக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொள்ள கவர்னர் இசைந்தார்.

01.04.1937ல் கே.வி. ரெட்டியை முதலமைச்சராகக் கொண்டு ஏ.டி. பன்னீர் செல்வம், எம்.ஏ. முத்தைய செட்டியார், பி. கலிபுல்லா சாகிப் பகதூர், எம்.சி. ராஜா, ஆர்.எம். பாலத் ஆகியோர் அமைச்சராகப் பதவி ஏற்றனர். இந்த இடைக்கால அரசு பெரும்பான்மை இன்மையால் சட்டசபையைக் கூட்டாமலேயே அதிகாரம் செய்தது. 14.07.1937 வரை இந்த அமைச்சரவை நீடித்தது.

## இராஜாஜி மந்திரி சபை

காங்கிரஸ் கட்சித் தலைமை 08.07.1937 அன்று மாகாணத் தலைவர்களை ஆட்சி அமைக்க அனுமதித்தது. 15.07.1937ல் இராஜாஜியைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை பதவி ஏற்றது. சுப்பராயன் கல்வி, சட்ட அமைச்சர் ஆனார். மற்ற அமைச்சர்கள் டி. பிரகாசம், யாகூப்கான், டி.எஸ்.எஸ். இராஜன், வி.ஐ. முனுசாமிப் பிள்ளை, வி.வி.கிரி, எஸ். இராமநாதன்பிள்ளை, கே. ராமன் மேனன், பி. கோபால் ரெட்டி ஆகியோர் ஆவர். எதிர்க்கட்சித் தலைவர் ஏ.டி. பன்னீர் செல்வம்.

1926-30 ஆம் ஆண்டுகளில் முதலாவது அமைச்சராக இருந்தபோதே மதுவிலக்கிற்கு அடித்தளமிட்ட சுப்பராயன் 1937ல் அமைச்சராகப் பதவி ஏற்ற இரண்டு மாதங்களில் இராஜாஜியின்

விருப்பப்படி 27.09.1937 அன்று மதுவிலக்குச் சட்டத்தைச் சட்ட அமைச்சர் என்ற முறையில் கொண்டு வந்தார். சேலம் மாவட்டம் முழுவதும் மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்டது. ''அரசின் ஆண்டு வருமானம் 48 லட்சம் ரூபாய் குறையும் என்றாலும் மக்களின் நலன் கருதி மதுவிலக்குச் சட்டம் கொண்டு வரப்படுகிறது'' என்றார் சுப்பராயன்.

**மாநில நிதிக்கு வரிகள்**

மாநில நிர்வாகத்திற்கும் வளர்ச்சிப் பணிகட்கும் நிதி ஆதாரத் தைப் பெருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 1939 ஆம் ஆண்டு பல வரிகளை சுப்பராயன் அறிமுகப்படுத்தினார். இந்தியாவிலேயே முதன்முறையாக பொருட்களின் விற்பனை மீதான பொது வரியைக் கொண்டு வந்தவர் சுப்பராயன்.

பெட்ரோல் மற்றும் பெட்ரோலியப் பொருள் வரிச்சட்டம் 1939 (பெட்ரோல் ஒரு காலனுக்கு 2 அணா ஆறு பைசா; பெட்ரோல் அல் லாத மோட்டார் ஆயிலிற்கு காலனுக்கு 6 பைசா).

சென்னை வரிச்சட்டம் 1939 (யூனிட்டிற்கு 6 பைசா), சென்னை கேளிக்கை வரிச் சட்டம் 1939 (நபர் ஒருவருக்கு 2 பைசா முதல் 2 ரூபாய் வரை).

சென்னை புகையிலை வரிச்சட்டம், துணி விற்பனையாளர் வரிச்சட்டம் 1939, பொது விற்பனை வரிச் சட்டம் 1939 போன் றவை விதிக்கப்பட்ட வரிகளாகும். விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டமும் சுப்பராயன் கொண்டு வந்தார்.

**கல்வி தொடர்பான பணிகள்**

எஸ்.எஸ்.எல்.சி. முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் சுப்பராயன். அறுபது மாணவர்கட்குக் குறைவாக உள்ள உயர்நிலைப் பள்ளியை நன்றாக இயங்கும் பள்ளியோடு இணைத்தல், 20 மாணவர்கட்கும் குறைவாக உள்ள பள்ளியை மூடல்; நலிந்த பள்ளிக்குக் கூடுதலாக 2 இலட்சம் ரூபாய் ஒதுக்குதல், நாலாயிரம்

பள்ளிகளில் கூடுதலாக ஐந்தாம் வகுப்பைக் கொண்டு வருதல், ஓராசிரியர் பள்ளிகளை மூட இயக்குநர் உத்தரவிட்டாலும் இசுலாமியப் பெண்கள் பாதிக்கப்படுவதால் அத்திட்டத்ததைக் கைவிடுதல் போன்றவை கல்வியமைச்சர் பொறுப்பில் இருந்த சுப்பராயன் செய்த கல்விப் பணிகளாகும். இயங்கிக் கொண்டிருக்கும் பள்ளியில் மாணவர் வருகை குறைந்தால் ஆசிரியரே பொறுப்பேற்க வேண்டும் என்பது சுப்பராயன் கருத்தாகும். 24.11.1937 அன்று சென்னை மாகாணம் முழுவதும் பள்ளிகளில் விடுதிகள் ஏற்படுத்த அரசு அனுமதியைச் சுப்பராயன் சட்டமாக நிறைவேற்றினார். முதியோர் கல்வித் திட்டமும் சில இடங்களில் கொண்டு வரப்பட்டது.

**பள்ளிகளில் இந்தி**

1937 தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்ற சென்னை, பம்பாய், ஒரிசா, மத்தியப் பிரதேசம், பீகார், ஐக்கிய மாகாணம், வடமேற்கு எல்லை மாகாணம் ஆகிய ஏழு மாகாணங்களில் சில பள்ளிகளில் இந்தி கட்டா யப் பாடமாக வைக்கப்பட்டது. இது காங்கிரஸ் கட்சியின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்று. சென்னை மாகாணத்தில் தமிழ்ப் பகுதியில் 60 பள்ளிகள், ஆந்திரப் பகுதியில் 54 பள்ளிகள், கேரளப் பகுதியில் 7 பள்ளிகள், கர்நாடகப் பகுதியில் 4 பள்ளிகள் ஆக 125 பள்ளிகளில் மட்டுமே பாடமாக வைக்கப்பட்டன.

இது அகில இந்தியக் காங்கிரசின் கொள்கையே தவிர கல்வி யமைச்சர் சுப்பராயன் அவர்களின் தனித் திட்டம் அல்ல. காங்கிரஸ் அமைச்சரவை என்பதால் அதை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை அமைச்சர் சுப்பராயன் அவர்கட்கு ஏற்பட்டது.

சுப்பராயன் தான் முதலாவது அமைச்சராக இருந்த போது, பள்ளி களில் (குரூப் சி பிரிவில்) இந்தி விருப்ப பாடமாக இருந்தது என்றும், மாணவர்கள் இந்தியை ஆர்வமுடன் படித்தனர் என்றும், வேறொரு மொழியால் தமிழ் பாதிக்கப்படும் என்பது வீணான பயம் என்றும், இந்தியாவிற்கு ஒரு பொது மொழி தேவை என்றும், தமிழ் வளர்ச்சிக் காக உறுதியாகப் பாடுபடுவோம் என்றும் கூறினார்.

இருப்பினும் சட்ட சபையிலும், நாட்டிலும் இந்திக்கு மிகக் கடுமையான எதிர்ப்பு இருந்தது.

## அரிசனங்கள் ஆலயப் பிரவேசச் சட்டம்

சுப்பராயன் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் போது அரிச னங்கள் ஆலயப் பிரவேச மசோதாவைக் கொண்டு வந்து பெரும் பான்மை உறுப்பினர் ஆதரவோடு நிறைவேற்றினார். ஆனால் இக்கொள்கை மத்திய அரசின் வரம்புக்கு உட்பட்டது என்று கூறி அன்றைய வைசிராய் சென்னை மாகாண சட்டசபையில் நிறைவேறிய சுப்பராயன் தீர்மானத்தை ஏற்க மறுத்து விட்டார்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் துணையுடன் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் அரிசன ஆலயப் பிரவேசம் நடை பெற்றது. சிலர் அனுமதியின்றி அரிசனங்கள் ஆலயத்தில் நுழைந்த தாக வழக்குத் தொடுத்தனர். இந்த நிலையில் அரிசன ஆலயப் பிரவே சத்தை அனுமதிக்கச் சட்டம் கொண்டு வர சுப்பராயன் விரும்பினார்.

07.08.1937 அன்று சென்னை மாகாண சட்டசபையில் அரிசன ஆலயப் பிரவேச மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற் றிச் சட்டமாக்கினார்.

இம்மசோதாவில் அரிசன மாணவர்கட்கும், அரிசனங்கட்கும் பல சலுகைகளையும் அளித்தார்.

அரிசன மாணவர்களை அனுமதிக்காத பள்ளிகளின் அங்கீகா ரத்தை ரத்து செய்தல், ஆரம்பப் பள்ளிக் கட்டணத்தை ரத்து செய்தல், உபகாரச் சம்பளம் வழங்குதல், ஏழ்மைச் சான்றிதழ் வழங்கியோர்க்குக் கல்லூரிகளில் பாதிக் கட்டணம் வசூலித்தல், புத்தகம் எழுது கருவிகள் வழங்குதல், தேர்வுக் கட்டணம் ரத்து செய்தல், தகுதி உள்ளவர்கட்கு அரசில் 8½ சதவீதம் வேலைவாய்ப்பு அளித்தல், சில பதவிகட்குக் கல்வித் தகுதியைக் குறைத்தல், கீழ்நிலை வேலை வாய்ப்புகளில் வயது வரம்பு அகற்றுதல் ஆகியவைகளை இச்சட்டத்தில் சுப்பராயன் இணைத்தார்.

1937 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அகில இந்திய அளவில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குழு இங்கிலாந்து சென்றது. டாக்டர் சுப்பராயனும் அக்குழுவில் ஒரு உறுப்பினராக இங்கிலாந்து சென்றார்.

## அமைச்சரவை ராஜினாமா

இரண்டாம் உலகப் போர் மூண்டது. மத்திய சட்ட மன்றத்திலும், மாநில ஆட்சியிலும் இருந்த இந்தியர்களைக் கலந்து பேசாமல் 01.09.1939ல் இங்கிலாந்து இந்தியப் படைகளைப் போரில் இறக்கியது. 14.09.1939ல் வார்தாவில் கூடிய காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் மாகாண சட்டசபைப் பொறுப்பிலிருந்து காங்கிரஸ்காரர்கள் ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொண்டு அனைவரும் 31.10.1939 க்குள் ராஜினாமா செய்ய வேண்டும் எனத் தீர்மானம் செய்யப்பட்டது.

காங்கிரஸ் கட்சியின் தலைமை விடுத்த ஆணைக்கு இணங்க 26.10.1939 அன்று சென்னை மாகாண சட்டசபையில் பிரதம மந்திரி இராஜாஜி தலைமையில் இருந்த அமைச்சரவை இராஜினாமா செய்தது. மாற்று அமைச்சரவை அமைக்க எதிர்க்கட்சிக்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் சென்னை மாகாணத்தில் கவர்னர் ஆட்சி அமுல்படுத்தப்பட்டது.

21.02.1940 அன்று சென்னை மாகாணம் கவர்னர் ஆட்சியில் இருந்த போது இந்தி கட்டாயப் பாடம் பள்ளிகளில் கைவிடப்பட்டது.

## நேதாஜிக்கு ஆதரவு

1939 டிசம்பரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் காந்திஜி பட்டாபி சீதாராமையாவைத் தலைவர் தேர்தலுக்கு நிறுத்தினார். நேதாஜி எதிர்த்துப் போட்டியிட்டார். சுப்பராயன் நண்பர்களோடு நேதாஜியை ஆதரித்து வெற்றி பெறச் செய்தார். பட்டாபி சீதாராமையா தோற்றார். 'பட்டாபியின் தோல்வி என் தோல்வி' என்று காந்திஜி கூறினார்.

❊ ❊ ❊

# 15. போராட்டமும் சிறைவாசமும்

மத்திய சட்ட சபையும், மாநில சட்ட சபையும் கலைக்கப்பட்ட பின் அவற்றில் உறுப்பினர்களாக இருந்த சுப்பராயனும், இராதாபாயும் திருச்செங்கோடு வந்தனர். உறவினர் வீடுகட்கெல்லாம் சென்றனர்.

அந்த சமயத்தில் காந்திஜி ''தனிநபர் சத்யாக்கிரகம்'' என்னும் போராட்டத்தை அறிவித்தார். வினோபாபாவே அப்போராட்டத்தைத் தொடங்கி வைத்தார். தேசபக்தர்கள் ஒவ்வொருவரும் அப்போராட்டத் தில் கலந்து கொண்டனர். சுப்பராயனும், இராதாபாயும் தனிநபர் சத்யாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொள்ளத் தீர்மானித்தனர்.

09.12.1940 அன்று திருச்செங்கோட்டில் தனி நபர் சத்தியாக் கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு இருவரும் கைதாகினர். இருவருக்கும் ஆறு மாத தண்டனை விதிக்கப்பட்டது. சுப்பராயன் திருச்சி சிறை யிலும், இராதாபாய் வேலூர் பெண்கள் சிறையிலும் அடைக்கப் பட்டனர்.

திருச்சி மத்திய சிறையில் சுப்பராயனுடன் இராஜாஜி, டி. பிரகாசம், பக்தவத்சலம், கோயமுத்தூர் டி.எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார், என்.ஜி. இராமசாமி, வேட்டைக்காரன்புதூர் வி.கே. பழனி சாமிக் கவுண்டர், வெள்ளக் கிணறு வி.சி. பழனிசாமிக் கவுண்டர், கே. சந்தானம், முத்துராமலிங்கத் தேவர், எஸ். சத்திய மூர்த்தி, வி.வி. கிரி, கொங்கணாபுரம் கே.ஏ. நாச்சியப்ப கவுண்டர், சர்தார் வேதரத்தினம் பிள்ளை, டி.எஸ்.எஸ். ராஜன், கல்கி கிருஷ்ணமூர்த்தி, திருச்சி இரத்தினவேலுத் தேவர், என்.எஸ். வரதாச்சாரியார் ஆகியோர் இருந்தனர்.

திருச்செங்கோட்டிலிருந்து தனிநபர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அருணாசல முதலியார் மகன் காசி விசுவநாத முதலியார், சுப்பையா மகன் நாகநாதன், இராசலிங்கம் செட்டியார் மகன் இராச குருநாதன் ஆகியோர் ஆவர். இராச குருநாதன் இளம்பள்ளி ஜமீன்தார் ஆவார்.

சுப்பராயனும், இராதாபாயும் சிறை ஆவணங்களில் தாங்கள் இருவரும் 1922 ஆம் ஆண்டே தேசிய இயக்கத்தில் சேர்ந்ததாகப் பதிவு செய்துள்ளனர். இருவரும் சென்னையில் வசிக்கும் வீடு இருந்தாலும், திருச்செங்கோட்டு முகவரியே அளித்துள்ளனர்.

சுப்பராயனுடன் சிறையில் இருந்த கல்கி கிருஷ்ணமூர்த்தி திருச்சி சிறை வாழ்க்கை பற்றி 'மூன்று மாதக் கடுங்காவல்' என்ற நூல் எழுதியுள்ளார். எல்லோரும் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், திருக்குறள் போன்ற இலக்கியங்கள் படித்ததையும், என்.எஸ் வரதாச்சாரியார் சுப்பராயனுக்குச் சமஸ்கிருதம் கற்றுக் கொடுக்க முயற்சித்ததையும் எழுதியுள்ளார். ''சுப்பராயன் கொஞ்ச நேரம் கூட சும்மா இருக்க மாட்டார். பல பிளாக்குகளுக்குச் செல்வதும் வருவதுமாக இருப்பார். சிறை அதிகாரிகளைக் கண்டால் இலேசில் விடமாட்டார். ஏதாவது டோஸ் கொடுக்க ஆரம்பித்து விடுவார்'' என்று கல்கி எழுதியுள்ளார்.

சிறையில் ஏ,பி,சி என்ற மூன்று வகுப்புக்கள் உண்டு. சுப்பராயனுக்கு ''ஏ'' வகுப்பு அளிக்கப்பட்டிருந்தது. அறையில் கட்டில், மேசை, நாற்காலி, ஒரு சிறு பீரோ ஆகியன உண்டு.

சிறையில் இராஜாஜி சுப்பராயனை நன்கு கவனித்துக் கொண்டதாகக் கல்கி கூறியுள்ளார். சுப்பராயன் வந்த பின்னர் தான் சிறையில் திருக்குறள் பாடம் தொடங்குமாம். சுப்பராயன் வராவிட்டால் ஆள் அனுப்பி சுப்பராயனை இராஜாஜி அழைத்து வரச் சொல்வாராம்.

# 16. பிரகாசம், ஓமந்தூரார் அமைச்சரவைகள்

1939ல் சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரி சபை ராஜினாமா செய்த பின் கவர்னர் ஆட்சி நடைபெற்றது. இரண்டாம் உலகப் போரைக் காரணம் காட்டி இந்தியா முழுவதும் பொதுத் தேர் தலை நடத்தாமல் அரசு தள்ளி வைத்தது. ஏழாண்டு காலம் சென்னை மாநிலத்தில் கவர்னர் ஆட்சி நடைபெற்றது.

1946ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் சென்னை மாகாண சட்ட சபைக்குத் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி 163 இடங்களைக் கைப்பற்றியது. சுப்பராயன் திருச்செங்கோடு தொகுதியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராகப் போட்டியின்றித் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

## இராஜாஜிக்கு எதிர்ப்பு

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த காமராசரும், ஆந்திர காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த டி. பிரகாசமும், கேரள காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த மாதவமேனனும் ஆகிய மூவரும் இணைந்து சென்னை மாகாண முதல்வர் பெயரைப் பரிந்துரை செய்யும்படி அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியை வேண்டினர். காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியத் தலைமை சென்னை மாகாண முதல்வர் பதவிக்கு இராஜாஜியின் பெயரைப் பரிந்துரை செய்தது.

இதை விரும்பாத சென்னை மாகாண காங்கிரஸ் தலைமை மாகாண காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டி விவாதித்தது. வாக்கெடுப்பும் நடத்தியது. இராஜாஜிக்கு ஆதரவாக ஒருவரும், எதிராக 148 பேரும் வாக்களித்தனர். மத்தியத் தலைமை முடிவை கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்கும் இன்றைய நிலை அன்று இல்லை.

## பிரகாசம் முதல்வர் ஆனார்

இராஜாஜியை நிராகரித்த காங்கிரஸ் உறுப்பினர்களால் முதலமைச்சரைப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்க முடியவில்லை. டி. பிரகாசமும், சி.என். முத்துரங்க முதலியாரும் போட்டியிட்டனர். பிரகாசத்திற்கு 82 வாக்குகளும், சி.என். முத்துரங்க முதலியாருக்கு 68 வாக்குகளும் கிடைத்தன. டி. பிரகாசம் முதலமைச்சர் ஆனார். 30.04.1946 அன்று அவர் அமைச்சரவை பதவியேற்றது.

இந்த அமைச்சரவையில் இராஜாஜியின் ஆதரவாளர்கள் எவருக்கும் அமைச்சர் பதவி கிடைக்கவில்லை. அதனால் சுப்பராய னுக்கும் அமைச்சராகும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

## டெல்லியில் இரு பதவிகள்

இந்தியா விடுதலை பெறுவதையொட்டி அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபைக்கு சென்னை மாகாண சட்டசபை மூலம் நியமனம் பெறும் உறுப்பினர் பதவிக்குத் தேர்தல் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற சுப்பராயன் அரசியல் நிர்ணய சபை உறுப்பின ரானார். 09.12.1946 அன்று நடைபெற்ற முதல் கூட்டத்தில் பங்கேற்றார்.

அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினர் ஆன சுப்பராயன் அச்சபையால் நியமிக்கப்பட்ட துணைக் குழுவான மாகாண அரசியல் அமைப்புக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இந்தத் துணைக் குழுவில் பி.ஜி. கெர், கைலாச நாத் கட்ஜு (கே.என். கட்ஜு) ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர். இந்தக் குழு 1947 ஆம் ஆண்டு மே மாதம் அரசுக்குத் தன்னுடைய அறிக்கையை அளித்தது. அந்த அறிக்கையில் மாகாண எம்.எல்.ஏக்களால் கவர்னர் தேர்வு செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஓ.பி. இராமசாமி ரெட்டியார் முதலமைச்சர் ஆனார்

சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த டி. பிரகாசத்தை நீக்கி விட்டு அந்தப் பதவிக்கு ஓ.பி. இராமசாமி ரெட்டியாரைக் கொண்டு வரப் பலருக்கும் எண்ணம் இருந்தது. இராஜாஜிக்கும்,

சுப்பராயனுக்கும் அது உடன்பாடாகவே இருந்தது. இம்முயற்சிக்கு இந்திய தேசிய காங்கிரசின் தலைவர் சர்தார் வல்லபாய் படேலின் ஆதரவும் இருந்தது.

14.02.1947 அன்று சென்னை மாகாண சட்டசபை உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் சென்னை மாகாண முதலமைச்சர் டி. பிரகாசம் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தமிழகக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே. காமராசர், டி.எஸ்.எஸ். ராஜன், ஆந்திரப் பகுதி காங்கிரஸ் தலைவர் ஏ. காளீஸ்வர ராவ், மலையாளப் பகுதிக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே. மாதவமேனன் போன்றோர் டி. பிரகாசம் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்தனர்.

ஓ.பி. இராமசாமி ரெட்டியாரை 110 உறுப்பினர்கள் ஆதரித் தனர். இந்த முடிவை சுப்பராயன் மூலம் டெல்லிக்கு அனுப்பி ஒப்புதல் பெற்றனர். 24.03.1947 அன்று ஓ.பி. இராமசாமி ரெட்டியார் மந்திரி சபை பதவியேற்றது.

திண்டிவனம் வட்டம், ஓமந்தூரில் முத்துராம ரெட்டியார் - அரங்கநாயகியம்மாள் ஆகியோர் மகனாக 01.02.1895ல் பிறந்தவர் ஓ.பி. இராமசாமி ரெட்டியார். 1910 ஆம் ஆண்டு சிங்காரத்தம்மாள் அவர்களை மணம் செய்து கொண்டார். மனைவி 1920ல் மறைந்த பின் வேறு திருமணம் செய்து கொள்ளாமல் பொது வாழ்க்கையில் முழுக் கவனம் செலுத்தினார். 1937ல் நிறவெறி கொண்ட தென் ஆப்பிரிக்க அரசு அனுப்பிய கிராம்பு ஏற்றிய கப்பல் சரக்கை இறக்காமல் தொழிலாளர்கள் பகிஷ்கரித்த போராட்டத்தை முன்னின்று நடத்திச் செல்வாக்குப் பெற்றார். சிறந்த காந்தியவாதியான இராமசாமி ரெட்டியார் ரமணமகரிஷி, வள்ளலார் மீது பக்தி கொண்டு துறவிபோல் வாழ்ந்து நெய்வேலிச் சுரங்கத்திலிருந்து வடலூருக்கு விலக்குப் பெற்றார். சுத்த சன்மார்க்க சங்கம் நிறுவி 1950 முதல் வடலூரிலேயே வாழ்ந்தார். தம் வடலூர் நிறுவனங்களை சக்தி நிறுவனங்களின் தலைவர் அமரர் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் வசம் ஒப்படைத்தார். அவை தொடர்ந்து சிறப்பாக இயங்கி வருகின்றன.

## சுப்பராயன் அமைச்சர் ஆனார்

சுப்பராயன் உள்துறை, காவல்துறை அமைச்சர் ஆனார். பிற அமைச்சர்கள் வரிசையில் முதலிடம் பெற்றதுடன் சட்டசபையில் ஆளும் கட்சித் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

டி. பிரகாசம் முதலமைச்சராக இருந்தபோது சுப்பராயன் வீட்டி லேயே கம்யூனிஸ்ட் ஆன மருமகன் கிருஷ்ணன் கைது செய்யப்பட்ட மையாலும், மோகன் குமாரமங்கலம் சிறையில் இருப்பதாலும், மகள் பார்வதி கிருஷ்ணன் தலைமறைவாக இருப்பதாலும் உள்துறை மற்றும் சட்டம், காவல் துறையை ஏற்கத் தயங்கினார். இத் தயக்கம் குறித்து சர்தார் வல்லபாய் படேலுக்குக் கடிதமும் எழுதினார். முதலமைச்சர் ஓ.பி. இராமசாமி ரெட்டியார், சர்தார் வல்லபாய் படேல் ஆகியோர் வற்புறுத்தலால் அத்துறைகளை ஏற்றுப் பணிபுரிய ஒப்புக் கொண்டார்.

## மது விலக்கு

சுப்பராயன் 1926ல் சென்னை மாகாண முதலாவது அமைச்ச ராக இருந்த போதும், 1937-39ல் சென்னை மாகாண சட்ட அமைச் சராக இருந்தபோதும் ஒரு சில மாவட்டங்களில் பூரண மதுவிலக்கைக் கொண்டு வந்தார்.

சென்னை மாகாண முதலமைச்சராக காந்தியவாதியான ஓ.பி. இராமசாமி ரெட்டியார் இருந்தமையால் அவருடைய துணை கொண்டு சென்னை மாகாணம் முழுவதும் பூரண மதுவிலக்கை சுப்பராயன் அமுல்படுத்தினார்.

கிராமங்கள் தோறும் மதுவிலக்குக் கமிட்டிகளை அமைத்து பொதுமக்களைக் கொண்டே சாராயம் காய்ச்சுபவர்களையும், கள் இறக்கு பவர்களையும் பிடித்துக் காவல் நிலையத்தில் ஒப்படைக்கச் செய்தார்.

இந்தியாவிலேயே சென்னை மாகாணத்தில் மட்டும்தான் பூரண மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்டது. அதனால் மாகாணத்தில் வருவாயில் 17 கோடிக்குமேல் இழப்பும், பட்ஜெட்டில் 5 கோடி துண்டும் விழுந்தது.

காந்திஜி, நேருஜி, பாபு ராஜேந்திரப் பிரசாத் போன்ற பல தலைவர்கள் சென்னை மாகாண மதுவிலக்குக் கொள்கையைப் பாராட்டியதுடன் மற்ற மாநிலங்களும் இதைப் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தினார்கள்.

## தீண்டாமை ஒழிப்பில் தீவிரம்

எதிர்க்கட்சித் தலைவராக சென்னை மாகாண சட்டசபையில் இருந்தபோதே அரிசன ஆலயப் பிரவேச சட்டம் கொண்டுவர முயன்று இராஜாஜி அமைச்சரவையில் சட்ட அமைச்சராக இருந்தபோது 07.08.1937 அன்று அரிசன ஆலயப் பிரவேச சட்டத்தை நிறைவேற்றி, கல்வி அமைச்சர் என்ற முறையில் அரிசன மாணவர்கட்குப் பல கல்விச் சலுகைகளை அளித்த சுப்பராயன் ஓ.பி. இராமசாமி ரெட்டியார் அமைச்சரவையில் உள்துறை அமைச்சர் என்ற முறையிலும் தீண்டாமையை ஒழிக்க 1947 ஆம் ஆண்டு இரண்டு முக்கியமான சட்டங்களைக் கொண்டு வந்தார்.

1. "The Madras temple Entry Authorisation Act 1947".
2. "The Madras Removal of Disabilities (Amendent Act 1947)"

என்பவை அவ்விரு சட்டங்களாகும்.

இந்தச் சட்டங்களின்படி சென்னை மாகாணத்தில் பொது இடங்களாகிய உணவு விடுதி, தங்கும் விடுதி, திரையரங்கம் போன்ற அனைத்து இடங்களிலும் அரிசனங்களுக்குச் சம உரிமையுண்டு. அதைத் தடுத்திடும் அதிகாரிகளோ மற்றவர்களோ ஜாமீனில் வெளிவர முடியாத சிறைத் தண்டனைக்கு ஆளாவார்கள். இந்தச் சட்டத்தை மீறுபவர்களை பிடிவாரண்ட் இல்லாமல் காவல்துறையினர் கைது செய்வதற்கும் உரிமையை இச்சட்டம் வழங்குகிறது. அப்பொழுதெல்லாம் ஓட்டல்களில் ''பிராமணாள் சாப்பிடும் இடம்'' ''இதராள் சாப்பிடும் இடம்'' என்று தனித்தனியாக இடங்கள் இருக்கும். இதராள் சாப்பிடும் இடங்களில் கூட தாழ்த்தப்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இந்தச் சட்டங்களைச் சுப்பராயன் சட்ட சபையில் கொண்டு வந்த போது இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர், அரிசனங்கள் ஆகிய அனைவரும் முழு ஆதரவு கொடுத்து சட்டத்தை ஏகமனதாக நிறைவேற்ற ஒத்துழைத்தனர்.

தீண்டாமை ஒழிப்பிற்கு அரசின் முழு ஒத்துழைப்பு உண்டு என்பதை மக்களுக்கு உணர்த்துவதற்காக சென்னை மாகாணம் முழுவதும் அரிசனங்களின் ஆலயப் பிரவேசத்தை அரசே முன்னின்று நடத்தியது.

29.09.1947 அன்று திருச்செங்கோடு மலையில் இருக்கும் அர்த்தநாரீசுவரர் கோயில், செங்கோட்டு வேலவர் கோயில் ஆகியவற்றுக்குள் சர்தார் வேதரத்தினம் பிள்ளை போன்ற பல காங்கிரஸ் தலைவர்களுடன் அரிசன மக்கள் பலரை அழைத்துக் கொண்டு சுப்பராயன் நுழைந்தார். அதுவரை அக்கோயிலில் கடைப்பிடிக்கப்பட்ட தீண்டாமைப் போக்குக்குச் சுப்பராயன் முடிவுரை எழுதினார்.

சுப்பராயன் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் போது அரிசன ஆலயப் பிரவேச மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். இருப்பினும் இது மத்திய அரசின் வரம்புக்கு உட்பட்டது என்று கூறி வைசிராய் அதை ஏற்க மறுத்து விட்டார். காந்திஜி சுப்பராயன் கருத்தை ஏற்று காங்கிரசின் கொள்கையாக ஏற்றார்.

## ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம்

கிழக்கிந்தியக் கம்பெனியார் தாங்கள் நேரிடையாக நாடு முழுவதும் உள்ள கிராமப்புறங்களில் வாழும் விவசாயிகளிடம் நிலவரி வசூல் வெய்யும் சிரமத்தைக் குறைக்க, தங்கள் சார்பாக ஜமீன்தார்களை நியமித்து அவர்கள் மூலமாக வரி வசூலிக்கச் செய்து பெற்றுக் கொண்டனர்.

இதனால் அரசு நிர்வாகச் செலவு குறைவதுடன் பொதுமக்களிடம் நேரடித் தொடர்பு கொண்டவர்கள் மூலம் வரிவசூலிப்பதால் வரிவசூல் முறை எளிமையும் ஆயிற்று. பிரிவுபடாத சேலம் மாவட்டத்தில் 145 ஜமீன்தார்கள் ஏலம் மூலம் நியமிக்கப்பட்டனர். இவர்கள் மிட்டா தார் என்றும் அழைக்கப்படுவர்.

நியமிக்கப்பட்டவர்களில் சிலர் பரம்பரைப் பாளையக்காரர் பட்டக்காரர்களாகவும், பலர் குறிப்பிட்ட பகுதிகட்கு வரிவசூல் செய்யும் உரிமையுடைய புது ஜமீன்தாரர்களாகவும் இருந்தனர். 1802 வாக்கில் இம்முறை ஏற்படுத்தப்பட்டது.

பல ஜமீன்தார்கள் கம்பெனி நிர்ணயம் செய்த வரியை விட அதிகமாக வரியை விவசாயிகளிடமிருந்து கசக்கிப் பிழிந்து வசூல் செய்தனர். விவசாயிகள் அதனால் பெரும் தொல்லைக்கு ஆளாயினர். கம்யூனிஸ்ட் கட்சியினரும், ஆந்திரப் பகுதியில் டி. பிரகாசம் தலைமையிலும் ஜமீன்தார்களுக்கு எதிர்ப்பு வலுத்தது.

சில இடங்களில் கம்பெனி அரசு நேரிடையாக மணியகாரர், கணக்கர் மூலம் வரிவசூல் செய்யும் ரயத்வாரி நிலங்களுக்கும், ஜமீன் தார்கள் வரிவசூல் செய்யும் நிலத்திற்கும் வரியில் அதிக வேறுபாடு இருந்தது. எடுத்துக்காட்டாக வாகைக் குளத்தில் ரயத்வாரி பாசன நிலங்கட்கு 9 ரூபாய் முதல் 22½ ரூபாய் வரை வரி இருக்க அதே அளவுடைய ஜமீன் நிலங்கட்கு 65 ரூபாய் முதல் 75 ரூபாய் வரை வரிவசூல் செய்யப்பட்டது.

கம்யூனிஸ்ட் கட்சியினர் ஜமீன்தார்கள் வசூல் செய்யும் அதிக வரியைப் பட்டியலிட்டனர். அதில் குமரமங்கலம் ஜமீன் பெயர் இல்லை. குமரமங்கலம் ஜமீனில் உரிய வரியே வாங்கப்பட்டது என்பது தெரி கிறது. விவசாயிகளின் துயர் துடைக்க ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் கொண்டு வருவதை காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொண்டது.

1937-39ல் இராஜாஜி அமைச்சரவையில் சென்னை மாகாண சட்ட அமைச்சராக சுப்பராயன் இருந்தபோது ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்திற்கான மசோதாவைச் சட்ட சபையில் தாக்கல் செய்தார். இந்த மசோதாவைச் சட்டமாக்க டி. பிரகாசம் தலைமையில் செலக்ட் கமிட்டி அமைக்கப்பட்டது. இந்த செலக்ட் கமிட்டி சென்னை மாகாணம் முழுவதும் பயணம் செய்து செய்திகள் சேகரித்து ஒரு அறிக்கையை 1938ல் அரசுக்குக் கொடுத்தது. இரண்டாம் உலகப் போரின் காரண மாக நாடு முழுவதும் காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா

செய்ததால் செலக்ட் கமிட்டி கொடுத்த அறிக்கையைச் செயல்படுத்த இயலவில்லை.

ஓ.பி. இராமசாமி ரெட்டியார் அமைச்சரவையில் சுப்பராயன் உள்துறை, காவல்துறை அமைச்சராக இருந்தபோது ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது. ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் கொண்டுவர அனுமதி அளித்த காங்கிரஸ் தலைமை நட்ட ஈட்டுத் தொகையை அந்தந்த மாநிலங்களே முடிவு செய்து கொள்ளலாம் என்று கூறியது.

அரசு 1802 ஆம் ஆண்டு ஜமீன் முறை ஏற்பட்டபோது இருந்த நிலவரப்படி நட்ட ஈடு தர விரும்பியது. ஜமீன்தார்கள் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தை எதிர்க்கவில்லை. நட்ட ஈடு ஜமீனை ஒப்படைக்கும் அன்றைய நிலைக்கேற்ப வழங்க வேண்டும் என்றனர்.

கம்யூனிஸ்ட்டுகள் ஜமீன்தார்களுக்கு நட்ட ஈடே கொடுக்கக் கூடாது. அந்தத் தொகையை நீர்ப்பாசனத் திட்டங்கட்கும், நில அபி விருத்திக்கும் பயன்படுத்த வேண்டும் என்றனர். ஜமீன்தாரிடமிருந்து மீட்கப்பட்ட நிலங்களை ஏழைகட்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்றும் கூறினர்.

அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் ஆஸ்திரேலியா, அமெரிக்கா நாட்டுத் தீர்ப்புக்களை மேற்கோள் காட்டி நட்டஈடு உயர்த்தப்பட வேண்டும் என்று கட்டுரைகள் எழுதினார். முன்னாள் முதல்வர் பொப்பிலி மகாராஜா ரங்கராவ் காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற போர்டிற்கு இது குறித்து விண்ணப்பம் அனுப்பினார்.

குமரமங்கலம் ஜமீனுக்கு 83 கிராமங்களில் நாற்பதாயிரம் ஏக்கர் விவசாய பூமியும், தனிப்பட்ட முறையில் சுப்பராயனுக்கு 156 ஏக்கர் நிலமும் இருந்தது. சுப்பராயனுக்குச் சொந்தமான குமரமங்கலம் ஜமீனின் பெருமை, பரப்பளவு குறித்து ரஷ்ய எழுத்தாளர் "Rostislav என்பவர் தாம் எழுதிய "AGRARIAN INIDA" என்னும் நூலில் குறித்துள்ளார்.

இராஜாஜி அமைச்சரவையில் (1937-39) ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டபின் பல ஜமீன்தார்கள் பல வனப்பகுதி நிலங்களைப் பலருக்கு (பினாமியாக) பட்டா மாற்றம் செய்து கொடுத்திருந்தனர். பலர் பட்டா மாற்றம் செய்திருந்தனர்.

நட்ட ஈடு சில மடங்காக உயர்த்தப்பட்டது. சுப்பராயன் ஓ.பி. இராமசாமி ரெட்டியார் அமைச்சரவையில் உள்துறை, காவல்துறை (சட்டம்) அமைச்சராக இருந்தபோது 01.01.1948 அன்று, ''31.10.1939க்குப் பின் பட்டா செய்து கொடுக்கப்பட்ட வனத் துறை நிலங்களும், 01.11.1945க்குப் பின் செய்யப்பட்ட பட்டா மாற்றமும் செல்லுபடியாகாது'' என அறிவித்து ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார்.

சுப்பராயன் தானே ஒரு ஜமீன்தாராக இருந்தாலும் இச்சட்டத்தை மிக மகிழ்ச்சியோடு கொண்டு வந்தார். சுப்பராயனின் மூத்த மகன் பி.பி. குமாரமங்கலமும், இரண்டாவது மகன் கோபால் குமாரமங்கல மும் நல்ல பதவியில் சுய வருமானத்துடன் இருந்தனர். மூன்றாம் மகன் மோகன் குமாரமங்கலமும், ஒரே மகளான பார்வதி கிருஷ்ணனும் ஜமீன்தாரி ஒழிப்புக்குத் தீவிரமாகக் குரல் கொடுத்த கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தனர்.

இதனால் சுப்பராயன் தன் பூர்வீகச் சொத்து பொதுமக்களுக்குச் சென்றடைவதை மகிழ்ச்சியோடு வரவேற்றார். அதனால் அவர் சென்னை மாகாண சட்டசபையில் ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி வெற்றி கண்டார். இத்தகு சூழ்நிலை நாட்டில் வேறு எந்த ஜமீனுக்கும் ஏற்பட்டிருக்காது.

சட்டசபை ஆளுங்கட்சித் தலைவராக விளங்கிய டாக்டர் சுப்பராயன் இந்திய விடுதலையைச் சட்டசபையில் அறிவிக்கும் வாய்ப்பைப் பெற்றார். இதேபோல 30.01.1948-ல் அண்ணல் காந்தியடிகள் கொல்லப்பட்ட சோகச் செய்தியையும் டாக்டர் சுப்ப ராயன் சபையில் அறிவிக்க நேர்ந்தது.

இந்திய விடுதலைக்குப் பின் சுதேச சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைந்தன. ஐதராபாத் நிஜாம் இணைய மறுத்ததுடன் அங்குள்ள இந்துக்களுக்கும் பல தொல்லைகளைக் கொடுத்து அகதிகளாகப் பலர் சென்னை மாகாணம் வந்தனர். எல்லையிலும் பதட்டம் ஏற்பட்டது.

## கருத்து வேறுபாடு

எல்லைக் காவல் பணியில் முஸ்லிம் காவலர்கள் இருக்கக் கூடாது என ஓ.பி. இராமசாமி ரெட்டியார் கருதினார். காவல்துறை அமைச்சரான டாக்டர் சுப்பராயன் காவலர்களில் இனப்பிரிவு கூடாது என்று கருதினார்.

காலியாக இருந்த இரண்டு நீதிபதியிடங்களை நிரப்ப கவர்னர், உயர்நீதிமன்ற நீதிபதி, உள்துறை அமைச்சர் டாக்டர் சுப்பராயன் மூவரும் கூடி ஆலோசனை செய்து இருவரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் ஒப்புதல் பெற்று அவர்கள் பெயர்களை வைசிராய்க்குப் பரிந்துரை செய்து அனுப்பினர். நிதிநிலை காரணமாக அந்நியமனம் தேவையில்லை என்றும் அப்பதவிகள் காலியாகவே இருக்கலாம் என்றும் முதலமைச்சர் என்ற பொறுப்பில் ஓ.பி. இராமசாமி ரெட்டியார் குறிப்பெழுதி நியமனத்தை நிறுத்தி வைத்தார்.

ஊர்க்காவல் படை அமைப்பு மிக முக்கியமானதாகையால் தீவிரப் பரிசீலனைக்குப் பின் டாக்டர் சுப்பராயன் உருவாக்கி வந்தார். இது வீண் காலதாமதம் என ஓ.பி.ஆர். எண்ணினார்.

முதலமைச்சர் ஓ.பி.ஆர். அவர்கட்கும் காவல்துறை அமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்கட்கும் இவற்றால் கருத்து வேறுபாடுகள் வளர்ந்தன. அதனால் சுப்பராயன் புதுடெல்லி பயணம் மேற்கொண்டிருந்த போது முதலமைச்சர் ஓ.பி.ஆர். அவர்கள் டாக்டர் சுப்பராயனிடமிருந்த

காவல்துறையைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டார். பின் சில நாட்களுக்குப் பின் மீண்டும் அப்பொறுப்புக்கள் டாக்டர் சுப்பராயனிடம் அளிக்கப்பட்டது. இப்பதவிப் பறிப்பை எதிர்பாராத சுப்பராயன் இதற்காக மனம் வருந்தினார்.

முதலமைச்சர் என்ற நிலையில் ஓ.பி. இராமசாமி ரெட்டியார் காவல்துறை உயர் அதிகாரிகளை அழைத்துப் பேசி சில ஆணை களைப் பிறப்பித்தார். இதுபோன்ற நிகழ்ச்சிகளால் காவல்துறையில் கட்டுப்பாடும், ஒழுக்கமும் குலையும் என்று டாக்டர் சுப்பராயன் கருதினார்.

டாக்டர் சுப்பராயன் 29.04.1948 அன்று தன் அமைச்சர் பத வியை இராஜினாமா செய்தார். இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டது. இராஜாஜிக்கும், படேலுக்கும் தன் இராஜினாமா குறித்து விளக்கக் கடிதங்கள் எழுதினார்.

பாவேந்தர் பாரதிதாசன் தன் ''குயில்'' இதழில் 15.05.1948 அன்று சுப்பராயன் ராஜினாமா குறித்து இரு கவிதைகளை வெளியிட் டிருந்தார்.

''பிறர்க்குநலம் செய்வதிலே தனக்குண் டான
பெரும்பற்றால் வீழ்ச்சியுற்றான் சுப்ப ராயன்
அறத்தினிலே தவறுகில்லான் பிறர்செல் வத்தை
அணுவளவும் தானடைய எண்ண மாட்டான்
திறத்தனிலே எவனுக்கும் இளைத்தா னில்லை
செய்கையிலே உறுதியுள்ளான் தன்மா னத்தை
குறைத்துக்கொண்டு உயிர்வாழான் அலுவல் ஒன்றே
குறியென்று நினைக்குமொரு குள்ளன் அல்லன்.

சாதியினை நம்புகிலான் சமயப் போர்வை
தான்அணிந்து வாழுமொரு சழக்கன் அல்லன்

நீதியிலே பற்றுடையான் திராவி டத்தின்
நிலைமையிலே கருத்துடையான் தோழ ரேநாம்
பாதியிலே அவன்செயலை அளக்க வேண்டா
பயனுண்டு சுப்பராயன் தலைமை யாலே
மீதியுள்ள நாள்களிலே சுப்ப ராயன்
மிகுதிறமை திராவிடர்க்கே நன்மை யாகும்''

என்பன பாரதிதாசன் கவிதைகள் ஆகும்.

**முதலமைச்சர் பதவிக்குப் போட்டி**

சென்னை மாகாண முதலமைச்சரை ஆண்டுதோறும் தேர்ந் தெடுக்கப்பட வேண்டும்; அல்லது உறுதி செய்யப்பட்ட வேண்டும் என்ற கொள்கைப்படி 1949 ஏப்ரல் மாதம் முதலமைச்சர் தேர்வு நடை பெறுவதாக இருந்தது.

24.03.1947 அன்று முதலமைச்சர் பதவியேற்ற ஓ.பி. இராம சாமி ரெட்டியார் 26.03.1948 அன்று மீண்டும் இரண்டாவது முறையாக முதலமைச்சராகத் தேர்வு செய்யப்பட்டார். பலர் வற்புறுத்தி யும் சுப்பராயன் அப்போது போட்டியிடவில்லை.

01.04.1949 அன்று சென்னை மாகாண முதலமைச்சர் தேர்வு நடைபெற்றது. ஓ.பி. இராமசாமி ரெட்டியார் போட்டியிட விரும்ப வில்லை. 30.04.1946 அன்று பதவியேற்ற டி. பிரகாசம் அமைச்ச ரவையில் விவசாயம், வர்த்தகம், தொலைத்தொடர்பு அமைச்சராகப் பணியாற்றிய இராஜபாளையம் பி.எஸ். குமாரசாமி ராஜா முதல மைச்சர் பதவிக்குப் போட்டியிட்டார். டாக்டர் சுப்பராயன் அவர்களும் அப்பதவிக்குப் போட்டியிட்டார். பி.எஸ். குமாரசாமி ராஜாவிற்கு 105 வாக்குகளும், டாக்டர் சுப்பராயன் அவர்கட்கு 89 வாக்குகளும் கிடைத்தன. சுப்பராயன் வெற்றி வாய்ப்பை இழந்தார். வெற்றிபெற்ற பி.எஸ். குமாரசாமி ராஜா 06.04.1949 அன்று முதலமைச்சர் பதவி ஏற்று 09.04.1952 வரை பதவியில் இருந்தார்.

# ப. சுப்பராயன் கால முதல் அமைச்சர்கள்



ஏ. சுப்பராயலு ரெட்டியார்
17.12.1920 -
11.07.1921



பனகண்டி ராமராயனிங்கர்
(பனகல் அரசர்)
12.07.1921 - 03.12.1926



பி. முனுசாமி நாயுடு
27.10.1930 - 04.11.1932



பொப்பிலி அரசர்
வெங்கடாசலபதி
ராமகிருஷ்ண ரங்கராவ்
05.11.1932 - 04.04.1936



பொன்னம்பலம் தியாகராஜன்
(P.T. ராஜன்)
04.04.1936 -
24.08.1936



கே. வெங்கட்ட ரெட்டி
(கே.வி ரெட்டி)
01.04.1937 -
14.07.1937



ராஜாஜி
14.07.1937 -
28.10.1939



டி. பிரகாசம்
30.04.1946 -
23.03.1947



ஓ.பி. இராமசாமி ரெட்டியார்
24.03.1947 - 06.04.1949



பி.எஸ். குமாரசாமி ராஜா
06.04.1949 -
09.04.1952

இவர்கள் 1937 வரை முதலாவது அமைச்சர் என்றும், விடுதலை (1947) வரை பிரதமர் என்றும் அழைக்கப்பட்டனர்.

# 17. தேசியத் தலைவர்கள் தொடர்பு

அன்றைய சென்னை மாகாணத் தலைவர்களில் தேசியத் தலைவர்களான ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் படேல் ஆகிய தலைவர்களுடனும், அண்ணல் காந்தியடிகளுடனும், இராஜாஜியுடனும் சுப்பராயன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பு போல் வேறு தமிழகத் தலைவர்கள் எவரும் தொடர்பு கொண்டிருந்ததில்லை எனலாம்.

சென்னை மாகாண அரசியலைப் பொறுத்தவரை சுப்பராயன் எப்பொழுதும் இராஜாஜியின் ஆதரவாளராகவே இருந்தார் என்பதைப் பல நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

விடுதலைப் போராட்ட கால சம்பவங்களில் மட்டுமல்ல சென்னை மாகாண நிர்வாகத்தில் சுப்பராயன் பங்கு கொண்டிருந்த போதும் பல முக்கிய முடிவுகள் எடுக்கும்போதெல்லாம் தன் கருத்தையும், தான் எடுக்கும் முடிவுகளையும் பற்றித் தனிப்பட்ட முறையில் விளக்கியும் ஆலோசனைகள் கேட்டும் நேருவுக்கும், படேல் அவர்கட்கும் பல கடிதங்கள் எழுதுவது வழக்கம். அவைகட்கு உடனடியாக நேருவும் படேலும் பதில் கடிதங்கள் எழுதியுள்ளனர். இக்கடிதங்கள் அனைத்தும் அரசு அலுவல் கடிதங்களாக இல்லாமல் தலைவர், தொண்டர், நண்பர்கள் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளும் கடிதங்களாகவே காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

1942-ல் கிரிப்ஸ் தூதுக்குழு இந்தியா வந்தபோது முஸ்லிம் லீக்கையும் சேர்த்து தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டும் என்று கம்யூனிஸ்ட்கள் கோரினர். அதை ராஜாஜி ஆதரித்தார். அது மட்டுமல்ல முஸ்லிம்கள் கோரும் தனி நாடு கோரிக்கையையும் வலியுறுத்தினார்.

இதை ஆராய காங்கிரஸ் கமிட்டி அலகாபாத்தில் கூடியது. இராஜாஜி தீர்மானத்தை 15 பேரே ஆதரித்தனர். எதிர்த்து 120 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

தன் நிலையை விளக்கி ராஜாஜி தமிழகம் முழுவதும் பிரச்சாரம் செய்தார். கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காமராஜ் 06.07.1942 அன்று இராஜாஜியை விளக்கம் கேட்டார். 08.07.1942 அன்று இராஜாஜி காங்கிரஸ் கட்சி யிலிருந்து இராஜினாமா செய்தார். 1942 ஆகஸ்ட் கிளர்ச்சியின்போது இராஜாஜி காங்கிரஸ் கட்சியில் இல்லை.

04.09.1945 அன்று இராஜாஜி காங்கிரசில் சேருவதாக திருச் செங்கோடு வட்ட காங்கிரஸ் கமிட்டிக்கு விண்ணப்பித்தார். 05.09.1945 அன்று அவருக்கு உறுப்பினர் அட்டை வழங்கப் பட்டது. இதை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அங்கீகரிக்க மறுத்தது.

இச்சம்பவத்தை காந்திஜி, நேரு, படேல் ஆகிய தலைவர்களிடம் எடுத்துக் கூற இராஜாஜி சுப்பராயன் அவர்களை டெல்லிக்கு அனுப்பி வைத்தார். சுப்பராயன் கூறிய செய்திகளைக் கேட்ட படேல் காமரா ஜரைக் கண்டித்துக் கடிதம் எழுதி மீண்டும் இராஜாஜியைக் காங்கிர சில் சேர்த்துக் கொள்ளச் செய்தார்.

ஐதராபாத் எல்லைக் காவல் படையில் முஸ்லிம்கள் இருக்கக் கூடாது. ஊர்க்காவல் படையில் அப்பகுதியில் இஸ்லாமியர்களைச் சேர்க்கக் கூடாது என்று முதலமைச்சர் ஓ.பி. இராமசாமி ரெட்டியார் கூறினார். இவற்றில் இனவேறுபாடு காட்டக் கூடாது என்ற சுப்பராயன் கருத்தையே நேருவும், படேலும் ஆதரித்தனர்.

இராஜாஜியின் ஆதரவாளர் என்ற காரணத்தால் 1946ல் அமைக்கப்பட்ட பிரகாசம் அமைச்சரவையில் சுப்பராயன் சேர்க்கப்பட வில்லை. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பரிந்துரை செய்தும் 1945ல் மத்திய சட்டசபைத் தேர்தலில் இராதாபாய்க்கு தமிழ்நாடு

காங்கிரசால் இடம் அளிக்கப்படவில்லை. படேல் வேண்டுகோள்படி 1946ல் டெல்லி மேல்சபைத் தேர்தலில் சென்னைத் தொகுதியில் இராதாபாய்க்கு போட்டியிட வாய்ப்பளிக்கப்பட்டது. 2427 வாக்குகள் பெற்று இராதாபாய் வெற்றி பெற்றார். போட்டி வேட்பாளர் பெற்றது 133 வாக்குகள்.

முதலமைச்சர் ஓ.பி. இராமசாமி ரெட்டியார் 19.11.1947 அன்று சுப்பராயனிடமிருந்து காவல்துறையைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டார். படேல் தலையீட்டால் சுப்பராயனுக்கு மீண்டும் அத்துறை அளிக்கப்பட்டது. சுப்பராயன் படேலுக்கு எழுதிய நன்றிக் கடிதம் மூலம் இதற்கு படேலே காரணம் என்று தெரிகிறது.

24.03.1947 அன்று சுப்பராயன் ஓ.பி. இராமசாமி ரெட்டியார் அமைச்சரவையில், உள்ளாட்சி, காவல்துறை அமைச்சர் ஆனபோது தன் மகன், மகள், மருமகன் ஆகியோர் கம்யூனிஸ்ட்டாக இருக்கும் போது காவல்துறைப் பொறுப்பை ஏற்க சுப்பராயன் தயங்கினார். இதைப் படேலுக்கும் தெரிவித்தார். 29.03.1947 அன்று படேல் சுப்பராய னுக்கு எழுதிய கடிதத்தில் ''எனது அறிவுரையும் வழிகாட்டுதலும் எப்பொழுதும் உங்களுக்கு உண்டு'' என்று குறித்துள்ளார்.

ஓ.பி. இராமசாமி ரெட்டியார் சுப்பராயன் பணிகளில் அதிருப்தி கொண்ட சமயத்திலும் நேருவும், படேலும் இலங்கை சுதந்திர தின விழாவில் இந்தியாவின் சார்பில் பங்கேற்க சுப்பராயனை அனுப்பினர். காந்திஜி உண்ணாவிரதத்தால் பாபு இராஜேந்திரபிரசாத் செல்ல இயலாத போது பதிலாக சுப்பராயன் அனுப்பி வைக்கப்பட்டார். சுப்ப ராயன் மீது அவர்கள் கொண்ட நல்லெண்ணம் இதன்மூலம் தெரிகிறது.

தமிழகத்தில் அமைச்சர் பொறுப்பிலிருந்து விடுபட்ட நிலை யிலும் சுப்பராயன் அவர்களை நேருவும், படேலும் 27.12.1949ல் இந்தோனேஷியா சுதந்திர தின விழாவில் இந்தியாவின் சார்பில் பங்குகொள்ள அனுப்பினர். பின்னர் அந்நாட்டுத் தூதரும் ஆக்கினர்.

02.04.1948 அன்று ஓ.பி. இராமசாமி ரெட்டியார் அமைச்சரவையிலிருந்து விலகும்போது நேரு, படேல் ஆகியோருக்கும், இன்னும் சில மேலிடத் தலைவர்கட்கும் தன் நிலையை விளக்கி சுப்பராயன் கடிதங்கள் எழுதினார்.

சிலமுறை காந்திஜி, நேரு போன்ற தலைவர்கள் தமிழகப் பயணம் மேற்கொண்ட போது சுப்பராயன் உடன் சென்றுள்ளார். நேருவுக்குச் சில சுற்றுப் பயணப் புகைப்படங்களை அனுப்பிய விபரம் சுப்பராயன் கடிதம் மூலம் தெரிகிறது.

எழுத்தாளர் ராஜேஸ் அவர்கள் திருச்சி காங்கிரஸ் தலைவர் இரத்தினவேலுத் தேவர் வீட்டில் நேருவும், சுப்பராயனும் கீழே அமர்ந்து ஒன்றாக விருந்துண்ட விபரத்தைத் தன் கட்டுரை ஒன்றில் எழுதியுள்ளார்.

காஷ்மீர் விவகாரத்தில் கூட டாக்டர் சுப்பராயன் அவர்கட்கும் நேருஜிக்கும், ஜம்மு காஷ்மீர் பிரதமர் பக்ஷி குலாம் முகமதுக்கும் இடையில் பல கடிதப் போக்குவரத்துக்கள் நடைபெற்றுள்ளன. இரண்டு கடிதங்கள் இணைப்பில் இடம் பெற்றுள்ளன.

# 18. இந்தோனேஷியத் தூதர்

வடக்கு பசிபிக் பெருங்கடலுக்கும், இந்தியப் பெருங்கடலுக் கும் இடையில் ஆஸ்திரேலியாவின் வடக்கிலும், பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்கிலும் 5120 கிலோ மீட்டர் நீளத்தில் 13000 தீவு களைக் கொண்ட நாடு இந்தோனேஷியா. 6000 தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்கின்றார்கள். உலகில் மக்கள் தொகைப் பெருக்கத்தில் ஐந்தாவது இடத்தைப் பெற்ற நாடு.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இந்து மதமும், பௌத்த மதமும் காலூன்றிய நாடு. சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய மும்மூர்த்தி களும், விநாயகர், காளியும் வணக்கத்திற்கு உரியவர்களாக அங்கு இன்றும் உள்ளனர். போராபுதூர் உலகு போற்றும் பௌத்தக் கலைப் படைப்பு. முதலாம் இராசேந்திரன் வெற்றி கொண்ட ஸ்ரீவிசைய சாம்ராஜ்ஜியம் இப்பகுதிதான். சங்க இலக்கியம் கூறும் காழகம்தான் இந்தோனேஷியாவில் உள்ள கெடா ஆகும். இதனை வெற்றி கொண்ட முதலாம் இராசேந்திரன்தான் ''கடாரங்கொண்டான்'' என்று அழைக்கப் பட்டான்.

பல தமிழ் வணிகர்கள் குடியிருப்புக்கள் இங்கு இருந்தன. அங் குள்ள ''பாரோஸ்'' நகரம் ''மாதங்கரி வல்லப தேசி உய்யக் கொண்ட பட்டினம்'' என்று அங்குள்ள தமிழ்க் கல்வெட்டுக் கூறுகிறது.

இந்தியாவைப் போலவே டச்சுக் கம்பெனி வணிகம் செய்ய வந்து ''மாதரம்'' அரசுக்கு உதவி கி.பி. 1677 முதல் இந்தோனேஷிய நாட்டு ஆட்சியைப் படிப்படியாகக் கைப்பற்றினர். 1798ல் டச்சு அரசாங்கம் மேற்கொண்ட ஆட்சியின்போது டச்சு கிழக்கிந்தியத் தீவுகள் என அழைக்கப்பட்டன.

சிலகாலம் (1811-1816) ஆங்கிலேயர் கைப்பற்றிய இத்தீவு களை டச்சுக்காரர்கள் மீண்டும் அடிமைப்படுத்தி ஆண்டனர். 1908 முதல் விடுதலைப் போர் தொடங்கினாலும் 1942-1945ல் ஜப்பான் அடிமைப்படுத்தியபின் விடுதலைப் போர் தீவிரம் அடைந்தது. விடுதலைப் போருக்குத் தலைமை தாங்கியவர் சுகர்ணோ.

இந்தோனேஷியா 1949 டிசம்பர் 27 அன்று சுதந்திரம் பெற்ற நாடாக அறிவிக்கப்பட்டது. இந்திய அரசாங்கச் சார்பில் ராஜகுமாரி அமிர்த கௌர் அவர்களும் டாக்டர் சுப்பராயன் அவர்களும் இந்தோ னேஷியா சுதந்திர நாள் விழாவில் கலந்து கொள்ள அனுப்பப்பட்டனர். டாக்டர் சுகர்ணோ அதிபராகப் பதவியேற்றார். இந்தியப் பிரதமர் பண்டிதநேரு, உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் படேல் இருவரின் விருப்பப்படி டாக்டர் சுப்பராயன் விடுதலை பெற்ற இந்தோனேஷியா வின் முதல் தூதராக நியமிக்கப்பட்டார்.

இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தான் பான்-இஸ்லாமிய இயக்கம் இந்தோனேஷியாவில் இயங்குவதை முறியடிக்க டாக்டர் சுப்பராயன் பணி அமையும் என்று வல்லபாய் படேல் உறுதியாக நம்பினார்.


தாருல் இஸ்லாம் என்ற மதவாத இயக்கமும், பாகிஸ்தான் பிரதிநிதிகளும் இணைந்து செய்யும் இந்திய-இந்து எதிர்ப்புப் பிரச் சாரத்தைக் கண்ட சுப்பராயன் அரசியல் ரீதியாக அதை முறியடிக்க இந்தோனேஷிய - இந்திய நட்பு உடன்படிக்கைக்கு அடித்தளம் இட்டார். இதன் விளைவு 1951 மார்ச் 3 ஆம் தேதியன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தில் இந்தியாவின் சார்பில் டாக்டர் சுப்பராயன் அவர்களும், இந்தோனேசி யாவின் சார்பில் அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் முகமது ரோயன் அவர்களும் கையெழுத்திட்டனர்.

இந்தோனேஷியாவின் வரலாற்று நூல்களும், ஆவணங்களும் டச்சு மொழியில் இருப்பதால் டச்சு மொழி தெரிந்த தொல்பொருள் ஆய்வாளர்களும், ஆராய்ச்சிப் பிரிவில் உள்ள மாணவர்களும் அதில் ஈடுபட்டு இந்தோனேஷியாவின் மனித நாகரிக வளர்ச்சியைக் காண

வேண்டும் என்று இந்திய அரசுக்கு டாக்டர் சுப்பராயன் ஆலோசனை கூறினார்.

சர்தார் படேல் மறைவுக்குப் பின் இந்திய அரசியலில் பங்கு கொள்ள விரும்பிப் பிரதமர் அவர்களிடம் கூறி இந்தோனேஷியத் தூதர் பதவியிலிருந்து 1951 ஜூலை மாதம் டாக்டர் சுப்பராயன் விலகினார்.

டாக்டர் சுப்பராயன் அவர்கட்கு இந்தோனேஷியாவில் உள்ள இந்தியர் கூட்டமைப்பு வழியனுப்பு விழா நடத்தினர். அதில் ''டாக்டர் சுப்பராயன் அவர்களின் தனிப்பட்ட முறையிலான வழி காட்டலாலும், இந்தியர்கட்கு சுப்பராயன் செய்த உதவியாலும்தான் இந்தியர்கள் ஒற்றுமையாகவும் நல்லிணக்கத்துடனும், ஒன்றுபட்ட குழு மனப்பான்மையுடனும் சிறப்பாக இயங்க முடிந்தது'' என்று கூறப்பட்டது.



இந்தோனேஷியாவில் நேருஜி, சுகர்னோ, இந்திராகாந்தியுடன் சுப்பராயன்

டாக்டர் சுப்பராயன் அவர்கள் இந்தோனேஷியத் தூதராக இருந்தபோதுதான் இந்தியப் பிரதிநிதிகள் குழு அங்கு சென்றது. இந்தியப் பிரதமர் பண்டித நேரு இந்தோனேஷியப் பயணம் மகள் இந்திராகாந்தியுடன் மேற்கொண்டார். வர்த்தக உடன்பாடு கையெழுத்தாகியது.

இந்தோனேஷிய வெளியுறவுத் துறைச் செயலாளர் ''இந்திய - இந்தோனேஷிய நல்லுறவை மிகச் சிறந்த முறையில் வளர்த்தோடு, மக்களின் ஏகோபித்த பாராட்டுதலையும் பெற்றுள்ளீர்கள்'' என்று டாக்டர் சுப்பராயன் அவர்களை மனதாரப் பாராட்டி மகிழ்ந்தார்.

❋ ❋ ❋

# 19. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்

1952 பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டில் காங்கிரஸ் தலைவர்கள் பலர் தோல்வியைத் தழுவினர். பி.எஸ். குமாரசாமிராஜா, பக்தவத்சலம், கோபால் ரெட்டி போன்றவர்கள் தோற்றவர்களில் முக்கியமானவர்கள். ஆட்சியை அமைக்கும் பெரும்பான்மையும் காங்கிரஸ் கட்சிக்குக் கிடைக்கவில்லை.

மேல் சபை உறுப்பினராகிச் சிறுகட்சிகளைச் சேர்த்துக் கொண்டு இராஜாஜி முதல்வர் ஆனார். இராஜாஜி தம்முடைய அமைச்சரவையை அமைக்கும் போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரைக் கலந்து ஆலோசிக்கவில்லை. காங்கிரஸ் கட்சியின் தேர்தல் தோல்வி காரணமாகவும், இராஜாஜியின் உதாசீனம் காரணமாகவும் காமராஜர் தன் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.

புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அவசியம் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டது. இராஜாஜி, பி.எஸ். குமாரசாமி ராஜாவைப் பரிந்துரை செய்தார். காமராஜர் சுப்பராயனை முன்மொழிந்தார். போட்டியில் சுப்பராயன் வென்றார்.

கல்கி போன்ற இதழ்கள் சுப்பராயன் தலைமையைப் புகழ்ந்து எழுதின. சுப்பராயனால் காங்கிரஸ் இழந்த பெருமையை மீண்டும் பெறும் என்று பலர் கருதினர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிச் சொத்துக்கள் தனிநபர்கள் பெயர்களில் இருந்தன.

1. புளியந்தோப்புப் பகுதி நிலம்

2. பீட்டர்ஸ் சாலையில் உள்ள காங்கிரஸ் மைதானம்.

3. முன்பு கறுப்பர் தோட்டம் என்று அழைக்கப்பட்ட தேனாம் பேட்டை காங்கிரஸ் மைதானம்

ஆகியவற்றின் பொறுப்பாளர்களாக இருந்தவர்கள் இறந்தும் பொறுப் பாளர்கள் நியமிக்கப்படவில்லை.

இவை அனைத்தும் தனியார் பொறுப்பிலிருந்து விடுவிக்கப் பட்டு காங்கிரஸ் கட்சியின் உடமையாக்கப்பட்டு அதை நிருவகிக்க டிரஸ்டிகள் நியமிக்கப்பட்டு விதிகள், சட்ட திட்டங்கள் டாக்டர் சுப்பராயனால் முறையாக வகுக்கப்பட்டன.

காமராசர், இராமநாத் கோயங்கா (எக்ஸ்பிரஸ்), கே. சீனிவாச அய்யங்கர் மூவரும் காங்கிரஸ் சொத்துக்களின் டிரஸ்டிகளாக நியமிக் கப்பட்டனர். இது சுப்பராயன் செய்த சட்டப்பூர்வமான சிறப்புமிக்க செயலாகும்.

இதற்கிடையில் தமிழ்நாட்டில் மாநகராட்சிகள், நகராட்சிகள் தேர்தல் வந்தது. இராஜாஜி - காமராசர் கருத்து வேறுபாடுகள் அதிகம் ஆயிற்று. இந்நிகழ்வும், பொதுத் தேர்தல் தோல்வியும் காங்கிரஸ்காரர் களிடையே சோர்வை ஏற்படுத்தியது.

தொடக்க காலத்திலிருந்து இராஜாஜி பற்றாளராக இருந்த சுப்பராயன் தன்னை மாநிலக் கட்சித் தலைவராக நியமித்த காமராச ருடன் சேர்ந்து தமிழகம் முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்தார். சுப்பராயனின் அன்பான அணுகுமுறை கட்சித் தொண்டர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியது. அதனால்,

1952 பொதுத் தேர்தலில் மதுரையில் பெரும் தோல்வியைச் சந்தித்த காங்கிரஸ் நகராட்சித் தேர்தலில் பெரும் வெற்றி கண்டது.

சென்னையில் உள்ள 60 இடங்களில் காங்கிரஸ் கட்சி 33 இடங்களையும், காங்கிரஸ் ஆதரவு சுயேச்சைகள் 10 இடங்களையும் பிடித்தனர்.

பொதுத் தேர்தலில் திருச்சி வேட்பாளர்கள் அனைவரும் தோற்றனர். ஆனால் நகராட்சித் தேர்தலில் காங்கிரஸ் கட்சி திருச்சி நகராட்சியைக் கைப்பற்றியது.

கோவையிலும் காங்கிரஸ் கட்சி பெரும் பெற்றி பெற்றது. இவை அனைத்திற்கும் சுப்பராயனின் அணுகுமுறையே காரணம் என்று காங்கிரஸ் கட்சியினர் பலர் கருத்துத் தெரிவித்தனர்.

இருப்பினும் காங்கிரஸ் கட்சிக்குள் நிலவிய குழு வேறுபாடுகள், ஆட்சிக்கும் - கட்சிக்கும் உள்ள முரண்பாடு ஆகியவை சுப்பராயனுக்குப் பிடிக்கவில்லை. கட்சித் தலைமைப் பதவி பொதுமக்கள் தொடர்புக்கும், பொதுமக்கள் பணிக்கும் தடையாக இருப்பதை அறிந்தார். அதனால் காங்கிரஸ் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து தன்னை விடுவிக்குமாறு கட்சித் தலைமையைக் கேட்டுக் கொண்டார். 1952 டிசம்பர் மாதம் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து சுப்பராயன் விலகினார். காமராசர் மீண்டும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆனார்.

### ''முதல்வராக விருப்பம் இல்லை''

சென்னை மாகாண சட்டசபையில் குலக் கல்வித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை இராஜாஜி கொண்டு வந்தார். இதை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கூடச் சிலர் விரும்பவில்லை. இராஜாஜி கொண்டு வந்த மசோதா சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டுத் தோல்வியடைந்தது. வாக்கெடுப்பில் தோற்ற இராஜாஜி பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

குலக் கல்வித் திட்டத்தைக் கைவிடும்படி காமராசர் கேட்டுக் கொண்டார். வேறுசில காங்கிரஸ் தலைவர்களும் அவ்வாறே வேண்டிக் கொண்டனர். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பெரும்பான்மையினர் இராஜாஜிக்கு எதிர்ப்பாகத் திரண்டனர். இராஜாஜிக்கு எதிர்ப்பான அறிக்கை ஒன்றைத் தயாரித்து பிரதமர் நேருவிடம் கொடுத்தனர்.

இராஜாஜியும் தம் ஆதரவாளர்களைத் திரட்டிக் கொண்டு டெல்லி செல்ல விரும்பினார். இந்தப் பயணத்தில் சுப்பராயனும் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். இராஜாஜி சுப்பராயனுக்குக் கடிதம் எழுதினார். சுப்பராயன் தன்னால் வர இயலவில்லை என்று கடிதம் எழுதினார். இராஜாஜியின் நிலையை விளக்கிக் கடிதம் எழுதிய தாகவும் எந்தவிதமான பதிலும் வரவில்லை என்றும் கூறினார்.

எதிர்க்கட்சிகள் வலுவான எதிர்ப்பு, காமராசரைச் சார்ந்த காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு, பிரதமர் நேருவின் ஆதர வின்மை, இராஜாஜியின் பிடிவாதம் அனைத்தும் சேர்ந்து சுப்பராயனை இந்த நிலைக்குக் கொண்டு வந்தது. நெருக்கடியைச் சமாளிக்க முடியாத இராஜாஜி சட்டசபைக்கு வராமலேயே 27.03.1953 அன்று முதல்வர் பதவியை இராஜினாமா செய்து கவர்னருக்கும், நேருவிற்கும் கடிதம் எழுதினார்.

பதவியை இராஜினாமா செய்தபின் முதல்வர் பதவிக்கு சி. சுப்பிரமணியத்தைக் கொண்டு வர விரும்பி இராஜாஜி முயற்சிகள் செய்தார். காமராசர் சுப்பராயனை முதல்வராக்க விரும்பினார். ஏற்கனவே தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த போது பெற்ற அனுபவம் இராஜாஜி - காமராசர் இடையே போட்டிமனப்பான்மை இவைகளையெல்லாம் உணர்ந்த சுப்பராயன் ''முதல்வராக விருப்ப மில்லை'' என்று திட்டவட்டமாகக் கூறி விட்டார்.

முதல்வர் தேர்வு வந்தது. காமராசர் தாமே நிற்க முடிவு செய்து போட்டியிட்டார். இராஜாஜியின் வேட்பாளராக சி. சுப்பிரமணியம் காமராசரை எதிர்த்துப் போட்டியிட்டார். காமராசர் வென்று தமிழக முதல்வரானார். சி. சுப்பிரமணியம் அவர்களின் திறமையை அறிந்திருந்த காமராசர் சி. சுப்பிரமணியத்தை அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டு முக்கியத் துறைகளை அவரிடம் ஒப்படைத்தார்.

# 20. மாநிலங்கள் அவை உறுப்பினர்

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்தபின் இராஜாஜி - காமராசர் இடையே ஏற்பட்ட முரண்பாடுகளில் சிக்கிக் கொள்ள விரும்பாமல் சுப்பராயன் திருச்செங்கோட்டில் தங்கி னார். இந்த நிலையில் சென்னை மாகாண சட்டசபை உறுப்பினர்கள் வழியாக டெல்லி மாநிலங்கள் அவை உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் தேர்தல் நடைபெற்றது. காங்கிரஸ் கட்சியின் சார்பில் சுப்பராயன் அவர்களை வேட்பாளராக நிறுத்தக் காமராசர் விரும்பினார். தமிழ்நாட்டு அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்த சுப்பராயன் டெல்லி அரசியல் தன்னுடைய எதிர்காலப் பணிகட்குத் துணை நிற்கும் என்பதால் காமராசர் விருப்பத்தை ஏற்றுக் கொண்டார்.

பார்வதிகிருஷ்ணனை சென்னை மாகாண சட்டசபையிலிருந்து மாநிலங்கள் அவை உறுப்பினராக அனுப்ப கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்தது. ஒரே சமயத்தில் தந்தையும், மகளும் மாநிலங்கள் அவை உறுப்பினர் ஆனது பற்றி இதழ்கள் புகழ்ந்து எழுதின.

மாநிலங்கள் அவை தலைவர் 04.05.1955 அன்று நான்கு உறுப்பினர் கொண்ட துணைத் தலைவர் குழுவை (Pannel of Vice Charman) நியமித்தார். சுப்பராயன் மாநிலங்கள் அவைத் துணைத் தலைவர் ஆனார். 10 உறுப்பினர்கள் கொண்ட உரிமைக்குழு (Privilege committee) உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

07.06.1955 அன்று குடியரசுத் தலைவர் ஆட்சிமொழி ஆணைக் குழுவிற்கு (Official Language Commission) இந்திய அளவில் 21 நிபுணர்கள் கொண்ட குழுவை அமைத்தார். அக்குழுவில் சுப்பராயன் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இந்தி மொழியை

ஆட்சி மொழியாகக் கொண்டு வர அரசு விரும்பியதால் அதை எதிர்க்க விரும்பிய சுப்பராயன் இந்தி மொழியின் நிலையை அறிந்து கொள்ள இந்தி மொழியைக் கற்றுக் கொள்ள விரும்பினார். அதனால் இராதாபாயுடன் டெல்லி இந்திப் பிரச்சார சபாவிற்குச் சென்று இந்தி மொழியைக் கற்றுக் கொண்டார். இந்தி மொழியின் பழமை, வளம், வரலாறு, பயன்பாடு, பன்முகத்தன்மை, இலக்கணம் ஆகியவற்றைச் சுப்பராயன் ஆய்வு செய்தார்.

15, 16.07.1955 ஆகிய இரு நாட்கள் ஆட்சிமொழி ஆணைக் குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்ட முடிவில் ஒரு வினாத்தாள் குழு உறுப்பினர்களிடம் கொடுக்கப்பட்டது. மக்களின் கருத்துக்களை அறிந்துவரப் பணித்தது. நாடு முழுவதும் இருந்த முக்கியமான கல்வி நிறுவனங்கள், மொழி ஆய்வு நிறுவனங்கள், மொழி வல்லுனர்கள், நீதி மன்றங்கள், அரசு அலுவலகங்கள், உள்ளாட்சி மன்றங்கள், பொதுமக்கள் ஆகியோரிடம் குழுவாகவும், தனியாகவும் உறுப்பினர்கள் கருத்துக்களைக் கேட்டறிந்தனர்.

கேட்டறிந்த கருத்துக்களை ஆய்வு செய்து 31.07.1956ல் குழு சார்பில் குடியரசுத் தலைவரிடம் தங்கள் அறிக்கையை அளித்தனர். இதன்படி 12.08.1957 அன்று இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்திமொழி ஏற்றுக் கொள்ளப்படுவதாக அறிக்கை வெளியிடப்பட்டது. அறிக்கையில்,

''கல்விக் கூடங்களில் பயிற்சி மொழியாக இந்தி கட்டாயமாக்கப்பட வேண்டும். அரசாங்க நிர்வாகம் இந்தியிலேயே நடத்தப்பட வேண்டும். அனைத்துப் போட்டித் தேர்வுகளும் இந்தியிலேயே நடத்தப்பட வேண்டும். உச்சநீதிமன்றம் - உயர்நீதிமன்றங்களில் இந்தி மொழிதான் பயன்பாட்டில் இருக்க வேண்டும். சட்டமன்ற நாடாளுமன்ற நடவடிக்கைகள் இந்தியில் பிரசுரிக்கப்பட வேண்டும். உயர்கல்வி நிறுவனங்களில், பள்ளிகளில் ஆங்கிலமொழி ஒரு பாடமாக மட்டும் இருக்க வேண்டும். பயிற்றுமொழி இந்தியாக இருக்க

வேண்டும். ஆங்கிலம் இருக்கும் இடங்களில் இந்தியைக் கொண்டு வருவது 1965க்குள் இயலாது. ஆகையால் இந்தியை எந்த அளவிற்குப் பயன்பாட்டுக்குக் கொண்டு வர முடியுமோ அந்த அளவிற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்'' என்று பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

ஆனால் இந்த அறிக்கை உறுப்பினர்களின் ஒருமித்த கருத்து அல்ல. இதற்கு மாறுபட்ட கருத்துக்கள் அறிக்கையுடன் இணைக்கப் பட்டிருந்தது. சுப்பராயன், வங்கமொழி நிபுணர் சுனித்குமார் சட்டர்ஜி ஆகியோர் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். வளமான சில மொழிகள் உட்படப் பல மொழிகள் பேசப்படும் நாட்டில் வலிமை யும், வளமும் குன்றிய இந்தி மொழி ஆட்சி மொழியாக வருவதை சுப்பராயன் விரும்பவில்லை. அதனால் நீண்ட ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்தார். சுப்பராயன் இணைப்பு அறிக்கை மிகச் சிறந்த ஆவண மாகத் திகழ்ந்தது.

''பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்காலம் மிகவும் மோசமா கப் பாதிக்கப்படும். அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் போதிய வளர்ச்சியடையாத ஒரு மொழியை அறிமுகப்படுத்துவதில் என்ன பயன் விளையும்.

வாழ்க்கையின் எல்லாப் பிரிவுகளிலும் ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தியை அறிமுகம் செய்வது இந்த அறிக்கையின் நோக்கம். இந்த அறிக்கை இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைத் திணிப்பதாக உள்ளது. இது பொதுவாழ்வில் பெருங்குழப்பத்தை விளைவிக்கும். இந்தி பேசுபவர்கள் மட்டும் பயன்பெறும் வகையில் இந்தி பேசுபவர்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கையாகவே இது உள்ளது. தமிழ், வங்காள மொழிபோல் இந்தி ஒரு வளர்ந்த மொழி அல்ல. இந்தியை விடப் பழமையும், வளமும் வளர்ந்ததுமான சில மொழிகள் இந்தியாவில் இருப்பதை இந்த அறிக்கை கவனத்தில் கொள்ள வில்லை.

ஆங்கிலத்தை இந்தி மூலம் விரட்டியடித்து விட்டால் அது தேசபக்தி என்பதைப் போலக் குழுவில் பலர் நினைத்து விட்டார்கள். தமிழர்களைப் பொறுத்தவரை இந்தி பேசாத மக்களுக்குத் தமிழ் எப்படி அன்னிய மொழியோ அதுபோலத் தமிழர்கட்கு இந்தி அன்னியமொழி என்பதைக் கூற விரும்புகின்றேன். பலமொழி பேசும் மக்களைக் கொண்ட நம் பாரத நாட்டில் ஒரு மொழிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்க முனைவது நமது இந்திய ஒற்றுமையைப் பாதிக்கும்.

பதினான்கிற்கு மேற்பட்ட இந்திய மொழிகளில் இந்தியைப் பொது மொழியாகத் தேர்ந்தெடுத்தது அரசியல் நிர்ணய சபையே தவிர நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்ல. இந்தி மொழி வெறியினால் மிக அவசரப்பட்டு எடுத்த முடிவு இது. எனவே இந்தியை தீவிரமாக இந்திய ஆட்சிமொழியாக அமுல்படுத்துவதை நிறுத்தி வைக்க வேண்டும்''.

என்றெல்லாம் மிக விரிவாக அறிவுரை கூறி எழுதிய சுப்பராயன் ''ஆங்கிலத்தை நீக்கினால் அதன் வெற்றிடத்தை இந்தியால் நிரப்ப முடியாது. அந்தந்த மாநில மொழிகளாலேயே முடியும். ஆங்கிலத்தை அகற்றி இந்தியைக் கொண்டு வருவது தீவிர மாநில வெறியை ஏற்படுத்தும்'' என்ற கே.எம். முன்ஷி அவர்கள் கருத்தையும் எடுத்துக் காட்டியிருந்தார்.

அறிக்கையை அனுப்பியபின் 03.09.1956 அன்று பிரதமர் நேருவைச் சந்தித்து தன் கருத்தைச் சுப்பராயன் விளக்கினார்.

இந்தப் பின்னணியில் தான் பின்னர் மேற்கு வங்கம், பஞ்சாப், அஸ்ஸாம் ஆகிய மாநில சட்ட மன்றங்கள் இந்தித் திணிப்பை எதிர்த்துத் தீர்மானங்கள் நிறைவேற்றின. இறுதியில் பிரதமர் நேரு 04.08.1959 அன்று நாடாளுமன்றத்தில் ''இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்கும்'' என்று உறுதிமொழியை அறி வித்தார். இந்த அறிவிப்பிற்குச் சுப்பராயன் அறிக்கையே காரண மாகும்.

மாநிலங்கள் அவை உறுப்பினராகச் சிறந்து விளங்கிய சுப்பராயன் இந்து வாரிசுதாரர் மசோதா, பல்கலைக்கழக மானியக் குழு மசோதா, ரெயில்வே பட்ஜெட், பொது வரவு செலவு மசோதா, நாடாளுமன்ற நிகழ்ச்சிப் புத்தகம் வெளியீடு மசோதா, மாகாணங்கள் சீரமைப்பு மசோதா போன்றவை மீது ஆற்றிய உரைகள் எல்லோரையும் கவர்ந்தன.

மாநிலங்கள் அவை நிகழ்ச்சிகளை ஆய்வு செய்து நூல் வெளியிட்ட டாக்டர் பவானிசிங் என்பவர் ஆக்கப்பூர்வமான மிகச் சிறந்த உரையாற்றியவர்கள் பட்டியலில் முதலாவதாக டாக்டர். பி.ஆர். அம்பேத்காரையும், இரண்டாவதாக சுப்பராயன் பெயரையும் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறியுள்ள பிறர் ஏ. இராமசாமி முதலியார், வி.கே. கிருஷ்ணமேனன், புபேஷ்குப்தா, பி. சுந்தரய்யா முதலியோர் ஆவர்.

❊❊❊

# 21. நேரு அமைச்சரவையில்

1952 பொதுத் தேர்தலில் திருச்செங்கோடு தொகுதியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு எஸ்.கே.பி. கந்தசாமி யிடம் 16691 வாக்குகள் குறைவாகப் பெற்று வெற்றி வாய்ப்பை இழந்த சுப்பராயன் 1957 பொதுத் தேர்தலில் திருச்செங்கோடு தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக நின்று பிரஜா சோசலிஸ்ட் கட்சி வேட்பாளர் பக்தர் என்பவரை 60695 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார். பல விவாதங்களில் நாடாளுமன்றத்தில் பங்கு கொண்டு சிறப்பான தம் கருத்துக்களை எடுத்துரைத்தார்.

அணு ஆயுத அபாயம், பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளித்து வரும் உதவிகளால் ஏற்படும் அபாயம் குறித்துப் பேசினார். காட்பாடி யில் ஏற்பட்ட சிறு விபத்தின் காரணமாக சிவகாசியில் பட்டாஸ் முதலிய வெடிபொருட்களை இரயிலில் ஏற்றிச் செல்ல தடை விதிப்பதாக இருந்தது. சுப்பராயன் தன் வாதத் திறமையால் அரசின் கருத்தை எதிர்த்து சிவகாசி சிறு முதலாளிகள், தொழிலாளர் வாழ்வை வளம்பெறச் செய்தார்.

பரம்பிக்குளம் - ஆளியாறு திட்டம் நிறைவேற்றம், நதிகள் இணைப்பு, இரயில்வேயில் புதிய வழித்தடங்கள் ஏற்படுத்துவது, சேலம், பெங்களூர் இரயில் பாதை அமைப்பு, இலங்கைத் தமிழர் குடியுரிமை போன்றவை குறித்து தக்க சான்றுகளுடன் நாடாளுமன்றத் தில் உரையாற்றினார். இவர் ஆற்றிய நாடாளுமன்ற உரைகள் காரண மாக 1959-60 ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜவஹர்லால் நேரு 02.09.1959 அன்று தம் அமைச்சரவையை மாற்றியமைத்தார். சுப்பராயன் தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

நன்றாக ஆங்கிலம் தெரிந்த ஒரு உறுப்பினர் சுப்பராயனிடம் அவர்துறை குறித்து விளக்கங்களை இந்தியில் கேட்டார். சுப்பராயன் ''எனக்குத் தெரியாத மொழியில் என்னிடம் பேசுவதை உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும். நான் என் தாய்மொழியாகிய தமிழில் பேசினால் உங்கள் நிலை என்னவாகும் என்று யோசியுங்கள்'' என்று உறுப்பினர் களை எச்சரித்தார்.

சுப்பராயன் காலத்தில்தான் கொச்சி கப்பல் கட்டும் தளம் இரண்டாம் தளத்திற்கு அனுமதியளிக்கப்பட்டது. இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம் சென்னை கிண்டியில் தொடங்கப்பட்டது. சேது சமுத்திரத் திட்டத்திற்கு முதல் ஆய்வுக்காக ரூபாய் 30 கோடி ஒதுக்கப்பட்டது.

தூத்துக்குடி துறைமுகத் திட்டத்திற்கு 10.70 கோடி ஒதுக்கப் பட்டது. மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. தபால்துறையில் ஆண்டுதோறும் நட்டம் ஏற்பட்டது. சுப்பராயன் துறைப்பதவி ஏற்ற ஆண்டில் துறை லாபத்தில் இயங்கியது.

தூத்துக்குடித் துறைமுகத்திட்டம், சேது சமுத்திரத் திட்டம், விமானப் போக்குவரத்து ஆகியவை மீதான விவாதங்களில் சுப்பராயன் அளித்த பதில்கள் இன்றும் நாடாளுமன்ற விவாதங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

சுப்பராயனுக்கு முன்பு தமிழகத்தைச் சேர்ந்த தலைவர்கள் சிலர் மத்திய அரசில் அமைச்சர்களாகவும், முக்கியப் பொறுப்புகளிலும் இருந் துள்ளனர். அவர்கள் செய்யாத பல அரிய பெரிய செயல்களைச் சுப்ப ராயன் செய்து முடித்துள்ளார். அவற்றில் தமிழர்களின் முகமாகவும், முகவரியாகவும் திகழ்கின்ற வான்புகழ் கொண்ட திருவள்ளுவருக்கும்,

பாட்டுக்கொரு புலவன் மகாகவி பாரதியாருக்கும் 1960ல் அஞ்சல் தலை வெளியிட்டது சிறப்புமிக்கதாகும்.

மூன்றாண்டு அமைச்சர் பதவியில் சுப்பராயன் செய்த அருஞ் செயல்கள் மகத்தானவை. காளிதாசர், தியாகராஜசுவாமிகள், விஸ்வேஸ்வரய்யா, சத்ரபதிசிவாஜி, இரவீந்திரநாத்தாகூர், தயானந்த சரஸ்வதி, பி.சி. ராய், மதன் மோகன் மாளவியா போன்ற பெருமக்களுக்கு அஞ்சல்தலை வெளியிட்ட பெருமை சுப்பராயன் அவர்களையே சாரும்.

சிறுவர் தினம், பஞ்சாயத்து ராஜ்யம், டெல்லி தொழில் வளர்ச்சிக் கண்காட்சி, வானொலி வெள்ளி விழா போன்ற நிகழ்வுகளுக்குரிய அஞ்சல் தலையையும் வெளியிட்டார். குறிப்பாக ஏர்பிடித்து உழும் உழவன் உருவம் பொறித்த அஞ்சல்தலை வெளியிட்டது சிறப்புக் குரியதாகும். இரண்டு ஆண்டுகளில் 25 அஞ்சல்தலைகள் வெளி யிடப்பட்டன.

சுப்பராயன் மத்தியத் தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து அமைச்சராக இருந்த போது 02.10.1960 அன்று காவிரியாற்றின் மீது கட்டப்பட்ட ஈரோடு - பள்ளிபாளையம் பாலத்தைத் தமிழக முதல்வர் காமராஜர் தலைமையில் திறந்து வைத்தார்.

சுப்பராயன் மத்திய அமைச்சராக இருந்த போது 1960ல் துணைவியார் இராதாபாய் காலமானார்.

# 22. ஆளுநர் பதவியும் அமர வாழ்வும்

1962 பொதுத் தேர்தலில் சுப்பராயன் திருச்செங்கோடு நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராகப் போட்டி யிட்டார். எதிர்த்துத் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளராகப் போட்டியிட்ட செ. கந்தப்பனைத் தோற்கடித்து வெற்றி பெற்றார். வாக்குகள் வித்தியாசம் 12 ஆயிரம்.

புதிய அமைச்சரவையில் சுப்பராயனையும் சேர்த்துக் கொள்ள நேரு விரும்பினார். ஆனால் 1960ல் இராதாபாய் அவர்களை இழந்த சுப்பராயன் அமைச்சர் பொறுப்பை 1962ல் ஏற்கும் நிலையில் இல்லை. நேரு கொடுத்த வாய்ப்பை சுப்பராயன் மறுத்து விட்டார்.

நீண்ட நெடிய அரசியல் அனுபவம் கொண்ட சுப்பராயன் அவர் களை இந்தியாவின் பெரிய மாநிலங்களில் ஒன்றும், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகிய மகாராஷ்டிர மாநிலத்தின் இரண்டா வது கவர்னர் ஆக்க நேரு விரும்பினார். நேருவின் வற்புறுத்தலுக் கிணங்க சுப்பராயன் அப்பதவியை ஏற்றுக் கொள்ள இசைந்தார். அம்மாநிலத்தின் முதல் கவர்னர் ஸ்ரீபிரகாசா ஆவார்.

1818ல் பம்பாயைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் அதனைக் குஜராத்தோடு இணைத்து பெரிய பம்பாய் மாநிலம் என்று அழைத் தனர். மொழி அடிப்படையில் 1960ல் மாநிலங்கள் பிரிக்கப்பட்டு குஜராத்தும், மகாராஷ்டிரமும் தனித்தனி மாநிலங்களாகப் பிரிக்கப் பட்டன. சுப்பராயன் மகாராஷ்டிர மாநில ஆளுநராக 04.04.1962ல் பதவிப் பொறுப்பேற்றார். டெல்லி தமிழ்ச்சங்கம் நடத்திய தமிழ்ப் புத்தாண்டு விழாவில் கலந்து கொண்டார்.

மெல்ல மெல்ல சுப்பராயன் உடல் நலிவுற்றார். 1962 ஆகஸ்ட் 15 அன்று சுதந்திர நாளில் கொடியேற்றும் பொறுப்பை வேறு ஒருவரிடம் ஒப்படைக்குமாறு மகன் பி.பி. குமாரமங்கலம் கேட்டுக் கொண்டார். ஆனால் சுப்பராயன் மறுத்து விட்டார். தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி பம்பாய் வானொலியிலும் உரை நிகழ்த்தினார்.

பூனா பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவிலும் கலந்து கொண்டார். மேலும் சுப்பராயன் உடல்நிலை பாதிப்புக்கு உள்ளாகவே பார்வதி கிருஷ்ணன் விரைந்து பம்பாய் சென்றார். இந்த நிலையிலும் ஏற்கனவே ஒத்துக் கொண்ட நிகழ்வு ஆதலால் பம்பாய் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவிலும் கலந்து கொண்டார். இதுவே சுப்ப ராயன் கலந்து கொண்ட இறுதி நிகழ்ச்சியாகும்.

அக்டோபர் 2ஆம் நாள் காந்தி பிறந்த நாளில் வானொலியில் உடல்நலம் குன்றிய நிலையிலும் உரையைப் படித்தார். அடுத்த நாள் உடல்நிலை மேலும் மோசமடையவே அவரைச் சென்னைக்கு அழைத்து வந்து பொது மருத்துவமனையில் சேர்த்தனர். தோலில் ஏற்பட்ட அலர்ஜிக்காக சென்னையில் சிகிச்சை செய்யப்பட்டது. அலர்ஜி கொப்புளங்களாக மாறின. அவற்றிலிருந்து இரத்தம் கசிந்தது.

05.10.1962 சுப்பராயனின் உடல்நிலையில் சிறிது முன் னேற்றம் காணப்பட்டது. காய்ச்சல் இருந்தது. அன்று மாலை மீண்டும் அபாய கட்டத்தை எய்தினார். அவசரப் பிரிவில் அவரைச் சேர்த்தனர்.

06.10.1962 அன்று காலை 9 மணியளவில் நர்ஸ் ஒருவர் சுப்பராயனுக்கு வெந்நீர் ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது அமைதியாக அவர் ஆவி பிரிந்தது.

பாரதத் தாய் தன் தவப் புதல்வனை இழந்தாள்; மாமனிதர் சுப்பராயன் மறைந்தார்.

உயிரற்ற சுப்பராயனின் உடல் நுங்கம்பாக்கத்தில் உள்ள மோகன் குமாரமங்கலம் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. தலைவர்கள், தொண்டர்கள், பொதுமக்கள் கண்ணீர் சிந்தி அஞ்சலி செய்தனர்.

06.10.1962 மாலை 4 மணிக்கு அவரது உடல் பூரண அரசு இராணுவ மரியாதையுடன் நுங்கம்பாக்கம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. தரைப்படை, கப்பல்படை, விமானப்படை ஆகிய முப்படை வீரர்கள், சென்னைக் காவல் படையினர் அணிவகுத்து இறுதி ஊர்வலத்தில் அஞ்சலி செலுத்தினர்.

சுப்பராயன் அவர்களின் இரண்டாவது மகன் ஜெயவந்த் கோபால் குமாரமங்கலம் சிதைக்கு தீ மூட்டினார். எல்லாம் முடிந்தது. சின்னஞ் சிறு வயது முதல் தேச நலன் ஒன்றையே எண்ணிய உயிர் அடங்கியது. ஜமீன் குடும்பத்தில் பிறந்தும் சாமானிய மக்கள் நலனையே அல்லும் பகலும் நினைத்துக் கொண்டிருந்த நெஞ்சு தன் துடிப்பை நிறுத்தி விட்டது.

தன்னலமற்ற அவர் வாழ்க்கை வரலாறு வளரும் சந்ததியினர்க்கு வழிகாட்டும். பாரதத் தலைமகன் ப. சுப்பராயன் நினைவு என்றும் மக்கள் மனதில் நீங்காமல் நிலைத்திருக்கும்.

❊ ❊ ❊

# 23. வழிகாட்டிய வாழ்க்கை

''சமுதாயத்தைப் பிடித்துள்ள கேடுகளையும், தேக்கங்களையும் களைய டாக்டர் சுப்பராயன் சீரிய முயற்சிகளை மேற்கொண்டார். தெளிவில்லாத பாரம்பரியத்தையும், காலத்திற்கு ஒவ்வாத சமூகக் கலாச்சாரங்களையும் டாக்டர் சுப்பராயன் அறவே வெறுத்தார். அவர் வாழ்க்கையே நிரந்தரமான பாடப் புத்தகம். அதைப் புரட்டிப் படிக்கப் படிக்க ஏராளமான புதுச் செய்திகள் எந்தக் காலத்துக்கும் பொருந்தும் படி கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

அவர் எப்போழுதுமே தனக்கு விளம்பரம் தேடியவரல்லர். அதே சமயத்தில் பொறுப்புக்களைத் தட்டிக் கழித்தவரும் அல்லர். கடமை களைத் தானாகவே சுமந்து செல்வார். ஆனால் அவர் தன்னால் தான் ஆயிற்று என்று பெருமை பேசமாட்டார். மகாபாரதத்தில் கிருஷ்ணன் கூறிய ''கடமையைச் செய், பலனை எதிர்பார்க்காதே'' என்பதற்குச் சிறந்த உதாரணம் டாக்டர் சுப்பராயன் மட்டுமே.

நட்பைப் பாராட்டுவதற்கு உதவுவாரே தவிர குறுக்கு வழியில் சென்று அழிப்பதற்கு என்றுமே சிந்திக்க மாட்டார். அவரது வாழ்க்கை இன்றைய அரசியல்வாதிகளுக்கு ஒரு நல்ல வழிகாட்டி; அவர் நம் நாட்டுக்கு விட்டுச் சென்ற அழியாத சொத்து. அவரது கருத்துக்களில் அனைவரது உணர்வுகளையும் சமன் செய்யும் பரந்த குணம் மிளிரும். மற்றவர்களின் கருத்துக்களுக்கு இடமிருக்கும். எதிர்க்கட்சி கூட ஆர்வத்துடன் உடன்பாடு தெரிவிக்கும்.

அவர் மிகவும் சுறுசுறுப்பான நாடாளுமன்ற உறுப்பினராக இருந் தார். மிகவும் சிரமங்களை ஏற்று ஆவணமாகச் செய்திகளைச் சேகரித்துக் கொண்டு வந்து உரிய ஏற்ற இரக்கங்களுடன் சுவையுடன் பேசுவார்.

தமது கொள்கைகளைச் சமரசம் செய்யாமல் மரியாதையை விட்டுக் கொடுக்காமல் பிரச்சனைகளை மிகத் திறமையாகவும் அமைதியாகவும் சமநிலைப்பாட்டோடு பேசுவார். எனவேதான் எல்லோரும் பேசப்படும் ''பார்லிமெண்டேரியன்'' அந்தஸ்தைப் பெற்று பல நாடாளுமன்றக் கமிட்டிகளில் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டார்.

ஆங்கிலத்தை மிகவும் எளிதாகக் கையாளுவார். அவருடைய பேச்சில் தெளிவும், கூர்மையும், வளமையும், ஆளுமையும் இருக்கும். திட்டிப் பேசுவதையும், குதிப்பதையும் அவர் எப்பொழுதுமே கையாண்டதில்லை. அவருடைய பேச்சும், எழுத்தும் மிகவும் மென்மையாக இருக்கும். எவருக்கும் கோபத்தை வரவழைக்குமாறு அமையாது. சுருக்கமாகச் சொன்னால் அவரது ஆங்கிலமொழி ஆளுமையே பிறரைக் கட்டிப் போட வைத்தது.

வசீகரிக்கும் புன்னகையும், இதயப் பூர்வமான சிரிப்பும் அவரது இனிமையான முகத்தைப் பூப்போல மலர வைக்கும், நட்பைப் போற்றுவார். அவர் கற்ற ஏராளமான வெளிநாட்டுப் புத்தகங்களிலிருந்து நிறையச் செய்திகள் வந்து கொட்டும். அவர் நிரம்பப் படித்தவர். அவரது தேச சேவையும் வாழ்க்கையில் கடைப்பிடிக்கப் பட்ட கோட்பாடுகளும் எதிர்கால இளைஞர்களுக்குப் பாடமாக அமைய வேண்டும்''.



நூற்றாண்டு விழா
அஞ்சல் தலை
(1989)

(டாக்டர் சுப்பராயன் நூற்றாண்டு நினைவு அஞ்சல்தலை வெளியீட்டு விழாவில் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி).

❊ ❊ ❊

# 24. சென்னையில் வாழ்ந்த இல்லங்கள்

சென்னை எழும்பூர் 'கமாண்டர் இன் சீப் ரோடு' என்று அழைக்கப்பட்ட இன்றைய எத்திராஜ் சாலையில், எத்திராஜ் கல்லூரிக்கு எதிரில் இராணி சீதை மண்டபத்திற்கு அருகே 3½ ஏக்கர் பரப்பளவு நிலத்தில் சுப்பராயனுக்குச் சொந்தமான மிகப்பெரிய பங்களா ஒன்று இருந்தது. இந்த பங்களா 'Fair Lawns' என்று அழைக்கப்பட்டது. 1920ல் சென்னைக்கு வந்து பொது வாழ்வைத் தொடங்கிய சுப்பராயன் தம்பதிகள் 1936 வரை இந்தப் பங்களாவில்தான் வாழ்ந்தனர். சுப்பராயன் குடும்பம் அதிக காலம் வாழ்ந்தது இந்தப் பங்களாவில்தான்.

1936 ல் இந்தப் பங்களாவை பிரசிடென்சி கிளப்பிற்கு விற்று விட்டு சென்னை இராயப்பேட்டை ஒயிட்ஸ் ரோட்டில் இருந்த 'Whites Garden' என்ற பங்களாவிற்கு சுப்பராயன் குடியேறினார்.

பின்னர் சேத்துப்பட்டு ஹாரிங்டன் சாலையில் இருந்த 'Lomound' என்ற பங்களாவில் குடியேறினார். அதன்பின் சென்னை தியாகராய நகரில் இருந்த 'Irrawaddy House' என்ற பங்களாவில் வாழ்ந்தார்.

1942ஆம் ஆண்டு இறுதியில் சென்னை ஆழ்வார்பேட்டை செயிண்ட் மேரீஸ் சாலையில் இருந்த 'Mange Parbat' என்ற பங்களா விற்குச் சுப்பராயன் குடும்பம் குடியேறியது. மூன்றாண்டு கழித்து 1945ல் சென்னை ஜார்ஜ் டவுன் கொண்டி செட்டித் தெருவில் இருந்த ஒரு பங்களாவில் சுப்பராயன் குடும்பம் குடியேறியது.

1946ல் சென்னை மயிலாப்பூர் மவுபரீஸ் ரோட்டில் இருந்த (இன்று ஆழ்வார்பேட்டை டி.டி.கே. சாலை) 'Meru' என்ற பங்களாவில் குடியேறினார்.

19.03.1950 அன்று எழுதப்பட்ட சென்னை காஸ்மாபாலிடன் கிளப் குறிப்பொன்றில் வீடு 'Chepauk House' என்று குறிக்கப்பட்டுள்ளது.

இடையிடையே சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதெல்லாம் திருச்செங்கோடு சென்று தன் இல்லத்தில் தங்குவார். குடும்பத்தோடு போக்கம்பாளையம் சென்று உறவினர்களைச் சந்திப்பார். ஆரவாரம் மிக்க பெரு நகரங்களை விட திருச்செங்கோடு - போக்கம்பாளையம் வருகையும், வாழ்க்கையும் சுப்பராயனுக்கும் குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் மிகவும் பிடிக்கும். சென்னை, டெல்லி, பம்பாய் போன்ற இடங்களில் இருந்தாலும் உள்ளூர்த் தொடர்பை சுப்பராயனும், இராதாபாயும் மிக நெருக்கமாகக் கொண்டிருந்தனர். நண்பர்கள், உறவினர்கள் மட்டுமல்ல பொதுமக்கள் எழுதிய கடிதங்களுக்கும் உரிய பதிலை உடனடியாக எழுதுவது சுப்பராயன் பழக்கம். பெரும்பாலான கடிதங்கள் தமிழிலேயே இருக்கும். தேவைப்பட்டபோது ஆங்கிலத்திலும் எழுதுவது உண்டு.

❊ ❊ ❊

# 25. விளையாட்டு வித்தகர்

சுப்பராயன் இயல்பாகவே விளையாட்டுக்களில் மிகவும் ஆர்வம் உடையவராகத் திகழ்ந்தார்.

சென்னை நியூ விங்டன் பள்ளியில் படிக்கும் போது அப்பள்ளி நிர்வாகம் மாணவர்கள் கல்வியுடன் உடற்பயிற்சியிலும், விளையாட்டிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று வற்புறுத்தியது. அறிவு வளர்ச்சியுடன் தேக வளர்ச்சியிலும் மாணவர்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என்று கூறினர். ஒரு நாளுக்குக் குறைந்தது இரண்டு மணி நேரம் மாணவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபடும் வண்ணம் பாடத்திட்டம் அமைந்திருந்தது. இயல்பாகவே விளையாட்டில் ஆர்வம் உடைய சுப்பராயன் படிப்புடன் விளையாட்டிலும் பெரும்பகுதி நேரத்தைச் செலவிட்டார்.

பின்னர் இந்து உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தபோது உடல் பயிற்சி ஆசிரியர்கள் சீதாராம அய்யர், வெங்கட்ராம அய்யர் ஆகியோர் விளையாட்டில் சுப்பராயனுக்குப் பேருதவி செய்தனர். கிரிக்கெட், கால்பந்து, ஹாக்கி விளையாட்டில் சுப்பராயன் மிகுந்த ஆர்வமுடன் ஈடுபட்டார். அன்றெல்லாம் கிரிக்கெட்டிற்குத் தனி மைதானம் கிடையாது. காலியிடத்தில் தான் விளையாடினர்.

கிரிக்கெட்டில் இடது கைப்பந்து வீச்சாளராகவும், ஆல் ரவுண்ட ராகவும் சுப்பராயன் திகழ்ந்தார். சென்னை மாகாண கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுக்கான போட்டியில் சுப்பராயன் இறுதிச் சுற்றில் விளையாடினார்.


மாநிலக் கல்லூரி, கிறிஸ்துவக் கல்லூரியில் பயிலும்போது தண்டால், பஸ்கி, கூடைப்பந்து, பளு தூக்குதல், குத்துச் சண்டை, நீண்ட ஓட்டம், உயரம் தாண்டுதல், குதிரைச் சவாரி போன்றவை

களிலும், கிரிக்கெட்டிலும் அதிக நேரத்தைச் செலவிட்டார். குதிரை யேற்றத்தில் நன்கு பயிற்சி பெற்றிருந்தார்.


சுப்பராயனின் குதிரையேற்றம்

இங்கிலாந்தில் வாதாம் கல்லூரியில் படிக்கும் போது பள்ளியில் கிரிக்கெட் அணியில் விளையாடினார். பின் ''சர்ரே'' என்ற மாநில அணிக்காகவும், அதன் பின் ''சஸ்ஸக்ஸ்'' என்ற மாநில அணிக்காகவும் கிரிக்கெட்டில் விளையாடினார். ''மெல்போர்ன்'' கிரிக்கெட் கிளப் உறுப்பினராக இருந்தார்.

மராட்டிய மாநில ஆளுநராக இருந்தபோது பம்பாய் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா பேருரையாற்றும் போது 'பம்பாய்' போன்ற நகரங்களில் இடநெருக்கடி காரணமாக விளையாட்டு மைதானங்கள் தேவையான அளவு இருப்பதில்லை. அதனால் விளையாட்டு ஆர்வமும், அதனால் உடல் நலமும் குறைந்து போனது'' என்று வருத்தத்துடன் எடுத்துரைத்தார்.


கிரிக்கெட் விளையாடும்
ப. சுப்பராயன்

கல்லூரி வாழ்க்கையில் கிரிக்கெட் விளையாட்டில் மிகவும் சிறப்புடன் விளையாடியதாலும், கிரிக்கெட் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய சிறப்பு மிகு பணிகட்காகவும் உலகம் தழுவிய கிரிக்கெட் வரலாற்று நூலாகிய 'Wisden' 'Almane' போன்ற நூல்களில் சுப்பராயன் பெயர் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அன்று சென்னையில் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளைக் காண இந்தியர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. ஒரு முறை நண்பர்கள் சிலரோடு கிரிக்கெட்

மைதானம் சென்ற சுப்பராயன் போட்டி முடிந்து வெளிவந்த "Richmond" "C.N. Reid" போன்ற இங்கிலாந்து வீரர்களைச் சந்தித்து மிக ஆர்வமாக உரையாடினார். அதன் விளைவாகச் சுப்பராயன் மட்டும் போட்டியில் விளையாட அனுமதிக்கப்பட்டார். சுப்பராயன் பேட்டிங் முறை ஆங்கிலேயர்களை மிகவும் கவர்ந்தது.

சென்னையில் சில கிரிக்கெட் அணிகள் தனித்தனியாக இருந்தன. தேசிய அளவில் எந்த அணியும் உருவாகவில்லை. அதனால் உலக அளவில் விளையாடுகின்ற வாய்ப்புகளும் கிடைக்கவில்லை. சென்னை மாகாண முதலாவது அமைச்சராக சுப்பராயன் இருந்தபோது இங்கிலாந்தின் மெல்போர்ன் கிரிக்கெட் அணித் தலைவர் ஆர்தர் கில்லிகனை இந்தியா வந்து சென்னை அணிகளுடன் விளையாட அழைத்தார். இந்திய மண்ணில் அன்னிய அணி வந்து ஆடிய முதல் நிகழ்வு இதுவேயாகும். இங்கிலாந்து அணித் தலைவர் ஆர்தர் கில்லிகன் தேசிய அளவிலான ஒரு கிரிக்கெட் போர்டை உருவாக்குமாறு கேட்டுக் கொண்டார்.

சுப்பராயன் முயன்று சென்னையில் இருந்த எல்லாக் கிரிக்கெட் அணிகளையும் இணைத்து 1930ல் Madras Cricket Association என்ற அமைப்பை உருவாக்கினார். சுப்பராயன் அரசுப் பொறுப்பில் இருந்ததால் தலைவராக Richmond-ம், இந்தியர் சார்பில் பி. பால சுப்பிரமணியமும். எம். வெங்கட்ராமானுஜுலுவும் நியமிக்கப்பட்ட னர். சுப்பராயன் உட்படச் சிலரின் கூட்டு முயற்சியால் Indian Cricket Federation உருவாக்கப்பட்டது. 10.02.1932 அன்று சுப்பராயன் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் லீக் போட்டியில் 18 அணிகள் கலந்து கொண்டன. ஒருமுறை Indian Cricked Federation சிறப்பை எடுத்துக்காட்டக் கட்டணம் இன்றி இலவசமாகப் போட்டி களை நடத்திக் காட்டினார் சுப்பராயன். இச்சிறந்த முயற்சி சென்னை யில் இருந்த 45 கிரிக்கெட் கிளப்களை ஒன்றிணைத்தது. இதனால் Federation-ல் இதுவரை சேராமல் இருந்த சில அணிகளும் சுப்பராயன்

தலைமையை ஏற்றன. இதனால் மீண்டும் Madras Cricket Association என்ற பெயர் மாற்றப்பட்டு மீண்டும் சுப்பராயன் தலைவர் ஆனார்.

1928-ல் உருவாக்கப்பட்ட இந்தியக் கிரிக்கெட் வாரியத்தின் தலைவராக 1938ல் தேர்ந்தெடுக்கப்பட்ட சுப்பராயன் 1946 வரை பொறுப்பு ஏற்றார். அதுவரை எவரும் 2 ஆண்டுகட்கு மேல் பதவியில் நீடித்ததில்லை. சில ஆண்டுகள் இந்திய அணியை இங்கிலாந்து அணி விளையாட அழைத்தாலும் நிதி பற்றாக்குறையால் பாட்டியாலா, விஜயநகரம், பவநகர் மன்னர்கள் உதவியைப் பெற்று இந்திய அணியைச் சுப்பராயன் இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார். இது வேறு எந்தத் தலைவரும் செய்யாத பெரும் சாதனையாகும். சுப்பராயன் தலைவ ராகப் பதவி ஏற்கும் போது 1250 ரூபாய் கடன் இருந்தது. சுப்பராயன் பதவி விலகும்போது 2½ லட்சம் ரூபாய் இருப்பு இருந்தது.

மேற்கண்ட சாதனைகளால் இந்திய அரசு சுப்பராயன் அவர் களை தேசிய விளையாட்டுக் கவுன்சிலுக்குத் தலைவராக நியமித்தது. மத்திய அமைச்சர் ஆகும்வரை அப்பதவியில் இருந்தார்.

சென்னை ஹாக்கி அசோசியேசன், ஒலிம்பிக் அசோசியேசன் ஆகியவற்றிலும் தலைவராக விளங்கினார். சென்னை ரேஸ் கிளப்பில் Steward ஆக இருந்துள்ளார். இந்தியாவில் எந்த அரசியல் தலைவரும் விளையாட்டுத்துறையில் இவ்வளவு பதவிகளை வகித்தது இல்லை; இவ்வாறு சிறப்புப் பணிகள் ஆற்றியதும் இல்லை.

சுப்பராயன் பல்வேறு இதழ்களில் விளையாட்டுக்களைப் பற்றிய பல கட்டுரைகளை எழுதியுள்ளார். ஒருமுறை Sports in India இதழ் ஆசிரியர்,

''சுப்பராயன் மிகச் சிறந்த விளையாட்டு வீரர். அனைத்து விளை யாட்டுக்களைப் பற்றிய விபரங்களையும் விரல் நுனியில் வைத்திருப் பவர். நடு இரவில் அவரை எழுப்பி இங்கிலாந்தில் விளையாடிய ஆஸ்திரேலிய அணியில் இரண்டாவது இன்னிங்சில் ஐந்தாவதாக இறங்கிய வீரர் எத்தனை ரன்கள் எடுத்தார் எனக் கேட்டால் கூட அப்படியே

சொல்லி விடுவார்'' என்று சுப்பராயனின் விளையாட்டு வித்தகத்தைப் பற்றிக் கூறியது வியப்பானதல்லவா?

புத்தகப் பிரியரான சுப்பராயன் நூலகத் தொகுப்பில் கிரிக்கெட் பற்றிய புத்தகங்கள் மட்டும் 937 இருந்தன. சுப்பராயனின் வாரிசுகள் 16.06.1968 அன்று அவற்றை சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கினர். சங்கச் சார்பில் எம்.ஏ. சிதம்பரம் செட்டியார் நூல்களைப் பெற்றுக் கொண்டார்.

❈ ❈ ❈

# 26. தமிழ்ப் பணிகள்

சுப்பராயன் அவர்களின் முன்னோர் தமிழ்ப்பற்றுடன் பல புலவர் களை ஆதரித்துள்ளனர். புலவர் நரசிங்கன் என்பார் இயற்றிய 'கட்டி மகிபன் பள்ளு' என்னும் இலக்கியத்தில் சுப்பராயனின் முன்னோரான நஞ்சைய கவுண்டர்,

''செய்தமிழ் சொல் நஞ்சையதீரன் திருநாட்டில்
துய்ய கலிசைப் பள்ளி''

என்று தமிழோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகிறார்.

அந்நூலின் இறுதி வாழ்த்துப் பாடலில் சுப்பராயனின் முன்னோர்,

''நந்தமிழ்ச்சம் பந்தர்எனும் நல்லி மகீபதியும்
நஞ்சய்யனும் வாழ்கவே கூவுவாய் குயிலே''

எனத் தமிழோடு தொடர்புபடுத்தி வாழ்த்தப் பெறுகின்றனர்.

திருச்செங்கோட்டில் படி அளவு சோதனையாளராக பணி செய்யத் தொடங்கிய தி.அ. முத்துசாமிக் கோனார் பெரும் தமிழ்ப்புலமை பெற்று கொங்கு நாடெங்கும் சென்று ஏடுகள் தேடிப் பல நூல்களை ஏட்டுச் சுவடியிலிருந்து பெயர்த்து எழுதி அச்சிட்டார். 1881, 1882 ஆம் ஆண்டுகளில் சென்னை சென்று அங்குள்ள ''மட்டுவார் குழலாம்பாள்'' அச்சுக்கூடத்தில் ''அர்த்தநாரீசுரமாலை'' ''அர்த்தநாரீ சுவரர் பதிகம்'' ''சந்திர சேகரமாலை'' போன்ற சிறு இலக்கியங்களைப் பதிப்பித்தார். அப்பதிப்புகளுக்குச் சுப்பராயன் அவர்கள் தந்தையார் பெரிய பரமசிவக் கவுண்டர் பொருள் உதவி செய்துள்ளார்.

1894ஆம் ஆண்டு முத்துசாமிக் கோனாருக்குச் சேலம் சுந்தர முதலியார் இயற்றிய ''திருச்செங்கோட்டுக் கலம்பகம்'' என்ற ஏட்டுச்

சுவடி கிடைத்தது. ஏற்கனவே பதிப்பித்தவை சிறுசிறு நூல்கள். கலம்பகம் பெரிய நூல் ஆகையால் அதனைப் பதிப்பிக்க வேண்டும் என்று தி.அ. முத்துசாமிக் கோனார் பெரியபரமசிவக் கவுண்டரிடம் வேண்டிக் கொண்டார். பெரிய பரமசிவக் கவுண்டர் ''இந்நூலுக்காக நீங்கள் சென்னையில் பல நாட்கள் தங்கவேண்டியிருக்கும், நான் என் தந்தை சுப்பராயக் கவுண்டர் பெயரால் அச்சகம் ஒன்றைத் திருச்செங்கோட்டிலேயே வைத்துத் தருகிறேன். இங்கேயே அச்சுப் பணிகளைக் கவனிக்கலாம்'' என்றார்.

சேலம் மாவட்டத்தின் தனியார் முதல் அச்சுக்கூடம் 1894ல் திருச்செங்கோட்டில் ''சுப்பராயக்கவுண்டர் அச்சியந்திர சாலை'' என்ற பெயரில் உருவாகிற்று. பின்னர் முப்பதுக்கு மேற்பட்ட அரிய கொங்கு நாட்டு இலக்கியங்களை முத்துசாமிக்கோனார் பதிப்பித்து மிகப்பெரிய தமிழ்ப் பணியாற்றியமைக்கு சுப்பராயன் அவர்கள் தந்தையார் பெரிய பரமசிவக்கவுண்டர் தன் தந்தை பெயரால் அச்சியந்திர சாலை நிறுவிக் கொடுத்ததே காரணமாகும்.

திருச்செங்கோட்டுக் கலம்பக நூல் பதிப்புப் பணியில் சுப்பராய னின் தந்தையார் பெரியபரமசிவக் கவுண்டரும் ஈடுபட்டுள்ளார். அந்நூல் முகப்பில்

''திருச்செங்கோடு தாலூகா குமரமங்கலம் வகையரா மிட்டா ஜமீன்தார் ம-ரா-ரா ஸ்ரீ பெரிய பரமசிவக் கவுண்டரவர்களால் தி.அ. முத்துசாமிக் கோனாரது சுப்பராயக் கவுண்டர் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது. திருச்செங்கோடு 1896' என்று அச்சிடப்பட் டுள்ளது.

தொடர்ந்து பல நூல்கள் அச்சிடப் பொருள் உதவி செய்துள்ளார். 1895ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட ''அர்த்தநாரீசர் கும்மி'' ''முளைக் கொட்டுப்பாட்டு'' ''பாண்டீசர் கும்மி'' ஆகிய நூல்களின் முகப்பில் ''குமரமங்கலம் வகையரா மிட்டா ஜமீன்தார் ம-ரா-ரா-ஸ்ரீ பெரிய பரமசிவக் கவுண்டரவர்கள் பொருளுதவி கொண்டு'' பதிப்பிக்கப்பட்டதாக தி.அ. முத்துசாமிக் கோனார் அச்சிட்டுள்ளார்.

சுப்பராயன் ஜமீன் பொறுப்பேற்ற பின் தன் தந்தையார் பெரிய பரமசிவக் கவுண்டர் முத்துசாமிக்கோனார் பதிப்புக்களுக்குப் பொருள் உதவி செய்ததைப் போலவே தானும் பொருள் உதவி செய்துள்ளார். முத்துசாமிக் கோனாரின் பல பதிப்புகளில் Dr. P. சுப்பராயன், M.A., B.C.L., L.L.D., Bar-at-Law, M.L.C., என்ற பெயர் குறிக்கப்பட்டிருப் பதைக் காணலாம்.

கிறித்தவக் கல்லூரியில் சுப்பராயன் படிக்கும் போது வரலாறு கற்பிக்கும் ஆசிரியராக விளங்கியவர் எஸ். சத்தியமூர்த்தி. சுப்பராயன் சென்னை மாகாண முதலாவது அமைச்சராக இருந்த போது எஸ். சத்தியமூர்த்தி சட்டசபை உறுப்பினராக இருந்தார். ஒரு விவாதத்தின் போது எஸ். சத்தியமூர்த்தி ''சிறந்த தமிழ் மாணவராகிய முதலாவது அமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்கு பாரதியார் பாடல் களின் மகத்துவம் தெரியும்'' என்று பேசினார்.

சென்னை இந்து உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது அங்கு பணியாற்றிய ஆசிரியர்களைப் பற்றி நினைவு கூர்கையில் தமிழ்ப் பண்டிதர் வி.எம். கோபாலகிருஷ்ணமாச்சாரியார் அவர்களையும் மறக்காமல் குறிப்பிட்டார்.

டெல்லி, இந்தோனேஷியா, பம்பாய் எங்கு பதவிப் பொறுப்பில் இருந்தாலும் தமிழ்நாட்டிலிருந்து குறிப்பாகச் சேலம் மாவட்டம் - திருச்செங்கோட்டிலிருந்து யார் கடிதம் எழுதினாலும் தவறாமல் பதில் கடிதம் எழுதுபவராகவும், அவர்கள் வேண்டுகோளை நிறைவேற்றுபவ ராகவும் சுப்பராயன் விளங்கினார். கடிதம் தமிழில் இருக்கும்; கையெழுத்தும் தமிழில் இருக்கும்.

ஏ.கே. செட்டியார் என்பவர் உலகம் சுற்றிய தமிழர். ''குமரிமலர்'' ஆசிரியராகிய அவர் பல பயண நூல்கள் எழுதியுள்ளார். அவர் எழுதிய ''மலேயா முதல் கனடா வரை'' என்னும் நூலில் (1955) பின்வரு மாறு எழுதியுள்ளார்.

''மலேயாவிலிருந்து இந்தோனேஷியா செல்ல விரும்பினேன்; அப்பொழுது இந்தோனேஷியாவில் நமது அரசாங்கப் பிரதிநிதியாகப் பணியாற்றியவர் டாக்டர் சுப்பராயன். அவர் பலமுறை அன்புடன் கடிதம் எழுதுவார். அத்தனையும் ''தமிழில்'' (பக்கம் 252).

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அமைக்க முதலாவது அமைச்சர் சுப்பராயன் உதவும்போது அதைத் 'தமிழ்ப் பல்கலைக் கழகம்' என்றே குறிப்பிட்டுள்ளார்.

சுப்பராயன் மாநிலக் கல்லூரியில் பயிலும் போது அவருக்குத் தமிழாசிரியராக விளங்கியவர் டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள். அவருக்கு மாநிலக் கல்லூரி வளாகத்தில் சிலை அமைக்கச் சுப்பராயன் விரும்பினார்.

சிலை அமைக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்து 06.05.1948 அன்று நடைபெற்ற சிலை திறப்பு விழாவிலும் கலந்து கொண்டு தமிழ்த்தாத்தா அவர்களின் தமிழ்ப் பணிகளைப் பாராட்டியதுடன் தாம் மாணவராக இருந்தபோது நடைபெற்ற நிகழ்வுகளையும் நினைவு கூர்ந்தார்.

08.09.1928 அன்று சென்னை மாகாண முதலாவது அமைச்சரும் கல்வியமைச்சரும் ஆகிய சுப்பராயன் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக மசோதாவைத் தாக்கல் செய்து சட்டசபையில் பேசும் போது,

''இந்த மசோதாவில் தமிழ் மொழிக்கும் பிற ஓரியண்டல் மொழி களுக்கும் தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நமது தமிழ்மொழியின் உயர்வைப் பற்றியும், பழமையைப் பற்றியும், கலாச்சாரத்தைப் பற்றியும் நாம் பேசிக் கொண்டிருந்தாலும் அதன் தன்மைகளையும், செறிவை யும் யாரும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. வளர்க்கவுமில்லை.

மதுரையில் இருந்த தமிழ்ச்சங்கம் மட்டுமே அந்த முயற்சியில் ஈடுபட்டிருந்தது. தமிழின் உண்மையான அழகும், செழிப்பும்

தற்போதைய புத்தகங்களில் இல்லை என்பது எனது தாழ்மையான கருத்து.

இன்றைய நடைமுறையில் இருக்கின்ற மனிதனுக்கு மனிதனை வேறுபடுத்துகின்ற குற்றத்தை நமது தமிழ் இலக்கியத்தில் பார்க்க முடியுமா? அவ்வளவு உயர்ந்த நிலையிலிருந்த தமிழ்ச் சமுதாயம் இன்று சின்னாபின்னமாகியதற்கு அதன் உண்மைத் தத்துவங்களை மொழி மூலம் புரிந்து கொள்ளாமல் போனதே காரணம் என்பேன்'.

1939ஆம் வருடம் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை எழுதிய 'பிரார்த்தனை' என்ற நூலுக்கு முன்னுரை எழுதியதுடன் அந்த நூலை வெளியிட்டுச் சிறப்புரையும் ஆற்றினார்.

1943ல் ஏ.கே. செட்டியார் வெளியிட்ட ''குமரிமலர்'' இரண் டாம் இதழில் எஸ். சத்தியமூர்த்தியவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார். 1944ஆம் ஆண்டு கலைமகள் பொங்கல் மலரில் ''உலக அமைதி'' என்ற தலைப்பில் கட்டுரை எழுதினார். 01.01.1948ல் ம.ப. பெரியசாமித் தூரன் அவர்கள் முயற்சியில் நடைபெற்ற ''தமிழ்த் திருநாள்'' விழாவில் கலந்து கொண்டார்.

இராஜாஜி மேற்கு வங்கக் கவர்னராக இருந்த போது எழுதிய திருக்குறள் பற்றிய நூலின் கைப்பிரதியைச் சீரமைக்கும் பொறுப்பை சுப்பராயனிடம் ஒப்படைத்தார். சுப்பராயன் பணிகளை இராஜாஜி பாராட்டினார். 1948 ஆம் ஆண்டு கி.வா. ஜகந்நாதனின் கலைமகள் இதழில் 'வருங்கால அரசியல்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி னார். எழுத்தாளர் நாரண துரைக் கண்ணன் என்பவர் 'இராஜாஜி' என்ற பெயரில் வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றை எழுதினார். அந்நூலுக்குச் சிறந்ததோர் முன்னுரையைச் சுப்பராயன் எழுதியுள்ளார்.

எழுத்தாளர் சோமலெ ''சேலம் மாவட்டம்' என்ற வரலாற்று நூலை 1961ல் எழுதினார். அதற்கு விரிவான முன்னுரையைச் சுப்பராயன் எழுதியுள்ளார்.

இன்னும்

டி. பிரகாசத்தின் ''சுயராஜ்யா''

இராஜாஜியின் ''விமோசனம்''

தமிழ் சாஸ்திர பரிபாஷைச் சங்கப் பத்திரிகை

பி. வரதராஜுலு நாயுடுவின் ''தமிழ்நாடு''

டி.என். நடராசப் பிள்ளையின் ''தென்னாடு''

சக்தி கோவிந்தனின் ''சக்தி''

நாரண துரைக்கண்ணனின் ''பிரசண்ட விகடன்''

''சுதேசமித்திரன்'' ''தேசபக்தன்'' ''தினமணி'' ''நவ இந்தியா''

'சண்டமாருதம்' ஆகிய பல இதழ்களில் சுப்பராயன் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

சுப்பராயன் தமிழ்ப் பணிகளில் சிறந்தது அவர் தகவல்தொடர்பு அமைச்சராக இருந்தபோது 1960ஆம் ஆண்டு திருவள்ளுவர் அஞ்சல்தலை, பாரதியார் அஞ்சல்தலை வெளியிட்டதும், மணியார்டர் படிவம் தமிழிலும் அச்சிடப்பட்டதுமாகும்.

சுப்பராயன் அவர்களின் மக்கள் அனைவரும் இணைந்து 1962ல் ''எங்கள் தந்தையார்'' என்ற பெயரில் சிறு வெளியீடு ஒன்றை வெளியிட்டனர். இராதாபாய் பற்றி ''எங்கள் தாயார்'' என்ற நூலும் 1960ல் வெளியிடப்பட்டது.

1940 ஆம் ஆண்டு திருச்சி சிறையில் இருந்தபோது இராஜாஜி ஏற்பாட்டில் நடத்தப்பட்ட நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருக்குறள் இலக்கிய வகுப்புகளில் மிக ஆர்வமுடன் சுப்பராயன் கலந்து கொண்டார்.

தமிழ்மொழி மீது பற்றும் ஆர்வமும் கொண்டிருந்தாலும் சுப்ப ராயன் பிற மொழிகளை வெறுக்கவில்லை. டெல்லியில் இருக்கும் போது இந்திப் பிரச்சார சபையில் இந்தி கற்றுக் கொண்டார். திருச்சி சிறையில் சிலசமயம் வரதாச்சாரியார் என்பவரிடம் வடமொழி கற்றார்.

# 27. நீங்கா நினைவுகள்

''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்றார் திருவள்ளுவர் பெருமான். அவ்வாக்கிற்கு இணங்க புகழொடு வாழ்ந்த பெருமகன் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களின் பெயர் தாங்கி நிற்கும் பெருமையும், பேற்றையும் சில இடங்கள் பெற்றுள்ளன. மக்களை நேசித்த அவருக்குச் செய்யும் அஞ்சலியாக அந்த இடங்கள் இன்றும் திகழ்கின்றன.

கிரிக்கெட் விளையாட்டைப் பற்றிய தகவல் களஞ்சியமாக விளங்கிய சுப்பராயன் தொகுத்துப் பாதுகாத்த கிரிக்கெட் பற்றிய நூல்கள் 937. அந்த நூல்கள் அனைத்தும் அவருடைய வாரிசுகளால் சேப்பாக்கம் கிரிக்கெட் சங்கத்திற்கு 16.06.1968 அன்று அன்பளிப்பாக அளிக்கப்பட்டன. அந்த நூல்கள் அனைத்தும் அவருடைய பெயரில் அங்கு நிறுவப்பட்டுள்ள நூலகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. அந்த நூலகத்தை எம்.ஏ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

சென்னை திரையுலக மையமான கோடம்பாக்கம் பகுதியில் ''சுப்பராயன் நகர்'' என்ற பெயரில் ஒரு பகுதி உள்ளது. அங்கு இப்போது புகழ்பெற்ற திரையுலகக் கலைஞர்கள் பலர் வாழ்ந்து வருகின்றனர்.

சென்னை அண்ணா சாலையில் அண்ணா அறிவாலயம் அருகில் தபால் தந்தித் துறையினர் வாழும் குடியிருப்பு ஒன்றுள்ளது. அதற்கு அத்துறையின் புகழ்பெற்ற அமைச்சராக விளங்கிய சுப்பராயன் பெயரிடப்பட்டு ''சுப்பராயன் நகர்'' என விளங்கி வருகிறது.

சேலம் மாவட்டத்தின் சீர்மிகு நாயகராக விளங்கிய சுப்பராயனின் பெயர் தாங்கும் பெருமையை மாவட்டத் தலைநகர் சேலத்தில் இரயில்வே நிலையம் அருகில் உள்ள சாலை ''சுப்பராயன் சாலை''

என்று அழைக்கப்படுகிறது. இன்றைய நாமக்கல் மாவட்டத்தில் குமாரபாளையம், பள்ளிபாளையம், நல்லிபாளையம் போன்ற ஊர்களிலும் சுப்பராயன் பெயரில் சாலைகள் உள்ளன. கோவை நகரிலும் ஒரு பகுதிக்குச் சுப்பராயன் நகர் எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலை அருகில் உள்ள குடியிருப் புக்குச் சுப்பராயன் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

சுப்பராயன் பல ஆண்டுகள் வாழ்ந்து பெருமை பெற்ற நகரம் திருச்செங்கோடு. திருச்செங்கோட்டில் டாக்டர் சுப்பராயன் அவர்களின் மார்பளவு உருவச்சிலையை 25.10.1988 அன்று ராஜீவ்காந்தி அவர்கள் திறந்து வைத்தார்கள். பின்னர் திருச்செங்கோடு நகரில் டாக்டர் சுப்பராயன் அவர்களின் முழு உருவச்சிலை 08.07.2007 அன்று பேருந்து நிலையம் அருகில் நிறுவப்பட்டுள்ளது.



நாடாளுமன்ற
மண்டபத்தில் உள்ள படம்
(18.01.1979)

தகவல் தொடர்புத் துறை அமைச்சராக விளங்கி முக்கிய நிகழ்வின் நினைவன்றும், பெருமக் களின் நினைவாகவும் 25க்கும் மேற்பட்ட அஞ்சல் தலைகள் வெளியிட்டுச் சிறப்புச் செய்த டாக்டர் சுப்பராயன் அவர்களின் நினைவு அஞ்சல்தலை 30.09.1989 அன்று வெளியிடப்பட்டது.

பாராளுமன்ற மாநிலங்கள் அவை மண்டபத்தில் டாக்டர் சுப்பராயன் அவர்களின் திருஉருவப்படம் துணைக் குடியரசுத் தலைவர் சங்கர் தயாள்சர்மா அவர்களால் 18.01.1979 அன்று திறந்து வைக்கப்பட்டது.

நாட்டை நேசிக்கும் நல்லோர் உள்ளங்களில் எல்லாம் சுப்பராயன் நிலையாகக் குடிகொண்டுள்ளார்.

❊ ❊ ❊

# 28. இராதாபாய் சுப்பராயன்



இராதாபாய் சுப்பராயன்

மங்களூரில் குடியேறிய சரஸ்வதி பிராமணர் என்னும் காஷ்மீர பண்டிதரான தேவப்பையாவின் மூத்த மகன் ரங்கராவ். தந்தையை இழந்த ரங்கராவ் இளம் வயதில் ஆசிரியப் பணி ஏற்றுக் குடும்பத்தைக் காப் பாற்றினார். உயர்கல்வி கற்று வழக் கறிஞராகி ஏழை மக்களுக்காக வாதாடி னார். ருக்மணிபாய் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். ''ஏழைகள் சேவை மையம்'' தொடங்கி னார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வி அளித்தால் அவர்கள் அதனால் முன்னேறலாம் என்று எண்ணிப் பள்ளிகள் தொடங்கி அவர்கள் சுயமாக வாழ தொழிற்பயிற்சி அளித்தார். சாதி வேறுபாடற்ற சமூகம் காண விரும்பும் ''பிரம்ம சமாஜம்'' இயக்கத்தை மங்களூரில் தொடங்கினார். சேவைக்காக ராவ் பகதூர் பட்டம் பெற்றார்.

ரங்கராவிற்கு லலிதாபாய், இராதாபாய், சாந்திபாய் என்ற மூன்று பெண் மக்கள். சமூக எதிர்ப்பை மீறி பெண்களைப் பள்ளிக்கு அனுப்பினார். இராதாபாய் மேற்படிப்புக்காகச் சென்னை வந்தார். படித்துக் கொண்டே பெண்கள் முன்னேற்றம் பற்றி எழுதினார், பேசினார். அதனால் சுப்பராயனோடு பழக்கம் ஏற்பட்டது. அப்பழக்கம் நட்பாக மாறியது. இருவரும் திருமணம் செய்து கொள்ள விரும்பினர்.


பிரம்ம சமாஜக் கூட்டங்கட்குச் சென்னை வந்த ரங்கராவ் அவர்களை சுப்பராயன் அவர்கள் சந்தித்தார். திருமணத்திற்கு அவர் சம்மதம் தெரிவித்தார். சென்னையில் படிப்பை முடித்த சுப்பராயன் ஜமீன் பொறுப்பேற்ற பின் குடும்ப நண்பரும், குடும்ப வழக்கறிஞரு மான இராஜாஜி மூலம் தன் தாய்க்குத் திருமணச் செய்தியை அறிவித்தார். ஒரே மகன் காதல் திருமணத்திற்குத் தாய் பாப்பாயம்மாள் தடையாக இருக்கவில்லை.

1912 ஆம் ஆண்டு மே மாதம் மங்களூரில் பிரம்ம சமாஜ முறைப்படி திருமணம் நடைபெற்றது. இராஜாஜி உட்பட நண்பர்கள் பலர் கலந்து கொண்டனர். சுப்பராயன் குடும்பப் பங்காளிகள் மூவரோடு தாய் பாப்பாயம்மாளும் திருமணத்தில் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டார்.

1913ஆம் ஆண்டு மேல்படிப்புக்காகக் கணவர் சுப்பராயனோடு லண்டன் சென்ற இராதாபாய் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் சோமன் வில்லே கல்லூரியில் சேர்ந்து படித்தார். கணவனும், மனைவி யும் ஒரே விடுதியில் தங்கினர். கருவுற்ற இராதாபாய் பிரசவத்திற்காக மங்களூர் திரும்பி வந்தார். 01.07.1913 அன்று மூத்த மகன் ''பரமசிவம் பிரபாகர்'' பிறந்தார். இராதாபாய் மீண்டும் இங்கிலாந்து சென்று படிப்பைத் தொடர்ந்தார்.

படிப்பு முடிந்ததும் முதல் உலகப் போரின் காரணமாக இந்தியா திரும்ப முடியவில்லை, சுப்பராயன் மேல்படிப்பைத் தொடர்ந்தார். இங்கிலாந்தில் 11.05.1915 அன்று இரண்டாவது மகன் ''ஜெயவந்த் கோபால்'' பிறந்தார். 01.11.1916 அன்று மூன்றாம் மகன் ''சுரேந்திர மோகன்'' பிறந்தார்.

1918 ஆம் ஆண்டு சுப்பராயனும் இராதாபாயும் தாயகம் திரும்பினர். கருவுற்றிருந்த இராதாபாய் பிரசவ சமயத்தில் ஊட்டியில் தங்கினார். ஊட்டியில் 15.03.1919 அன்று பிறந்த பெண் குழந்தைக்குச் சுப்பராயனின் பாட்டியின் பெயராகிய ''பார்வதி'' என்ற பெயரை வைத்தனர்.



நன் மக்கள் நால்வர்

திருச்செங்கோட்டில் தங்கிய சுப்பராயன் குடும்பத்தினருக்கு குமரமங்கலம் கிராம சூழ்நிலை மிகவும் பிடித்திருந்தது. சுப்பராயனும் இராதாபாயும் கிராம மக்களோடும், ஏழை எளியவர்களோடும் பாசத் தோடு பழகினர். மக்களும் இவர்கள் மீது அன்பைப் பொழிந்தனர். 1920ல் சுப்பராயன் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதால் சென்னையில் குடியேறினர்.

இராதாபாயின் தங்கை சாந்திபாய் சென்னை இராணி மேரி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். தங்கையைக் காணச் சென்ற இராதாபாயின் கல்வி ஆர்வம் கண்ட கல்லூரி நிர்வாகத்தினர் இராதா பாயைக் கல்லூரி நிர்வாகக் குழு உறுப்பினர் ஆக்கினர். இராதாபாயின் முயற்சியால் இராணி மேரி கல்லூரியில் ஸ்டோன் பிளாக் பகுதிக் கட்டிடங்கள் கட்டப்பட்டன.

இராதாபாய் பணிகள் பற்றிக் கேள்விப்பட்ட கவர்னர் லார்டு வெலிங்டன் சென்னை மாவட்டக் கல்விக் குழுவில் இராதாபாயை உறுப்பினர் ஆக்கினார். இப்பணியில் நியமிக்கப்பட்ட முதல் பெண்

இராதாபாயே ஆவார். 1921 முதல் 1923 வரை அக்குழுவில் பணி யாற்றினார். 1923 ஆம் ஆண்டு கணவர் சுப்பராயனோடு இராதா பாயும் சென்னைப் பல்கலைக்கழக செனட்டிற்கும், பின் செனட் வழியாக பல்கலைக்கழக சிண்டிகேட்டிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இராதாபாயின் தந்தை சமுதாயப் பணிகள், தாழ்த்தப்பட்டோர் நல்வாழ்வுப் பணி விரிவடைந்து, 1927ஆம் ஆண்டு துறவியாகி ஈஸ்வரானந்த சுவாமி என்று அழைக்கப்பட்டார். சொத்துக்களைத் தாழ்த்தப்பட்டவர் நலனுக்கு எழுதி வைத்தார். இறந்தபின் தன் சடலத்தை அரிஜனங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவ்வாறே நடைபெற்றது. 30.01.1928ல் காலமானார். அவர் பணிகள் பற்றிக் கேள்விப்பட்ட காந்திஜி ஒருமுறை அவர் சமாதிக்கு வந்து அஞ்சலி செலுத்தி ''உங்கள் குரு ரங்கராவ்தான் என் உண்மையான குரு'' என்று புகழ்மாலை சூட்டினார். ஒரு சமயம் தாகூரும் வந்து அஞ்சலி செலுத்தினார்.

சுப்பராயன் எதிர்க்கட்சித் தலைவராய் இருக்கும் போது அரசு இராதாபாயை ''தாய்சேய் நலச் சங்கம்'' அமைத்துத் தலைவராக நியமித்தது. அவரது பரிந்துரையால் தான் அரசு மருத்துவமனைகளில் தாய் சேய் நலப்பிரிவு தொடங்கப்பட்டது.

1930 ஆம் ஆண்டு ''சேலம் மாவட்ட ஆணைக்குழு'' உறுப் பினராக இராதாபாய் நியமிக்கப்பட்டார். அக்குழுவில் நியமிக்கப்பட்ட முதல்பெண் இராதாபாய் ஆவார். திருச்செங்கோட்டில் 1943ல் மாதர் சங்கம் நிறுவினார். அதன் தலைவராக விளங்கிய இராதாபாய் பரம்பரை கிராம முன்சீப் T.A. அப்புசாமி நாயுடு அவர்களின் துணைவியார் R. வேதாம்பாள் அவர்களைத் தலைவர் ஆக்கினார். இந்திய மாதர் சங்கத்தில் இணைந்து பெண்கள் நலத்துக்காகப் பாடுபட்டார்.

1930 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற முதல் வட்ட மேஜை மாநாட்டிலும், 1931 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் வட்ட மேஜை மாநாட்டிலும் கலந்து கொண்டு பெண்கள் உரிமைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். அம்மாநாடுகளில் இந்தியப்

பெருந்தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர். 1932ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவது குறித்து ஆராய அமைக்கப் பட்ட ''வாக்குரிமைக்குழு'' உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினரான ஜார்ஜ் ஜோசப் காலமானதால் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் அடங்கிய தொகுதி இடைத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராக 1938ல் இராதாபாய் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திய நாடாளுமன்ற முதல் பெண் உறுப்பினர் என்ற பெருமையைப் பெற்றார். நாடாளுமன்றத்தில் அவரது நடவடிக்கைகளும், பொருள் ஆழம் மிக்க உரைகளும் அனைவரையும் கவர்ந்தது.

03.08.1940 அன்று சுப்பராயனோடு திருச்செங்கோட்டில் தனிநபர் சத்யாக்கிரகத்தில் ஈடுபட்டுக் கைதாகி ஆறு மாதம் சிறைத் தண்டனை பெற்று வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். உடல்நலம் குன்றிய போதும் அதன் காரணமாக வெளி வர மறுத்து விட்டார்.

1946ஆம் ஆண்டு சென்னைத் தொகுதியிலிருந்து இராதாபாய் மாநிலங்கள் அவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இராதாபாய்க்கு 2427 வாக்குகளும், எதிர்த்து நின்றவருக்கு 133 வாக்குகளும் கிடைத்தன. பெண்கள் நலத்துக்காகவும், உரிமைக்காகவும் வாதாடினார். பல விவாதங்களில் கலந்து கொண்டார். ஒருமுறை அவைத் தலைவர் இராதாபாய் உரையை மிகவும் பாராட்டினார்.

நாடாளுமன்ற உரைகளில் இராதாபாய் தமிழக சமயம், இலக்கியம் பற்றி அளித்த விளக்கங்கள் வியக்கத்தக்கவை. பெண்கள் உரிமை, இந்து திருமணச் சட்டம் பற்றி உரையில் அவர் கீழ்வருமாறு பேசினார்.

''இந்து திருமணத்தின் வழியாக கணவன், மனைவி இடையே உண்மையான உறவு ஏற்படுகிறது. சேலம் மாவட்டத்தில் திருச்செங்கோடு மலை உச்சியிலே அர்த்தநாரீசுவரர் கோயில் உள்ளது. பிரதான வழிபாடு கடவுள் பாதி சிவனாகவும், பாதி பார்வதியாகவும் உள்ளது. கணவன், மனைவியிடையே இருக்க வேண்டிய பரஸ்பர

மரியாதையும், சமத்துவமும் பக்தர்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காகவே சிவன் அர்த்தநாரீசுவரர் உருவானார். இப் புதுமையான விளக்கம் சிறப்புக்குரியது.

தமிழ்நாட்டுப் புராணக் கதைகளில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்க்கை ஒழுக்கம் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. நளன் தமயந்தி, சத்தியவான் சாவித்திரி வரலாறு கிராமப்புறக் கதையாகவும், கூத்தாகவும் பொதுமக்களுக்குப் போதிக்கப்பட்டு வருகிறது.

இரண்டாவது மனைவியைத் தேடிப் போன சிலப்பதிகாரக் கோவலன் கொலையுண்டு போன கதையைக் கூறி ஆண்கள் ஒழுக்கத்தில் ஏற்படும் தடுமாற்றத்தால் ஏற்படும் விபரீதம் விளக்கப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் திருக்குறளும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒழுக்க நெறியை வலியுறுத்துகிறது'' என்பது இராதாபாயின் உரைப் பகுதியாகும்.

பிராமணக் குடும்பத்தில் பிறந்து காதல் - கலப்புமணம் செய்து கொண்டு மேனாட்டுக் கல்வி கற்று சிறந்த குடும்பத் தலைவியாக விளங்கி மக்களை அறிவார்ந்த மக்களாக்கி ஆணுக்குப் பெண் சரிசமமாக வாழ்ந்து பல துறைகளில் முதல் - முதன்மைப் பெண்ணாக விளங்கி பெண் குலத்தின் ஒளி விளக்காகத் திகழ்ந்த இராதாபாய் 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் காலமானார்.

# 29. பரமசிவம் பிரபாகர் குமாரமங்கலம்



பரமசிவம் பிரபாகர்
குமாரமங்கலம்

01.07.1913 அன்று மங்களூரில் இராதாபாயின் பெற்றோர் வீட்டில் பரமசிவம் பிரபாகர் பிறந்தார். பரமசிவம் தாத்தாவின் பெயர். சென்னை சர்ச் பார்க் பள்ளியில் சேர்ந்த பரமசிவம் பிரபாகர் பின்னர் இங்கிலாந்தில் நெட் (Knet) மாகாணத்தில் பிக்ளிப் பகுதியில் உள்ள செயின்ட் ஹூக்ஸ் (St. Hugh's) பள்ளியில் சேர்க்கப்பட்டார். பின்னர் புகழ்பெற்ற ஈடன் (Eton) பள்ளியில் படித்தார். பின்னர் வூல் விக்கில் உள்ள பீரங்கிப் படைக்களக் கல்லூரியில் சேர்ந்தார். இறுதியாக ''ராயல் மிலிட்டரி அகாடமியில்'' பயின்று 1933 ஆம் ஆண்டு மிக உயரிய KCIO பட்டம் பெற்றார். King's Commission of Indian Officer.

தாயகம் திரும்பிய பிரபாகர் சென்னையில் உள்ள பீரங்கிப் படையின் முதலாவது பேட்டரிப் பிரிவில் லெட்டினன்ட்டாக நியமிக்கப் பட்டார். பின்னர் இப்பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டு பீரங்கிப் படைப் பயிற்சி வகுப்பிற்காக மதுராவிற்கு மாற்றப்பட்டார்.

இரண்டாவது உலகப் போர் மூண்டு உச்சகட்டம் அடைந்தது. ஜெர்மனியை ஆண்ட ஹிட்லர் பிற நாடுகள் மீது வெறித்தனமாகத் தாக்குதலைத் தொடுத்தான். ஜெர்மனியோடு இத்தாலியும், ஜப்பானும்

சேர்ந்து கொண்டன. இந்நாடுகளை எதிர்த்து பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் போரிட்டன. இந்தியப் படை களையும் பிரிட்டன் போருக்கு அனுப்பியது. மேஜர் பரமசிவம் பிரபாகர் குமாரமங்கலம் எகிப்துப் பகுதிக்கு அனுப்பப்பட்டார்.

பாலைவனப் பகுதியில் நாஜிப் படைகளை எதிர்க்கும் வடபகுதி ரெஜிமெண்டின் தலைமைக் கமாண்டராக மேஜர் பரமசிவம் பிரபாகர் குமாரமங்கலம் நியமிக்கப்பட்டு இவரது படைக்கு ''7ஆவது ஃபீல்டு பேட்டிரி RIA'' என்று பெயரிடப்பட்டது.

1942 மே 26 அன்று எதிரிப்படை போருக்கு ஆயத்தம் ஆனது. எதிரி விமானப் படை ஆயுதங்களையும், வீரர்களையும் கொண்டு வந்து இறக்கியது. 80 டாங்கிகளையும் 600 வாகனங்களையும் தயார் நிலை யில் எதிரிகள் வைத்திருந்தனர். Gazala Bir Hachaim பகுதியில் இரு படைகளும் எதிர் எதிர் நின்றன.

பி.பி. குமாரமங்கலத்திற்கு ஒதுக்கப்பட்ட மூன்றாவது பிரிகேடில் ஒரு டாங்கி கூட இல்லை. பீரங்கிகளைத் தாக்கும் இரண்டு கன்கள் மட்டும் இருந்தன. இவை இரண்டும் தொலைதூரம் சென்று தாக்கும் வலிமையற்றவை. எதிரிகளிடம் PANZER என்ற வலிமை மிக்க டாங்கிகள் பல இருந்தன. அவைகளை தாக்கித் தகர்க்க மிக அருகில் சென்றால் தான் முடியும்.

பி.பி. குமாரமங்கலத்திடம் 25 பவுண்ட்ரி துப்பாக்கிகளைக் கொண்ட ஒரு சிறு ரெஜிமெண்ட் மட்டுமே இருந்தது. வீரர்களும் இதற்கு முன் போர்க்களத்தில் பணியாற்றிப் பயிற்சி இல்லாதவர்கள். இந்த இக்கட்டான சூழ்நிலையில் எந்த நாட்டுப் படையும் உயிர்களைக் காத்துக் கொள்ள சரணடைய விரும்பும். இவ்வளவு தடைகள் இருந் தும் எதிரிகளைக் களத்தில் சந்திப்பது என்று பி.பி. குமாரமங்கலம் முடிவு செய்தார்.

''கடைசி புல்லட் இருக்கும் வரை சுட்டுத் தள்ளுவோம். கடைசி வீரர் இருக்கும் வரை போராடுவோம்'' என்று வீரர்களை நோக்கி அறைகூவல் விடுத்தார்.

அணி அணியாக வந்த டாங்கிகள் பல நம் வீரர்களால் நொறுக்கப்பட்டன. பல பலத்த சேதத்துடன் பின் வாங்கின. வீரர்கள் எண்ணிக்கை, நவீன ஆயுதங்கள் குறைவு பற்றிக் கவலை கொள்ளாமல் உள்ளத் துணிவு ஒன்றை மட்டும் துணையாகக் கொண்டு பெரும்படை முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தினார். ஏ பிரிவுப்படை 20 டாங்கிகளை அழித்தது. நாயக் ஜெகநாதன் 8 டாங்கிகளை அழித்தார். துப்பாக்கிப் படையினர் இருவர் 12 டாங்கிகளை தீக்கிரையாக்கினர்.

தன் வீரர்கள் பலியாவதைக் கண்ட மேஜர் பி.பி. குமாரமங்கலம் கண்கள் சிவந்தன. உயிரைத் துச்சமென மதித்து எதிரிகளை டாங்கு அருகே சென்று சுட்டார். இரண்டு டாங்கிகள் அழிந்தன. முகாமிற்குத் திரும்பிச் சென்ற டாங்கி ஒன்றை ஓடிச் சென்று தடுத்துத் தகர்த்தார்.

பி.பி. குமாரமங்கலத்திடம் குண்டுகள் தீர்ந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில் மேஜர் பி.பி. குமாரமங்கலத்தை நோக்கி நாஜி படைக் கேப்டன் இருமுறை சுட்டான். நல்லவேளையாகக் குண்டு தவறியது. ''சரணடைந்து விடு'' என்று நாஜி படைக் கேப்டன் கத்தினான். குமாரமங்கலம் கம்பீரமாக அஞ்சாமல் நின்று கொண்டிருந்தார். குமாரமங்கலத்தின் கம்பீரம் கண்டு நாஜிப் படைத் தலைவர் வியப்படைந்தான். குமாரமங்கலத்தைக் கைது செய்து இத்தாலியில் ஓரிடத்தில் சிறை வைத்தனர். இந்த வீர தீர சாகசம் நிகழ்த்தியபோது குமாரமங்கலத்திற்கு வயது 29.

மீண்டும் போர்க்களம் செல்ல சிறையிலிருந்து தப்பி மீண்டும் பரமசிவம் பிரபாகர் குமாரமங்கலம் கைதானார்.

28.08.1942 அன்று இங்கிலாந்தின் மக்களவையில் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் குமாரமங்கலத்தைப் பாராட்டி ''அவர் வீரத்தை

வெறும் உலோகத்தால் கௌரவப்படுத்திவிட முடியாது'' என்று கூறினார்.

ஸ்டேட்ஸ்மேன் போன்ற பல இங்கிலாந்து இதழ்கள் குமார மங்கலத்தின் வீரத்தையும் தீரத்தையும் பாராட்டின. இங்கிலாந்தின் மிக உயரிய விருதான DSO (Distinguised Service Officer) விருது பி.பி. குமாரமங்கலத்துக்கு வழங்கப்பட்டது.

07.05.1945 அன்று இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது. 1945 டிசம்பரில் மேஜர் பி.பி. குமாரமங்கலம் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். கோபால்சாமி அய்யங்கார் தலைமையில் அமைக் கப்பட்ட ''இந்திய ராணுவத்தைத் தேசியமயமாக்கும் திட்டக் குழு'' உறுப்பினராக நியமிக்கப்பட்டார். தொடர்புடைய பலரைப் பேட்டி கண்டு ஆய்வு செய்து இக்குழு அரசிடம் அறிக்கையை அளித்தது. ஒரு பேட்டியில் தலைவர் கோபால்சாமி அய்யங்கார் ''இந்த ராணுவத் திட்ட வரைவுகளில் மிகப் பெரும்பகுதி மேஜர் பி.பி. குமாரமங்கலம் தந்த ஆலோசனைகளே'' என்று கூறினார்.

பூனாவிலுள்ள இராணுவ முகாமில் லெப்டினன்ட் கர்னலாக மேஜர் பி.பி. குமாரமங்கலம் நியமிக்கப்பட்டார். பம்பாய் மலபார் ஹில் பகுதியைச் சேர்ந்த ஒரு பார்சி குடும்ப அறிமுகம் மேஜர் பி.பி. குமார மங்கலத்திற்குக் கிடைத்தது. பார்சி குடும்பத் தலைவருக்கு மூன்று பெண்கள். அவர்களில் பிரோஜா என்ற பெண்ணைப் பார்த்ததும் தன் திருமணம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார். பிரோஜாவை மணம் செய்து கொள்ள விரும்பினார். இந்தச் சந்தர்ப்பத்தில் பிரிகேடியர் பதவியும், அமெரிக்கா சென்று நவீன பீரங்கிப் படைப் பயிற்சி பெறவும் வாய்ப்பு வந்தது. பிரிகேடியர் பதவியை பி.எஸ். கியானி என்பவருக்கு அளித்து விட்டு அமெரிக்கா சென்றார். அமெரிக்காவில் ஒகலாஹோ மாவில் நவீன பீரங்கிகளின் தொழில் நுணுக்கங்களை ஓராண்டு பெற்றார். ஒரு அமெரிக்க நீதிபதியின் நட்பால் அங்கு திருமண ஏற்பாடுகளைச் செய்து விட்டு இந்தியா வந்தார்.

1949 ஆம் ஆண்டு பிரோஜாவை அழைத்துக் கொண்டு சென்னை வந்து பெற்றோருடைய ஆசி பெற்றுக் கொண்டு மீண்டும் அமெரிக்கா சென்று கிறித்துவ நீதிபதியின் முன்னிலையில் திருமணம் செய்து கொண்டார். 1950ல் இந்தியா திரும்பிய பி.பி. குமாரமங்கலத்திற்கு இந்திய ராணுவத் தலைமை அலுவலகத்தில் பிரிகேடியர் பதவி வழங்கப்பட்டது. மேற்கு ராணுவ கமாண்டராகவும், பின் இராணுவத் தலைமை இடத்தில் இயக்குநராகவும் நியமிக்கப்பட்டார். பின்னர் வெலிங்டன் இராணுவக் கல்லூரியில் பிரிகேடியர் பயிற்சிக்காக 1952ல் சேர்ந்தார்.வெலிங்டன் DSCC கல்லூரியில் கமாண்டன்ட் பணியில் சேர்ந்தார். அக்கல்லூரியின் முதல்வருமானார். கல்லூரி முதல்வராக இருந்து இவர் ஆற்றிய பணிகள் பலராலும் போற்றப் பட்டன.

பி.பி. குமாரமங்கலம் லண்டனில் உள்ள இம்பீரியல் இராணுவக் கல்லூரியில் பயிற்சிக்காக அனுப்பப்பட்டார். பின் இந்திய ராணுவத் தலைமையகத்தில் லெப்டினன்ட் ஜெனரல் பதவி, கிழக்கு கமாண்டின் பொது கமாண்டிங் ஆபீசர், துணை இராணுவத் தளபதி, இணை இராணுவத் தலைமைத் தளபதி முதலிய பொறுப்புக்களை ஏற்றார்.

இந்திய பாகிஸ்தான் போருக்குப்பின் ரஷ்ய நாட்டு டாஷ்கண்டில் நடைபெற்ற லால்பகதூர் சாஸ்திரி அயூப்கான் பேச்சு வார்த்தையின் போது பிரதமருடன் பி.பி. குமாரமங்கலம் சென்றார். டாஷ்கண்டில் எதிர்பாராத வகையில் அகால மரணம் அடைந்த லால்பகதூர் சாஸ்திரியின் உடலோடு வந்து விமானத்திலிருந்து இறங்கும்போது பிரதமர் பூதவுடலைத் தாங்கும் வாய்ப்பைப் பி.பி. குமாரமங்கலம் பெற்றார். 1965 இல் இந்திய நாடு போரில் ஈடுபட்டபோது இவர் ஆற்றிய பணிகள் வீரம் செறிந்தவை.

10.06.1966ல் இந்திய ராணுவத் தரைப்படையின் தலைமைத் தளபதியாக பி.பி. குமாரமங்கலம் நியமிக்கப்பட்டார்.

பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், தும்பா ராக்கெட் உற்பத்தி நிலையம், பாரத் டைனமிக்ஸ் லிமிடெட், ஐதராபாத் மிக்ஸ் டைனமிக்ஸ், மிக் 21 ஏவுகணை உற்பத்தி, சூப்பர் சோனிக் இன்டெர்ஸ்ஸெப்டர் ஏவுகணைத் தொழிற்சாலை, திருச்சி துப்பாக்கித் தொழிற்சாலை, ஆவடி டாங்கித் தொழிற்சாலை ஆகியவற்றின் தொடக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் பி.பி. குமாரமங்கலம் பெரிதும் பாடுபட்டார்.


07.06.1969 அன்று ஓய்வு பெற்ற பி.பி. குமாரமங்கலம் குடும் பத்துடன் பெங்களூரில் வாழ்ந்து வந்தார். அரசு அளித்த தூதர் பதவி, பத்மபூஷன் விருது ஆகியவைகளை ஏற்க மறுத்து விட்டார். ஓசூர் அருகேயுள்ள மத்தியகிரி என்னும் இடத்தில் 30 ஏக்கர் பரப்பளவில் விவசாயப் பண்ணை, குதிரைப் பண்ணை ஆகியவைகளை அமைத்தார்.

இந்திய ராணுவத்தில் பல புதுமைகளைப் புகுத்தி இந்திய ராணுவத் தலைமைத் தளபதியாகப் பதவியேற்ற முதல் தமிழர். வீரத்துக்கும், பெருமைக்கும், புகழுக்கும் உரிய பரமசிவம் பிரபாகர் குமாரமங்கலம் பெங்களூர் இராணுவ மருத்துவமனையில் 13.03.2000 அன்று காலமானார்.

பரமசிவம் பிரபாகர் குமாரமங்கலம் - பிரோஜா தம்பதியருக்கு இரு மக்கள். மகன் சுப்பராயன் பெஹ்ரைன், மகள் ரோசன் பார்வதி. சுப்பராயன்பெஹ்ரைன் மனைவி ஆங்கிலேய கிறித்தவப் பெண் சுஜேன்.

ரோசன் பார்வதியின் கணவர் டில்லி மாநிலத்தைச் சேர்ந்த பஞ்சாபி எம். ஜோதி IAS.

# 30. ஜெயவந்த் கோபால் குமாரமங்கலம்



ஜெயவந்த் கோபால் குமாரமங்கலம்

சுப்பராயனும், இராதாபாயும் லண்டனில் படித்துக் கொண்டிருந்த போது முதல் மகன் பிரசவத்திற்காக இராதாபாய் 1913 ஆம் ஆண்டு மங்களூர் தாய் வீட்டுக்கு வந்தார். முதல் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த மையால் இராதாபாய் இரண்டாவது பிரசவத்திற்கு இந்தியா வர அனுமதி கிடைக்கவில்லை.

எனவே இரண்டாவது ஆண் குழந்தை லண்டனிலேயே 11.05.1915 அன்று பிறந்தது. ஜெயவந்த் கோபால் என்று பெயரிட்டனர். அவர் ஜெயவந்த் கோபால் குமாரமங்கலம் என்று அழைக்கப்பட்டார்.

உலக யுத்தம் முடிந்து 1918 ஆம் ஆண்டு பெற்றோருடன் தாயகம் திரும்பிய ஜெயவந்த் கோபால் சென்னை சாந்தோம் செயின்ட் தாமஸ் கான்வென்ட்டில் உள்ள செயின்ட் ரபீல்ஸ் ஆங்கிலப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். சென்னை சர்ச் பார்க் கான்வென்ட்டிலும் படித்தார். பின்னர் மூத்த சகோதரர் பரமசிவம் பிரபாகரன் போலவே இங்கிலாந்தில் உள்ள ''செயின்ட் ஹூக்ஸ்'' (St. Hugh's) பள்ளியில் 1925 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டார். பின்னர் ஈடன் (Eton) பள்ளியில் 1928 ல் கல்வியைத் தொடர்ந்தார்.

தந்தையைப் போலவே விளையாட்டில் மிகவும் ஆர்வம் காட்டினார். கோல்ப், கிரிக்கெட், டென்னிஸ் போன்ற விளையாட்டுக்கள் இவருக்குப் பிடித்த விளையாட்டுக்கள் ஆகும். செயின்ட் ஹூக்ஸ் பள்ளி கால்பந்து அணியில் இடம் பெற்றார்.

1933 ஆம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் உள்ள கிறிஸ்ட் சர்ச் கல்லூரியில் மாடர்ன் கிரீட்ஸ் பட்டம் பெற்றார். பொருளாதாரத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றார். பின்னர் ICS படிக்கக் கல்லூரியில் சேர்ந்தார். இந்த சந்தர்ப்பத்தில் அவருக்கு இந்திய மாணவர் இயக்கத்தில் தொடர்புடைய பல மாணவர்கள் பழக்கம் ஏற்பட்டது. கம்யூனிசக் கொள்கையில் மிகவும் ஈர்ப்புக் கொண்ட ஜெயவந்த் கோபால் கம்யூனிசம் பற்றிய பல நூல்களையும், மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் போன்றவர்களின் படைப்புகளையும் ஆழ்ந்து கற்றார். கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினர் ஆனார்.

1935ல் இந்தியா திரும்பிய ஜெயவந்த்கோபால் பம்பாயில் இருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகச் செயலாளராகவும், பி.சி. ஜோஷியின் உதவியாளராகவும் பணியாற்றினார். அப்பணியிலிருந்து விலகி சென்னை Hindu ஆங்கில நாளிதழின் செய்திப் பிரிவில் 1937ல் பணிக்குச் சேர்ந்தார். வெளிநாட்டுச் செய்திகள் சேகரித்தளிக்கும் பணியைச் சிறப்பாகச் செய்த ஜெயவந்த் கோபால் இந்து நாளிதழில் பற்பல விளக்கக் கட்டுரைகள் எழுதினார். இரண்டாண்டுகள் அப்பணியில் நீடித்த ஜெயவந்த்கோபால் புகழ் பெற்ற டாட்டா நிறுவனங்களின் ஒரு பிரிவாக கல்கத்தாவைத் தலைமையிடமாகக் கொண்டு விளங்கிய TISCO கம்பெனியில் பணியில் சேர்ந்தார்.

அங்கு பணியாற்றும் போது பினா என்ற கல்லூரி மாணவியின் அறிமுகம் ஏற்பட்டது. பினாவின் தந்தை கோம்பூர் இராமசாமி கிருஷ்ணசாமி அய்யங்கார் என்ற தமிழர். பார்ப்பனர் அல்லாத உஷா சின்ஹாவைத் திருமணம் செய்து கொண்டவர். இராணுவ டாக்டர்.

வெறிநாய்க்கடி மருந்து தொடர்பாக ஆய்வு செய்து டாக்டர் பட்டமும் பெற்றவர். அவரைச் சுருக்கமாக கர்னல் கே.ஆர்.கே. அய்யங்கார் என்று அழைப்பர். FRCS பட்டம் பெற்றவர். ஓய்வு பெற்ற பின் ரிசர்வ் பேங்க் கவர்னராகப் பணி புரிந்தவர். பினாவின் நட்பு காதலாக மலர்ந்தது. கே.ஆர்.கே. அய்யங்கார் குன்னூர் வெலிங்டன் இராணுவக் கல்லூரி மருத்துவராகப் பணி புரிந்ததால் ஜெயவந்த்கோபால்-பினா திருமணம் 10.07.1941 அன்று குன்னூரில் நடைபெற்றது.

ஜெயவந்த் கோபால் மத்திய வீட்டு வசதி - வினியோகப் பிரிவில் பணியில் அமர்ந்தார். முதல் பணி சென்னையில், 1942 ல் ஆவடி துப்பாக்கித் தொழிற்சாலையில் பணி புரிந்தார். பதவி உயர்வு பெற்று 1944ல் டெல்லியில் வினியோகப் பிரிவில் உதவி இயக்கு நராகப் பொறுப்பேற்றார்.

1959ல் ராஞ்சியில் தேசிய நிலக்கரி வளர்ச்சிக் கழகத்தில் துணைப் பொதுமேலாளர் ஆனார். சிறப்பாகப் பணி புரிந்தார். 1965ல் பைலதில்லா இரும்புத் தாதுத் திட்டத்தில் முதல் பொதுமேலாளராக மத்தியப் பிரதேசத்தில் நியமிக்கப்பட்டார். குறித்த காலத்தில் திட் டத்தை நிறைவேற்றினார். 1967ல் நெய்வேலி நிலக்கரிக் கழகத்தின் தலைவர் - நிர்வாக இயக்குநர் பதவியேற்றார். இவருடைய ஒப்பற்ற பணியால் ஊழியர்களை வெகுவாகக் கவர்ந்தார்.

1971-ல் ராஞ்சி தேசிய நிலக்கரி வளர்ச்சிக் கழகத் தலைவர் ஆனார். அப்போது தன் தம்பி மோகன் குமாரமங்கலத்துடன் இணைந்து நிலக்கரி உற்பத்திக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும், நிலக்கரிச் சுரங்கம் தேசியமயமாக்கப் பாடுபட்டார். 1973ல் புதியதாகத் தொடங்கப்பட்ட COAL MINES AUTHORITY பொறுப்பு வகித்தார். இந்திய சுரங்கங்கள் பள்ளித் தலைவரானார். 1975ல் ஓய்வு பெற்றார்.

மேற்கண்ட நிறுவனப் பணிக்காலத்தில் இவர் மிகத் திறமை யுடைய நிருவாகியாக விளங்கியதைக் கேள்விப்பட்ட பல நிறுவனத் தார் இவருடைய நிர்வாகத் திறமையைப் பயன்படுத்திக் கொண்டனர்.

கல்கத்தாவில் உள்ள ஒரு பெரிய நிறுவனம் Bird & Co நிறுவனம். அந்த நிறுவனத்தில் பொறுப்பாளர், தலைவராக ஜெயவந்த் கோபால் நியமிக்கப்பட்டார். நான்காண்டுகள் அங்கு மிகச் சிறப்பாகப் பணியாற்றி அந்நிறுவனத்தை விட்டு விலகினார்.


மேற்கு வங்காளத்தில் தேசிய தோல் பதனீட்டுத் தொழிற்சாலை (National Tannary Co Ltd.,) ஒன்று இருந்தது. அந்நிறுவனம் மிகவும் நலிவடைந்திருந்தது. அதன் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட ஜெயவந்த் கோபால் நலிவடைந்த காரணத்தை ஆராய்ந்து குறை களைந்து அந்நிறுவனத்தை வளமானதொரு நிறுவனமாகத் தலை நிமிர வைத்தார். இந்த அரிய செயல் அவருக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்தது. பெரும் நட்டத்தில் இயங்கிய INDIA MACHINERY என்ற நிறுவனத் தின் ஆலோசராகவும் பொறுப்பேற்றுச் சேர்ந்து மிக விரைவில் அந்த நிறுவனத்தை நல்ல இலாபத்துடன் இயங்கச் செய்தார்.

இறுதியாக ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான Reyrolle Burns Ltd., என்ற கம்பெனியின் நிருவாக ஆலோசகராகப் பணியாற்றினார். பின்னர் பணிகளிலிருந்து ஓய்வு பெற்றார். 09.02.1988 அன்று பம்பாயில் காலமானார். எப்பொழுதும் எளிமையை விரும்பும் இவர் இசையில் ஈடுபாடு உடையவர். தமிழ்ப் பண்பாடு, பழக்க வழக்கத் திலும் பற்றாளராக விளங்கினார்.

ஜெயவந்த் கோபால் - பினா தம்பதியருக்கு கௌரி, ருக்மணி, மீனாட்சி என்ற மூன்று பெண்கள். கிருஷ்ணன் என்ற ஒரு ஆண் ஆக நான்கு மக்கள்.

கௌரியின் கணவர் கொங்கணாபுரம் கே.ஏ. நாச்சியப்ப கவுண்டர் அவர்களின் இரண்டாவது மகன் அர்த்தநாரீசுவரன். கௌரி டெல்லியில் ஆற்றும் கல்விப் பணிக்காக பத்மஸ்ரீ பட்டம் பெற்றார். ருக்மணியின் கணவர் ராஜஸ்தானைச் சேர்ந்த ஹால்தியா I.A.S., ருக்மணியும் I.A.S., பட்டம் பெற்றவர். மீனாட்சியின் கணவர் ஆந்தி ராவைச் சேர்ந்த ரவிராவ். மகன் கிருஷ்ணனின் மனைவி ஆந்திராவைச் சேர்ந்த ரெட்டியார் சமூக ருக்மணி என்பவர்.

# 31. சுரேந்திர மோகன் குமாரமங்கலம்


மோகன் குமாரமங்கலம்

சுப்பராயன் இராதாபாய் தம்பதியரின் மூன்றாம் மகன் சுரேந்திர மோகன் குமாரமங்கலம் இலண்டனில் 01.11.1916 அன்று பிறந்தார். 1918ல் இந்தியா திரும்பிய பின் நான்கு வயதில் திருச்செங்கோடு பள்ளியில் சேர்க்கப்பட்டு ஆறு மாதம் படித்தார். பின் சென்னை மயிலாப்பூர் கான்வென்ட்டில் படித்தார். 1927ல் லண்டன் ஹூக்ஸ் பள்ளியிலும் மூன்றாண்டு படித்து, நுழைவுத் தேர் வில் வெற்றி பெற்று ஈடன் பள்ளி யிலும் நான்காண்டு படித்தார்.

பின்னர் 1934 ஆம் ஆண்டு தமிழகம் வந்து சென்னை பொறியியல் கல்லூரியில் சேர்ந்து ஓராண்டு பயின்றார். இடையில் 1935-ல் லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் மன்னர் கல்லூரியில் இயந்திர அறிவியல் (Machanic Science) படிப்பில் சேர்ந்தார். மாணவர்கள் அமைப்பான இந்திய மஜ்லிஸ் தொடர்பால் கம்யூனிச இயக்கத்தில் ஆர்வம் கொண்டார். இயந்திர அறிவியலில் முதல் பாகம் தேர்ச்சி பெற்றிருந்தும் நண்பர்கள் பலரும் பயின்ற வரலாற்றுப் பாடம் படிக்க வகுப்பை மாற்றிக் கொண்டார். பட்டம் பெற்றார். கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தில் ஈடுபட்டார். ஸ்பெயின் நாட்டில் எதேச்சதிகாரத்தை எதிர்த்துப் பெரும் உள் நாட்டுக் கிளர்ச்சி நடைபெற்றது. அதை நேரில் காண ஸ்பெயின் சென்ற மாணவர்

குழுவோடு சுரேந்திர மோகனும் ஸ்பெயின் நாட்டிற்குச் சென்றார். அதே மாதிரி நடைபெறும் இந்திய விடுதலைப் போரை வரவேற்றார்.

கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழக மாணவர் யூனியன் தலைவராக 1938 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பதவிக்குத் தேர்வு செய்யப்பட்ட முதல் இந்தியர் இவரேயாவார். பின்னர் லண்டன் இந்திய மாணவர் சங்கத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தச் சங்கம் லண்டன் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை அமைப்புப் போலவே செயல்பட்டது. இப்பணிகட்கு இடையில் இன்னர் டெம்பிள் கல்லூரியில் சேர்ந்து பாரிஸ்டர் பட்டம் பெற்று ஒரு கம்யூனிஸ்ட்டாக 1939ல் இந்தியா திரும்பினார். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராகி முழு நேர ஊழியராகச் செயல்பட்டார். இவருடைய பணி அடித்தள மக்களையும், ஏழை, எளிய மக்களையும் வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒன்று திரட்டியது. 1940 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. தலைமறைவாக இருந்து கட்சிப் பணிகளில் ஈடுபட்டார். சென்னை சதி வழக்கில் இவர் சேர்க்கப்பட்டார். 1941ல் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். இவருடன் பி. இராமமூர்த்தியும் சிறையில் இருந்தார். நீதி மன்றத்தில் இவரே வாதாடினார். இவருடைய ஆங்கில மொழி நடை எல்லோரையும் கவர்ந்தது. ஆங்கிலேயர் ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு 3½ வருடம் கடுங்காலம் தண்டனை விதிக்கப் பட்ட மோகன், உலகப் போரில் நேச நாடுகளை கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்ததால் கட்சி தடை நீக்கப்பட்டு 1942ல் விடுதலை செய்யப் பட்டார்.

சென்னை மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். "Peoples war" என்னும் கம்யூனிஸ்ட் கட்சி இதழில் பல தலைப்புக்கள் குறித்து சுரேந்திர மோகன் பல கட்டுரைகள் எழுதினார். பின் இந்த இதழ் "Peoples Age" எனப் பெயர் மாறியது. அக்கட்டுரைகள் கட்சித் தோழர்களையும், மாணவர்களையும், கட்சித் தலைவர்களையும் வெகுவாகக் கவர்ந்தது.

வங்காள கம்யூனிஸ்ட் கட்சியின் மாணவர் பிரிவு இதழில் "Why I became communist" என்ற தலைப்பில் தொடர் கட்டுரை எழுதினார். மாணவர் பிரிவில் பணியாற்றி வந்த கல்யாணி என்ற மாணவிக்கு அக்கட்டுரைகள் மிகவும் பிடித்திருந்தது. சுரேந்திர மோகனைச் சந்திக்க ஆவலோடு இருந்தார்.

1942 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்திய மாணவர் சம்மேளனத்தின் பயிற்சி முகாம் பம்பாயில் நடைபெற்றது. எம்.ஏ., மாணவியான கல்யாணியும் கலந்து கொண்டார். மாணவர்களிடையே உரையாற்ற பல பேச்சாளர்கள் அழைக்கப்பட்டனர். அவர்களில் சுரேந்திர மோகனும் ஒருவர். ஒருநாள் சுரேந்திர மோகன் மாணவரி டையே உரையாற்றினார். கதர் ஆடையில் எளிமையாக மாணவர்கள் முன்னின்று ஆற்றிய உரை எல்லோரையும் மிகவும் கவர்ந்தது. உரை முடிவில் மாணவர்கள் பலர் வினா எழுப்பினர்.

சுரேந்திர மோகனிடம் கேள்விகள் கேட்டவர்களில் வங்காள கல்யாணியும் ஒருவர். கல்யாணியின் அறிவுப்பூர்வமான நுட்பமான கேள்விகள் சுரேந்திர மோகனைக் கவர்ந்தது. இருவர் தொடர்பும் காதலாக மலர்ந்தது.

கல்கத்தாவில் பணீந்திரநாத் முகர்ஜி - சுகோலேகா தம்பதியர்க்கு ஏழு ஆண் மக்களுக்குப் பின் பிறந்தவர் கல்யாணி. பள்ளித் தேர்வில் வங்காளத்தில் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றார். பி.ஏ., பட்டத் தேர்வில் தங்கமெடல் பெற்று ஆங்கில இலக்கியத்தில் எம்.ஏ., பட்டம் பெற்றவர். வங்க முதல்வராக இருந்த அஜாய் முகர்ஜி கல்யாணியின் சித்தப்பா. குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி அவர் உறவினர். 1943 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 29 ஆம் தேதி சுரேந்திர மோகன் - கல்யாணி திருமணம் கல்கத்தாவில் நடைபெற்றது. சுரேந்திர மோகன் பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுரேந்திர மோகன் பம்பாயில் இருந்த போது "Labour News" "Daily worker" போன்ற இதழ்களிலும் பல கட்டுரைகள் எழுதினார். அறிவு ஜீவிகள் என அழைத்துக் கொண்டவர்கட்கு அக்கட்டுரைகள் மிகவும் பயனுடையனவாக இருந்தது. சில சமயம் காந்தியடிகளோடு விவாதிக்க கட்சி இவரை அனுப்பியது.

மகாத்மா காந்தியடிகளிடம் சுரேந்திர மோகன் பேட்டி காண விரும்பினார். அப்போது காந்தி மகான் உடல் நலம் இல்லாமல் சிம்லா அருகில் உள்ள பஞ்சக்கனி என்ற இடத்தில் தங்கியிருந்தார். பல இதழ் கட்குப் பேட்டியளிக்க மறுத்த காந்தியடிகள் சுரேந்திர மோகனை அழைத்தார். 30 நிமிடம் பேட்டியளித்தார். Peoples war இதழில் 15.09.1944 அன்று அந்தப் பேட்டி பிரசுரம் ஆனது.

ஒரு சமயம் சுப்பராயன் மோகனின் நடவடிக்கை குறித்து காந்தியடிகளிடம் பேசினாராம். காந்திஜி "Leave him to his own way. You will be proud of him one day" என்றாராம்.

சென்னையிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சி இதழ் ''மக்கள் யுகம்'' வெளிவந்தது. அப்பதிப்பு ஆங்கிலம், இந்தி, உருது, மராத்தி, குஜராத்தி மொழிகளிலும் வெளிவந்தது. அவற்றில் சுரேந்திர மோகன் கட்டுரைகள் வெளிவந்தன. ஒருமுறை உள்துறை அமைச்சர் படேல் டாக்டர் சுப்பராயனிடம் ''கம்யூனிஸ்ட்டுகள் போராட்ட வழியைக் கை விட்டு அரசை ஆதரிக்க மோகன் மூலம் கூறுமாறு சொல்லுங்கள்'' எனக் கேட்டுக் கொண்டார். பி.சி. ஜோஷியும், சுரேந்திர மோகனும் படேலைச் சந்தித்தனர். இரு தரப்பினரும் அவரவர்கள் நிலையிலேயே இருந்தனர்.

20.02.1948ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய இரண்டாம் மாநாடு கல்கத்தா மகமது அலி பூங்காவில் நடைபெற்றது. இந்தியா பெற்றது போலிச் சுதந்திரம். நடைபெறுவது மக்கள் எதிர்ப்பு அரசு. இதை எதிர்த்து ஆயுதப் போராட்டம் நடத்த வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்தது. மாநாடு நடைபெறும் போதே

கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. தலைவர்கள் தலைமறைவாகினர்.

சுரேந்திர மோகனைக் கைது செய்ய சென்னை மாகாண சட்ட அமைச்சரே வாரண்டு பிறப்பிக்க வேண்டிய நிலை வந்தது. அவரைப் பிடித்துக் கொடுத்தால் சன்மானம் கிடைக்கும் என்றும் அறிவிக்கப் பட்டது. 1950ல் மோகன் கைதானார். இவர் வாதத்தால் உச்சநீதி மன்றம் இவரை 1951ல் விடுதலை செய்ய உத்தரவிட்டது. கம்யூனிஸ்ட்டுகள் முன்னின்று நடத்திய இரயில்வே போராட்டம் வெற்றி பெறவில்லை. சிறையில் பல தோழர்கள் கொல்லப்பட்டனர். புரட்சி என்ற போக்கு சரியல்ல என்று பலர் விவாதித்தனர். கட்சி கடைப்பிடிக்கும் கொள்கையை எதிர்த்து எஸ்.ஏ. டாங்கே முதலியோர் அறிக்கை வெளியிட்டனர்.

''கட்சித் திட்டம்'' ''கொள்கை அறிக்கை'' என்ற இரு ஆவணங் களை கட்சி வெளியிட்டது. கட்சி மாநாடு அதை அங்கீகரித்தது. பொதுச் செயலாளராக இருந்த ரணதிவே விடுவிக்கப்பட்டு சி. ராஜேஸ்வரராவ் பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார். கம்யூனிஸ்ட் கொள்கையில் மாற்றம் தெரியவே கட்சியின் தடை நீக்கப்பட்டது.

1952 பொதுத் தேர்தலில் மோகன் சேலம் முதல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். சென்னையில் தங்கி வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். ஏழை மக்கள், இயக்கம், தொழிற்சங்க வழக்குகளை இலவசமாகவே நடத்திப் பல வெற்றிகள் கண்டார்.

உயர்நீதி மன்றம் - உச்சநீதி மன்றத்தில் பல முக்கியமான வழக்குகளில் வாதாடிப் பெரும் புகழ் பெற்றார். பிர்லா நிறுவன வழக்கு களில் அவர்களுக்காக வாதாடினார். பலர் இவரிடம் ஜூனியராகச் சேர்ந்து பணிபுரிய விரும்பினர். 23.05.1964 அன்று ''காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து நல்வழியில் ஆட்சியை திருப்பி கம்யூனிஸ்ட்டுகள் அதன்

மூலம் தங்கள் கொள்கைகளை அமுல்படுத்தலாம்'' என்ற கொள்கையை சுரேந்திரமோகன் கூறினார். கட்சியில் காங்கிரஸ் ஆதரவு, எதிர்ப்பு விவாதம் நடைபெற்றது. இந்நிலையில் 1964ல் கட்சியின் தேசியக் குழு உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

சீன-இந்தியப் போர் நடைபெற்றது. ரஷ்யா சீனாவைக் கண்டித் தது. கட்சியில் சீன ஆதரவு, ரஷ்ய ஆதரவு குழு ஏற்பட்டது. சீன ஆதர வாளர்கள் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) என அழைக்கப்பட்டனர். கட்சி இரு பிரிவாகியது. மக்கள் அதை இடது என்றும் மற்றவர்களை வலது என்றும் அழைத்தனர். சுரேந்திர மோகன் வலது பிரிவை ஆதரித்தார்.

வங்க சட்டசபை தொடர்பான குழப்பத்தால் கவர்னர் ஆட்சி ஏற்பட வங்கம் முழுவதும் கலவரம் மூண்டது. பிரதமர் இந்திரா காந்தி மோகன் உதவியை நாடினார். மோகன் கூறிய மாற்றங்கள் செய்யப் பட்டன. அம்மாற்றம் மக்களிடையில் வரவேற்பைப் பெற்றது. இந்திரா காந்தியின் சந்திப்பு இவரைக் காங்கிரஸ்காரர் ஆக்கியது. ஏற்கனவே இவர் அறிவித்தபடி தம் கொள்கைகளைக் காங்கிரஸ் மூலம் நிறை வேற்ற முடியும் என்று எண்ணிக் கொண்டு காங்கிரசில் சேர்ந்தார். 1966ல் சென்னை மாகாண அட்வகேட் ஜெனரலாக நியமிக்கப் பட்டார். 1967ல் காங்கிரஸ் கட்சி தோல்வியடையவே அப்பதவியை ராஜினாமா செய்தார். உயர்நீதி மன்ற வழக்கறிஞர் ஆனார்.

1967ல் இந்திய அரசின் தொழில் உரிமம் வழங்கும் கொள்கைக் குழு உறுப்பினர் ஆனார் (Government of India's Industrial Licensing Policy committe). 1969ல் உச்சநீதி மன்றத்தில் வழக்கறிஞர் பணியாற்றினார். ஏர் இந்தியா - ஏர் லைன்ஸ் நிருவாகக் குழுவில் இடம் பெற்றார்.

பின் இந்தியன் ஏர்லைன்ஸ் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் முயற்சியால் 737 போயிங் விமானங்கள் வாங்கப்பட்டன. 1969 முதல் 1971 வரை இப்பதவி வகித்தார். இந்தியாவின் முக்கிய அரசியல்

நிகழ்வுகளான வங்கிகள் தேசியமயம், நீதிபதிகள் நியமனம் போன்ற வற்றின் நிகழ்வுகள் மோகன் ஆலோசனையில் நடைபெற்றன. 1971ல் பாண்டிச்சேரி தொகுதி இடைத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இரும்பு, சுரங்கம், கனரகத் தொழில் அமைச்சர் ஆனார்.

நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் ஏழை - எளியவர்க்கு உதவ வேண்டும் என்ற நிர்பந்தத்தை ஏற்படுத்தினார். இந்தியன் ஆயில், பர்மா ஷெல், எஸ்ஸோ போன்றவை நாட்டுடமை, கறுப்புப் பணத்தை ஒழிக்க நாடு முழுவதும் ஒரே நேரத்தில் சோதனை, மன்னர் மானிய ஒழிப்பு, இந்தியாவுடன் சிக்கிமை இணைத்தல் போன்றவற்றில் மோகனின் உழைப்பும், ஆலோசனையும் உண்டு. அப்போது 521 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 350 பேர் காங்கிரஸ் உறுப்பினர்கள் என்பதால் இவையனைத்தும் எளிமையாக நிறைவேறின. இந்திரா காந்தியின் முக்கிய அரசியல் ஆலோசகராக விளங்கினார்.

இவர் பல நூல்களை எழுதியுள்ளார். ஐக்கிய நாடுகள் (The United States), தென்னாப்பிரிக்காவில் சமநிலைக்காக இந்தியர் போராட்டம் (Indians Fight for Equality in South Africa), இந்தியாவின் மொழிச் சிக்கல் (Language crisis) குடியாட்சியும் தனிப்பட்டோர் உரிமை நிலையும் (Democracy and cult of Individual), அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்கள், இந்திய நிலக்கரித் தொழில்களும், தேசியமய மாக்கும் வேலைகளும் (Coal Industries in India and Nationalisation and Task Ahead) என்பவை முக்கியமானவை.

மோகன் அவர்கள் நிர்வகித்த துறை என்பதால் போதிய நிதி ஒதுக் கப்பட்டு சேலம் உருக்காலைத் திட்டம் விரைவில் நிறைவேறியது. சேலத்திற்கு இவர் செய்த நன்மை காரணமாக உருக்காலை வளாக நகருக்கு மோகன் நகர் என்று பெயர் வைக்கப்பட்டது. சேலம் மருத்துவக் கல்லூரிக்கும் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி என்று பெயர் சூட்டப்பட்டது.

கொடைக்கானலில் ஓய்வெடுத்தபோது கூட எழுதிக் கொண்டும், பார்வையாளர்களோடு விவாதித்துக் கொண்டும், டெல்லியோடு தொடர்பு கொண்டும் இருந்தார்.

31.05.1973 அன்று குமாரமங்கலம் 48 பேரோடு பயணம் செய்த விமானம் விமான தளத்திலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் டில்லிக்கு 7½ கி.மீ. தூரத்தில் வெடித்துச் சிதறியது. மோகன் குமாரமங்கலம் அவர்களின் எந்த உறுப்பும் சிக்காமல் எரிந்து முடிந்தது. விமான விபத்தின் காரணம் இன்றுவரை புரியாத புதிராகவே உள்ளது. அவருடன் பயணம் செய்த கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கே. பாலதண்டாயுதமும், AITUC-யின் அகில இந்தியத் தலைவர் சத்தீஸ் லுமும்பாவும் மறைந்தனர்.

மோகன் குமாரமங்கலத்திற்கு உமா, ரங்கராஜன், லலிதா என்று மூன்று மக்கள். உமா 29.01.1947 அன்றும், ரங்கராஜன் 12.05.1952 அன்றும், லலிதா 14.01.1958 அன்றும் பிறந்தனர்.

உமாவின் கணவர் மேற்கு வங்க பிராமணர் சமூக மலய் முகர்ஜி என்பவர். ரங்கராஜனின் இயற்பெயர் பணீந்திரநாத் ரங்கராஜன் குமார மங்கலம் என்பதாகும்.



லலிதாவின் கணவர் திருச்சி கே.சி. ரவிச்சந்திரன், இவர் லலிதா குமாரமங்கலம் என்றே அழைக்கப்படுகிறார்.

பாண்டிச்சேரி தொகுதியில் 2004ல் பாரதிய ஜனதா கட்சி சார்பில் நாடாளு மன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். 2014 செப்டம்பரில் தேசிய மகளிர் ஆணையத் தலைவராக லலிதா குமாரமங்கலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

❋❋❋

# 32. பார்வதி கிருஷ்ணன்



பார்வதி கிருஷ்ணன்

சுப்பராயனும் இராதாபாயும் 1918ல் லண்டனிலிருந்து இந்தியா திரும்பிய பின் 15.03.1919 அன்று இராதாபாய் ஒரு பெண் குழந்தைக்குத் தாயார் ஆனார். அப்பெண் குழந்தைக்குத் தன் பாட்டி பெயரான பார்வதி என்று சுப்பராயன் பெயர் வைத்தார். இப்பிரசவம் ஊட்டியில் நிகழ்ந்தது.

பார்வதியை சென்னை வேப்பேரி இவார்டு ஆங்கிலப் பள்ளியில் சேர்த்தனர். பள்ளிப் படிப்பு முடிந்ததும் 1936 ஆம் ஆண்டு ஆக்ஸ் போர்டு பல்கலைக் கழகத்தில் உள்ள St. Hugh's கல்லூரியில் பி.ஏ. ஹானர்ஸ் வரலாறு படிக்கச் சேர்க்கப்பட்டார். அதே சமயம் சோமர் வில்லியம் கல்லூரியில் இந்திராகாந்தி படித்துக் கொண்டிருந்தார். பேட்மிண்டன் மைதானத்தில் இருவரும் சந்தித்தனர். அந்தச் சந்திப்பு நட்பாக மலர்ந்தது. பார்வதி மூலம் இந்திய மாணவர் அமைப்பான மஜ்லிஸ் தொடர்பு இந்திராவிற்கும் ஏற்பட்டு அவரும் உறுப்பினர் ஆனார். பார்வதி கம்யூனிஸ்ட் கொள்கையால் ஈர்க்கப் பட்டார்.

ஒருமுறை Seymour அரங்கில் ரஜினிபட்டேல் தலைமையில் இளைஞர் பாராளுமன்றம் நடைபெற்றது. பார்வதி இந்திய சுதந்திரம் பற்றிய மசோதாவைக் கொண்டு வந்து பேசினார். அவர் பேச்சு

அனைவரையும் கவர்ந்ததுடன் முதல் பரிசையும் பெற்றது. இந்திய மாணவர் கிருஷ்ணன் அறிமுகமானார். அறிமுகம் நட்பாக மாறியது.

இந்திய மாணவர்கள் இந்தியக் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் வண்ணம் பல்கலைக்கழக வளாகத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்துவது உண்டு. ஒருமுறை தாகூரின் பொம்மை வண்டி என்ற நாடகத்தை அரங்கேற்றி முக்கிய பாத்திரத்திலும் பார்வதி நடித்தார்.

1939 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் பாரிசில் சர்வதேச மாணவர் மாநாடு நடைபெற்றது. பார்வதி, கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். அம்மாநாட்டில் முக்கிய ஆய்வுக் குழுவில் இணைந்து பார்வதியும், கிருஷ்ணனும் பணியாற்றினர். இந்த நட்பால் ''இந்தியா திரும்பியதும் தம்பதியராக வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்'' என்று கிருஷ்ணன் சுய சரிதையும் எழுதியுள்ளார்.

கிருஷ்ணன் அன்றைய கொச்சி மாநிலத்தில் நாடவரம்பா என்ற ஊரில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். எர்ணாகுளம் பள்ளியில் 4 ஆம் வகுப்புப் படிக்கும் போது உதவித் தொகை அளிக்கத் தேர்வு நடைபெற்றது. மாநிலத்தில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். சித்தூர் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போது பள்ளியிறுதித் தேர்வில் மாநில முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். எர்ணாகுளம் மகாராஜா கல்லூரியில் கணிதவியலில் எம்.ஏ. ஹானர்ஸ் பட்டம் பெற்றார்.

எம்.ஏ. பட்டம் பெற்றபின் 1935ல் ICS படிப்பதற்காக லண்டன் சென்றார். அங்குள்ள சூழ்நிலை இவரை கம்யூனிஸ்ட் ஆக்கியது. லண்டன் பள்ளியில் மாலை நேர வகுப்புகளிலும் கிருஷ்ணன் படித்து வந்தார். பல்கலைக்கழக நிர்வாகம் கொடுத்த தொல்லை காரணமாக பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறி தெற்கு கென்சிங்டன் விஞ்ஞானத் தொழில் நுட்ப இம்பீரியல் கல்லூரியில் சேர்ந்து படித்தார். ICS தேர்வில் உயர்ந்த மதிப்பெண் பெற்றும் கல்லூரி நிர்வாகம் நிராகரித்தது. 17.07.1939ல் இங்கிலாந்து கம்யூனிஸ்ட் கட்சியின்

அறிமுகக் கடிதத்துடன் வந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் முழுநேர உறுப்பினர் ஆனார்.

1941 டிசம்பரில் பார்வதி இந்தியா வந்தார். சென்னையில் சோவியத் நண்பர்கள் சங்கம், மாணவர் அமைப்புகள் ஆகியவற்றில் கம்யூனிஸ்ட்டாகப் பணியாற்றினார்.

1942 ஆம் ஆண்டு கிரிப்ஸ் தூதுக்குழு இந்தியா வர இருந்தது. இரண்டாவது உலகப் போரில் இங்கிலாந்தை ஆதரிக்க வேண்டும் என்றும், போர் முடிவில் இந்தியாவில் கனடா போல தன்னாட்சி உரிமை உடைய குடியேற்ற நாடு அமைக்கப்படும் என்றும் சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் என்ற இங்கிலாந்து அமைச்சர் ஒரு திட்டத்துடன் இந்தியா வந்தார். அவர் வருகை கிரிப்ஸ் தூதுக்குழு எனப்பட்டது. காங்கிரசும், முஸ்லிம் லீக்கும் சுதந்திரம் என அதில் கூறப்படாததை எதிர்த்தனர். கம்யூனிஸ்ட்டுகள் கிரிப்ஸ் திட்டத்தை ஆதரித்து எல்லோரும் இணைந்த தேசிய அரசு அமைக்க வேண்டும் என்றனர். கம்யூனிஸ்ட் கொள்கையை இராஜாஜி ஆதரித்தார். அதனால் இராஜாஜியைச் சந்திக்க கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் பி.சி. ஜோசி என்.கே. கிருஷ்ணனைச் சென்னைக்கு அனுப்பி வைத்தார்.

சென்னையில் மூன்றாண்டுகட்குப் பிறகு கிருஷ்ணன் பார்வதியைச் சந்தித்தார். மூன்றாண்டு நிகழ்வுகளைக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டனர். இச்சந்திப்புப் பற்றி கிருஷ்ணன் தன் சுய சரிதையில் பின்வருமாறு எழுதுகிறார்.

''பார்வதியுடன் எனது சந்திப்பு பிரிந்தவர் மீண்டும் கூடிய மகிழ்ச்சி வெள்ளமாகத் திகழ்ந்தது. அச்சந்திப்பு குறித்த நினைவுகள் என்றும் பசுமையானவை. சென்னையில் நான் தங்கியிருந்த காலம் முழுவதும் நாங்கள் முடிவற்றுப் பேசிக் கொண்டே, மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டே இருந்தோம்''.

கிருஷ்ணன் இராஜாஜியைச் சந்திக்க பார்வதி ஏற்பாடு செய்தார். சுப்பராயன் இராதாபாய் காதல் குறித்து சுப்பராயன் தாயாரிடம் 1912ல்

தெரிவித்த இராஜாஜி 1942ல் பார்வதி - கிருஷ்ணன் காதலை சுப்பராயன் இராதாபாயிடம் தெரிவித்தார்.

1942 ஆம் வருடம் ஜூன் மாதம் சேலத்தில் அகில இந்திய மாணவர் பேரவையின் தென் பிராந்திய மாநாடு நடக்க இருந்தது. அதன் அமைப்புப் பணிகட்காக என்.கே. கிருஷ்ணன், பார்வதி, எஸ். இராம கிருஷ்ணன் மூவரும் சேலம் வந்தனர். சிறையிலிருந்து வெளிவந்த பி. இராமமூர்த்தி, சி.எஸ். சுப்பிரமணியம், மோகன் குமாரமங்கலம், பி. சீனிவாசராவ், எம்.ஆர். வெங்கட்ராமன், கே. பாலதண்டாயுதம் ஆகி யோரும் சேலம் வந்து சேர்ந்தனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் கிளை பற்றிய முக்கிய ஆலோசனைகளுக்குச் சேலம் தகுந்த இடம் இல்லை என்ப தால் தலைவர்கள் அனைவரும் குமரமங்கலத்தில் டாக்டர் சுப்பராயன் அவர்களின் பூர்வீக இல்லத்தில் தங்கினர். அவர்கள் அனைவரையும் இராதாபாயும், பார்வதியும் நன்கு உபசரித்தனர். இங்குதான் கிருஷ்ணன் பார்வதி திருமணம் உறுதி செய்யப்பட்டது. இதுபற்றி கிருஷ்ணன் தன் சுயசரிதையில் ''திருச்செங்கோடு கூட்டம் என்னைப் பொறுத்தவரை யில் மிகுந்த மகிழ்ச்சிகரமான தனித்த நினைவுகளைக் கொண்டிலங்கு கிறது. இறுதியாக நானும் பார்வதியும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தோம்'' என்று எழுதியுள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிடமான பம்பாய் ராஜ்பவனில் ஏறக்குறைய 60 தோழர்கள் கூட்டு வாழ்க்கை நடத்தி வந்தனர். இதை கம்யூன் என்று அழைத்தனர். பகல் எல்லாம் தங்களுக்கு அளிக்கப்பட்ட பணிகளை ஆற்றியபின் இரவு அங்கு கூடுவர். சென்னையிலிருந்து பார்வதியும் ராஜ்பவன் வந்தார். அங்கு 07.12.1942 அன்று பார்வதி - கிருஷ்ணன் பதிவுத் திருமணம் நடை பெற்றது. சாட்சிக் கையொப்பமிட்டவர்களில் மோகன் குமாரமங் கலமும் ஒருவர். பார்வதி, பார்வதி கிருஷ்ணன் ஆனார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் கலை இலக்கியப் பிரிவாக ''மக்கள் நாடக மன்றம்'' என்று ஓர் அமைப்பு தொடங்கப்பட்டது. மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் கொள்கையைப் பரப்புவதும் கலைகளைப் பாதுகாத்து ஆதரவளிப்பதும் அதன் நோக்கங்களாகும். அம்மன்ற நிகழ்வுகளில் பினாராய், பால்ராஜ் சகானி போன்ற புகழ்வாய்ந்த பல துறைக் கலைஞர்கள் பங்கு பெற்றனர். அதில் பங்கு பெற்ற சிலர் பின்னாளில் மிகப் பெரிய கலைஞர்களாக திரையுலகில் வளர்ந்துள்ள னர். இந்த அமைப்பின் நிர்வாகியாகவும், கலைஞராகவும் பார்வதி கிருஷ்ணன் இருந்தார். மிகுந்த வரவேற்பைப் பெற்ற இம்மன்ற நிகழ்ச்சிகள் பம்பாய், மீரட், லாகூர், கல்கத்தா, டில்லி ஆகிய பல இடங்களில் நடைபெற்றன. வங்காளப் பஞ்ச நிவாரணப் பணிக்காக மன்றக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தேச விடுதலை, ஏகாதிபத்திய எதிர்ப்பு, இந்து முஸ்லிம் ஒருமைப்பாடு, கட்சியின் போராட்டங்கள் குறித்தும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சி ஏற்பாடு, அரங்க அமைப்பு, விளம்பரம், டிக்கட், நிதி போன்ற அனைத்துப் பொறுப்புக்களையும் பார்வதி ஏற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருமுறை பி.சி. ஜோஷி அவர்களின் ''அழிவற்ற இந்தியா'' என்ற நாடகம் நடைபெற்றது. கதைச் சுருக்கத்தையும், நடிகர்களின் அறிமுகத்தையும் பார்வதி ஆங்கிலத்தில் கூற வேறொருவர் அதை இந்தியில் மொழி பெயர்த்தார்.

இந்த மக்கள் நாடக மன்றத்தின் வெற்றிதான் பிற மாநிலங்களில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இலக்கிய கலை அமைப்புகள் தோன்றக் காரணம் ஆயிற்று. தமிழ்நாட்டில் கலை இலக்கியப் பெருமன்றம் உரு வானது.

1943 ஆம் ஆண்டு பி.சி. ஜோஷி அவர்களின் உதவியாளராக பார்வதி நியமிக்கப்பட்டார். கிருஷ்ணனும், பார்வதியும் பம்பாய் ராஜ்பவன் என்ற கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் தங்கினர்.

பார்வதி 23.09.1943 அன்று ஒரு பெண் குழந்தைக்குத் தாய் ஆனார். இலண்டனில் படிக்கும் போது தோழியாக இருந்த இந்திரா காந்தியின் பெயரைப் பார்வதி தன் குழந்தைக்கு வைத்தார். இந்தி என்று அவர் செல்லமாக அழைக்கப்படுவார். 1948ல் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட போது இந்திரா பம்பாய் கட்சித் தலைமை யகத்தில் கட்சித் தோழர்களாலும், பின் எர்ணாகுளத்தில் கிருஷ்ணன் அவர்கள் சகோதரியாலும் வளர்க்கப்பட்டார்.

1949 ஆம் வருடம் பார்வதி சென்னையிலிருந்து பம்பாய் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC) அலுவலகத்திற்குப் பணி மாற்றம் செய்யப்பட்டார். 1952 ஆம் ஆண்டு நீலகிரி நாடாளுமன்ற இடைத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். பின் சென்னையில் தங்கியிருக்கும் போது குடும்பச் செலவுக்காகக் கிருஷ்ணன் சிலருக்கு டியூசன் நடத்தவும், ஒரு பள்ளியில் பணியாற்றவும் நேர்ந்தது. இருவரும் 1953ல் கோவையில் வசிக்கத் தொடங்கினர். மாலை நேரப்பள்ளி தொடங்கி கணக்கு, விஞ்ஞானப் பாடங்களைக் கிருஷ்ண னும், வரலாறு ஆங்கிலப் பாடங்களைப் பார்வதியும் நடத்தினர். பார்வதி ஒரு தனிப் பயிற்சிக் கல்லூரியில் வாரத்தில் சில நாட்கள் பாடம் நடத்தினார். மகள் இந்திராவை கோவை சபர்பன் பள்ளியில் சேர்த்தனர்.

1954ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் மாநிலங்கள் அவை உறுப்பினராகப் பார்வதி கிருஷ்ணன் தேர்ந் தெடுக்கப்பட்டார். மாநிலங்கள் அவைத் துணைத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அப்போது டாக்டர் சுப்பராயன் அவர்களும் காங்கிரஸ் கட்சி சார்பில் மாநிலங்கள் அவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. பார்வதி கிருஷ்ணன் 1955ல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடன் ரஷ்யப் பயணம் மேற்கொண்டார்.

1956ல் உலகத் தொழிற்சங்க சம்மேளனம் சார்பில் உழைக்கும் பெண்கள் மாநாடு புடாபெஸ்ட் நகரில் நடந்தது. அம்மாநாட்டில் தயாரிப்புக் குழு உறுப்பினராகப் பணியாற்றிய பார்வதி கிருஷ்ணனுக்கு மாநாட்டுத் தொடக்க உரை ஆற்றும் வாய்ப்பும் கிடைத்தது.

1957ல் கோவை நாடாளுமன்றத் தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1962 பொதுத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தாலும் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 1965ல் ஹெல்சிங்கில் நடைபெற்ற உலக சமாதான மாநாட்டில் AITUC சார்பில் கலந்து கொண்டார். ''டிரேடு யூனியன் ரெக்கார்டு'' என்ற ஆங்கில இதழின் ஆசிரியர் பொறுப்பேற்றார். 1971ல் கல்கத்தாவில் நடைபெற்ற AITUC அகில இந்திய மாநாட்டில் அமைப்புக் குழுச் செயலாளராகப் பணி புரிந்தார். 1974 ஆம் ஆண்டு கோவை நாடாளு மன்றத் தொகுதி இடைத் தேர்தலில் வெற்றி பெற்றார். இந்திய இரயில்வே தொழிலாளர் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரயில்வே ஸ்டிரைக் நடைபெற்றது. போராட்டக் குழு உறுப்பினராக இருந்த பார்வதி கிருஷ்ணன் டில்லியில் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டார். 1975ல் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் குழு உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

1975ல் போனஸ் சட்டம் பற்றி அரசு திருத்தங்களைக் கொண்டு வந்தபோது அதை வன்மையாக எதிர்த்ததுடன் நாடாளுமன்றத்திலேயே அதன் நகலைக் கிழித்தெறிந்தார். 1977ல் கோவை நாடாளு மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பார்வதிகிருஷ்ணன் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழுத் தலைவரானார். 1982ல் உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுக்குழு உறுப்பினர் ஆனார். தீர்மானக் குழு தலைவராகவும் பணியாற்றினார். 1985ல் சர்வதேச மாதர் மாநாடு நைரோபியில் நடைபெற்ற போது

கலந்து கொண்டார். 1986ல் உலகத் தொழிற் சங்க சம்மேளன மாநாட்டில் பெர்லின் நகரில் கலந்து கொண்டபோது தீர்மானக் குழுத் தலைவராகப் பணிபுரிந்தார்.

லண்டனில் சந்தித்து திருச்செங்கோட்டில் திருமண உறுதி செய்யப்பட்டு பம்பாயில் திருமணம் செய்து கொண்ட கேரளத்து அரசியல் வித்தகர் என்.கே. கிருஷ்ணனுடன் 1988 முதல் கோவையில் நிலையாக வாழத் தொடங்கினார் பாரதப் பெண்மையின் சின்னமாக விளங்கும் அரசியல் அவ்வையார் பார்வதி கிருஷ்ணன்.

இளம் வயது முதலே அறிவுக் கூர்மையுடன் விளங்கிய கிருஷ்ணன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பெரும் தூண்களில் ஒருவராக விளங்கினார். கட்சியின் மிக முக்கியப் பொறுப்புக்களை ஏற்றுத் திறம்பட நிறைவேற்றியவர். கணவனும், மனைவியும் நாடே குடும்பம் என வாழ்ந்தனர். தொழிலாளர் நலமே தங்கள் சுகம் என எண்ணினர். கணவர் கிருஷ்ணனுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்ட போதெல்லாம் தலைமறைவுக் காலமாக இருந்தாலும் பெரிய மருத்துவமனைகளில் சேர்த்து உடல்நலம் பெறச் செய்தவர் பார்வதி. மிகச் சிறந்த நிர்வாகத் திறன் பெற்றவர் பார்வதி.

கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழுவிலும், மத்தியக் குழுவிலும் கிருஷ்ணன் இடம் பெற்று கட்சியின் கலங்கரை விளக்காகத் திகழ்ந்து தன் வீர சாகச வரலாற்றைத் தன் வரலாறாக Testment of Faith "Momories of a commiunist" என்ற பெயரில் நூலாக ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். எல்.ஜி. கீதானந்தன் அவர்களால் அந்நூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டு ''நம்பிக்கை ஒளி'' என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

கிருஷ்ணன் அவர்கள் 02.11.1992 அன்று தன் இயக்கப் பணிகளை முடித்துக் கொண்டார். அவர் அமரர் ஆனார். மகள் இந்திரா சென்னை பெண்கள் கிறித்தவக் கல்லூரியில் பயின்றபின் சென்னை

மருத்துவக் கல்லூரியில் டாக்டர் படிப்பை முடித்து டெல்லி மௌலானா ஆசாத் மருத்துவக் கல்லூரியில் மருத்துவத் துறை முதுகலைப் படிப்பை மேற்கொண்டார். வங்காளத்தைச் சேர்ந்த டாக்டர் மனாஸ் தாஸ் குப்தா அவர்களைக் காதல் மணம் புரிந்த டாக்டர் இந்திரா கணவருடன் அமெரிக்காவில் வாழ்கிறார். அவர்களுக்கு 22.01.1976ல் பிறந்த பெண் குழந்தை பூர்ணிமா.

கோவை மாவட்ட மில் தொழிலாளர் சங்கம் 16.12.2002 அன்று பார்வதி கிருஷ்ணனின் 60 ஆண்டு பொதுச் சேவையைப் பாராட்டிப் பெருவிழா ஒன்று நடத்தி பாராட்டு மலரும் வெளியிட்டது. விழாவை மறுத்த அவர் தோழர்களின் வற்புறுத்தலுக்கு இணங்க ஒத்துக் கொண்டார்.


அருட்செல்வர் அவர்கள் பேருதவியுடன் பூங்குரு நல் அசோகன் அவர்கள் தொகுத்து கே. ஜீவபாரதி பதிப்பித்து கொங்குநாடு அறக்கட்டளை மூலம் 2008 நவம்பர் மாதம் வெளிவந்த ''குமாரமங்கலம் தியாக தீபங்கள்' என்ற நூலைப் பற்றிய தன் மதிப்புரையை பார்வதி கிருஷ்ணன் அவர்கள் விரிவாக எழுதி அருட்செல்வர் அவர்கட்கு 29.07.2009 அன்று அனுப்பினார்.

தொழிலாளர்களால் பெருநகராக உருவான கோவை மாநகரில் தூய பொது வாழ்வுப் பெரியவர் இரத்தின சபாபதி முதலியார் பெயரால் அமைந்த ஆர்.எஸ். புரத்தில் பார்வதி கிருஷ்ணன் வாழ்ந்து வந்தார். ஜமீன்தார் குடும்பத்தில் பிறந்து சாமான்ய மக்களுக்காக உழைத்த பார்வதி கிருஷ்ணன் இனிய நினைவுகளுடன் தனியாக வாழ்ந்து வந்தார்.

புகழ்மிகு தன் புரட்சி வாழ்வை 20.02.2014 அன்று பார்வதி நிறைவு செய்தார்.

❋ ❋ ❋

# 33. பணீந்திரநாத் ரங்கராஜன் குமாரமங்கலம்



ரங்கராஜன் குமாரமங்கலம்

இந்திய விடுதலைக்குப் பின் பிறந்து அரசியல் பாதையில் நடந்த தலைவர்களில், நேர்மையும், செயலாற்றலும் கொண்டு ஊழலுக்கு இடம் கொடுக்காமல் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியும், இளைஞர்கட்கு வழிகாட்டியும், தொழிலாளர்கள் கிராமப்புற மக்களின் நம்பிக்கைக்கும் பாத்திரமாக விளங்கிய ஒப்பற்றவர் ரங்கராஜன் குமாரமங்கலம்.


இந்திய நாட்டு முன்னேற்றத்திற்கு மிகவும் இன்றியமையாத அவசியத் தேவையாகிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, இந்தியாவின் ஒளிமிகுந்த எதிர்காலத்திற்குக் கனவு கண்ட தீர்க்கதரிசியான ரங்கராஜன் குமாரமங்கலம் தமது 48 ஆம் வயதிலேயே நம்மை விட்டுப் பிரிந்தார்.

சுரேந்திர மோகன் குமாரமங்கலம் - கல்யாணி முகர்ஜி தம்பதியரின் மகனாக 12.05.1952 அன்று இரவு 11.45 மணிக்குப் பிறந்தார் ரங்கராஜன் குமாரமங்கலம். பெற்றோர் வைத்த பெயர் பணீந்திரநாத் ரங்கராஜன் குமாரமங்கலம். தாயார் கல்யாணி அவர்களின் தந்தை பெயர் பணீந்திரநாத் முகர்ஜி. தாய்வழிப் பாட்டனார் பெயர் பணீந்திரநாத் இவர் பெயரோடு இணைந்தது.

இவருக்கு இரு சகோதரிகள். மூத்த சகோதரியார் பெயர் உமா. இளைய சகோதரியார் பெயர் லலிதா.

சென்னை குட்ஷெப்பர்டு கான்வென்ட்டில் 5 ஆம் வகுப்பு வரை படித்தார். பின் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை சென்னை கிறித்தவக் கல்லூரிப் பள்ளியில் முடித்தார். எப்பொழுதும் அறிவியல் பாடத்தில் முதல்வராக விளங்கினார். உயர்கல்விக்கு டெல்லி சென்றார்.

பள்ளி, கல்லூரிப் பருவத்திலேயே மாணவர்கள் நலன்களைக் காப்பதிலும், அவர்கள் உரிமைகளை மீட்பதிலும் ரங்கராஜன் குமார மங்கலம் மிகவும் ஆர்வத்துடன் பணியாற்றினார். ஒத்த கருத்துடைய சிலருடன் சேர்ந்து 1971ஆம் ஆண்டு இந்திய தேசிய மாணவர் அமைப்பை உருவாக்கி அந்த அமைப்பின் முதல் தலைவரும் ஆனார்.



ரங்கராஜன் குமாரமங்கலம்
துணைவியார் கிட்டி மதனுடன்

பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் விருப்பப்படி அப்பொறுப்பை ஏற்றுத் திறம்படப் பணியாற்றினார். அதன் காரணமாக 1973 ஆம் ஆண்டு இளம் வயதிலேயே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தன்னுடன் பயின்ற பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த கிட்டி மதன் அவர்களைத் தனது வாழ்க்கைத் துணைவியாக 1975 ஆம் ஆண்டு அக்டோபர் 5 ஆம் நாள் ஏற்றார். 1977 ஆம் ஆண்டு டெல்லி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிரோரிமால் கல்லூரியில் பட்டம் பெற்று சென்னை வந்து வழக்கறிஞராகப் பணி தொடங்கினார். வழக்கறிஞர் என். நடராசனிடம் இளம் வழக்கறிஞராகச் சேர்ந்தார். பின் வழக்கறிஞர் கே.கே. வேணுகோபாலிடம் சில காலம் பணியாற்றினார்.

1979 முதல் தனியாக வழக்கறிஞர் தொழில் தொடங்கினார். சிவில், கிரிமினல் இரு துறையிலும் மிகச் சிறந்து விளங்கினார். தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் ஏழை-எளிய மக்களின் சட்ட பூர்வமான உரிமைகளுக்காகப் பாடுபட்டார்.


திருச்செங்கோடு இல்லத்தில்
மக்களுடன் உரையாடல்

1980 ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. நெருங்கிய தோழரும் நண்பருமாகிய ராஜீவ்காந்தி அவர்களின் வேண்டுகோளை ஏற்றுத் தீவிர அரசியலில் ஈடுபட்டார். 1982 ஆம் ஆண்டு இந்திய ரயில்வே தொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் ஆனார். ஆங்கிலத்துடன் இந்தி, பஞ்சாபி, வங்காள மொழியிலும் வல்லவரானார்.

1984 ஆம் ஆண்டில் சேலம் தொகுதியிலிருந்து நாடாளுமன்ற காங்கிரஸ் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கட்சி மேலிடத்திலும், தொகுதியிலும் நன்மதிப்பைப் பெற்றதால் 1989, 1991 ஆண்டுத் தேர்தல்களிலும் முன் வெற்றி பெற்ற அதே சேலம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார். சேலம் இரயில்வே மேம்பாலம், மருத்துவக் கல்லூரி, சேலம் உருக்காலைப் புனரமைப்பு ஆகியவை இவர் கொடையாகும்.

1991ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 அன்று பி.வி. நரசிம்மராவ் அமைச்சரவையில் சட்டம், நீதி, கம்பெனி விவகாரத்துறை, பார்லிமெண்ட் விவகார ராஜாங்க அமைச்சரானார். 1992ல் அறிவியல் தொழில்நுட்ப அமைச்சரானார். இது பிரதமரின் கீழ் உள்ள துறையாகும். பிரதமர் நரசிம்மராவ் மீது தனிப்பட்ட முறையில் அன்பு செலுத்தினார். ஆனால் கட்சியும், சில அமைச்சர்களும் லஞ்சம் பெறுவதும்,

சட்டத்திற்கு மாறாக நடப்பதும், ஊழல் களில் ஈடுபடுவதும் இவருக்குப் பிடிக்க வில்லை. தக்க பல ஆதாரங்களுடன் பிரதமருக்கும், குடியரசுத் தலைவருக்கும் கடிதங்கள் எழுதினார். வோரா கமிட்டி அறிக்கையின் அடிப்படையில் பிரதமர் பதவி விலகி விசாரணையை எதிர் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார். கருத்து மாறுபாடு ஏற்பட்டது.



மோகன் குமாரமங்கலம்

1993ஆம் ஆண்டு இறுதியில் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். 1995 மே மாதம் காங்கிரஸ் கட்சியின் பொறுப்புகளிலிருந்தும் அடிப்படை உறுப்பினர் பொறுப்பி லிருந்தும் விலகினார்.

இருப்பினும் காங்கிரஸ் இயக்கக் கொள்கையில் மாறுபடாமல் என்.டி. திவாரி, அர்ஜுன் சிங், ஷீலா தீட்சித் ஆகியோருடன் இணைந்து காங்கிரஸ் (T) என்ற அமைப்பை ஏற்படுத்துவதில் பங்கேற் றார். இவ்வியக்கம் வெற்றிபெறவில்லை.

1997 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பாரதிய ஜனதாக் கட்சியில் இணைந்தார். தமிழக பாரதிய ஜனதாக் கட்சியில் முக்கியத் தலைவர் களில் ஒருவர் ஆனார்.

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திருச்சி நாடாளுமன்றத் தொகுதியில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

வாஜ்பாய் அமைச்சரவையில் கேபினட் அமைச்சராகப் பொறுப் பேற்றார். மின்துறை, நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனார். சட்டம், நீதி, மரபுசாரா எரிசக்தித் துறை, கம்பெனி விவகாரப் பொறுப்பும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டது.


1999 தேர்தலில் 90,000 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்று மீண்டும் திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார். மின்துறை அமைச்சர் ஆனார். சுரங்கம், கனிம வளத்துறையும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நோயுற்று டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 23.08.2000 அன்று அதிகாலை 4.40மணிக்கு அமரரானார். குறுகிய காலத்தில் மின் துறையில் இவர் ஆற்றிய பல பணிகள் வியக்கத்தக்கவை.

முன்னவர் புகழையெல்லாம் தம் புகழ் ஆக்கி மக்களிடம் எளிமையாகப் பழகி எண்ணற்ற பணிகள் செய்து நாட்டை உயர்த்த இருந்தவர் 48 ஆம் வயதில் நம்மை விட்டுப் பிரிந்தார்.

ரங்கராஜன் குமாரமங்கலத்தின் மூத்த மகள் ருச்சிரா 08.09.1976ல் பிறந்தார். இளைய மகன் மோகன் குமாரமங்கலம் 06.07.1978 அன்று பிறந்தார். மகன் மோகன் குமாரமங்கலம் கணிப்பொறி இயலில் உயர் பட்டம் பெற்றவர். 2014 ஆம் ஆண்டு சேலம் நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டி யிட்டார்.

❊❊❊




Courtesy - Bombay Midday

ரங்கராஜன் குமாரமங்கலத்திற்கு இந்திய இதழ்கள் அஞ்சலி



THE HINDUSTAN TIMES

Ranga cremated with full State honours

'Active parliamentarian, able administrator'

पूरे राजकीय सम्मान के साथ दिल्ली में ही अंतिम संस्कार

KUMARAMANGALAM IS NO MORE

Country loses a firebrand, youthful leader

THE PIONEER

HOPE DIES YOUNG

A rebel with a cause

Full State honours cremation for Ranga

राजनीति के शीर्ष पर एक अलग पहचान बना ली थी 'रंगा' ने

Ranga, a dynamic leader

आम राजनीतिज्ञ से अलग थे कुमारमंगलम

The man who knew his business

A dynamic politician with vision

Liberal, dynamic Ranga

राष्ट्र ने एक युवा, बहुमुखी प्रतिभाशाली व कर्मठ नेता खो दिया'

The spark that didn't burst into a flame

OBITUARY/ PR KUMARAMANGALAM (1952-2000)

Ranga cremated with full state honours

देश ने एक तेजतर्रार व्यक्तित्व खो दिया: नारायणन

'रंगा' ने मुस्कान के साथ झेला जीवन का हर उतार-चढ़ाव

Ranga — in the forefront of power reforms

मौत ने तेजतर्रार नेता, कुशल संसदविद को हमसे छीन लिया

Leaders, supporters pay their last respects

With tears in their eyes, they bid adieu

Industry shocked at untimely death of Kumaramangalam

रंगा की कमी हमेशा महसूस होगी : राष्ट्रपति

A politician with a liberal outlook

सबसिडी हटाकर कुमारमंगलम ने सुधारों की शुरूआत की थी

उद्योग-व्यापार जगत की श्रद्धांजलि


बिजली क्षेत्र में बड़े सुधार के लिए याद किये जायेंगे कुमार मंगलम

'रंगा' को बिजली क्षेत्र में उनके योगदान के लिए याद किया जाएगा

छात्र राजनीति में प्रवेश कर एनएसयूआई को नया रूप दिया था कुमारमंगलम ने

The Indian EXPRESS

Govt loses its young, articulate face


சடைய கவுண்டர்
சின்னண்ண கவுண்டர்
இராக்கியப்ப கவுண்டர்
சடையப்ப கவுண்டர்
நல்லதம்பிக் கவுண்டர்
*நஞ்சைய கவுண்டர் (சுவிகாரம்)
*நஞ்சைய கவுண்டர் (சுவிகாரம் கொடுக்கப்பட்டவர்
பரமசிவக் கவுண்டர்
செங்கோட்டு வேல் கவுண்டர் (கவுண்டம்பாளையம் ஜமீன்)
கைலாசக் கவுண்டர் (எ) குட்டிக்கவுண்டர் (குமரமங்கலம் ஜமீன்)
நஞ்சைய கவுண்டர்
சுப்பராயக் கவுண்டர் (போக்கம்பாளையம் ஜமீன்)
சின்னண்ண கவுண்டர் (குமாரபாளையம் ஜமீன்)
பெண் நல்லாயம்மாள்
அர்த்தநாரி (மரணம்)
* சின்னண்ண கவுண்டர் (சுவிகாரம் கொடுக்கப் பட்டவர்)
பெரிய பரமசிவக் கவுண்டர்
கைலாசக் கவுண்டர் (இளவயதில் மரணம்)
கைலாசம்
இராமசாமி
இலட்சுமணன்
*முத்துசாமி (சுவிகாரம் கொடுக்கப்பட்டவர்)
*சின்னண்ண கவுண்டர் (சுவிகாரம்)
*முத்துச்சாமி (சுவிகாரம்) செங்கோட்டுவேல் கவுண்டரின் 4 ஆம் மகன்
சுப்பராயன்
பார்வதி (குழந்தைப் பருவ மரணம்)
சின்ன பரமசிவக் கவுண்டர்
*கைலாசம் (சுவிகாரம்) - அகால மரணம்

- டாக்டர் சுப்பராயன் - 11.9.1889 - 6.10.1962
  ராதாபாய் 1891- 1960
  - பரமசிவம் பிரபாகர் குமாரமங்கலம் - 1.7.1913 - 13.3.2000
    பிரோஜா
    - சுப்பராயன் பெஹ்ரன் - சுசேன்
    - ரோஷன் பார்வதி - எம். ஜோதி
  - *ஜெயவந்த் கோபால் குமாரமங்கலம் - 11.5.1915* - 09.02.1988
    பினா
    - கௌரி - கே.என். அர்த்தநாரீசுவரன்
    - மீனாட்சி - ரவிராவ்
    - கிருஷ்ணன் - ருக்மணி
    - ருக்மணி - கஜேந்திர ஹால்தியா
  - சுரேந்திர மோகன் குமாரமங்கலம்- 1.11.1916 - 31.5.1973
    கல்யாணி
    - உமா மலய் முகர்ஜி
    - பணீந்திரநாத் ரங்கராஜன் குமாரமங்கலம் கிட்டிமதன்
    - லலிதா குமாரமங்கலம் - கே.சி.ரவிச்சந்திரன்
  - பார்வதி கிருஷ்ணன் 15.06.1919 - 20.02.2014
    - இந்திரா - மனாஸ் தாஸ் குப்தா

*Kabuliat or Instrument of assent and agreement on the part of* Coylasa gaunder zemindar of Comaramangalam in the zilla of Salem

TO THE SUNNUD-I-MILKEUT ISTIMRAR, OR DEED OF PERMANENT PROPERTY GRANTED TO HIM BY THE RIGHT HONORABLE THE GOVERNOR IN COUNCIL OF FORT ST. GEORGE, BEARING DATE THE thirteenth DAY OF May IN THE YEAR OF CHRIST 1803, OR Second of Vaigasi in the Year Ruddrodgari

1st:-1 Coylasa gaunder zemindar of Komaramangalam

Being fully impressed with the beneficent intention of the Honorable Company, as distinctly enumerated in the Sunnud-i-Milkeut Istimrar, or deed of permanent property conferred upon me by the Right Honorable the Governor in Council of Fort St. George and being duly sensible of the important advantages which, under the blessing of God, may result to myself and the people of my Zemindary from the arrangements established for the administration of Justice, and of the public revenue on permanent foundations, do by this my Kabuliat or instrument of assent and agreement covenant and agree as follows, viz.

2d--Whereas the assessment of my Zemindary or estate has been fixed from the commencement of fasli 1212 at the annual sum of Star Pagodas (2621) two thousand six hundred and twenty one which said sum of Star Pagodas (2621) two thousand six hundred and twenty one shall be fixed, and is hereby accordingly acknowledged by me to be the permanent annual land tax of my Zemindary or estate, payable in the current coin of the province in fixed, monthly instalments, agreeably to the separate Kistbundy hereunto annexed and signed by me. (1 4)

3d--This permanent assessment of the land tax on my Zemindary or estate I consider to be exclusive of the revenue derived from the manufacture and sale of salt; and saltpere; exclusive of the sayer or duties of every description whether by sea or land, the entire administration of which the Government reserves to itself; exclusive of the abkary or tax on the sale of spirituous liquors. & intoxicating drugs; exclusive of the excise which is, or may be, levied on commodities or articles of consumption; exclusive of all taxes personal or professional.

Eighty villages composing the Estate of Komaramangalam in the zilla of Salem, Komaramangalam ... Taramangalam ... villages ... in the Salem ... one ...

*Zamindhari* instrument of assent and agreement covenant (English version)

கைலாசக் கவுண்டர்
ருத்ரோத்காரி வருடம் வைகாசி மாதம் இரண்டாம் தேதி
குமரமங்கலம் ஜமீன் பெற்ற ஆவணம்
(1803)

SECRET & PERSONAL

Camp : Bombay,
June 3, 1956.

My dear Subbaroyan,

Your letter of today in which you suggest that you might see Sheikh Abdullah. I have no objection whatever. I think that perhaps it would be a good thing for you to see him and talk to him, but obviously this matter must be decided after you have consulted Bakhshi Ghulam Mohamed, Prime Minister of J & K State. I suggest, therefore, that when you go to Srinagar you might have a talk with him about this. I have mentioned this matter to Bakhshi Ghulam Mohamed in a letter and told him that you would be asking him.

Yours affectionately,

Jawaharlal Nehru

Dr. P. Subbaroyan, MP,
Camp : Bombay.

பிரதமர் ஜவஹர்லால் நேரு
கடிதம்
(03.06.1956)

**PERSONAL & CONFIDENTIAL**

No. 375-PMO/56.

New Delhi,
June 14, 1956.

My dear Subbarayan,

Your letter of the 12th June.

As I wrote to you, I thought that your visiting Shaikh Abdullah could do no harm. On the whole I was in favour of it and I am still so. But I referred you to Bakhshi Ghulam Mohammed as he is the person ultimately responsible and I should not like anything to be said or done without his approval. I am writing to him separately on the subject. You can see him and discuss this matter again with him. If he does not like your going to see Shaikh Sahib, then you had better not go.

Yours affectionately,

Dr P. Subbarayan,
Nedo's Hotel,
Srinagar.

பிரதமர் ஜவஹர்லால் நேரு
கடிதம்
(14.06.1956)

PRIME MINISTER
JAMMU AND KASHMIR

D.O. No. /56
Srinagar
June 3. ,1956

My dear Dodi Sahib,

Many thanks for your letter dated the 25th June, 1956. You are welcome to Kashmir any time you would like to come as you have not yet seen the lovely spots here in view of your heavy engagements in Srinagar on the previous occasion.

Yes, I have an idea of going down to Delhi on Panditji's return from his tour abroad and I do hope we shall meet there.

Regarding my speech on so-called "Azad Kashmir" I am sorry you have missed the point which I wanted to bring out. That was that Kashmiris living on our side of Cease-Fire-Line had decided - and this decision is final and irrevocable - the question of accession. Pakistan was illegally in possession of a portion of the State territory and was holding a portion of the State's population under their heels; and if they gave chance to these people to express their will regarding the accession issue, I had no doubt that they would vote for India. This was what I meant to convey in my speech. It was not a sort of asking for a partial plebiscite as you seem to have understood because that question does not at all arise now so far as we are concerned.

Do come to Kashmir as soon as you find an opportunity for doing so.

With kindest regards.

Yours Sincerely.

Gmbakhshi

(G.M. BAKHSHI)

Dr. P. Subbarayan,
160, South Avenue,
NEW DELHI

ஜம்மு-காஷ்மீர் பிரதமர் பக்ஷி குலாம் முகமது கடிதம் (30.06.1956)

உ

சிவமயம்.

திருச்செங்கோடு

# அர்த்தநாரீசர்கும்மி

# முவளாகொட்டுபாட்டு

குமரமங்கலம்

# பாண்டூசர்கும்மி.

இவை,

சே. கு. விசாகப்பெருமாள்முதலியாரவர்களால்

இயற்றப்பட்டு,

குமரமங்கலம்வலைகாரமிட்டாஜமீன்தார்

ம-ா-ா-ஸ்ரீ

## பெரியபரமசிவகவுண்டரவர்கள்

பொருளுதவிகொண்டு

திருச்செங்கோடு

தி. அ. முத்துசாமிக்கோனார்

அவர்களாற்றமது

"சுப்பாரயக்கவுண்டர்" அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1895.

சுப்பராயன் தந்தை பெரிய பரமசிவக் கவுண்டர் பொருள் உதவியால்
வெளிவந்த நூல் (1895)

உ

முருகன்றுணை.

# திருச்செங்கோட்டுக்கலம்பகம்.

இஃது

சேலம்ஜில்லா-ஊஜூர்

மேஜஸ்திரேட்குமாஸ்தாவாக இருந்த

ம-ா-ா-ஸ்ரீ சேலம்-சுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

இதை

திருச்செங்கோடுதாலூகா

குமரமங்கலம் வகைராட்மிட்டா ஜமீன்தார்

ம-ா-ா-ஸ்ரீ,

பெரிய-பரமசிவகவுண்டரவர்களால்

தி. அ. முத்துசாமிகோனரது

"சுப்பராயக்கவுண்டர்" அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

திருச்செங்கோடு

1896

சுப்பராயன் தந்தை பெரிய பரமசிவக் கவுண்டர் பதிப்பித்த நூல் (1896)

## நன்கொடை அளித்தவர்கள்.

பழயகோட்டை மகா-ள-ள-ஸ்ரீ ராயபஹதூர் உத்தமக்காமிண்ட
நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியாரவர்கள் ரூ. 100.

Dr. P. சுப்பராயன் M. A., B.C.L., LL.D., Bar-at-Law, M.L.C. 50.

கோக்கராயன்பேட்டை மிட்டா ஜமீன்தார்
மகா-ள-ள-ஸ்ரீ R. கணபதிக் கவுண்டரவர்கள் ரூ. 30.

பாண்டமங்கலம் மகா-ள-ள-ஸ்ரீ வீரப்பபிள்ளையவர்கள் ரூ. 25.

## புஸ்தகங்களுக்குமுன் பணம் கொடுத்தவர்கள்.

| நாமதேயங்கள். | புத்தகம் | நாமதேயங்கள். | புத்தகம் |
|---|---|---|---|
| திருச்செங்கோடு. | | S. நஞ்சப்ப கவுண்டர் மிட்டாஜமீன்தார்சித்தளந்தூர்.. | 1 |
| ஸ்ரீ நாககிரி பண்டிதர் .... | 5 | N. நல்லப்ப கவுண்டர் மிட்டா ஜமீன்தார் மேழிப்பள்ளி ... | 1 |
| [illegible]சுபதி குருக்கள் .... | 50 | சுப்பராய கவுண்டர் மரப்பறை மிட்டா ஜமீன்தார் ... | 1 |
| அர்த்தநாரிக் குருக்கள் .... | 5 | R. ராஜாக் கவுண்டர் காட்டுப்பாளையம் .... | 1 |
| சதாசிவ குருக்கள் .... | 1 | திருச்செங்கோடு. | |
| கணபதி குருக்கள் .... | 1 | V. V. C. R. வையாபுரி முதலியார் .... | 5 |
| [illegible] குருக்கள் | 1 | T. V. நடேசமுதலியார் ... | 10 |
| நடராஜ குருக்கள் .... | 2 | R. K. பாலசுப்பிரமணிய முதலியார் .... | 5 |
| மு. குலோத்துங்கவேதநாயக குருக்கள் .... | 1 | S. V. அர்த்தநாரி செட்டியார் | 2 |
| பு. சிவராம குருக்கள் .... | 1 | தே. ப. சின்னப்ப செட்டியார் | 2 |
| மா. சுந்தரக் குருக்கள் .... | 1 | வையாபுரி செட்டியார் மண்டி .... | 1 |
| கைலாச குருக்கள் ... | 1 | இரத்தினவேலு முதலியார் புரோப்ரைட்டர், ஷண்முகா பிரிண்டிங் ஹவுஸ் ... | 1 |
| குலசேகர சுப்பிரமணிய குருக்கள் .... | 10 | C. ராமுன்னி நாயர் லோகல் பண்டு ஓவர்சியர் ... | 1 |
| T. S வெங்கட்டரமண அய்யர் பாங்கர் ... | 15 | | |
| V. T. ராமசாமி அய்யர் B. A., B. L, கருமகர்த்தா. | 1 | | |
| விட்டம்பாளையம். | | | |
| ராஜாக் கவுண்டர் .... | 5 | | |
| சேதுபதிராயலிங்ககவுண்டர்.. | 5 | | |
| சுந்தரக்கவுண்டர். தருமகர்த்தா | 1 | | |
| S. முத்துசாமி கவுண்டர் மிட்டாஜமீன்தார் புளியம்பட்டி. | 1 | | |

திருச்செங்கோடு மான்மியம் நூலுக்கு
சுப்பராயன் நிதி உதவி

உ
குமரன் றுணை.

திருச்செங்கோட்டுக்

# குமாரர் பிள்ளைத் தமிழ்.

இது

திருச்செங்கோடு

தி. அ. முத்துசாமிக்கோனுரால்,

சித்தளந்தூர் மிட்டாஜமீன்தார்,

ஸ்ரீமான்

சு. முத்துசாமிக் கவுண்டரவர்கள்

விருப்பத்தின்படி,

தமது

விவேக திவாகரன் அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது.

குரோதன-ஞு சித்திரை-மீ


**1925.**

சுப்பராயக் கவுண்டர் அச்சியந்திரசாலை
விவேக திவாகரன் அச்சியந்திர சாலையாக மாறியது.

# திருச்செங்கோடு

| விருதலைப்போராட்ட வீரர்கள் பெயர் | தந்தை பெயர் | பிறந்த தேதி | இயக்கத்தில் சேர்ந்த ஆண்டு | எழுதப் படிக்கத் தெரிந்தவரா? | கலந்து கொண்ட போராட்டங்கள் | தண்டனைக் காலம் | சிறைச்சாலை இடம் | முகவரி |
|---|---|---|---|---|---|---|---|---|
| வெங்கடாசலம்செட்டியார் | வரதப்பசெட்டியார் | 1908 | 1930 | --- | உப்புச்சத்தியாக்கிரகம் 1930 | 6 மாதம் | திருச்சி | திருச்செங்கோடு |
| திருவ்ணமூர்த்தி ஐயர் | இராமசாமி ஐயர் | 1902 | 1930 | ஆம் | உப்புச்சத்தியாக்கிரகம் | 6 மாதம் | கோவை | திருச்செங்கோடு |
| சுப்பா ஐயர் A. | அப்பாதுரை ஐயர் | 1900 | 1930 | ஆம் | சட்ட மறுப்பு இயக்கம் | 1 ஆண்டு | திருச்சி | திருச்செங்கோடு |
| காசி விஸ்வநாதன் A. | அருணாசல முதலியார் | 12.03.1912 | 1930 | ஆம் | தனிநபர் சத்தியாக்கிரகம் | 4 மாதம் | அலிப்புரம் சேலம் | திருச்செங்கோடு |
| நாகநாதன் S. | சுப்பையா | 12.02.1902 | 1932 | ஆம் | தனிநபர்சத்தியாக்கிரகம் 1932<br>1942 ஆகஸ்ட் போராட்டம் | 1 ஆண்டு<br>1 மாதம் | திருச்சி. சென்னை பெல்லாரி அலிப்புரம் | திருச்செங்கோடு |
| ராதாபாய் சுப்பராயன் | டாக்டர் சுப்பராயன் | 15.01.1888 | 1922 | B.A. | 1940 தனிநபர் சத்தியாக்கிரகம் | 6 மாதம் | வேலூர் | திருச்செங்கோடு |
| ரகுநாதன் R. | இராஜலிங்கம்செட்டியார் | 16.06.1917 | 1941 | ஆம் | 1941 தனிநபர்சத்தியாக்கிரகம் | 9 மாதம் | பெல்லாரி அலிப்புரம் | திருச்செங்கோடு |
| ரங்கநாதன் K. | --- | 28.10.1905 | 1929 | ஆம் | சட்ட மறுப்பு இயக்கமும் 1929<br>ஆகஸ்ட் போராட்டம் 1942 | 6 மாதம் | சென்னை | திருச்செங்கோடு |
| Dr. P. சுப்பராயன் | பரமசிவக்கவுண்டர் | 1882 | 1922 | M.A.B.L. பார் அட்லா | 1940 தனிநபர் சத்தியாக்கிரகம் | 6 மாதம் | திருச்சி | திருச்செங்கோடு |

சுப்பராயன் - இராதாபாய்
சிறைவாசக் குறிப்பு



# Certified Copy of an Entry of Birth.

Pursuant to the Births and Deaths Registration Acts 1836 to 1874

Registration District of Northleach

1915. Birth in the Sub-District of Bibury in the County of Gloucester

| Columns: 1 | | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| No. | When and Where Born. | Name (if any). | Sex. | Name and Surname of Father. | Name and Maiden Surname of Mother. | Rank or Profession of Father. | Signature, Description, and Residence of Informant. | When Registered. | Signature of Registrar. | Baptismal Name if added after Registration of Birth. |
| 280 | Eleventh May 1915 The Vicarage Little Barrington R. D. | Jayavant Gopal | Boy | Paramasiva Subbarayan | Radhabai Subbarayan formerly Kudmul | Zamindar or Landowner | R Subbarayan Mother The Vicarage Little Barrington | Eleventh June 1915 | A J Forty Registrar | |


I, Archer James Forty Registrar of Births and Deaths for the Sub-District of Bibury in the County of Gloucester Do hereby Certify that this is a True Copy of the Entry No. 280 in the Register Book of Births, for the said Sub-District, and that such Register Book is now legally in my custody.

Witness my Hand this 11th day of June 1915.

A J Forty Registrar.

The Statutory Fees payable for an ordinary certified copy of an entry in a Register of Births, Deaths or Marriages, if taken at time of registration, are 2s. 7d. (including 1d. for the Stamp); if taken at anytime afterwards an additional fee of 1s. is chargeable for a search.

ஜெயவந்த் கோபால் பிறப்புச் சான்றிதழ்
(லண்டன்)



ST. THOMAS' CONVENT, ST. RAPHAEL'S SCHOOL

SAN THOMÉ.

*Report for the half-year ending* April 28th.

*On Master* Gopal

**PRIMARY SCHOOL SECTION.**

STANDARD L. Infants (a)

*Application* Fair

*Conduct* Good

*Order* Good

*Politeness* V. Fair

| SUBJECTS. | MARKS OBTAINABLE. | MARKS OBTAINED. | REMARKS. |
|---|---|---|---|
| English Grammar and Composition ... ... ... | — | — | Order of merit 2nd |
| English ~~Literature~~ Reading | 100 | 60. | |
| Recitation ... — ... | " | 55 | |
| Arithmetic ... ... | " | 80 | among 8 pupils |
| Geography ... ... | — | — | |
| History ... ... | — | — | |
| Domestic Economy & Hygiene. | — | — | |
| Drawing ... ... | | | |
| Brush Work ... ... | " | 50 | |
| Needlework ... ... | | | |
| Copy Writing ... ... | " | 50 | |
| Dictation ... ... | " | 45 | |
| Stories ... ... | | | Total percentage 56 |
| Nature Study ... ... | | | |
| Object Lessons ... ... | | | |
| Conversational Lessons ... | | | |
| Kindergarten Occupation ... | | | |
| | 600 | 340 | |

VALUE OF MARKS:—Two-thirds of the marks obtainable = very good
One-half.............................. = good.
Less than one-third.................. = unsatisfactory.

Marie Veronique

The Mother Superior.

SAN THOME, }

School reopens July 10th

ஜெயவந்த் கோபால்
குழந்தைப் பள்ளிச் சான்றிதழ்

Form $\frac{S.D.}{460}$

A

# Officers Training Corps.

CERTIFICATE "A."

## This is to Certify that

Mr. *Jaywanth Gopal Kumaramangalam*

of the *Eton College* Contingent,

JUNIOR Division, Officers Training Corps, has

fulfilled the necessary conditions as to efficient service, and has qualified in the INFANTRY. syllabus of examination, as laid down in the Regulations for the Officers Training Corps. He is, therefore, eligible for consideration for a commission in the Supplementary Reserve, Territorial Army, Territorial Army Reserve of Officers or Active Militia of Canada.

On appointment to a commission he will be entitled to the privileges conferred on holders of this Certificate as set forth in the Regulations concerned, and to any further privileges that may be authorised after the date of this Certificate.

In the event of a national emergency involving the mobilization of the Regular Army and the embodiment of the Territorial Army, he is requested to notify his address immediately to the Under Secretary of State, The War Office, S.W.1, with any offer of service he may wish to make.


*THE WAR OFFICE,*

*Date* - 8 MAR 1932

*Major-General,*
*Director of Staff Duties*

[illegible] H. J. R. & L., Ltd. [illegible]

ஜெயவந்த் கோபால்
படைப் பயிற்சிச் சான்றிதழ்



UNIVERSITY OF OXFORD

*I CERTIFY that it appears by the Register of Examinations that*

Jayavanth Gopal Kumaramangalam

Christ Church

*satisfied the Examiners in the Final Honour School of*

Philosophy, Politics and Economics

*in Trinity Term,* 1936 *, and was placed by them in the*

Third *Class.*

S. C[illegible]

*Assistant Registrar*

UNIVERSITY REGISTRY
OXFORD

2 December 1937

ஜெயவந்த் கோபால்
பட்டச் சான்றிதழ்

St. Hugh's School
BICKLEY
KENT

Dear Mum + Dad.

I hope that you are quite well.
In the clare house match, we made 45, and they made 150. I made 0. In the Yardley court match, They made 129. We made 82-3 wickets. We are playing ~~Yardley court~~ ~~so~~ the abbey next wednesday. We haven't a good team this year, like we did last year.
I envy Para because he is going to India at the end of this Term. When is ~~Aunt~~ Auntie going to India, do you know. Auntie has gone and sold my ~~cat~~ gramaph without giving me my share. My pen works well but sometimes the Ink doesn't run out nicely. I haven't lost it yet. When will you be coming to England next or when am I going to India. Mr Alfred says that Mohan will get history degree for certain at oxford.
I must end my letter now so good bye

From your loving son.
J.G. Kumaram

P.S. I hope I get into Remove in my Common Entrance. The School Photo was taken two days ago

ஜெயவந்த் கோபால்
பெற்றோருக்கு எழுதிய கடிதம்
(1928)

## சுப்பராயன் அவர்கட்கு 1941 ஆம் ஆண்டு மதுரை ஆதினகர்த்தர் திருஞானசம்பந்த தேசிகர் அவர்கள் எழுதிய கவிதைநிருபம்

பூந்தவிசில் இனிதுறைதல் போன்று தெய்வப்
பூமகளும் நாமகளும் பொருந்தி வாழும்
மாந்தரெலாம் புகழ்வளஞ்சால் எழில்கு மார
மங்கலச் சமீந்தாராம் மாண்பு மிக்க
சாந்தகுண கெம்பீர சுப்ப ராயத்
தளபதியே நின்னிருபம் தனைக்கண் ணுற்றோம்
ஏந்தல்நினது அன்பினுக்கு மகிழ்ந்தோம் நீஇவ்
இருநிலத்தில் நீடூழி இனிது வாழி!

நின்னிடம்யாம் புகலுவதொன்று உளதுஅச் செய்தி
நிகழ்த்திடுவோம் இந்துமத நிலையைக் காக்க
என்னவந்த ஒருசட்டம் பயிரைக் காத்தற்கு
இயற்றியதோர் வேலிபயி ரினைமேய்ந் தாற்போல்
அன்னமதம் தன்னையழிக் கின்றது ; ஈண்டை
அதற்கொருவி மோசனம்காங் கிரசின் ஆட்சி
தன்னிலுங்கண் டோமில்லை நீயே இந்தத்
தருமபரி பாலனத்தைத் தழைக்கச் செய்யே!

ஆய்ந்தவர்பல் லோருமிகப் புகழும் இந்த
அரசியல்நல் துறையினில்முன் னிலும்ஆ திக்கம்
வாய்ந்துபதின் மடங்குசீர் சிறப்பும் எய்தி
மாண்புமிகும் நமதுஇந்து மததர் மத்தை
ஏய்ந்தபுகழ் அரசேநீ காக்க வேண்டி
எங்கள்சுந்த ரேச்வரனை இறைஞ்சு கின்றோம்.
சேந்தனுயர் குருபூசை அருட்பிர சாதம்
சேர்ப்பிக்தோம் பெற்றணிந்து சிறந்து வாழி !

விஷு வருடம்
வைகாசி மாதம் 30 தேதி

திரு ஞானசம்பந்த தேசிகர்

# குறிப்புகள்

"டாக்டர் ப.சுப்பராயன் வாழ்க்கையே நிரந்தரமான பாடப்புத்தகம்.
அதைப் புரட்டிப் படிக்கப் படிக்க ஏராளமான புதுச்செய்திகள்
எந்தக் காலத்துக்கும் பொருந்தும்படி கிடைத்துக் கொண்டேயிருக்கும்."

– ஆர்.வெங்கட்ராமன்,
முன்னாள் குடியரசுத் தலைவர்.

